உ

# சங்கத் தமிழும் பிற்காலத் தமிழும்

மகாமகோபாத்தியாய
டாக்டர் உ. வே. சாமிநாதையர் நூல்நிலையம்

T
11253

# சங்கத் தமிழும் பிற்காலத் தமிழும்

மகாமகோபாத்தியாய தாக்ஷிணாத்திய கலாநிதி
டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்கள்
செய்த உபந்யாசம்

மகாமகோபாத்தியாய
டாக்டர் உ. வே. சாமிநாதையர் நூல்நிலையம்
சென்னை-600041
1978.

மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையர்
நூல் நிலைய வெளியீடு எண்—59.
ஏழாம் பதிப்பு—பிரதிகள் 2000

சென்னைப் பல்கலைக் கழகத்தாரின் அனுமதி பெற்று
வெளியிடப் பெற்றது.

விலை ரூ. 6

மத்திய அரசு சலுகை விலையில் வழங்கிய பேப்பரினால்
இப்புத்தகம் அச்சாகியது.

Printed at :
Kalakshetra Publications Press Madras—600041.

## உபந்யாசங்களின் விவரம்


| | | |
|---|---|---|
| | | பக்கம் |
| I தமிழ்ச் சங்கம் (7—11—1927) | | 1 |
| II முத்தமிழ் (10—11—1927) | ... | 28 |
| III சங்க நூல்களிற் கூறப்படும் தெய்வங்கள் (12—11—1927) | ... | 67 |
| IV சங்ககாலத்துப் புலவர்கள் ஆண்பாலார் (16—11—1927) | ... | 87 |
| V சங்க காலத்துப் புலமை வாய்ந்த பெண்பாலார் (18—11—1927) | ... | 99 |
| VI சங்கப் புலவர்களை ஆதரித்த பிரபுக்கள் (7—12—1927) | ... | 111 |
| VII கலைகள் (10—12—1927) | ... | 134 |
| VIII பண்டை உரையாசிரியர்கள் (12—12—1927) | ... | 148 |
| IX சங்க காலத்திற்குப் பிறகு தமிழை ஆதரித்த பிரபுக்களும் புலவர்களும் (14—12—1927) | ... | 157 |
| X ஆராய்ச்சி (21—12—1927) | ... | 167 |

## முகவுரை

சங்க நூல்கள் முகமாகத் தெரியக்கூடிய சில விஷயங்களைப் பற்றிப் பத்து உபந்யாசங்கள் செய்யவேண்டுமென்று சென்னை ஸர்வகலா சங்கத்தார் 1926-ஆம் வருஷத்தில் எனக்குத் தெரிவித்தார்கள். தேக அஸௌக்யம் முதலிய காரணங்களால் அதனை ஏற்றுக்கொள்ள எனக்கு அப்போது தைரியம் உண்டாகவில்லை; ஆனால் அவர்கள் பேரன்புடன் வற்புறுத்தினமையால் மறுத்தற்கு அஞ்சித் தெரிந்த சில விஷயங்களைச் சொல்ல ஒப்புக்கொண்டேன். உபந்யசிக்கப்படும்போது உபந்யாசங்கள் பின்பு புத்தக ரூபமாக வெளிவருமென்பது எனக்குத் தெரியாது. அவை முடிந்த பின்புதான் அஃது எனக்குத் தெரியவந்தது. பத்தும் 7—11—1927 முதல் 21—12—1927 வரையில் பத்துத் தினங்களிற் செய்யப்பட்டன.

இக்காலத்திலுள்ள நூலாராய்ச்சியாளர்களுக்கும் நுண்ணறிவாளர்களுக்கும் தெரியாத விஷயங்கள் இவ்வுபந்யாசங்களிற் பெரும்பாலும் இரா. இளமை தொடங்கி நான் ஆராய்ந்து வந்த சங்க நூல்களாலும் பிற நூல்களாலும் கேள்வியாலும் அனுபவத்தாலும் தெரிந்து கொண்ட சில விஷயங்கள் இவற்றிற் காணப்படுமேயல்லாமல் நூதனமான விஷயமொன்றும் இராது. உபந்யாசத்துக்காகக் குறிப்பிட்ட காலம் போதியதாக இல்லாமையாற் சொல்லவேண்டிய முக்கியமான விஷயங்கள் சொல்லப்படாமலும் சில விஷயங்கள் முன்பின்னாக மாறியும் இருத்தல் கூடும். உபந்யாசங்கள் ஒன்றோடொன்று சம்பந்தமுள்ளவைகளாக இருத்தலால் ஒன்றிற் சொல்லப்பட வேண்டியவை மற்றொன்றில் வந்திருக்கலாம். ஓரிடத்திற் கண்ட சில வரலாறுகள் சில பயன் கருதி மற்றோரிடத்திலும் சொல்லப்பட்டிருக்கும். அவ்வப்போது சுதேசமித்திரனில் வெளி வந்த பகுதிகளையும்

என் கையிலிருந்த உபந்யாசக் குறிப்புக்களையும் ஆதாரமாக வைத்துக்கொண்டு இப்புத்தகம் சித்தம் செய்யப்பட்டது. சில விஷயங்கள் விரிவாகவும் சில சுருக்கமாகவும் காணப் படலாம். அவற்றை விவேகிகள் பொருத்துக்கொள்வார் களென்று நம்புகிறேன்.

என்னை ஒரு பொருட்படுத்தி உபந்யசிக்கும்படி செய்த ஸர்வகலாசாலை உப அத்யக்ஷகருக்கும் மற்ற அங்கத்தினர் களுக்கும் நான் உபந்யாசங்கள் செய்த போது மிக்க பொறுமையோடும் அன்போடும் வந்திருந்து கேட்டு எனக்கு ஊக்கமளித்த கனவான்களுக்கும் பண்டிதர்களுக்கும் நன்றி யைச் செலுத்துகின்றேன்.

சென்னை
16—12—1929

இங்ஙனம்
**வே. சாமிநாதையர்**

# பதிப்பாளர் குறிப்பு

இந்நூலின் முதற் பதிப்பு 1929ல் டாக்டர் ஐயரவர்களால் வெளியிடப் பெற்றது. பின்னர் ஐந்து பதிப்புகள் தியாகராச விலாச வெளியீடுகளாகப் பதிப்பிக்கப் பெற்றன. இந்த ஏழாம் பதிப்பு ஆறும் பதிப்பின் மறு பதிப்பாகவே வெளியிடப் பெறுகின்றது. நூல் நிலையத்தின் 59-வது பிரசுரமாக அமைந்துள்ளது.

இதனை அச்சிடுவதற்கு மத்திய அரசு சலுகை விலையில் வழங்கிய அச்சுத்தாள்கள் பயன் படுத்தப் பெற்றன.

சென்னை-41
30—3—1978

டாக்டர் ஐயரவர்கள் நூல் நிலையத்தார்

உ

கணபதி துணை

# சங்கத்தமிழும் பிற்காலத்தமிழும்

## I. தமிழ்ச் சங்கம்

### கடவுள் வணக்கம்

ஆதியிற் றமிழ்நூ லகத்தியற் குணர்த்திய
மாதொரு பாகனை வழுத்துதும்
போதமெய்ஞ் ஞான நலம்பெறற் பொருட்டே.

### பாண்டி நாட்டு வணக்கம்

ஆவியந் தென்றல் வெற்பி னகத்தியன் விரும்புந் தென்பால்
நாவலந் தீவம் போற்றி நாவலந் தீவந் தன்னுள்
மூவர்கட் கரியா னிற்ப முத்தமிழ்ச் சங்கத் தெய்வப்
பாவலர்வீற்றி ருக்கும் பாண்டிநன் னாடு போற்றி.

(வேம்பத்தூரார் திருவிளையாடல்)

# முன்னுரை

கனவான்களே, பண்டிதர்களே,

மதுரையம்பதியிற் பண்டைக் காலத்திருந்த தமிழ்ச் சங்கத்தைப் பற்றிப் பேசும்படி சென்னைச் சர்வகலா சாலைச் சங்கத்தார் அன்பு வைத்து எனக்குச் சொன்ன விஷயத்தில் மிகவும் நன்றி பாராட்டுகிறேன்.

நாற்பது அல்லது ஐம்பது வருடங்களுக்கு முன்பு இதைப்பற்றிப் பேசுவதென்றால் கஷ்டசாத்தியமாகவே இருந்திருக்கும்; அக்காலத்தவர்களிற் பெரும்பாலார் அரிய பழைய செய்யுட்களைப் பழைய இலக்கணவுரை களிற் கண்டாலும் யாரேனும் சொல்லக் கேட்டாலும் அவை சங்கச் செய்யுளென்று மட்டுஞ்சொல்லி அவற்றின் நடையைப் பற்றி இன்புறுவார்களேயன்றி அவை இன்ன நூலிலுள்ளன வென்றாவது இன்னார் பாடியவையென் றாவது சொல்ல அவர்களுக்கு இயலாமலே யிருந்தது. அவர்களிற் பரம்பரையாகப் பாடங்கேட்டு வந்த சிலராலே மட்டும் அவற்றிற்குப் பொருள் தெரிய வந்ததுண்டு. அவர்களுக்கும் சங்க இலக்கியங்களில் மிக்க அன்புமாத்திர மிருந்ததேயன்றி, அவற்றை முயன்று தேடவேண்டும், எங்கேயாவது பெற்றுப் படித்துப் பார்க்க வேண்டு மென் னும் எண்ணம் பெரும்பாலும் உண்டாகவில்லை; ஆனாலும் மதசம்பந்தமுள்ள பலவகையான நல்ல இலக் கியங்களையும் அதற்குரிய சாஸ்திரங்களையும் முறையே தக்காரிடம் பாடங் கேட்டும் தாமே ஆராய்ந்துழைத்துப் பயின்றும் மாணாக்கர்களுக்குப் பாடஞ் சொல்லியும் இன் புற்றுத் தமிழ்ப் பாஷையைப் பரிபாலித்து வந்தார்கள். இக்காலத்திலோ சங்கச் செய்யுட்களையும் அவற்றை இயற்றிய புலவர்களுடைய வரலாறுகளையும் பற்றி மிகவும் தாராளமாகப் பேசுதலும் அவற்றின் அருமைகளைப் பாராட்டுதலும் பழைய தமிழ் நூல்கள் எங்கேயுள்ளன

வென்று தேடுதலும் அவற்றைப் பதிப்பிக்க முயலுதலும் தமிழ்ப் பண்டிதர்களிடத்தும் மாணுக்கரிடத்தும் வேறு சிலரிடத்தும் பெரும்பாலும் காணப்படுகின்றன; அவற்றிற்குக் காரணம் இக்காலத்தவர்களுடைய பூர்வஜன்ம புண்ணியமென்றே சொல்லவேண்டும். இந்த நிலைமையைக் குறித்து ஒருவகையாக மெத்த மகிழ்ச்சி யடைகிறேன்.

பழைய தமிழ் நூல்களும் அவற்றிலுள்ள சரித்திரங்களும் எங்கும் பல்குதலுற்று விளங்கும் இக்காலத்தில் அவற்றைக் கற்றவர்கள் குழுமியிருக்கும் இச்சபையில் பேசுவதற்கு மனம் மிகவும் அஞ்சுகின்றது. அதற்குக் காரணம் என்னுடைய முதுமையும் அதனுலுண்டாகிய அறிவின் மெலிவும் மறதியும் வேறு நோக்கமுமே. அவை இப்பொழுது எதிர்த்து என்னேடு மிகவும் போராடுகின்றன. அவற்றை வெல்லும் ஆற்றல் எனக்கு ஒரு சிறிதும் இல்லை. இராமருக்கு முடிசூட்ட விரும்பிய தசரதர் அவரை நோக்கிச் சொன்னதாகக் கம்பர் பாடியிருக்கும் அருமைச் செய்யுளொன்றை இச் சமயத்தில் இங்கே தெரிவியாமலிருக்க முடியவில்லை; அதாவது:

“ ஒருத்த லைப்பரத் தொருத்தலைப் பங்குவி னூர்தி
எருத்தி னீங்குநின் றியல்வரக் குழைந்திட ருழக்கும்
வருத்த நீங்கியவ் வரம்பறு திருவினை மருவும்
அருத்தி யுண்டெனக் கையவீ தருளிட வேண்டும் ”

என்பது.

ஆதலால், நான் பேசுங்காலத்தில் மேற்கூறிய காரணங்களால் பல தவறுகள் இடையிடையே நிகழ்தல் கூடும். அத் தவறுகளை இச் சபையார் பொறுத்து விஷயத்தை மட்டும் அங்கீகரிக்க வேண்டுகின்றேன்.

“ செப்ப லுற்ற பொருளின் சிறப்பினுல்
அப்பொ ருட்குரை யாவருங் கொள்வரால் ”

என்னும் **பெரியபுராண** அவையடக்கச் செய்யுள் இப்

பொழுது எனக்கு மிக்க ஊக்கத்தை உண்டுபண்ணு கின்றது.

## தமிழென்னும் பெயர்

இப் பாஷையின் பெயராகிய தமிழென்பது திராவிட மென்ற சொல்லின் சிதைவென்று ஒரு சாரார் கூறுவர். அது சிலருக்கு உடன்பாடன்று; ஒரு பாஷைக்கு உரிய பெயர் அது தோன்றும்போதே உடன் தோன்றியிருக்க வேண்டுமென்பது முறையன்றோ? வேறு பாஷைக்குரியார் இதனைத்தாம் வழங்குவதற்கு இட்ட பெயராகத் திராவிட மென்பதைக் கொள்ளவேண்டு மென்றே சிலர் எண்ணு கிறார்கள். இம்மொழி தன்பாலுள்ள நால்வகை எழுத்துக் களால் ஆக்கப்பெற்ற ''தமிழ்'' என்னும் பெயரைத் தனக்கு இயற்பெயராகக் கொண்டிருத்தலும் இதன் உண்மையைப் புலப்படுத்துகின்றது. நால்வகை எழுத் துக்களாவன: உயிர், வல்லினம், மெல்லினம், இடையின மென்பன. தமிழென்பதற்கு இனிமையென்றும் பொரு ளுண்டு. அதுபற்றியே தமிழென்பதைக் காரணப் பெய ராகக் கொள்ளுதலும் பொருந்தும்;

"ஊறு மின்றமிழ்", "தமிழ் தழிய சாயல்" (சீவக. 2026)
"தமிழெனும் மினிய தீஞ்சொற் றையல்"

என்னும் பெரியோர் பாடல்கள் இக்கருத்தை வலியுறுத்து கின்றன. தத்தம் அனுபவங்களைச் சொல்லுதல் ஒவ் வொருவருக்கும் இயற்கையாதலால் இது விஷயத்தில் யாரும் குறைகூறாரென்று எண்ணுகிறேன்.

## தமிழாசிரியர்

"ஆதியிற் றமிழ்நூ லகத்தியற் குணர்த்திய
மாதொரு பாகன்" (பழம்பாட்டு)
"தழற்பொலி விழிக்கடவு டந்ததமிழ்" (கம்பராமாயணம்)
"இருமொழிக்குங் கண்ணுதலார் முதற்குரவர்"
(காஞ்சிப் புராணம்)

" விடையுதைத்தவன் பாணினிக் கிலக்கண மேனள்
வடமொழிக்குரைத் தாங்கியன் மலயமா முனிக்குத்
திடமுறுத்தியம் மொழிக்கெதி ராக்கிய தென்சொன் மடமகள் "
(காஞ்சிப்.)

என்பவற்ருலும் வேறுள்ள ஆதாரங்களாலும் இம்மொழிக்குப் பரமாசாரியர் பரமசிவனென்று தெரிகிறது; அதற்கேற்பத் தமிழ்நெடுங்கணக்கின் முதலில் **பஞ்சாட்சரமே** பண்டைக்காலத்தில் சுவடிகளிலெழுதிக் கற்பிக்கப்பட்டு வந்தது. தமிழின் சம்பந்தமான வேறு பாஷைகளிலுள்ள நெடுங்கணக்குக்களின் முதலிலும் பஞ்சாட்சரமே இக்காலத்திற் கற்பிக்கப்பட்டு வருகின்ற தென்றுங் கேட்டிருக்கிறேன்.

பரமசிவனுடைய கூருகிய முருகக்கடவுளை அகத்திய முனிவருக்குச் செந்தமிழறிவுறுத்திய ஆசிரியராகவும் சில பெரியோர் கூறியிருக்கின்றனர்.

" சிவனைநிகர் பொதியவரை முனிவனக மகிழவிரு
செவிகுளிர வினியதமிழ் பகர்வோனே " (திருப்புகழ்)
" குறுமுனிக்குந் தமிழுரைக்குங் குமர " ( ஷை )
" அகத்தியனர்க்குத் தமிழை யறிவுறுத்தச் செந்தமிழ்ப்
பரமாசாரியனுகிய அறுமுகக்கடவுள் "
(தொல். பாயிரவிருத்தி. சிவஞா,)

## தமிழின் தெய்வத்தன்மை

தமிழ் தென்னுட்டிலும் ஸம்ஸ்கிருதம் வடநாட்டிலும் மிகுதியாக வழங்குதல்பற்றி இவ்விரு மொழிகட்கும் முறையே தென்மொழி வடமொழி யென்பவை காரணப் பெயர்களாய் வழங்கலாயின. இவ்விரண்டையும் தெய்வ வடிவமாகப் பாராட்டுதலுமுண்டு. அஃது

" ஆரியன் கண்டாய் தமிழன் கண்டாய் "
" செந்தமிழோடாரியனை "
" தமிழ்ச்சொல்லும் வடசொலுந் தாணிழற்சேர "

என்னும் **தேவாரங்களாலும்,**

" தென்றமிழை வடமொழியை "

என்னும் **திவ்ய ப்ரபந்தத்தாலும்,**

" கண்ணிகர் மெய்யுஞ் சென்னிக் கணமுற ழினத்தின் கூறும்
திண்ணிய புயங்க ளேபோற் றிகழ்தரு முயிரும் வேருென்
றெண்ணிடற் கரிய தாகு மெஃகமு மியலிற் காட்டும்
புண்ணிய முனிக்கோன் செவ்வேள் பொற்பதத் தடிமை
[தானே " (புலவர் புராணம்)

என்பதனுலும் விளங்கும்.

தமிழ்ப்பாடல்களின் சுவை தெய்வங்களாலும் விரும்பப்பட்டதென்றும் பெரியோர்கள் பாடியிருக்கிருர்கள்;

" தமரநீர்ப் புவன முழுதொருங் கீன்ற டடாதகா தேவியென்
ருெருபேர், தாங்கிவந் ததுவுந் தனிமுத லொருநீசௌந்தர
[மாறனனதுவும்
குமரவேள் வழுதி யுக்கிர னெனப்பேர் கொண்டதுந் தண்டமிழ்ப்
[பெருமை
கூட்டுண வெழுந்த வேட்கையா லெனிக் கொழிதமிழ்ப்
[பெருமையாரறிவார் " (குமர.)

" பாதஞ் சிவக்கப் பசுந்தமிழ் வேண்டிப் பரவைதன் பாற்
றூதன்று சென்ற தென்னுரூர்த்தியாகர் ",

" பைந்தமிழ்ப் பின்சென்ற பச்சைப் பசுங்கொண்டலே " (குமர.)

என்பன முதலியவற்ருல் இது விளங்கும். பின்னும் தமிழின் ஆற்றலைப் புலப்படுத்துவனவாக அங்கங்கே வழங்கும் வேறு சரித்திரங்களும் பலவுண்டு.

## சங்கம்

சங்க மென்பதற்குப் பொருள் புலவர் கூட்ட மென்பது; தமிழ் நாட்டிலுள்ள தலைநகரங்கள் சிலவற்றிலும் அங்கங்கேயுள்ள சிற்றூர்கள் பலவற்றிலும் தமிழ்ப் புலவர்களின் கூட்டங்கள் இப்பெயரோடு பண்டைக்காலத்தில் இருந்தனவென்று தெரிந்தாலும் மதுரையிலிருந்த

கூட்டத்திற்கே இஃது இயற்பெயராக இருவகை வழக்கு களிலும் காணப்படுகின்றது. சிவபெருமான் திருமால் முருகக்கடவுள் முதலிய தெய்வங்களாலும் பெரியோர்களா லும் தெய்வத்தன்மை வாய்ந்த பாண்டிய அரசர்களாலும் மிகச் செவ்வையாகப் பரிபாலிக்கப்பட்டு வந்தமையே இதற்குக் காரணமென்று சொல்லலாம்.

சேரசோழ பரம்பரையார் பலருடைய சம்பந்தமும் ஆதரிப்பும் இதற்கு இருந்தாலும் பாண்டியர்களே இதைத் தாபித்தும் பரம்பரையாகப் பரிபாலித்தும் வந்தார்கள்.

சங்கத்தைப் பற்றிக் கூறும் பண்டைச் சரித்திரங்கள் முதற் சங்கத்தையும் இடைச் சங்கத்தையுங்கூடப் பாண்டியர்களே தாபித்து ஆதரித்து வந்தார்களென்று தெரிவிக்கின்றன.

தமிழ்ச் சங்க காலத்தைப் பற்றிய வரலாறுகளும் பிறவும் தமிழிலும் ஆங்கிலத்திலும் சில கல்விமான்களாற் சுருக்கமாகவும் பெருக்கமாகவும் எழுதி மிகச் செவ்வனே அச்சிடப்பெற்று இக்காலத்தில் வழங்கி வருதலின் அவற்றைப் பற்றி நான் பேசுதல் மிகையாகும். ஆதலால், முக்கியமான சில பழைய செய்திகளை மட்டும் சொல்லுவேன்.

## முதலிடைச் சங்கங்கள்

முதல் இடை கடை யெனத் தமிழ்ச் சங்கங்கள் மூன்று இருந்தன வென்பது **இறையனாரகப் பொருளுரையா**லும் **சிலப்பதிகாரவுரை** முதலியவற்றாலும் வேறுபல நூல்களா லும் தனிப்பாடல்களாலும் தெரிகின்றது. முதலிரண்டு சங்கங்களிலிருந்தார் சிலருடைய பெயரும் அவர்களால் அக்காலத்தில் செய்யப்பட்டன வென்று கூறப்படும் சில நூல்களின் பெயர்களுமே இக்காலத்தில் தெரியவருகின் றன. அவற்றிலுள்ள சில செய்யுட்களும் சில இலக்கண நூல் சூத்திரங்களும் வழங்கிவருகின்றன. **பெருங்கதை** அல்லது **உதயணன் கதையை** இயற்றிய **'கொங்கு**

**வேள்**' என்பவருடைய தமிழ்க் கல்வியின் பெருமையைத் தெரிவிக்க வந்த **அடியார்க்கு நல்லாரென்பவர்** சிலப்பதி காரவுரைப்பாயிரத்தில், ''இரண்டாம் ஊழியராகிய கபாட புரத்தில் இடைச் சங்கத்துத் தொல்காப்பியம் புலப்படுத் திய மாகீர்த்தியாகிய நிலந்தருதிருவிற் பாண்டியனவைக் களத்து அகத்தியனும் தொல்காப்பியனும் சிறுபாண்ட ரங்கனும் மதுரையாசிரியன் மாறனும் துவரைக் கோமானும் கீரந்தையாருமென்றித் தொடக்கத்தார் ஐம் பத்தொன்பதின்மர் உள்ளிட்ட மூவாயிரத்து எழுநூற்று வர் தம்மாற் பாடப்பட்ட கலியும் குருகும் வெண்டாளியு முதலிய செய்யுளிலக்கிய மாராய்ந்து செய்த **உதயணன் கதை** யுள்ளும்'' என்றெழுதி யிருப்பதை நோக்குகையில் **அக் கொங்குவேள்** காலத்தில் இசைச் சங்க நூல்களிற் சில இருந்தன வென்பதும் அவை அவராலும் அக்காலத் திலிருந்த ஏனையோராலும் ஆராயப் பெற்று வந்தன வென்பதும் தெரிகின்றன. அவை கொங்கு வேளிரால் ஆராயப் பெற்றதற்கு மேற்கூறிய உதயணன் கதையிற் காணப்படும் சில அரும்பதங்களுக்கும் இனிய வாக்கியங் களுக்கும் அரிய பழைய நூல்களின் கருத்துக்களுக்கும் இக்காலத்து வழங்கிவரும் கடைச்சங்க நூல் முதலியவற் றில் ஆதாரம் கிடையாமையே தக்க சாட்சியாகும். விளங் காத அப் பழைய நூற் கருத்துக்கள் **பெருங்கதையில்** இன்ன பக்கங்களிலுள்ளன வென்பது ஷெ நூல் அச்சுப் புத்தகத்தின் முகவுரையால் விளங்கும்.

கடல் கொள்ளப்பட்ட முதலூழி இறுதிக்கண் தென் மதுரையில் முதற் சங்க மிருந்ததென்றும் இடைச்சங்கம் இரண்டாமூழியில் கபாடபுரத்தில் இருந்ததென்றும் உத்தர மதுரையில் அதாவது இப்போதுள்ள மதுரையில் கடைச் சங்கமிருந்ததென்றும் பழைய ஆசிரியர்கள் தத்தம் நூல்கள் முகமாகவும் உரைகள் முகமாகவும் தெரிவித் திருக்கிறார்கள்.

இடைச்சங்க மிருந்த கபாடபுரம் **வான்மீகத்திலும்** குறிப்பிடப்பட்டிருக்கிறது. சீதையைத் தேடிச் செல்ல

வேண்டிய வழியைச் சுக்கிரீவன் வானரர்களுக்குச் சொன்னபோது, ''தென்றிசையிற் **கபாடபுரத்தைக்** காண்பீர்கள்'' என்று சொன்னதாகக் **கிஷ்கிந்தா காண்டம்**, 47-ஆவது சருக்கம், 19-ஆவது சுலோகத்திற் காணப்படுகிறது.

" கரத்துஞ் சிரத்துங் களிக்குங் களிறுடைக் கண்டன்வந்தான்
இரத்துங் கபாட மினித்திறப் பாய்பண் டிவனணங்கே
உரத்துஞ் சரத்துங் கபாடந் திறந்திட்ட துண்டிலங்கா
புரத்துங் கபாட புரத்துங்கல் யாண புரத்தினுமே "

(தமிழ்நாவலர் சரிதை)

என்னும் **ஒட்டக்கூத்தர்** செய்யுளாலும் கபாடபுரமென ஒன்றிருந்ததென்பதை அறியலாம்.

அவ்வச் சங்கங்களில் இருந்த புலவர்களுடைய பெயர்கள், இயற்றிய நூற் பெயர்கள், ஆராய்ந்த நூற் பெயர்கள், ஆதரித்த அரசர் பெயர்கள், சங்கப் புலவர் பெயர்கள், நூலாராய்ந்த காலம் முதலியனவும் பிறவும் **இறையனுரகப்பொருளுரை, சிலப்பதிகார வுரை** முதலியவற்றால் தெரியலாகும்.

## அகத்திய முனிவர்

முதலிரண்டு சங்கங்களிலும் **அகத்திய முனிவர்** இருந்து தமிழாராய்ந்தனரென்று தெரிகின்றது. அவர் வடக்கேயிருந்து தென்னுட்டிற்கு வரும்போது, ''தென்னுடு தமிழ் வழங்கும் தேயமானமையின் அங்கே உள்ளவர்களோடு பழகுமாறு எனக்குத் தமிழிலக்கணத்தைக் கற்பித்தருளல் வேண்டும்'' என்று வேண்டிப் பரமசிவன் பால் அதனைப் பெற்று இந்நாட்டிற்கு வந்து இங்கேயுள்ள வழக்க முதலியவற்றை யறிந்து இலக்கணம் இயற்றினர்.

" ஆதரஞ்சேர் குறுமுனியு மெனையொன் றுக்கி
யருள்செய்தா யருள்செய்த படியே செய்வல்

ஓதருந்தென் பூமிதமிழ்ப் பூமியென்பா
 ரொண்டமிழிற் குரியவெலா மடிமைக் கிங்கே
போதமுற வறிவித்தல் வேண்டு மென்று
 போற்றுங்கா லெழுத்துச் சொற் பொருண்முன்னை
நீதியுடைச் சூத்திரங்க ளறியும் வண்ணம்
 நெறியின்க ணறிவித்தாய் நேசங் கூர்ந்தே "
(பழைய திருவிளையாடல்)

என்பது முதலியவற்றால் இது விளங்கும்.

"தமிழொடு பிறந்துபழ மதுரையில் வளர்ந்தகொடி" (குமர.)

என்றதனாலும் அகத்தியர் தமிழ் நாட்டிற்கு வருவதற்கு முன்னமேயே அந்நாட்டில் இருந்த தமிழின் தொன்மை விளங்கும்.

அகத்திய முனிவர் செய்த இலக்கணம் **அகத்தியம்;** அஃது இயல், இசை, நாடக மென்னு மூன்றிலக்கணங் களை யுடையது; அது மூன்று சங்கத்தார்களுக்கும் இலக்கணமா யமைந்து பல புலவர்களாலும் பெரிதும் போற்றப்பட்டு முதனூலாகவும் எண்ணப்பட்டு வந்தது. இது, ''வினையினீங்கி'' (**தொல்காப்பியம்**, மரபியல், சூத்திரம், 94) என்னும் சூத்திர உரையாலும்,

"வீங்குகட லுடுத்த வியன்கண் ஞாலத்துத்
தாங்கா நல்லிசைத் தமிழ்க்குவிளக் காகென
வானோ ரேத்தும் வாய்மொழிப் பல்புகழ்
ஆனாப் பெருமை அகத்திய னென்னும்
அருந்தவ முனிவ னாக்கிய முதனூல்''

என்னும் **பன்னிருபடலப்** பாயிரத்தாலும் புலனாகின்றது.

அகத்திய முனிவரிடம் முத்தமிழ் பயின்ற மாணாக்கர் களுள் இயற்றமிழிலக்கண மியற்றினவர்கள் தொல்காப் பியர் முதலிய பன்னிருவரென்பர்;

" மன்னிய சிறப்பின் வானோர் வேண்டத்
தென்மலை யிருந்த சீர்சால் முனிவரன்
தன்பாற் றண்டமிழ் தாவின் றுணர்ந்த

துன்னருஞ் சீர்த்தித் தொல்காப் பியன்முதற்
பன்னிரு புலவரும் " (சிறப்புப் பாயிரம்)

என்பது **புறப்பொருள் வெண்பாமாலை.**

இசைத்தமிழிலக்கணமியற்றியவர்கள் **சிகண்டி** முதலியோர். நாடகத்தமிழிலக்கண மியற்றியவர்கள் முறுவல், சயந்தம் முதலிய நூலுடையோர். இயற்றமிழ் நூல்களுள் அவிநய மென்பது தொல்காப்பியத்திற்கு முந்திய தென்றும், **தண்டலங் கிழவன் இராசபவித்திரப் பல்லவதரையன்** என்பவரால் அதற்கு மிகச் சிறந்ததோருரை செய்யப்பட்டிருந்ததென்றும் **நன்னூல் மயிலைநாத** ருரை தெரிவிக்கின்றது.

முத்தமிழிலக்கணங்களையும் இந்நாட்டிற் பரவச் செய்த மேம்பாடு பற்றியே பல மதத்தினரும் தமிழாசிரியராக **அகத்தியரை** மிகப் பாராட்டி யிருக்கின்றனர்;

" தமிழெனு மளப்பருஞ் சலதி தந்தவன் "
" தழற்பொலி விழிக்கடவுள் தந்ததமிழ் தந்தான் "
" தமிழ் மாமுனி " (கம்பராமாயணம்)

" தேனார் கமழ்தொங்கல் மீனவன் கேட்பத்தெண் ணீரருவிக்
கானார் மலயத் தருந்தவன் சொன்னகன் னித்தமிழ்நூல் "
(காரிகை)

" ஆயுங் குணத்தவ லோகிதன் பக்க லகத்தியன் கேட்
டேயும் புவனிக் கியம்பிய தண்டமிழ் " (வீரசோழியம்)

" மூவாத் தமிழ்பயந்த முன்னூன் முனிவாழி "
(தண்டியலங்காரவுரை மேற்கோள்)

" அகத்தியன் பயந்த செஞ்சொ லாரணங்கு "
(வில்லிபுத்தூராழ்வார் பாரதம்)

மேற் கூறியவற்றுள் காரிகை யாசிரியர் சைனர்; வீரசோழிய ஆசிரியர் பௌத்தர். இங்ஙனம் அகத்தியர் பாராட்டப் பெற்றிருத்தலை இன்னும் எத்தனையோ இடங்களிற் காணலாகும்.

இவர் வருவதற்கு முன்னமே இந்நாட்டிலிருந்த தமிழையும் அதனிலக்கணத்தையும் இவர் தந்தாரென்று

கூறியிருப்பது உபசாரவழக்கு; இங்ஙனம் கூறியிருத்தற்குக் காரணம் தமிழ்ப் பாஷைக்கு அக்காலத்திலிருந்த ஒரு மெலிவைப் போக்கி இவர் இலக்கணம் செய்ததும் மாணுக்கர்களுக்குப் பாடஞ் சொல்லிப் பாதுகாத்தமையுமே.

பிரமாஸ்திரத்தால் தங்களுக்கு நேர்ந்திருந்த ஆபத்தைச் சஞ்சீவி கொணர்ந்து நீக்கிய அனுமானை நோக்கி இராமர், ''இன்று நாங்கள் உன்வயிற்றிற் பிறந்தோம்'' என்று கூறினுற் போல்வது இது.

அகத்தியரால் தரப்பட்டுத் தமிழ் வளர்ந்ததைப் புலவர்கள் அழகாக வருணித்திருக்கிருர்கள்.

"ஓங்க லிடைவந் துயர்ந்தோர் தொழவிளங்கி
ஏங்கொலிநீர் ஞாலத் திருள்கடியு—மாங்கவற்றுள்
மின்னேர் தனியாழி வெங்கதிரொன் றேனையது
தன்னே ரிலாத தமிழ்" (தண்டி. மேற்.)

'ஓங்கல்' என்றது பொதியில் மலையை; இச்செய்யுள் சூரியனுக்கும் தமிழுக்குஞ் சிலேடை.

"பொருப்பிலே பிறந்து தென்னன் புகழிலே கிடந்து சங்கத்
திருப்பிலே யிருந்து வையை யேட்டிலே தவழ்ந்த பேதை
நெருப்பிலே நின்று கற்ருேர் நினைவிலே நடந்தோ ரேன
மருப்பிலே பயின்ற பாவை மருங்கிலே வளரு கின்ருள்"
(வி. பா. சிறப்புப்.)

இச் செய்யுளில் தமிழை ஒரு குழந்தையாக உருவகித்து அழகாக அதன் வளர்ச்சியை முறையே காட்டியிருப்பது அறிந்து இன்புறத்தக்கது. பொருப்பிலே பிறந்தமை அகத்தியமுனிவர் தமிழாசிரியரென்பதைக் குறிப்பிடும். தென்னன் புகழிலே கிடந்தது பாண்டிய மன்னர்கள் தமிழைப் போற்றிவந்தமையைக் காட்டும். குழந்தையை வெண்மையாகிய தூய ஆடையிற் கிடத்தல் போல இங்கு வெண்ணிறமாகிய தென்னன் புகழிலே கிடந்தது என்பதிலுள்ள நயம் கவனிக்கத் தக்கது. இருப்பதற்குப் பலகை வேண்டுமாதலால், 'சங்கத்திருப்பிலேயிருந்து' என்ருர்.

வையையேட்டிலே தவழ்ந்தமை **ஞானசம்பந்தர்** தேவா ரத்தை வரைந்தருளி வையையிலிட்ட ஏடு நீரையெதிர்த் துச் சென்றதையும், நெருப்பிலே நின்றமை அவர் தேவா ரத்தை யெழுதி நெருப்பிலிட்ட ஏடு வேவாமலிருந்த தையும் அறிவிக்கும்.

இன்னும், பொதியில்மலையில் **அகத்தி**யரால் தாபிக் கப்பெற்ற ஒரு தமிழ்ச்சங்கம் இருந்ததாகவும் தெரிகிறது.

சீதையைத் தேடுவதற்குத் தென்றிசையின்கட் செல்லும் வானரவீரர்களை நோக்கி வழிகூறுஞ் சுக்கிரீவன் ''பொதியில் மலையில் அகத்திய முனிவருடைய தமிழ்ச் சங்கம் இருக்கின்றது. அங்கே செல்லுவீர்களாயின் தமிழ்ச் சுவையை நீங்கள் நுகர்ந்து அவ்விடத்திலேயே இருப்பீர்கள்; நான் சொல்லிய காரியத்தை மறந்து விடுவீர்கள்'' என்று கூறியதாகக் கம்பர் பாடியிருப்பது இங்கே அறிதற்பாலது.

"தென்றமிழ்நாட் டகன்பொதியிற் றிருமுனிவன் றமிழ்ச்
சங்கம் சேர்கிற் பீரே லென்றுமவ ணுறைவிடமாம்"
(கம்ப. நாடவிட்டபடலம், 31)

## தொல்காப்பியத்தின் பழமை

''நான்கு கூறுமாய் மறைந்த பொருளும் உடைமை யான் நான்மறை யென்றார். அவை தைத்திரியமும் பௌடிகமும் தலவகாரமும் சாமவேதமுமாம். இனி இருக்கும் யசுவும் சாமமும் அதர்வணமு மென்பாருமுளர். அது பொருந்தாது; இவர் இந் நூல் செய்தபின்னர் வேத வியாதர் சின்னாட் பல்பிணிச் சிற்றறிவினோருணர்தற்கு நான்கு கூறாக இவற்றைச் செய்தாராதலின்'' என்று தொல்காப்பியப் பாயிரவுரையில் **நச்சினார்க்கினியர்** எழுதியிருத்தலால் தொல்காப்பியத்தின் பழமை புலப் படும். நச்சினார்க்கினியருக்குத் தமிழிலுள்ள அன்பையும் பயிற்சியையும் இதனாலறியலாம். அவருடைய உரைப்படி தொல்காப்பியம் வியாசர் வேதத்தைப் பகுத்ததற்கு

முன்னரெனின் அதற்கு முதனூலாகிய அகத்தியம் மிகப் பழமையான தென்பதைக் கூற வேண்டுவதில்லை.

## தமிழ் நாட்டின் எல்லை

பண்டைக் காலத்தில் தமிழ் நாட்டின் வடவெல்லை கிருஷ்ணநதியென்று சிற்பசாஸ்திரம் கூறுகிறதென்று கேட்டிருக்கின்றேன். தொல்காப்பியர் காலத்தில் தமிழ் நாடு வேங்கடத்தை வடக்கெல்லையாகவும் குமரியைத்தெற் கெல்லையாகவும் கொண்டிருந்தது.

"வடவேங்கடந் தென் குமரி யாயிடைத்
தமிழ் கூறு நல்லுலகத்து" (தொல்காப்பியம், பாயிரம்)

இங்கே கூறியுள்ள குமரி யென்பது அந்நாளிற் பாண்டி நாட்டின் தென்பாகத்தில் உள்ளதோர் ஆறு. தென்பாலி லுள்ள சில நாடுகளைக் கடல் கொண்டபோது அந்நதியும் அழிவுற்றது. பஃறுளி யாற்றிற்கும் குமரி யாற்றிற்கும் இடையிலிருந்த 700 காத அளவுள்ள 49-நாடுகள் அழிவுற் றன வென்று **சிலப்பதிகார** உரையாசிரியர் தெரிவிக்கிறார். வடக்கெல்லை வடவேங்கடமென்றும் மற்ற மூன்று எல்லை கள் கடலென்றும் **சிகண்டி ஆசிரிய**ரும் **சிறுகாக்கை பாடினி**யாரும் தத்தம் சூத்திரங்கள் முகமாக அறிவித் திருக்கிறார்கள். அவர்கள் காலத்திற்கு முன்பு குமரி யாற்றைக் கடல்கொண்டது போலும். அவர்கள் தொல் காப்பியருக்குப் பிற்காலத்தவர்கள்.

குமரிக்கும் பஃறுளியாற்றிற்கும் இடையிலிருந்த நாட்டைக் கடல் கொண்டு விட்டமையால், தன் நாட்டுள் இழந்த பாகத்தினளவு பெறுதற்குச் சோழநாட்டெல்லையி லிருந்த **முத்தூர்க் கூற்றத்தையும்** சேரமானாட்டுக் **குண்டூர்க் கூற்றத்தையும்** வென்று பெற்றுப் பாண்டியன் அரசாண்டானென்று தெரிகிறது. கூற்றம் என்ற சொல் சில ஊர்களின் தொகுதியைக் குறிப்பதொரு பெயர்.

“ மலிதிரை யூர்ந்துதன் மண்கடல் வெளவலின்
மெலிவின்றி மேற்சென்று மேவார்நா டிடம்படப்
புலியொடு வின்னீக்கிப் புகழ்பொறித்த கிளர்கெண்டை
வலியினுன் வணக்கிய வாடாச்சீர்த் தென்னவன் ”
(கலித், 104 : 1 - 4)

“ வடிவே லெறிந்த வான்பகை பொருது
பஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக்
குமரிக் கோடுங் கொடுங்கடல் கொள்ள ”
(சிலப். காடுகாண் காதை, 13-20)

‘‘என்றது: அங்ஙனமாகிய நிலக்குறைக்குச் சோழ நாட்டெல்லையிலே முத்தூர்க் கூற்றமும் சேரமானுட்டுக் குண்டூர்க்கூற்றமு மென்னுமிவற்றை இழந்த நாட்டிற்காக ஆண்ட தென்னவன்’’ (ஷை ஷை, ஷை, விசேடவுரை)

இவற்றுல், கடல்கொண்ட தமிழ் நாட்டின் பாகம் தெற்கே மிகுதியாக இல்லையென்று தெரிகிறது.

## மூன்ருஞ்சங்கம்

## மதுரையின் இடவிசேடம்

மூன்ருஞ்சங்கம் மதுரைமாநகரில் ஸ்தாபிக்கப் பட்டது. மதுரையென்பதற்கு இனிமையானதென்று பொருள். **பரிபாடலில்** வந்துள்ள,

“ உலக மொரு துலையாத் தாஞேர் துலையாப்
புலவர் புலக்கோலாற் றூக்க-உலகனைத்தும்
தான்வாட வாடாத் தகைமைத்தே தென்னவன்றன்
நான்மாடக் கூட னகர் ”

என்னும் பகுதியாலும், **திருவாலவாயுடையார் திருவிளை யாடலில்** வந்துள்ள,

“ மலரு மித்திரு நாட்டியல் வாணர்சொற் கோலால்
உலக னைத்தையு நிறுப்பமுன் வாடிடா தோங்கும்
அலகில் வண்புக ழுடையது மதுரை ”

என்னும் பகுதியாலும் மதுரை விசேடமுள்ளவிடம், அதாவது கல்வி வளர்ச்சி முதலியவற்றிற்குரிய இடமென்பதை அறியலாம்.

கரிகாற் பெருவளத்தான் ஒரு சமயம் சதுரங்கசேனே யுடன் சோழ நாட்டிலுள்ள காவிரிப்பூம்பட்டினத்தி லிருந்து புறப்பட்டுத் திரிசிரபுரம் கடந்து போகையில் ஒரு கோழி வந்து அவன் ஏறியிருந்த யானேயின் மத்த கத்தைக்கொத்த அது பின் வாங்கியது. யானேயோ பெரிய மிருகம், கோழி சிறியது. ஆயினும் கோழி யானேயை எதிர்த்ததையும் யானே பின் வாங்கியதையும் பற்றி அரசன் சிந்தனே செய்து அந்த இடம் வன்மையை அளிக்கவல்லதென்றுணர்ந்து ஒரு நகரங் கண்டு அங்கே உறைவாருயினுன். அதையே உறையூர் என்பார். கோழியினுல் அந்தவிடம் அறியப்பட்டமையால் உறையூர் கோழி யென்றும், கோழியின் மூக்கால் யானே கொத்தப் பெற்றவிடத்திலிருப்பது பற்றி ஆண்டுள்ள சிவஸ்தலம் மூக்கீச்சரமென்றும் வழங்கலாயின. **சிலப்பதிகாரத்திலும்** இச்செய்தி காணப்படுகின்றது.

> "முரஞ்செவி வாரண முன்சம முருக்கிய
> புறஞ்சிறை வாரணம் புக்கனர் புரிந்தென்"
>
> **(நாடுகாண் காதை, 247-8)**

(வாரணம்—யானே, கோழி)

இப்படியே அக்காலத்திலிருந்த மன்னர்களும் பிறரும் சிறந்த இடங்களேத் தேர்ந்தெடுத்தே இராசதானி ஏற் படுத்துவதும் கழகம் ஏற்படுத்துவதும் வழக்கமென்று தெரிகிறது. பாண்டியர்களுக்கு வேறு இராசதானிகள் இருந்தும் மதுரையில் சங்கத்தை ஸ்தாபித்தது இட விசேடத்தை யறிந்தே.

## சங்கப்புலவர்களின் இயல்பு

மதுரைச் சங்கத்திலிருந்து தமிழாராய்ந்து வந்த நல் லிசைப் புலவர்கள் பலகுணங்களால் நிறைந்திருந்தது பற்றிச் சான்ருேரென வழங்கப்படுவார்கள். அவர்கள் தங்களுடைய குடும்பச்செலவிற்கு வேண்டியவற்றை வேறுவகையாகப் பெற்று அச்சங்கத்திலிருந்து தமிழ்நூல்

களை ஆராய்ச்சி செய்தும், தமிழ்ச்சுவையை நுகர்ந்து இன்புற்றும், நூல்கள் இயற்றியும், தனிப்பாடல்கள் இயற்றியும் வாழ்ந்து வந்தார்களேயன்றித் தங்கள் பசியைத் தீர்த்துக்கொள்வதற்காகவே அக் கூட்டத்திற்போய் இருக்கவில்லை.

" நவிறொறும் நூனயம் போலும் பயிறொறும்
பண்புடை யாளர் தொடர்பு " (குறள், 783)
" ஆயுந் தொறுந்தொறு மின்பந் தருந்தமிழ் "
(தணிகைப்புராணம்)

என்றாரன்றோ?

ஆராய்ச்சியாலும் கற்பவர்களுடைய சல்லாபத்தாலும் உண்டாகும் இன்பத்தையே பெரும்பயனாக எண்ணியிருந்தார்களேயன்றி வேறுள்ள எந்த இன்பத்தையும் அப்புலவர்கள் மதிக்கவில்லை.

" தவலருந் தொல்கேள்வித் தன்மை யுடையார்
இகலில ரெஃகுடையார் தம்முட் குழீஇ
நகலி னினிதாயிற் காண்பா மகல்வானத்
தும்ப ருறைவார் பதி" (நாலடியார்)

என்பது இதனை விளக்கும்.

தம்முடைய தாய் தந்தையர் மனைவி மக்கள் சுற்றத்தார் முதலியோருடைய பசித்துன்பத்தைப் போக்க அவர்களிற் சில புலவர்கள் ஒவ்வொரு சமயத்தில் குறிப்பறியும் உபகாரிகளிடஞ் சென்று அவர்களால் அத்துன்பத்தைப் போக்கியதுண்டு. இதனை அவர்கள் அவ்வப்பொழுது இயற்றிய செய்யுட்கள் நன்கு தெரிவிக்கின்றன.

அவர்களிடத்திலிருந்த எல்லாக் குணங்களிலும் செய்ந்நன்றி யறிதலென்னுங்குணம் மிகச் சிறப்புற்று விளங்கி வந்தது; அவர்கள் பாடல்களால் இது விளங்கும்.

பாண்டியர் முதலிய அரசர்களும் நன்கு கற்று அவரோடு ஒப்பவீற்றிருந்து தமிழை ஆராய்ந்து வந்தனர். ''மன்னவனெப்படி மன்னுயிரப்படி'' என்னும் பழமொழிக்கேற்ப நாட்டிலுள்ளவர்களெல்லோரும் தமிழில்

ஒழுங்கான பயிற்சியுள்ளவர்களாக இருந்தார்கள். அக் காலத்தில் சேரசோழபாண்டியநாடுகள் மூன்றிலும் இருந்தவர்கள் பேசிய பாஷை தமிழே. இப்போது வேறு பாஷை தங்குந்தேயமாகிய மலைநாடு தமிழ்த் தேயமாகவே இருந்தது. இது **பதிற்றுப்பத்து** என்னுந்தொகைநூல் முதலியவற்றாலும், அந்நாட்டு அரசர்களாகிய சேரமான் பெருமாணயனர் குலசேகராழ்வார் திருவாக்குக்களாலும் தெரியவருகிறது.

முற்கூறிய புலவர்கள் ஒரு சாதியாரல்லர்; ஒரு குலத் தாரல்லர்; ஒரு மதத்தினரல்லர்; **உலோச்சனர்** முதலி யோர் சைனர்; **இளம்போதியார்** முதலியோர் பௌத்தர்; பின்னும் இவர்கள் ஒரு தேசத்தாரல்லர்; ஒரூராரல்லர்; மதுரையிலும் அதன் அயலூர்களிலும் இருந்தவர்களன்றி வேறு நாடுகளிலிருந்தும் வந்து சிலகாலம் இருந்து செல் வதுண்டு. இவை அவர்கள் பாடல்களாலும் அவற்றின் பின்னுள்ள வாக்கியங்களாலும் விளங்கும். வேண்டிய வற்றை வேண்டிய காலங்களிற் குறிப்பறிந்து அரசர்கள் அவர்களுக்கு உபகரித்து வந்தார்கள்.

## சங்க மண்டபம்

அப்புலவர்கள் இருந்து தமிழாராய்ச்சி செய்வதற்கு மிகவசதியாக ஒரு மண்டபம் அக்காலத்திருந்த பாண்டிய அரசனுற் கட்டிக்கொடுக்கப்பட்டது; அம்மண்டபத்திற்கு, '**பட்டிமண்டபம்**' என்பது பெயர். இது,

''தெற்கண் வாயில் திறவாத **பட்டிமண்டபத்தார்** பொருட்டு **நக்கீரர்** ஒருவன் வாழவும் ஒருவன் சாவவும் பாடிய மந்திரம் அங்கதப் பாட்டாயின'' (**தொல்**. செய். சூத்திரம், 179, பேர்.) என்பதனுலறியப்படுகின்றது; இன்னும்,

'' பட்டிமன் றென்னன்', (தேவாரம்)
பட்டிமண்டப மேற்றினை யேற்றினை'' (திருவாசகம்)

" பட்டி மண்டபத்துப் பாங்கறிந் தேறுமின் " (மணிமேகலை)
" பன்னருங் கலைதெரி பட்டி மண்டபம் "
(கம்பராமாயணம்)

என்பவற்ருல் அப்பெயர் முன்பு வழங்கி வந்தமை புலனு கின்றது. இப்படியே வேறு சில ஆதாரங்களுமுண்டு. பட்டியென்ற சொல் வரம்பு கடந்து நடக்கு மிருபாலாரை யும் குறிப்பதாகக் காலக்கிரமத்தில் வழங்கிவந்துவிட்டமை யால் அதனையறிந்த பெரியோர் அப்புலவர் தொகுதியைத் தொகை, சங்கம், கூடல், கழகம் என்னும் பெயரால் வழங்குவாராயினர்:

" மதுரைத் தொகை யாக்கினன் " (தேவாரம்)
" நன்பாட்டுப் புலவனுய்ச் சங்கமேறி " (தேவாரம்)
" கூடலி னுய்ந்தவொண் டீந்தமிழ் " (திருக்கோவையார்)
" கந்தனை யனையவர் கலைதெரி கழகம் " (கம்பராமாயணம்)

## சிவபெருமானும் சங்கப்புலவர்களில் ஒருவராயிருந்தமை

சங்கப் புலவர்களுடைய மேம்பாட்டை யறிந்து சோம சுந்தரக் கடவுளும் இடையிடையே சென்று தாமும் ஒரு புலவராகவிருந்து தமிழாராய்ந்து வந்தனரென்றும் அக் காலத்தில் அவருக்கிருந்த திருநாமம் **மதுரைப் பேரால வாயாரென்ப** தென்றுந் தெரிகின்றன.

" தண்டமிழ்நூற் புலவாணர்க்கோ ரம்மானே " (தேவாரம்)
" சிறைவான் புனற்றில்லைச்சிற்றம் பலத்துமென் சிந்தையுள்ளும்
உறைவா னுயர்மதிற் கூடலினுய்ந்தவொண் டீந்தமிழின்
துறைவாய் நுழைந்தனை யோவன்றி யேழிசைச் சூழல்புக்கோ"
(திருக்கோவையார்)

" சென்றணைந்து மதுரையினிற் றிருந்தியநூற் சங்கத்துள்
அன்றிருந்து தமிழாராய்ந் தருளியவங்கணர்"
" சங்கப் புலவர் தந் திருமுகந் தந் தலைமேற்கொண்டு"
(பெரிய புராணம்)

"பெருமைதரும் பெயர் மதுரைப் பேரால வாயனென
உரைசெய்தே யவை நெடுநா ளிருந்தவனவ் வயினெளிப்ப"
(பழைய திருவிளையாடல்)

மதுரைப் பேராலவாயாரென்ற இத் திருநாமம் பிற்காலத்தில் சங்கப் புலவரில் ஒருவர்க்கு இடப்பட்ட பெயராகவும் தொகை நூல்களிற் காணப்படுகின்றது.

### சங்கப்பலகை

புலவர்கள் ஆராய்ந்தார்களென்றதனால், இடையிடையே ஏற்பட்ட கலகத்தாலும் பிறவற்றாலும் நூல்கள் சிதைந்தனவென்றும், ஆராயும்வண்ணம் அரசர்கள் செய்வித்தார்களென்றும், செய்யுட்களைத் தொகுப்பித்தார்களென்றும் தெரிகின்றன.

இவர்கள் பெருமையை உணர்ந்த பிறர், தாமும் அவர்களைப் போல் மேம்பட்டு விளங்க வெண்ணித் தாம் தாம் பாடிய பாடல்களைக் கொணர்ந்து, அவற்றைப் பார்க்க வேண்டுமென்றும், அவற்றை அங்கீகரிக்கவேண்டுமென்றும், தம்மைச் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்றும் முயல்வாராயினர். பிறர் தீமையைச் சொல்லா நலத்தவர்களாதலின், அவர்களுடைய கல்விக்குறையையும் அவர்கள் செய்யுட்களிலுள்ள வழுக்களையும் எடுத்துக்கூற இயலாதவர்களாகி வருந்தி அந்தத் துன்பத்திலிருந்து தம்மை விடுவிக்கவேண்டுமென்று சங்கப் புலவர்கள் சோமசுந்தரக் கடவுளை வேண்டினர். இவர்களுடைய வேண்டுகோளின்படியே தெய்வத்தன்மை வாய்ந்த ஒரு பலகையை இவர்களுக்குத் தந்தருளி எவருக்கு அஃது இடங்கொடுக்குமோ அவரைச் சிறந்த புலவரென்று கண்டு கொள்ளும்படி அவர் கட்டளையிட்டருளினர். அப்பலகையின் பேருதவியால் குறைந்த கல்வியுடையவர்களாலேற்பட்டு வந்த துன்பம் இவர்கட்கு அடியோடே நீங்கியது.

" மொழியறி சங்கப்பலகை'', ''பாவறி ஞானப்பலகை''
(வே. திருவிளையாடல்)

என்று பெரியோர் பாராட்டியிருப்பதால் சங்கப்பலகை இருந்ததும் அதனுடைய இயல்பும் விளங்குகின்றன.

" முழுதுணர்ந்தருள் மலயநன்முனி மொழியு முத்தமிழும்
பழுதறும்படி புலவரேறிய பலகையொன்றுடையான் "

என்று **வில்லிபுத்தூரா**ரும் பாடியிருக்கிறார்.

## இறையனாரகப் பொருள்

பின்னொரு காலத்தில், பாண்டிவள நாட்டிற் பஞ்சம் தோன்றி யாவரையும் துன்புறுத்தியது. புலவர்கள் அரசனிடம் விடைபெற்று மதுரையை நீங்கிச் சோழநாட்டிலுள்ள **ஆலஞ்சேரி** யென்னும் ஊரிலுள்ள **அயிந்தன்** என்னும் பிரபுவை அடைந்தபொழுது அவன் யாதொரு கவலையுமில்லாமல் தன்பால் வைத்திருந்து அவர்களைப் பாதுகாத்து வந்தான். மதுரையில் பஞ்சம் நீங்கியது தெரிந்து அவர்கள் அவனிடம் விடைபெற்றுச் சென்று பாண்டியனைக் கண்டபொழுது, ''நீவிர் இப்பஞ்சத்தில் என்ன துன்பமுற்றீர்களோ?'' என்று கவலையுடன் வினாவினன். புலவர்கள் யாதொரு கவலையும், தமக்கு இல்லாதபடி ஆலஞ்சேரி அயிந்தனென்பவன் பாதுகாத்தானென்பதை ஒரு செய்யுளால் தெரிவித்தனர். அச்செய்யுள் வருமாறு:

" காலை ஞாயிறு கடுங்கதிர் பரப்பி
வேலையுங் குளனும் வெடிபடச் சுவறித்
தந்தையை மக்கள் முகம்பா ராமல்
வெந்த சாகம் வெவ்வே றருந்திக்
குணமுள தனையுங் கொடுத்து வாழ்ந்த
கணவனை மகளிர் கண்பா ராமல்
விழித்தவிழி யெல்லாம் வேற்றுவிழி யாகி
அறவுரை யின்றி மறவுரை பெருகி
உரைமறந் தொழிந்த வூழிகா லத்தில்

தாயில் லவர்க்குத் தாயே யாகவும்
தந்தையில் லவர்க்குத் தந்தையே யாகவும்
இந்த ஞாலத் திடுக்கண் டீர
வந்து தோன்றினன் மாநிதிக் கிழவன்
நீலஞ் சேரு நெடுமால் போல்வான்
ஆலஞ் சேரி*அயிந்த னென்பான்
தன்குறை சொல்லான் பிறர்பழி யுரையான்
மறந்தும் பொய்யான் வாய்மையுங் குன்றான்
இறந்து போகா தெம்மைக் காத்தான்
வருந்தல் வேண்டாம் வழுதி
இருந்தன மிருந்தன மிடர்கெடுத் தனனே.''

இப் பஞ்சத்தின் கொடுமையால் அவர்களிடமிருந்த தொல்காப்பியப் பொருளதிகாரத்திலுள்ள அகத்திணைப் பகுதி எப்படியோ கைதவறிப் போயிற்று. அந்தப் பகுதியின் இன்றியமையாமையை உணர்ந்த அரசனும் புலவரும் மயங்கி வருந்துவாராயினர். அதன் பிறகு **சோமசுந்தரக் கடவுள்** ஒரு புலவராகத் தோன்றி அறுபது சூத்திரங்கள் அமைந்த ஒரு நூலையியற்றி அவர்களிடம் சேர்ப்பித்து, 'உங்கள் வருத்தத்தை நீக்கிக் கொள்ளுங்கள்'' என்று கட்டளையிட்டனர். சிவபெருமான் திருநாமம் இறையனாரென்பதாதலின் அந்நூலுக்கு '**இறையனாரகப்பொருள்**' என்பது பெயராயிற்று;

" உலகிய னிறுத்தும் பொருண்மர பொடுங்க
மாறனும் புலவரு மயங்குறு காலை
முந்துறும் பெருமறை முளைத்தருள் வாக்கால்
அன்பினைந் திணையென் றறுபது சூத்திரம்
கடலமு தெடுத்துக் கரையில்வைத் ததுபோற்
பரப்பினின் றமிழ்ச்சுவை திரட்டிமற் றவர்க்குத்
தெளிதரக் கொடுத்த தென்றமிழ்க் கடவுள்''

(கல்லாடம்);

"திருவால வாயமர்ந்த செழுஞ்சுடரைச் செழும் பொருணூல்
[தருவானை'',

"நூலின்கட் பொருள்பாடி நூலறிவார்க் கீந்தானை"

(பெரிய புராணம்)

*அயிந்த னென்பது மயிந்தனெனவும் வழங்கும்.

இறைவனுர் பொருளெனவும் களவியலெனவும் அந்நூலின் பெயர் வழங்கும். பல புலவர்களும் அதற்கு உரையெழுதினர். தத்தம் உரையே சிறந்ததென்று ஒவ்வொருவரும் கூறுவாராயினர்; அதுபற்றிப் பெரிய கலகம் விளைந்தது. சோமசுந்தரக்கடவுளிடத்தில் அவர்கள் அதனை விண்ணப்பஞ் செய்துகொண்டனர். அவர் அப்பொழுது அவர்களுக்கு முன்னே முன்போலே எழுந்தருளி, ''மதுரையில் வணிகர் மரபில் உப்பூர் குடிகிழார்மகன் **உருத்திரசன்மன்** என்ற பெயருடைய மூங்கைப்பிள்ளை இருக்கிறுன். அவன் முன் நும் உரைகளைப் படித்துக் காட்டினுல் இன்னது சிறந்த தென்பதை முகக்குறியால் உணர்த்துவான்'' என்றருளினுர். அந்த மூங்கைப் பிள்ளையை முருகனென்பர். பார்வதி தேவியாருக்கு ஒருகாலத்தில் பரமசிவன் உத்தரகோசமங்கை யென்னும் ஸ்தலத்தில் ஆகமப் பொருளை விளக்கிக்கொண்டிருந்தபோது அவர் கவனக் குறைவுடன் இருந்தமையால் இறைவன் அவரைச் சபித்தார். அதனுல் முருகக்கடவுள் தாயிடத்திலுள்ள அன்பினுல் வெகுண்டு அங்கேயிருந்த சாஸ்திரங்களைத் தூக்கிக் கடலில் எறிந்துவிட்டார். அதுபற்றி அவர் ஊமையாகப் பிறக்குமாறு சபிக்கப்பட்டு அப்படியே அவதரித்தார். சங்கப்புலவர்கள் தத்தம் உரையைப் படித்துக் காட்டியபொழுது நக்கீரர் உரையே சிறந்ததென்று அவர் ஏற்றுக் கொண்டார்.

''மணிக்கா லறிஞர் பெருங்குடித் தோன்றி
இறையோன் பொருட்குப் பரணர்முதல் கேட்பப்
பெருந்தமிழ் விரித்த வருந்தமிழ்ப் புலவனும்
பாயபா ரறிய நீயே யாதலின்'' (கல்லாடம், முருகர் துதி),
''திருத்தகு மதுரை தன்னிற் சிவன்பொரு ணிறுக்கு மாற்ருல்
உருத்திர சன்மனுகி யுற்றெழும் நிமலன்'' (கந்தபுராணம்).

பின்னர், உருத்திரசன்மர் சிவபெருமானை வழிபட்டுத் தமது ஊமைத் தன்மையை நீக்கிக்கொண்டனர்; அந்தவிடம் **திருவெருக்கத்தம்புலியூர்**. இந்த வரலாற்றை

அந்தத் தலசரித்திரத்திற் காணலாம். அங்கு உருத்திர சன்மரின் பிம்பமும் உண்டு. திருவெருக்கத்தம்புலியூர் இராசேந்திரபட்டணமென்று இக்காலத்து வழங்கப்படுகின்றது.

## சங்கமிருந்ததற்கு ஆதாரங்கள்

மதுரையில் சங்கமண்டபம் இருந்ததற்கு அடையாளமாக ஸ்ரீ சோமசுந்தரக்கடவுளுடைய கோயிலின் பெரிய பிராகாரத்தில் தென்மேற்கு மூலையில் சங்கத்தார் கோயிலென்று ஒன்று உண்டு. அதில் நாற்பத்தொன்பது புலவர்களின் பிம்பமும் ஸரஸ்வதி தேவியின் பிம்பமும் உள்ளன. சிவலிங்கப்பெருமானும் அங்கே எழுந்தருளியிருக்கின்றனர். ஒவ்வொரு தினமும் பூசை நைவேத்தியங்கள் நடைபெற்று வருகின்றன. மதுரை மேலவீதியொன்றில் **நக்கீரர்** கோயிலொன்று இருக்கிறது. அதில் நக்கீரருடைய பிம்பமும் வேறு சில புலவர்களுடைய பிம்பங்களும் உள்ளன. திருப்பரங்குன்றக் கோயிலிலும் **நக்கீரர்** பிம்பம் உண்டு. அது பூசிக்கப் பெற்று வருகின்றது. அவரைப் பூதத்தின் சிறையிலிருந்து முருகக் கடவுள் மீட்டருளிய திருவிளையாடல் ஒவ்வொரு வருடமும் பங்குனி மாதத்தில் நடைபெறும் திருவிழாக் காலத்து நான்காம் திருநாளில் அத்தலத்தில் நடைபெற்று வருகின்றது. சிவஸ்தலங்களுள் ஒன்ருகிய திருவீங்கோய் மலைச் சிவபெருமான் மீது '**ஈங்கோய் மலையெழுபது**' என்றொரு நூல் **நக்கீரரால்** இயற்றப் பெற்றிருத்தல்பற்றி அக்காலத்திலிருந்த அரசரொருவர் அம்மலைக்கோயிலில் நக்கீரருடைய திருவுருவத்தைப் பிரதிஷ்டிப்பித்துப் பூசை நைவேதனம் நடைபெற்று வரும்படி நிபந்தமேற்படுத்தியிருந்தாரென்று அத்தலத்துச் சிலாசாஸனத்தால் தெரியவருகின்றது. ''கொங்குதேர் வாழ்க்கை'' என்னுமொரு செய்யுளின் நிமித்தம் சோமசுந்தரக் கடவுளுக்கும் நக்கீரருக்கும் மிக்க வாதம் உண்டாயிற்றென்றும் அதில் தோல்வியுற்ற நக்கீரர் தமது பிழையைப் பொறுத்தருளும்படி

அவர்மீது **'கோபப்பிரசாதம்'** என்ற ஒரு நூலியற்றினு ரென்றும் ஒரு சரிதமுண்டு. அவர் ஒருசமயம் திருக் காளத்திக்குப் போய்க் **கைலைபாதி காளத்திபாதியந் தாதி** யென்றொரு பிரபந்தம் பாடினதாகத் தெரிகிறது. அவராற் பிரதிஷ்டிக்கப்பட்ட ஒரு சிவலிங்கப்பெருமான் திருவுருவம் அத்தலத்தில் உண்டு; அதற்கு **நக்கீரநாதர்** அல்லது **நக்கீரலிங்க** மென்பது திருநாமம்.

மேற்கூறிய தமிழ்ச்சங்கமே பிற்காலத்தில் பொற்றா மரைக்கரையில் இருந்ததாகவும் தெரிகிறது. வடமொழி **ஹாலாஸ்ய மாஹாத்மியத்திலும், திருவாலவாயுடை யார் திருவிளையாடற் புராணத்திலும்** இச்சங்கம் கங்கைக்கரையிலிருந்ததாகச் சொல்லப் பட்டிருக்கிறது. இங்கே, கங்கை யென்றதை வடக்கேயுள்ள கங்காநதி யென்று சிலர் எண்ணுகிறார்கள். அது பொருந்தாது. கங்கையென்பது இத்தலத்திலுள்ள பொற்றாமரை வாவி யையே குறிக்கும். சிவதீர்த்தத்தைக் கங்கையென்று வழங்குதல் மரபு. கும்பகோணம் ஸ்ரீ மகாமகத் தீர்த்தக் கரையிலுள்ள வீரபத்திரக்கடவுளைக் கங்கை வீரபத்திர ரென்றும், குடந்தைக் கீழ்க்கோட்டத்திலுள்ள விநாய கரைக் கங்கை விநாயகரென்றும் வழங்குதலை இக்காலத் தும் கேட்கலாகும். மேற்கூறிய பொற்றாமரைக் கரையிற் சங்கமிருந்ததற்கு அறிகுறியாக அவ்வாவியின் கரையி லுள்ள மண்டபக்கற்றூண்களிற் சங்கத்தாருடைய பிம்பங் கள் அமைக்கப் பெற்றுள்ளன.

" கோடாத நீதிச்செங் கோலான் குலோத்துங்கன் கோழிமின்னார்
தோடார் மலர்க்குழல் சூழ்வண்டு காடுய்ய பாடல்செய்தும்
பீடார் பொற் றாமரைச் சங்கமுற் றும்பெருங் காவியங்கள்
ஊடாடி யும்மிவர் நூலைய மேது முணர்ந்திலிரே "

என்பது **குலோத்துங்கன் கோவை**. பாண்டியனுடைய வேண்டுகோளின்படி **பொய்யாமொழிப்புலவர்** பொற்றா மரைக் கரையிலிருந்த சங்கத்தார் பிம்பங்கள் தலையசைக் கவும் பொற்றாமரை வாவியில் மூழ்கியிருந்த சங்கப்பலகை

மிதக்கவும் பாடினரென்ற ஒரு செய்தி, ''உங்களிலே'', ''பூவேந்தர்'' என்ற முதற்குறிப்புக்களையுடைய இரண்டு செய்யுட்களுடனும் வழங்கி வருகின்றது.

"சங்கமலி செந்தமிழ்கள்",
"நன்பாட்டுப் புலவனுய்ச் சங்க மேறி
நற்கனகக் கிழி தருமிக் கருளினேன் காண்"

என்று **தேவாரங்களிலும்,**

"சங்கத் தமிழ்"

என்று **திருப்பாவையிலும்,**

"சால்பாய மும்மைத் தமிழ் தங்கிய வங்கண்மூதூர்
நூல்பா யிடத்தும் முளநோன்றலை மேதி பாயப்
பால்பாய் முலைதோய் மதுப்பங்கயம் பாயவெங்கும்
சேல்பாய் தடத்தும்முள செய்யுண்மிக் கேறுசங்கம்"

என்று **பெரிய புராணத்திலும்,**

"செஞ்சொற் புலவர்கள் சங்கத் தமிழ்தெரி செந்திற்பதி"

என்று **திருப்புகழிலும்,**

"சங்கம் வளர்ந்திட நின்ற பொலன் கொடி"

என்று **மீனுட்சியம்மை பிள்ளைத்தமிழிலும்,**

"..................................தென்மதுரை
தங்கத் தமிழ்ச் சங்கத் தார்சொற் றவறினுஞ் சார்ந்துநந்தம்
சங்கத் திருந்து தமிழாய்ந் தவர்சொற் றவறுவரோ"

என்று **கோடீச்சுரக் கோவையிலும்** சங்கமென்ற பெயர் வந்துள்ளது.

சங்கமிருந்ததென்பதற்கு இன்னேரன்ன ஆதாரங்கள் பல இருந்தும் அஃதொன்றிருந்ததாகச் சிலாசாஸனத்திற் கிடைக்கவில்லை யாகையால் சங்கமிருந்ததேயில்லை யென்றும், **தொல்காப்பியத்திற்** சங்கமென்ற சொல் காணப்படவில்லை யென்றும் சிலர் பேசுகிறுர்கள். அது வருந்துவதற்கிடமாக விருக்கிறது.

## பிற சங்கங்கள்

இதுகாறும் கூறப்பட்டுவந்த சங்கம் இயற்றமிழ்ச் சங்கம்; இதையன்றி இசைத் தமிழ்ச் சங்கமொன்றும் நாடகத்தமிழ்ச் சங்க மொன்றும் அதேகாலத்தில் மதுரையில் இருந்தனவென்று பெரியோர் சொல்லக் கேட்டிருக்கிறேன்.

கடைச்சங்க காலத்திற்குப் பின்பும் இம்மதுரையில் சைன சங்கமும் பௌத்த சங்கமும் இருந்தனவென்றும் பெரியோர் சொல்லுவதுண்டு. அன்றியும், வடமொழிச் சங்கம் சேரன் ஆட்சியி லிருந்ததாக **மதுரைக் காஞ்சி** தெரிவிக்கின்றது. **திருவள்ளுவர் திருக்குறளை** அரங்கேற்றினமையால் சங்கம் அழிந்துவிட்டதென்று சிலர் நினைக்கிறார்கள்: அது பொருந்தாதென்பது சிலர் கருத்து.

## உக்கிரப் பெருவழுதி

**திருவள்ளுவ மாலையிற்** காணப்படும் உக்கிரப்பெருவழுதியின் வரலாற்றைக்கொண்டு சிலர் காலநிர்ணயம் செய்கிறார்கள். **அகநானூற்றைத்** தொகுத்தவர் பெயரும் உக்கிரப் பெருவழுதியாரென்று தெரிகிறது. **புறநானூற்றில்**, 'கானப் பேரெயில் கடந்த உக்கிரப் பெருவழுதியார்' என்றொருவர் கூறப்படுகிறார். பாண்டியர்களுடைய வகுப்பில் உக்கிரகுலமென்று ஒன்றுண்டென்றும் அதில் பிறந்தவர்கள் உக்கிரப் பெருவழுதி யென்று பெயர் பெற்றிருந்ததாகவும் பழைய சரித்திரங்கள் தெரிவித்தலால் மேற் கூறிய வழுதிகள் ஒருவரோ வேறோ தெரியவில்லை. மேற்கூறிய கானப்பேர் இப்பொழுது **காளையார் கோயி**லென்று வழங்கப்படுகிறது. அத்தலத்திலெழுந்தருளியிருக்கும் சிவலிங்கப் பெருமான்களில் ஒரு மூர்த்திக்கு '**உக்கிரபாண்டியேசுவரர்**' என்பது திருநாமம். பாண்டியதேயத்தின் கடற்றுறைப் பட்டினமாகிய **கொற்**

கையினருகிலுள்ள பெருங்குளத்தில் **உக்ர பளுதீசுவரர்** கோயிலென்று ஒரு சிவாலய மிருக்கிறது. கொற்கையி லிருந்த உக்கிரபாண்டியரென்பவரால் அந்த ஈசுவர வடிவம் உபாசிக்கப்பட்டதென்று ஆண்டுள்ளார் சொல்லு கின்றனர்.

சங்க கால வரையறையைப்பற்றி இக்காலத்தில் ஆராய்ச்சியாளர் பலர் உழைத்து ஒருவரோடொருவர் தர்க்கம் செய்து நிர்ணயிக்க முயன்று வருவதால் அதிற் றலையிட்டுக்கொள்ள எனக்குச் சிறிதும் விருப்பமில்லை.

## II. முத்தமிழ்

**தமிழ்** மூன்றுவகையாகப் பகுக்கப்பெற்று இயல், இசை, நாடகமென்ற பெயருடன் வழங்கும். அவற்றுள் ஒவ்வொன்றிலும் இலக்கணமும் இலக்கியமும் உண்டு. அம்மூன்றுனுள் ஒன்றுக்கு ஒன்று இன்றியமையாததே. மூன்றற்கும் பொதுவாக சில இலக்கணங்களும் உண்டு.

இலக்கியத்தின் அமைதியே இலக்கணம். ''இலக் கியங் கண்டதற் கிலக்கண மியம்பலின்'', ''இனைவறு குறுமுனி இலக்கணம்பெறப், புனைதரு மிலக்கியப் புலவர் சிங்கமே'' என்பவற்றுல் இது விளங்கும்.

இம்மூன்றும் தமிழில் ஒரு கொத்தாக வழங்கப்படு வதுபோல் வேறு பாஷைகளில் வழங்குவதில்லை யென்றும், இம்மூன்றன் இலக்கணமும் தனித்தனியே அவற்றில் உள்ளனவென்றும் சொல்லுவர்.

இம்மூன்றும் சேர்ந்தே தமிழில் முத்தமிழ், தமிழ் மூன்று, மும்மைத்தமிழென்று வழங்கப்படுவதைத் **தேவாரம்** முதலியவைகள் தெரிவிக்கின்றன.

பண்டைக்காலத்திலிருந்த தமிழ்ப் புலவர்களிற் பெரும்பாலோர் இம்மூன்றிலுமே பயிற்சி உள்ளவராக

இருந்தனரென்றும் அவருள் **முத்தமிழ்க்கவி** யென்றே சிலர் பட்டம் பெற்று விளங்கினர்களென்றும் தெரிகிறது.

இந்த முத்தமிழ்க்கும் இலக்கணநூல் செய்தவர் **அகத்திய முனிவரே**; தமிழைப் பரிபாலித்த சைனர் முதலியோர்க்கும் உடன்பாடானது இது. அகத்தியத்தின் பால் முத்தமிழிலக்கணங்களும் கூறப்பட்டுள்ளன என்பர்.

பழைய உரைகளிற் காணப்படும் மேற்கோள் வழக்கால், **சிற்றகத்தியம் பேரகத்தியமென** இரண்டு நூல்கள் இருந்து வந்தன வென்று தெரிகிறது; அவற்றைப்பற்றி வேறு ஒரு விவரமும் தெரியவில்லை.

''ஆதியிற் றமிழ்நூல் அகத்தியர்க் குணர்த்திய மாதொரு பாகன்'' என்றது **அகத்தியத்**திற்கு முற்பட்டே ஒரு தமிழ்**நூ**ல் இருந்ததைத் தெரிவிக்கிறது.

ஒன்றுகவும் வேறுவேறுகவுமிருந்த சங்கங்களால் இந்த முத்தமிழும் மதுரையில் ஆதரிக்கப்பட்டு வந்தன. அப்படியே வேறு வேறு நகர முதலிய இடங்களிலும் ஆதரிக்கப் பெற்று வந்தன.

அவற்றுள் **இயற்றமிழ்**, நல்ல நடையோடு கூடிய இலக்கணமமைந்த தமிழ். **இசைத் தமிழ்** இராகம், தாளம், பாஷைப்பாட்டு இம்மூன்றும் வேறுபடாமல் இசைந்திருத்தலையுடைய தமிழ்.

**நாடகத் தமி**ழைப்பற்றிப் பின்பு சொல்லுவேன்.

இவை, அகத்தியராலும் அவர் மாணுக்கர்களாலும் இலக்கணம் செய்யப்பெற்றுக் கால அடைவிற் பெருக்க மடைந்து வந்தன.

இலக்கியங்களுள் **சிலப்பதிகாரம்** மூன்று தமிழும் விரவப் பெற்றிருத்தலின் முத்தமிழ்க்காப்பிய மென்று பாராட்டப்படும்.

''குடக்கோ முனிசேரன் தண்டாவுரை **முத்தமிழ்**'' (**சிலப்பதிகாரம்**, நூற்சிறப்புப் பாயிரம்);

''**முத்தமிழ்க்** கல்வியும் வித்தகக் கவியும் காட்டு தற்கு''

"பழுதற்ற முத்தமிழின் பாடற் குறையின்
றெழுதத் துணிவதே யான்"
"ஒருந் தமிழொரு மூன்று முலகின் புறவகுத்துச்
சேரன் தெரித்த சிலப்பதிகாரம்"

''சோற்றுச் செருக்கல்லவோ **தமிழ் மூன்றுரை** சொல் வித்ததே'' (**சிலப்பதிகாரம்**, அடியார்க்கு நல்லார் உரைப் பாயிரம்)

இங்ஙனம் முத்தமிழும் விரவப்பெற்ற காப்பியங்கள் இந்நூலையன்றி வேறு இக்காலத்துக் காணப்படவில்லை.

**இயற்றமிழிலக்கணங்கள்** எழுத்திலக்கணம், சொல் லிலக்கணம், பொருளிலக்கணம், யாப்பிலக்கணம், அணி யிலக்கணமென ஐந்து வகைப்படும். பொருத்த இலக் கணத்தையும் பிரபந்த இலக்கணத்தையும் இயற்றமி ழிலக்கணத்திற் சேர்த்து வழங்குவதும் உண்டு. மேற் கூறிய ஐந்திலக்கணங்களையும் உடைய நூல்கள் தொல் காப்பியம், அவிநயம், வீரசோழியம், இலக்கணவிளக்கம், தொன்னூல், முத்து வீரியமென்பன.

அவற்றுள் **தொல்காப்பியம்** என்பது தொல்காப்பிய முனிவராற் செய்யப்பட்டது. அம்முனிவர் தொல்காப் பியக்குடியிற் பிறந்தவர். அந்நூலிலுள்ள அணியியலில் உவமையணியின் பகுப்பொன்றே கூறப்பட்டிருக்கின்றது. அந்நூலுக்கு உரை செய்தவர்கள் **இளம்பூரணர், சேனு வரையர், பேராசிரியர், நச்சினார்க்கினியர், கல்லாடர், தெய்வச்சிலையா** ரென்னும் அறுவரென்று இப்போது தெரிகிறது. அவ்வுரைகளால் **மாபுராணம்** முதலாகப் பல இலக்கண நூல்கள் முன்பு இருந்தன வென்பதை அறியலாம்.

நன்னூலின் பழைய உரையாசிரியராகிய **மயிலைநாத** ருடைய உரையால், **அவிநய** மென்பது தொல்காப்பியத் திற்குக் காலத்தால் முந்தியதாகத் தெரிகின்றது; இப் பொழுது அது கிடைக்கவில்லை.

**வீரசோழிய** மென்பது பௌத்தசமயத்தாராகிய **புத்த மித்திரரால்** இயற்றப்பட்டது; அதனுரையாசிரியர் **பெருந் தேவனு**ரென்பவர். அதனுரையில் இக்காலத்தில் வேறு எவ்விடத்தும் காணப்படாத பல பழைய சூத்திரங்களும் பல செய்யுட்களும் காணப்படுகின்றன; அவை இன்ன நூலைச் சார்ந்தவையென்று தெரியவில்லை. அதிலுள்ள மேற்கோட் செய்யுட்களிற் பெரும்பாலன பௌத்த சமயக் கொள்கைகளையும் புத்ததேவனுடைய சரித்திரவகையை யும் புலப்படுத்துகின்றன. அவற்றையன்றிப் பௌத்தமத சம்பந்தமான விஷயங்களை அறிவதற்கு வேறு கருவி யொன்றும் தமிழிற் கிடைத்திலது; மணிமேகலைக் குறிப் புரை யெழுதுவதற்கு அந்நூற் செய்யுட்கள் சிறந்த கருவி யாக இருந்தன. அதில் வடமொழி இலக்கணங்கள் பல அமைக்கப் பெற்றுள்ளன.

**இலக்கணவிளக்க** மென்பது திருவாரூர் **வைத்திய நாத தேசிக** ரென்னும் சைவப் பெரியா ரொருவரால் இயற்றப் பெற்றது. அதற்கு விரிவான உரையொன் றுண்டு. அந்நூல் **குட்டித்தொல்காப்பிய** மென்றும் வழங்கப்படும். அதில் ஐந்திலக்கணங்களையன்றிப் பொருத்த இலக்கணமும் பிரபந்த இலக்கணமும் சேர்க்கப் பெற்றுள்ளன. அந்நூல் உரையில், சில பேரகத்தியச் சூத்திரங்களும் சில சிற்றகத்தியச் சூத்திரங்களும் வேறு சில அரிய பழைய செய்யுட்களும் சூத்திரங்களும் மேற் கோள்களாக வந்துள்ளன. பின்னும் அந்நூலிற்காணப் படும் விசேடங்கள் பல. ஊன்றிப்பார்த்தால் நன்னூல் முதலியவற்றிலுள்ள மூலங்களும் அவற்றின் பழைய வுரைகளும் மேற்கோள்களும் பிறவும் ஆகிய இவற்று லேயே அமைந்தன அந்நூலும் உரையுமென்று சொல்ல லாம்; ''திருவாரூரிற் றிருக்கூட்டத்திற் றமிழ்க் கிலக்காகிய வைத்தியநாதன்'' என்று இந்நூலாசிரியர் **இலக்கணக் கொத்துடையாரால்** பாராட்டப் பெற்றுள்ளார்.

**தொன்னூலில்** மேற்கூறிய ஐந்திலக்கணங்களு மன்றி வேறு சில விசேடப் பகுதிகளும் சுருக்கமாகக் கூறப்

பெற்றுள்ளன. அந்நூலாசிரியராகிய **வீரமாமுனிவ**ரென்பவர், தமிழே வழங்காத அயல் தீவிற் பிறந்து வளர்ந்தும் தமிழ்நாட்டுக்கு வந்து தக்க பண்டிதர்களிடம் சென்று சென்று முறையே கற்றுத் தமிழ்ப்பாஷையின்கண் மிக்க அன்பு பூண்டு இத்தொன்னூலாகிய இலக்கணமும் **தேம்பாவணி** முதலிய இலக்கிய நூல்களும் இயற்றியது இக்காலத்தில் மிகவும் பாராட்டற்பாலது. இவர்க்குத் தமிழ் நூல்களைப் பாடஞ் சொல்லிய ஆசிரியர்களுள் முக்கியமானவர் பழநியிலிருந்த **சுப்பிரதீபக் கவிராய**ரென்பவரென்று கேட்டிருக்கிறேன்.

**முத்துவீரியம்** என்ற இலக்கண நூல் சென்ற நூற்றுண்டில் உறையூரிலிருந்த விசுவகுல திலகராகிய **முத்து வீர வாத்தியார்** என்பவரால் இயற்றப்பெற்றது. அதற்கு உரை செய்தார் திருநெல்வேலியைச் சார்ந்த வண்ணார் பேட்டையில் இருந்தவரான **திருப்பாற்கடனுதன் கவி ராயரென்பார்**. அந்நூல் சூத்திரங்களாலாகியது. முத்து வீரவாத்தியார் பூரண ஆயுள் உடையவரா யிருந்தனர்; குடும்பத்தாராற் பாதுகாக்க முடியாத நிலைமையில் அவர் இருந்ததைக்கண்டு மனமிரங்கி உணவு முதலியவற்றைப் பற்றி அவருக்கு யாதொரு கவலையுமில்லாதபடி அவருடைய மாணுக்கர்களிலொருவரும் அக்காலத்தில் இஞ்சினீயராயிருந்தவருமாகிய **ஸ்ரீ சுப்பராயாசாரியா**ரென்பவர் மாதமொன்றுக்கு ரூபா 30 விகிதம் உதவி செய்து அவரைப் பாதுகாத்து வந்தனர்.

ஐந்திலக்கணங்களுள் முதலிரண்டிலக்கணங்கள் மட்டுமுள்ள நூல்கள் **நன்னூலும்**, **நேமிநாதமுமாகும்.** அவற்றுள் **நன்னூலைப்**பற்றி, ''முன்னூலொழியப் பின்னூல், பலவினுள், நன்னூ லார்தமக் கெந்நூ லாரும், இணையோ வென்னுந் துணிவே மன்னுக'' என்று இலக்கணக் கொத்துடையார் சொல்லிய அருமை அறிதற்பாலது; அதற்கு **மயிலைநாதர்** முதலியோர் உரைசெய்திருக்கின்றனர்.

**நேமிநாதம்** என்பது **குணவீரபண்டித** ரென்பவரால் இயற்றப்பெற்ற வெண்பாக்களாலாகிய நூல். இதில் அரிய இலக்கண விதிகள் அமைந்துள்ளன.

"தொல்காப் பியக்கடலிற் சொற்றீபச் சுற்றளக்கப்
பல்காற்கொண் டோடும் படகென்ப—பல்கோட்டுக்
கோமிகா மற்புலனை வெல்லுங் குணவீரன்
நேமிநா தத்தின் நெறி"

என்பதனுல் இந் நூலின் சிறப்பு விளங்கும்; இதற்குச் சிறந்ததோருரையுண்டு.

மூன்ருவதாகிய **பொருளிலக்கணம்** அகப்பொருளிலக்கணம் புறப்பொருளிலக்கணம் என இருவகைப் படும். அகப்பொருளைப்பற்றித் தனியே கூறும் இலக் கணங்கள் **இறையனுரகப் பொருளும், நாற்கவிராய நம்பியகப்பொருளும், மாறனகப் பொருளும்.** அவற் றுள் **இறையனுரகப் பொருள்** என்னும் நூலை இயற்றிய வர் சிவபெருமான் கூறுகிய **இறையனுர்** என்னும் புலவர் பெருமான். இதற்கு உரை கண்டார் **நக்கீரர்** முதலியோர். நக்கீரர் இயற்றிய உரை வழியே வந்த ஒருரை இப்பொழுது வழங்கி வருகின்றது.

**நாற்கவிராய நம்பியகப் பொருளென்பது** நாற் கவிராய நம்பி என்னும் புலவரொருவரால் இயற்றப் பெற்றது. இதற்கு ஒருரையும் உண்டு. அது மேற்கூறிய நாற்கவிராய நம்பியாலேயே இயற்றப்பட்டதென்று இந் நூற் சிறப்புப்பாயிரம் தெரிவிக்கின்றது. அகப்பொரு ளிலக்கணத்தை யாவரும் எளிதில் அறிந்துகொள்ளும்படி முறைப்படுத்தி உபகரித்தவர் இப்பெரியாரே.

**மாறனகப்பொருளென்ற** நூல் நம்மாழ்வார்பால் அன்புடைய **திருக்குருகைப்பெருமாள் கவிராய**ரென்ப வரால் இயற்றப்பெற்றது. இதற்கு **இலக்கியமாக மாறன் கோவை** யென்ற ஒரு நூலுண்டு.

அகப்பொருளிலக்கண அமைதியுள்ள இலக்கியங்கள் எட்டுத்தொகையுள் **நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறு**

**நூறு, கலித்தொகை, அகநானூறு** என்பவைகளும், **பரிபாடலிற்** சிலபாடல்களும், பத்துப் பாட்டில் **முல்லைப் பாட்டு, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப்பாலை** என்னும் மூன்றும், பதினெண்கீழ்க் கணக்கில் **ஐந்திணை** நூல்களும், **கைந்நிலையும் திருக்குறளிலும் நாலடியாரிலும்** உள்ள காமத்துப்பால்களும், திருவாதவூரர் இயற்றிய **திருச்சிற் றம்பலக் கோவை**யாரும், பிற்காலத்து அதைப் பின் பற்றி மிக விரிவாகச் செய்யப்பெற்ற பல ஐந்திணைக் கோவைகளுமாம்.

பொருளின் இரண்டாவது பகுதியாகிய புறப் பொருளுக்குரிய இலக்கண நூல்கள் **பன்னிருபடலம், புறப்பொருள் வெண்பாமாலை** முதலியனவாம்.

அவற்றுள், **பன்னிருபடல**மென்பது அகத்தியரு டைய மாணுக்கர் பன்னிருவரால் இயற்றப்பட்டது. அதி லிருந்து சில சூத்திரங்கள் பழைய உரைகளிற் காணப் படுகின்றனவன்றி நூல் இப்பொழுது கிடைக்கவில்லை.

**புறப்பொருள் வெண்பாமாலை** என்ற நூல் சேரர் பரம்பரையினராகிய **ஐயனரிதனர்** என்பவரால் இயற்றப் பட்டது. இது சூத்திரங்களையும் அவற்றிற்கு மேற் கோளாகக் காட்டப்பெற்ற வெண்பாக்களையும் அவ்வெண் பாக்களின் கருத்தைப் புலப்படுத்தும் கொளுக்களையும் பெற்று விளங்குவது. இதற்குச் **சாமுண்டி தேவநாயகர்** என்பவராற் செய்யப்பட்ட உரையொன்றுண்டு. இப்புறப் பொருளுக்கு இலக்கியங்கள் எட்டுத்தொகையில் **பதிற்றுப் பத்து, புறநானூறு** என்பவைகளும், **பத்துப்பாட்டில்** ஏழு பாட்டுக்களும், இவைபோன்ற பிறவுமாம். **சீவகசிந்தா மணி** முதலிய காப்பியங்களில் புறப்பொருளிலக்கண அமைதிகள் மிகுதியாக அங்கங்கே விளங்குகின்றன.

**யாப்பிலக்கணத்தை** மட்டும் தெரிவிப்பன **யாப் பருங்கலமும், யாப்பருங்கலக்காரிகையும்.** இவற்றுள் முதலாவது சூத்திரங்களாலும் இரண்டாவது கட்டளைக் கலித்துறைகளாலும் அமைந்தவை. மேற்கூறிய யாப்

பருங்கலத்தின் விருத்தியுரையால் தமிழில் பல யாப்பிலக்கண நூல்கள் இருந்தனவென்றும் வேறு பழையநூல்கள் அநேக மிருந்தனவென்றும் தெரிகின்றன. மேற்கூறிய நூல்களும் அவற்றினுரைகளும் சைனபண்டிதர்களால் இயற்றப்பட்டிருத்தலன்றி அவற்றின் மேற்கோள்களுட் சைனமத சம்பந்தமாகவே பெரும்பாலும் இருத்தலின் அச் செய்யுட்களைப் படித்துப் பாராட்டுதற்கு மனமில்லாத சைவ வைணவ சமய அபிமானிகளின் வேண்டுகோளின் படி சிறந்த சைவ வைணவ பண்டிதர்களாற் செவ்வனே இயற்றப்பட்டு அவ்விலக்கணத்தின் மேற்கோள்களாக முறையே **சிதம்பரச் செய்யுட் கோவை, பாப்பாவின** மென இரண்டு நூல்கள் இக்காலத்து வழங்குகின்றன.

அணியிலக்கணத்தைமட்டும் தெரிவிக்கும் நூல்கள் **அணியியல், தண்டியலங்காரம், குவலயாநந்தம், மாற னலங்கார**மென்பவை. அவற்றுள், **அணியியலி**லுள்ள சூத்திரங்கள் சில நூற்பெயரோடு கிடைக்கின்றனவே யன்றி அந்த நூல் முழுவதும் கிடைக்கவில்லை. தண்டியலங்காரமே அணியியலென்று சிலர் சொல்லுவர்; அது பொருந்தாது.

**தண்டியலங்காரம் தண்டியாசிரி**யரால் வடமொழியிலுள்ள காவ்யாதர்சத்தைத் தழுவி இயற்றப்பட்ட நூலென்பர். இது சூத்திரங்களாலமைந்தது. இந்நூலுட் கூறப்பெற்ற அணிகள் 35.

**குவலயாநந்தம்** என்ற அணியிலக்கணம் **மாணிக்க வாசகர்** என்னும் பெயருள்ள ஒரு புலவராற் செய்யப் பட்டது; சூத்திரங்களாலமைந்தது. இந் நூலுட் கூறப் பெற்ற அணிகள் 100. இதற்கு முதனூல் வடமொழிநூலே.

**மாறனலங்காரம்** என்பது **திருக்குருகைப் பெருமான் கவிராயர்** என்பவரால் இயற்றப் பெற்றது; சூத்திர ரூபமாயமைந்தது. இந்நூலிலுள்ள பொருளணிகளின் தொகை 64. தொல்காப்பியம் முதலியவற்றின் கருத்துக் களையும் தண்டியலங்காரத்தின் கருத்துக்களையும் தழுவி

மிக விரிவாக இஃது இயற்றப்பட்டது. இதன் உரையாசிரியர் **தென்றிருப்பேரைக்காரி இரத்தினக்கவிராயர்** என்பவர். இந்நூலும் உரையும் தமிழின் கருவூலமென்றே கருதற்குரியன.

இம்மூன்று நூல்களுக்கும் முதல் நூல்கள் தொல்காப்பியமும் வடமொழியிலுள்ள அணியிலக்கணங்களுமே.

பொருத்த இலக்கணத்தையும் பிரபந்த இலக்கணத்தையும் தெரிவிக்கும் நூல்கள் **பன்னிருபாட்டியல், இந்திரகாளியம், வாருணப்பாட்டியல், வச்சணந்தி மாலை** அல்லது **வெண்பாப்பாட்டியல், நவநீதப்பாட்டியல், தத்தாத்திரேயப்பாட்டியல், சிதம்பரப்பாட்டியல், வரையறுத்தபாட்டியல்** முதலியவை.

அவற்றுள், **பன்னிரு பாட்டியல்** என்பது பழைய சங்கப்புலவர் பன்னிருவராற் செய்யப்பட்ட நூலென்பர். அது சூத்திரரூபமாக அமைந்துள்ளது.

**இந்திரகாளிய**மென்ற நூலின் சூத்திரங்கள் சிலவே நூற்பெயரோடு உரைகளிற் காணப்படுகின்றன; இந்நூலை இயற்றியவர் இந்திரகாளியரென்பவரென்று தெரிகின்றது.

**வாருணப் பாட்டியல்** என்ற நூலிலிருந்து மேற்கோளாகச் சில சூத்திரங்கள் மட்டும் உரைகளிற் காணப்படுகின்றன; நூல் கிடைத்திலது.

**வச்சணந்தி மாலை** நேமிநாத நூலாசிரியராகிய **குணவீர பண்டித** ரென்பவரால் இயற்றப்பெற்றது. அவருக்கு ஆசிரியர் **வச்சணந்தி** யென்பவராதலால் அவரிடத்திலுள்ள அன்பின் மிகுதியால் அவர் பெயரால் இந்நூலை அவர் வெளியிட்டனர் என்பர். இது வெண்பாக்களால் அமைந்தது.

**நவநீதப் பாட்டிய லென்பது நவநீத நடன** ரென்பவரால் இயற்றப்பெற்றது; கலித்துறையாலமைந்தது.

**வரையறுத்த பாட்டிய லென்பது** கலித்துறையாலாகிய நூல். மங்கலச் சொற்களையும் பொருத்தத்தையுங் கூறுவது. எந்த **உபகாரி** மேலேயாவது நூல் அல்லது

தனிப்பாடல் செய்து பயனடைய எண்ணும் புலவர்களுக்குப் பொருத்தச் சொல்லை யாதொரு வருத்தமுமின்றி எடுப்பதற்குச் சிறந்த கருவி இது. இதனுல், நூலாசிரியரின் கருணை விளங்கும்.

**தத்தாத்திரேயப் பாட்டியல்** என்பதை என்னுடைய தமிழாசிரியர்களுளொருவராகிய **செங்கணம் ஸ்ரீ விருத்தாசல ரெட்டியாரவர்**களிடம் பார்த்துப் பாடமுங் கேட்டிருந்தேன். அது விருத்தங்களா லமைந்துள்ளது; புத்தகம் எனக்குக் கிடைக்கவில்லை.

**சிதம்பரப் பாட்டியலை** இயற்றியவர் **பரஞ்சோதியா**ரென்பவர். இவர் சிறந்த தமிழ்ப் பண்டிதராகிய **திருமலை நாதர்** என்பவருடைய குமாரர். இந் நூல் விருத்தங்களாலாகியது.

இவற்றையன்றி இன்னுஞ் சில இலக்கண நூல்கள் உள்ளன. அவற்றுள் **பிரயோக விவேகம்** என்பதொன்று. ஆழ்வார் திருநகரியிலிருந்த **சுப்பிரமணிய தீக்ஷிதரென்**பவராற் கலித்துறையால் இது செய்யப் பெற்றது. இதற்கு உரை செய்தவரும் இவரே. வடமொழியிலிருந்து தமிழில் வழங்கும் இலக்கணப் பாகுபாடுகள் இன்னவை யென்பதும், தமிழுக்கே உரியன இன்னவென்பதும், இரண்டற்கும் பொதுவாக உள்ளன இவை யென்பதும் தக்க ஆதாரங்களுடன் நன்முக இந் நூலுட் காட்டப்பட்டுள்ளன. இந்நூலும் உரையும் இவர் இரு மொழியிலும் மிக வல்லுநரென்பதைக் காட்டும். இந் நூலாசிரியர், ''ஆழ்வார் திருநக ரப்பதிவாழுஞ் சுப்பிர மணிய, வேதியன் றமிழ்ப் பிரயோக விவேகம் உரைத் துரை யெழுதினன்'' என **இலக்கணக் கொத்துடையா**ராற் பாராட்டப்பெற்றுள்ளார். **இலக்கணக்கொத்து** என்றோ ரிலக்கண நூல் உண்டு. அது தமிழிலுள்ள இலக்கண இலக்கியங்களிலும் அவற்றின் உரைகளிலும் இலைமறைகாய்போற் காணப்படும் அரிய விஷயங்களைத் தொகுத்து மூன்று பாகுபாடு செய்து மிகத்தெளிவாகத்

**திருவாவடுதுறையாதீனத்துச் சுவாமிநாத** தேசிகராற் சூத்திர ரூபமாக இயற்றப்பெற்றது. இதற்கு உரைசெய்தவரும் அவரே. வேற்றுமையிலக்கணம், வினையிலக்கணம் முதலியவற்றைத் தெரிந்துகொள்வதற்கு உபயோகமானது.

தொல்காப்பியத்தின் பாயிரத்திற்கும் அந்நூல் முதற் சூத்திரத்திற்கு விரிவுரை (பாஷ்யம்), திருவாவடுதுறை யாதீனத்து வித்துவானாக விளங்கியவராகிய **ஸ்ரீ சிவஞான யோகிகள்** என்பவரால் இயற்றப் பெற்றது. இது தமிழ் கற்போர் யாவரும் படித்துணரற்பாலது.

இன்னும் **இரத்தினச் சுருக்கம், உவமானசங் கிரகம்** என்னும் இரண்டு நூல்கள் நூல் செய்பவர்களுக்குச் சிறந்த கருவிகளாக வழங்கி வருகின்றன. இவை இன்ன பொருளுக்கு இன்ன பொருளை உவமை கூற வேண்டுமென்பதையும் பிறவற்றையும் புலப்படுத்துவன.

**தருக்கஸங்கிரகமும்** அதன் உரையாகிய **அன்னம் பட்டீயமும்** வடமொழியிலிருந்து முற்கூறிய **சிவஞான யோகிகளால்** மொழிபெயர்க்கப்பட்டு வழங்கிவருகின்றன. தருக்க சம்பந்தமான வேறு சில நூல்கள் தமிழில் அதற்கு முன்னர்ச் சில பெரியோர்களாற் செய்யப்பெற்றிருந்தன என்று தெரிகின்றது.

ஐந்திலக்கணங்களுள் இரண்டு ஒன்றைமட்டும் கூறும் நூல்கள் **சிற்றதிகாரம்** எனவும், ஐந்திலக்கணங்களையும் கூறும் நூல்கள் **பேரதிகார** மெனவும் வழங்கப் படும்.

இறையனாரகப் பொருள் முதலியன சூத்திரமென்னும் ஒருறுப்படக்கிய பிண்டமெனவும், பன்னிருபடலம் முதலியன சூத்திரம் இயல் என்னும் இரண்டுறுப்படக்கிய பிண்டமெனவும், தொல்காப்பிய முதலியன சூத்திரமும் இயலும் அதிகாரமும் என்னும் மூன்றுறுப்படக்கிய பிண்ட மெனவும், இவற்றுள் தொல்காப்பியம் பெருநூலெனவும், அகத்தியம் இயற்றமிழ் இசைத்தமிழ் நாடகத்தமிழ் என்

னும் மூன்றுறுப்பையுமடக்கி நிற்றலின் அது பிண்டத்தை யடக்கிய வேறோரு பிண்டமெனவும் வழங்கப்படும்.

## இயற்றமிழ் இலக்கியம்

**எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, பதினெண்கீழ்க் கணக்கு, சிற்றட்டகம், குணநாற்பது, முத்தொள்ளா யிரம் (அரும்பைத் தொள்ளாயிரம்), வச்சத்தொள்ளா யிரம், ஐம்பெருங்காப்பியங்கள், ஐஞ்சிறுகாப்பியங்கள், தகடூர் யாத்திரை, இரும்பல்காஞ்சி** முதலிய பல சங்க நூல்களும் இயற்றமிழிலக்கியங்களுட் பழையனவாம்.

இடைக்காடனூர் பாடிய **ஊசிமுறி** என்னும் ஒரு நூல் இருந்ததாகத் தெரியவருகிறது. அதிலிருந்து சில பாடல் கள் மட்டும் நூற்பெயருடன் பழைய உரைகளிற் காணப் படுகின்றன. ஊசிமுறி என்னும்பெயர், எழுதுங் காலத் தில் எழுத்தாணியாலெழுத முடியாத ஓசையையுடைய செய்யுட்களை யுடைமையாற் பெற்ற காரணப்பெயர். இதைப்போன்ற நூல்கள் வேறுவகையாகப் பல உள்ளன.

இவற்றையன்றிச் சைவ வைணவ ஆருகத பௌத்த முதலிய சமய நூல்களும், அத்துவைத நூல்களும், இதி காசங்கள் மகாபுராணங்கள் இவற்றின் மொழிபெயர்ப்பு நூல்களும், பல தலபுராணங்களும், சிற்பம், கணிதம், சோதிடம், வைத்தியம், நிமித்தம் முதலிய பலகலைகளுக் குரிய நூல்களும், பிற்காலத்துள்ளனவாகிய 96-வகைப் பிரபந்தங்களைச் சார்ந்தனவாகிய ஆயிரக்கணக்கான நூல்களும் இயற்றமிழிலக்கியமெனப்படும்.

தமிழிலக்கிய இலக்கணத்திறத்தில் சைனர்கள் செய்த உதவி மறக்கற்பாலதன்று. அவர்களுடைய சங்கங்கள் பாண்டிநாட்டில் மதுரையிலும், சோழநாட்டில் தீபங் குடியிலும், கங்கநாட்டிலுள்ள பல ஊர்களிலும், தொண்டை நாட்டிலும், கொங்கு நாட்டிலும் இருந்தன வென்று தெரிகிறது.

பௌத்த சமயத்தார் தமிழ்மொழி வளர்ச்சிக்குப் பெருத்த உதவி செய்துள்ளார்களென்பதற்கு **மணி**

**மேகலை, குண்டலகேசி, பிம்பசாரகதை** முதலிய நூல்களும், **வீரசோழிய**மென்னும் இலக்கண நூலும், அதன் உரையிலும் **நீலகேசிக்குச் சமயதிவாகர வாமன முனிவர்** இயற்றிய உரையிலும் காணப்படும் மேற்கோட் செய்யுட்கள் பலவும் நல்ல நடையோடு கூடிச் சான்று பகருமாயினும் **மணிமேகலையன்றி** வேறு இலக்கிய நூல்களுள் ஒன்றும் முழுநூலாக இக்காலத்துக் காணப்பட்டிலது. இது பெரிதும் வருத்தத்தை விளைவிக்கின்றது.

தமிழ்வகை மூன்றனுள் இசை நாடகங்களுக்கு இன்றியமையாததாகி அடிப்படையாக இருத்தலின் இயற்றமிழ் முன் வைக்கப்பட்டது.

## இசைத்தமிழ்

இசைத்தமிழ்ப் பாகுபாடுகளையும் நாடகத்தமிழ்ப் பாகுபாடுகளையும் ஒருவாறு அறிந்து கொள்வதற்கு முற்கூறிய **சிலப்பதிகாரமும்** அதன் உரைகளுமேயன்றி இக்காலத்தில் வேறு தக்க கருவிகள் இல்லை. சிலவிருப்பினும் அவற்றால் விஷயம் விளங்கப் புலப்படவில்லை. ஆனாலும் அவற்றைக்கொண்டு அறியவேண்டியவற்றைச் சுருக்கமாகச் சொல்லுவேன்.

சங்கீத வகையைப் புலப்படுத்தும் இலக்கண நூல்களும் இலக்கிய நூல்களும் இசைத்தமிழ் நூல்கள். **பெருநாரை, பெருங்குருகு, பஞ்சபாரதீயம், இசை நுணுக்கம், பஞ்சமரபு, தாளசமுத்திரம், சச்சபுட வெண்பா, இந்திரகாளியம், பதினறுபடலம், தாள வகையோத்து, இசைத்தமிழ்ச் செய்யுட்டுறைக் கோவை** முதலாகப் பல பண்டைக்காலத்தில் இருந்தன வென்பர். இவற்றிற் சிலவற்றின் சூத்திரங்கள் நூற்பெயருடன் கிடைக்கின்றனவேயன்றி நூல்கள் கிடைக்கவில்லை.

இக்காலத்திற் சங்கீத சம்பந்தமாக வடமொழியில் வழங்கும் ஸ்வரப்பெயர்களாகிய ஷட்ஜம், ரிஷபம், காந்

தாரம், மத்திமம், பஞ்சமம், தைவதம், நிஷாதம் என்னும் ஏழும் தமிழில் குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தார மென்பவற்றிற்குச் சரியானவை. இவ்வேழிலிருந்து உண்டாவனவே பண்களும் திறங்களும். பண்கள் ஏழு ஸ்வரத்தோடு கூடிய இராகங்கள். இந்த இராகங்கள் ஸம்பூரண ராகங்களெனவும், ஜனகராகங்களெனவும், மேளகர்த்தாக்களெனவும், வடமொழியில் வழங்கப்படும்.

திறங்கள், பண்களுள் ஒவ்வொன்றிலிருந்தும் உண்டாகிப் பலவகைப்பட்டு வேறு வேறு பெயர்பெற்று வழங்கும்; இவை ஏழிற்குறைந்த ஸ்வரங்களையுடையன வென்றும் ஜன்னியராகங்களென்றும் கூறப்படும்.

"நிறைநரம் பிற்றே பண்ணென லாகும்
குறைநரம் பிற்றே திறமெனப் படுமே"

என்னும் **திவாகரத்தாற்** பண்ணினியல்பும் திறத்தினியல்பும் விளங்கும். இது பற்றியே செய்யுளிலக்கணத்தில் வெண்பா முதலிய பாக்களுக்குப் பண்ணையும், வெண்டாழிசை முதலிய இனங்களுக்குத் திறங்களையும் உவமை கூறியிருத்தல் கூர்ந்துணரற்பாலது; இது,

"பண்ணுந் திறமும்போற் பாவு மினமுமாய்
வண்ண விகற்ப வகைமையால்-பண்ணின்
திறம்விளரிக் கில்லதுபோற் செப்ப லகவல்
இசைமருட்கு மில்லை யினம்" (யா. வி.)

என்பதனாலும் அறியலாகும். (மருள் - மருட்பா)

பண்களின் வகைபல. அவற்றுள் புறநீர்மை முதலிய பண்கள் பன்னிரண்டும் பகற்பண்களெனவும், தக்கராக முதலிய ஒன்பதும் இராப்பண்களெனவும், செவ்வழி முதலிய மூன்றும் பொதுப்பண்களெனவும் கூறப்படும். இரங்கற்பண் விளரியென்பர். இராவணன் அகங்காரத்தாற் கைலைமலையை முதலிற்பெயர்த்துப் பின்பு பரமசிவனால் துன்புறுத்தப்பெற்று அவருக்கு இரக்கமுண்டாக இப்பண்ணைப் பாடியுய்ந்தானென்று, "விராய்மலர்ப்பூங்

குழலிபங்கன் மகிழ்விஞேங்கும் வெள்ளிமலேக் கீழ்க் கிடந்து விளரி பாடும், இராவணன்'' என்பதனுல் ஒரு பெரியார் தெரிவித்திருக்கின்றனர். அன்றியும் பகல் இர விரண்டனுள் இன்ன இன்ன யாமத்திற்குரிய பண்கள் இவை என்பதும், ஒன்பது சுவைகளுள் இன்ன சுவைக் குரிய பண் இது என்பதும், நாலு வருணங்களுள் இன்ன வருணத்திற்குரியது இன்னதென்பதும் இசைநூல்களிற் கூறப்பெற்றுள்ளன.

பின்னும் பண்கள் பெரும்பண்கள், குறிஞ்சி முதலிய ஐந்திணைக்குமுரிய பண்கள், சிறு பொழுது பெரும் பொழுதாகிய அவ்வாறற்குமுரிய பண்கள் முதற் பல வகைப்பட்டும் வழங்கும். இந்தமுறை தவறுமல் பழைய நூலாசிரியர்கள் தம்முடைய நூல்களில் அமைத்துக் கொண்டே செல்வார்கள்; கூர்ந்து பார்ப்பின் விளங்கும்.

இப்பண்களாலாகிய பாட்டுக்கள் (கீர்த்தனங்கள்) உருக்கள், வரிகள் முதலிய பெயர்களால் வழங்கும்; அவை தாள அளவிற்கு ஏற்ற குறிலும் நெடிலும் இசையின் வலிவு முதலிய ஓசைக்கேற்ற ஓசையுள்ள எழுத்துக்களு மமைந்த தமிழ்ச்சொற்களால் இயற்றப்பெற்றிருத்தலோடு வேறு பாஷைக்குரிய சொற்களும் இடத்திற்கு ஏற்றவாறு அமைக்கப் பெற்றிருத்தல்வேண்டும்; இங்ஙனமே விதி களும் இலக்கியங்களுமுள்ளன.

அவை பத்துவகைப்படுமென்று ஒரு சாரார் கூறுவர். அவை செந்துறை, வெண்டுறை, பெருந்தேவபாணி, சிறு தேவபாணி, முத்தகம், பெருவண்ணம், ஆற்றுவரி, கானல்வரி, விரிமுரண், தலேபோகுமண்டிலம் என்பன.

தாளக்கிரியையுடன் பொருந்தும் பாக்கள் ஒன்பது. அவை சிந்து, திரிபதை, சவலே, சமபாதவிருத்தம், செந் துறை, வெண்டுறை, பெருந்தேவபாணி, சிறுதேவபாணி, வண்ணமென்பன.

எந்தக் காலத்திற்கு எந்தப் பண்ணேப் பாட வேண்டுமோ, அதையே தவறின்றிப் பாடவேண்டும்.

அங்ஙனம் பாடினலன்றிக் கேட்கும் மனிதருக்கும் விலங்கு களுக்கும் பறவைகளுக்கும் இன்பம் பிறவாது; தவறிப் பாடுவாராயின் அது குற்றமென்று அறிஞரால் நினைக்கப் படும்.

விலங்குகளுள் யானையும் அசுணமாவும், ஊர்வனவற் றில் பாம்பும் இசையறிவிற் சிறந்தவையென்றும் யானை இசைக்கு வணங்குமென்றுங் கூறுவர். யானைக்கு இத் தன்மையுளதாதலே,

"காழ்வரை நில்லாக் கடுங்களிற் றொருத்தல்
யாழ்வரைத் தங்கி யாங்கு" (1: 26 - 7)

என்னுங் கலியாலும்,

"அணியிழை மகளிரும் யானையும் வணக்கும்
மணியொலி வீணையும்"

என்னும் **பெருங்கதையாலும்,**

"ஐம்புல வேழத்தின் வெந்தொழில் வீயக்
கருணை வீணை காமுறத் தழீஇ"

என்னும் **ஞானமிர்தத்தாலும்,**

"மகரயாழ் வல்ல மைந்த னொருவனைக் கண்ட மத்தப்
புகர்முகக் களிற்றின்"

என்னும் **மேருமந்தரபுராணத்தாலும்** அறியலாகும். பின்னும்,

"ஒலியல் வார்மயி ருளரினள் கொடிச்சி
பெருவரை மருங்கிற் குறிஞ்சி பாடக்
குரலுங் கொள்ளாது நிலையினும் பெயராது
படாஅப் பைங்கண் பாடுபெற் றொய்யென
மறம்புகன் மழகளி றுறங்கு நாடன்" (102)

என்னும் **அகப்பாட்டாலும்** இது விளங்கும். ஒரு குற மகள் குறிஞ்சிப் பண்ணைப்பாட ஒரு யானை தினைக்கதிரை உண்ணாமலும் புடைபெயராமலும் அப்பண்ணைக்கேட்டு மனமுருகி நின்று உறங்கிய தென்பது இதிற்கண்ட பொருள். அசுணமாவிற்கு இசையுணர்ச்சி யுண்மை,

"இருஞ்சிறைத் தொழுதி யார்ப்ப யாழ்செத்
திருங்கல் விடரளை அசுண மோர்க்கும்" (88)

என்னும் **அகப்பாட்டாலும்,**

" இன்ன ளிக்குரல் கேட்ட வசுணமா
அன்ன ளாய் மகிழ்வெய்து வித்தாள் " (1402)

என்ற **சிந்தாமணிச் செய்யுளாலும்,**

" யாழ் நறை யடுத்த அசுணநன்மா "

என்னுங் **கம்பராமாயணச் செய்யுளாலும்** விளங்கும்.

பாம்பிற்கு இசையுணர்ச்சியால் இன்பமுண்டாதல் யாவர்க்கும் தெரிந்ததே.

மழையின்மையால் பயிர்கள் தீந்து சனங்கள் உண வில்லாமல் வருந்துவதைக் கண்ட **திருச்சிற்றம்பல தேசிகர்** என்னும் பெரியாரொருவர் தம்முடைய பூசையில் **மேகராகக் குறிஞ்சி** யென்னும் பண்ணமைந்த தேவாரங்களை ஓதுவிக்கச் செய்ய உடனே மழைபெய்யத் தொடங்கி நாட்டின் துன்பத்தை நீக்கியதென்றும் அதனை அறிந்த சேதுபதி வேந்தரொருவர் அவரிடம் நன்றி பாராட்டித் தமது ஸமஸ்தானத்திலுள்ள **வெள்ளக்குளம்** முதலிய சில கிராமங்களை யளித்தனரென்றும் அங்ஙன மளித்த காலத்தில் எழுதிய பட்டயத்தில் இவ்வரலாறு எழுதப்பட்டிருக்கிற தென்றும் நான் கேள்வியுற்றிருக்கிறேன். அந்தத் திருச்சிற்றம்பல தேசிகர் **திருவாவடுதுறை யாதீனகர்த்தர்களாக** முன்பு விளங்கியவர்களில் ஒரு பெரியார். அவர் அவதரித்த இடம் சென்னைக்கு அருகிலுள்ள அரும்பாக்கம் என்னும் கிராமம்; அதில் இப்போது ஒரு மடம் இருக்கிறது.

மாலைக் காலத்திற்குரியது செவ்வழிப்பண்; நாட் காலைக்குரியது மருதப்பண். மாலையையும் காலையையும் வருணிக்கும்பொழுது, **மதுரைக்காஞ்சியில்** முறையே, ''திவவுமெய்ந்நிறுத்துச் செவ்வழிபண்ணி'' எனவும், ''யாழோர் மருதம் **பண்ண**'' எனவும் செவ்வனே கூறியிருத்தல் அறியற்பாலது. இவற்றை ஓரிசையாளர் காலம் பிறழ்ந்து பாடியபொழுது அப்பிறழ்ச்சிக்குக் காரணம், **நள்ளி** யென்பவன் அவருக்குக்கொடுத்த பெருங்

கொடையாலுண்டாகிய செல்வச் செருக்கென்று வேறொரு புலவர் அந்த வள்ளலை நோக்கி நயம்படக் கூறிய புறப் பாட்டு இங்கே ஞாபகத்துக்கு வருகின்றது; அதாவது,

"நள்ளி வாழியோ நள்ளி நள்ளென்
மாலை மருதம் பண்ணிக் காலைக்
கைவழி மருங்கிற் செவ்வழி பண்ணி
வரவெமர் மறந்தன ரதுநீ
புரவுக்கடன் பூண்ட வண்மை யானே" (149)

இப்பண்களையமைத்துப் பெரியோர் முற்காலத்துப் பாடிய பலவகையான உருக்களிற் பெரும்பாலன இறந்து போயின. உரைகளில் மேற்கோள்களாகக் காணப்படுஞ் சில உருக்கள் படிக்கப்படுமுறை தெரியவில்லை. ஆதலால் வேறுவகையாகப் பண்டைக்கால முறையையுடையனவாய் நூல்களிலுள்ளனவாய்ப் பாடப் பட்டுவரும் பகுதிகளுட் சிலவற்றின் பெயர்களை இங்கே தெரிவிப்பேன்:

அவை அக்கைச்சி, அச்சோ, அப்பூச்சி, அம்மானை, ஆற்றுவரி, இம்பில், உந்தியார், ஊசல், எம்பாவை, கப்பற் பாட்டு, கழல், கந்துகவரி, காக்கை, காளம், கானல்வரி, கிளிப்பாட்டு, குணலை, குதம்பை, குயில், குரவை, குறத்தி, கூடல், கொச்சகச்சார்த்து, கோத்தும்பி, கோழிப் பாட்டு, சங்கு, சாயல்வரி, சார்த்துவரி, சாழல், செம் போத்து, தச்சராண்டு, தச்சாண்டி, தாலாட்டு, திணை நிலைவரி, திருவங்கமாலை, திருவந்திக்காப்பு, தெள் ளேணம், தோணோக்கம், நிலைவரி, நையாண்டி, பகவதி, படைப்புவரி, பந்து, பல்லாண்டு, பல்லி, பள்ளி யெழுச்சி, பாம்பாட்டி, பிடாரன், பொற்சுண்ணம், மயங்குதிணை நிலைவரி, முகச்சார்த்து, முகமில்வரி, முகவரி, மூரிச் சார்த்து, வள்ளைப்பாட்டு முதலியன. இவையன்றிச் சித்தர் பாடல்களில் வழங்கும் பலவகை இசைப்பாட்டுக் களும், நொண்டிச்சிந்து, சிந்து முதலியவைகளும், கும்மி கோலாட்ட முதலியவைகளும், பலவகையான கண்ணி களும், ஆநந்தக்களிப்பு, கீர்த்தனங்கள் முதலிய பலவும்

இசைப்பாட்டுக்களைச் சேர்ந்தனவே. இவற்றுட் சிலவற்றிற்கு மாத்திரம் உதாரணங்கள் கூறுவேன்:

### அக்கைச்சி

ஓதுமாயை யென் னக்கைச்சி யொப்பிலானென்
னுற வுற்றபோதே கெட்டேன்
போதந்தானுஞ் சுவையென்னு வீறில்
போதத்தில் விட்டனு போகத்திருந்தானே.

(தத்துவராயர் பாடுதுறை)

### அச்சோ

செம்மைநல மறியாத சிதடரொடுந் திரிவேனை
மும்மைமல மறிவித்து முதலாய முதல்வன்றான்
நம்மையுமோர் பொருளாக்கி நாய்சிவிகை யேற்றுவித்
தம்மையெனக் கருளியவா றார்பெறுவா ரச்சோவே.

(திருவாசகம்)

### அம்மானைவரி

அம்மனை தங்கையிற் கொண்டங் கணியிழையார்
தம்மனையிற் பாடுந் தகையேலோ ரம்மானை
தம்மனையிற் பாடுந் தகையெலாந் தார்வேந்தன்
கொம்மை வரிநகின்மேற் கூடவே யம்மானை
கொம்மைவரிநகின்மேற் கூடிற் குலவேந்தன்
அம்மென் புகார் நகரம் பாடேலோரம்மானை.

(சிலப்பதிகாரம். வாழ்த்துக்காதை)

### ஆற்றுவரி

உழவ ரோதை மதகோதை யுடைநீ ரோதை தண்பதங்கொள்
விழவ ரோதை சிறந்தார்ப்ப நட்ந்தாய் வாழி காவேரி
விழவ ரோதை சிறந்தார்ப்ப நடந்த வெல்லாம் வாய்காவா
மழவ ரோதை வளவன்றன் வளனே வாழி காவேரி.

(சிலப்பதிகாரம், கானல்வரி)

### உந்தியார்

வளைந்தது வில்லு விளைந்தது பூசல்
உளைந்தன முப்புர முந்தீபற
ஒருங்குடன் வெந்தவா றுந்தீபற. (திருவாசகம்)

## ஊசல்

தெங்குலவு சோலைத் திருவுத்தர கோசமங்கை
தங்குலவு சோதித் தனியுருவம் வந்தருளி
எங்கள் பிறப்பறுத்திட் டெந்தரமு மாட்கொள்வான்
பங்குலவு கோதையுந் தானும் பணிகொண்ட
கொங்குலவு கொன்றைச் சடையான் குணம்பரவிப்
பொங்குலவு பூண்முலையீர் பொன்னூச லாடாமோ.
(திருவாசகம்)

## எம்பாவை

காதார் குழையாடப் பைம்பூண் கலனாடக்
கோதை குழலாட வண்டின் குழாமாடச்
சீதப் புனலாடிச் சிற்றம் பலம்பாடி
வேதப் பொருள்பாடி யப்பொருளா மாபாடி
சோதி திறம்பாடிச் சூழ்கொன்றைத் தார்பாடி
யாதி திறம்பாடி யந்தமா மாபாடிப்
பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்
பாதத் திறம்பாடி யாடேலோ ரெம்பாவாய். (திருவாசகம்)

## கந்துகவரி

துன்னிவந்து கைத்தலத் திருந்ததில்லை நீணிலம்
தன்னின்று மந்தரத் தெழுந்ததில்லை தானெனத்
தென்னன்வாழ்க வாழ்கவென்று சென்றுபந் தடித்துமே
தேவராா மார்பன்வாழ்க வென்றுபந் தடித்துமே.
(சிலப்பதிகாரம், வாழ்த்துக்காதை)

## காக்கை

கரையாய் காக்கைப்பிள்ளாய்
கருமாமுகில் போல்நிறத்தன்
உரையார் தொல்புக ழுத்தமனைவரக்
கரையாய் காக்கைப்பிள்ளாய். (பெரியதிருமொழி)

## கிளி

சொல்லாய் பைங்கிளியே
சுடராழி வலனுயர்த்த
மல்லார் தோள்வட வேங்கட வனைவரச்
சொல்லாய் பைங்கிளியே. (பெரியதிருமொழி)

## குரவைப்பாட்டு

பெரியவனை மாயவனைப் பேருலக மெல்லாம்
விரிகமல வுந்தியுடை விண்ணவனைக் கண்ணும்
திருவடியுங் கையுந் திருவாயுஞ் செய்ய
கரியவனைக் காணாத கண்ணென்ன கண்ணே
கண்ணிமைத்துக் காண்பார்தங் கண்ணென்ன கண்ணே.

(சிலப்பதிகாரம், ஆய்ச்சியர் குரவை)

சீர்கெழு செந்திலுஞ் செங்கோடும் வெண்குன்றும்
ஏரகமு நீங்கா விறைவன்கை வேலன்றே
பாரிரும் பௌவத்தி னுள்புக்குப் பண்டொருநாட்
சூர்மாத் தடிந்த சுடரிலைய வெள்வேலே.

(சிலப்பதிகாரம், குன்றக்குரவை)

## கோத்தும்பி

தினைத்தனை யுள்ளதோர் பூவினிற்றே னுண்ணாதே
நினைத்தொறுங் காண்டொறும் பேசுந்தொறு மெப்போதும்
அனைத்தெலும் புண்ணெக வானந்தத் தேன்சொரியும்
குனிப்புடை யானுக்கே சென்றூதாய் கோத்தும்பீ.

(திருவாசகம்)

## சாயல்வரி

அன்னந் துணையோ டாடக் கண்டு
நென்ன னோக்கி நின்று ரொருவர்
நென்ன னோக்கி நின்று ரவர்நம்
பொன்னேர் சுணங்கிற் போவா ரல்லர்.

(சிலப்பதிகாரம், கானல்வரி)

## தாலாட்டு

மன்னுபுகழ்க்கௌசலைதன் மணிவயிறு வாய்த்தவனே
தென்னிலங்கைக்கோன்முடிகள் சிந்துவித்தாய்செம்பொன் சேர்
கன்னிநன் மா மதில்புடைசூழ் கணபுரத்தென் கருமணியே
என்னுடைய வின்னமுதே இராகவனே தாலேலோ.

(பெருமாள் திருமொழி)

## தெள்ளேணம்

விண்ணோர் முழுமுதல் பாதாளத் தார்வித்து
மண்ணோர் மருந்தயன் மாலுடைய வைப்படியோம்
கண்ணார வந்துநின்றான் கருணைக் கழல்பாடித்
தென்னாதென் னாவென்று தெள்ளேணங் கொட்டாமோ.

(திருவாசகம்)

## பல்லாண்டு

அடியோ மோடும் நின்னோடும் பிரிவின்றி யாயிரம் பல்லாண்டு
வடிவாய் நின்வல மார்பினில் வாழ்கின்ற மங்கையும் பல்லாண்டு
வடிவார் சோதி வலத்துறையும் சுடராழியும் பல்லாண்டு
படைபோர் புக்கு முழங்குமப்பாஞ்ச சன்னியமும் பல்லாண்டே.
(பெரியாழ்வார் திருமொழி)

## முரிச்சார்த்து

மோது முதுதிரையான் மொத்துண்டு போந்தசைந்த
முரல்வாய்ச் சங்கம்
மாதர் வரிமணன்மேல் வண்ட லுழுதழிப்ப
மாழ்கி யைய
கோதை பரிந்தசைய மெல்விரலாற் கொண்டோச்சுங்
குவளை மாலைப்
போது சிறங்கணிப்பப் போவார்கண் போகாப்
புகாரே யெம்மூர். (சிலப்பதிகாரம், கானல்வரி)

## வள்ளைப்பாட்டு

பாடல்சான் முத்தம் பவழ வுலக்கையான்
மாட மதுரை மகளிர் குறுவரே
வானவர்கோ னாரம் வயங்கியதோட் பஞ்சவன்றன்
மீனக் கொடிபாடும் பாடலே பாடல்
வேப்பந்தார் நெஞ்சுணக்கும் பாடலே பாடல்.
(சிலப்பதிகாரம், வாழ்த்துக்காதை)

## குதம்பை

வெட்ட வெளிதன்னை மெய்யென் றிருப்போர்க்குப்
பட்டய மேதுக்கடி-குதம்பாய்
பட்டய மேதுக்கடி. (குதம்பைச்சித்தர் பாடல்)

## கண்ணிகள்

எண்ணாத வெண்ணமெல்லா மெண்ணியெண்ணி யேழை
புண்ணாகச் செய்ததுவும் போதும் பராபரமே. [நெஞ்சம்

ஆணவத்தோ டத்துவித மானபடி மெய்ஞ்ஞானத்
தாணு வினோ டத்துவிதஞ் சாருநா ளெந்நாளோ.
(தாயுமானவர் பாடல்)

தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல் லாண்டு என்பனவும், திவ்வியப்பிரபந்தமும், திருப்புகழும் இசைப்பாட்டே. அவற்றில் அமைந்துள்ள இசைவகை களைப் புலப்படுத்தும் ''**தேவகானம்**'' என்ற இசையிலக் கணநூலொன்று முன்பு இருந்ததாகக் கேட்டி'ருக்கிறேன். இசையில், கந்தர்வமார்க்க மென்பதொன்றுண்டு. அஃது இடைமடக்காய் வருவது. அவ்வகையான செய்யுட்கள் தேவாரம், திருவாசகம், திவ்யப்பிரபந்தம் முதலியவற் றிற் காணப்படுவதன்றிச் சிலப்பதிகாரம், சிந்தாமணி, சூளாமணி முதலியவற்றில் துதிவடிவமாக உள்ள இடங் களிலும் சிறுபான்மை வேறிடங்களிலும் அமைக்கப்பெற் றிருக்கின்றன. இவ்வழியைப் பின்பற்றிப் **பரஞ்சோதி முனிவரும் திருவிளையாடற் புராணத்தில்** துதிவடிவ மாக உள்ள செய்யுட்களைச் சில இடங்களில் அமைத்திருக் கின்றனர். அவற்றிற் சில வருமாறு:

### தேவாரம்

விண்ணவர் தொழுதெழு வெங்குரு மேவிய
சுண்ணவெண் பொடியணி வீரே
சுண்ணவெண் பொடியணி வீரும தொழுகழல்
எண்ணவல் லாரிட ரிலரே.

### திருவாசகம்

கண்ணஞ் சனத்தர் கருணைக்கடலினர்
உண்ணின் றுருக்குவ ரன்னே யென்னும்
உண்ணின் றுருக்கி யுலப்பிலா வானந்தக்
கண்ணீர் தருவரா லன்னே யென்னும்.

### சீவகசிந்தாமணி

அடியுலக மேத்தி யலர்மாரி தூவ
முடியுலக மூர்த்தி யுறநிமிர்ந்தோன் யாரே
முடியுலக மூர்த்தி யுறநிமிர்ந்தோன் மூன்று
கடிமதிலுங் கட்டழித்த காவலனீ யன்றே.

## திருவிளையாடற் புராணம்

(க) விரைசார் மலரோ னறியா விகிர்தன்
அரைசாய் மதுரை யமர்ந்தா னென்னே
அரைசாய் மதுரை யமர்ந்தா னவனென்
புரைசார் மனனும் புகுந்தா னென்னே.

(உ) குடங்கை நீரும் பச்சிலையு
மிடுவார்க் கிமையாக் குஞ்சரமும்
படங்கொள் பாயும் பூவணையுந்
தருவாய் மதுரைப் பரமேட்டி
படங்கொள் பாயும் பூவணையுந்
தருவாய் கையிற் படுதலைகொண்
டிடங்க டோறு மிரப்பாயென்
றேசு பவர்க்கென் பேசுவனே.

பிற்காலத்தில் தொண்ணூற்றுறுவகைப் பிரபந்தங்களில் குறவஞ்சி, பள்ளு, சிந்து என்பவைகளிலும் இசைப்பகுதி கள் பல அமைக்கப்பட்டுள்ளன. பழைய சரித்திரங்களை இசைவழியால் தெரிவித்தல் நலமென்று தமிழ்ப் புலவர் களிற் பலர் காந்தம், இராமாயணம், பாரதம், பாகவதம், திருவிளையாடல், பெரியபுராணம் முதலியவற்றைக் கீர்த்த னம் முதலியவற்றின் வடிவமாகச்செய்து வெளிப்படுத்தி இசைவளத்தைப் பெருக்கியதன்றி அதன் முகமாகப் பக்தி யையும் சமாதானத்தையும் ஒற்றுமையையும் உண்டாக்கி மகிழ்வித்துப் புகழ்பெற்றூர்கள்; அங்ஙனம் செய்யப் பெற்ற நூல்கள் பல. தங்கள்தங்களுடைய உபாஸனு தெய்வங்களைத் துதித்தல் முகமாகத் தனிக்கீர்த்தனங்கள் முதலியவற்றைச் செய்தோர் மிகப்பலர். சாஸ்திரக் கருத்துக்களை யமைத்துக் கீர்த்தனங்கள் செய்தோர் பலர். அவர்களிற் பெண்பாலாரு முண்டு. அவை கேட்பவரு டைய உள்ளத்தை நல்வழியிற் புகுத்திவிடு மென்பதிற் சிறிதும் ஐயமின்று. அங்ஙனம் செய்தவர்களில் மேல கரம் **திரிகூட ராசப்பக் கவிராயர்**, கும்பகோணம் **பாப நாசமுதலியார்**, பச்சைமிரியன் **ஆதிப்பையர்**, சீகாழி

அருணசலக்கவிராயர், பெரிய திருக்குன்றம் சுப்பராம ஐயர், கனம் கிருஷ்ணையர், உத்தமதானபுரம் லிங்கப் பையர், ஓதனவனேசுவர ஐயர், சீகாழி முத்துத்தாண்டவ ராயர், கொட்டையூர்ச் சிவக்கொழுந்து தேசிகர், தில்லை விடங்கன் மாரிமுத்துப்பிள்ளை, பெருங்கரைக் கவி குஞ்சர பாரதி, வேளூர்ச் சுப்பராமையர், திருநயம் அப்பாவையர், வேட்டகுடி பாரதிகள், திருக்கடவூர் அபி ராமி பட்டர், வையை இராமசாமி ஐயர், வையை மகா வைத்திய நாதையர், முடிகொண்டான் கோபால கிருஷ்ண பாரதிகள், மாயூரம் வேதநாயகம் பிள்ளை, பழனி மாம்பழக்கவிச் சிங்கநாவலர், அரியிலூர்ச் சண் பகமன்னர், தொட்டிக்கலைச் சுப்பிரமணிய முனிவர், சென்னிகுளம் அண்ணமலை ரெட்டியார் முதலியோர் முக்கியமானவர்கள்.

இனி வாத்தியங்களைப் பற்றிச் சில சொல்லுவேன்.

### வாத்தியங்கள்

**வேய்ங்குழல்** முதலிய வாத்தியங்கள் பல இருந்தன. அவற்றுள் வேய்ங்குழலையே முதன்மையுள்ளதாக மதித்து வந்தார்கள். காற்ருனது காட்டில் வளர்ந்திருக்கும் மூங்கி லொன்றின் துளைகளுள் ஒன்றிற்புகுந்து மற்ருென்றிற் புறப்படும் பொழுது இயல்பாக உண்டாகிய இசையின் இயற்கையைக்கண்டு வேய்ங்குழலை முதலிலும் அதன் வழியே பின்னர் மற்ற வாத்தியங்களையும் அமைத்தன ரென்று தெரிகிறது. அன்றியும் வீக்குங்கருவி முதலிய வற்ருல் நரம்புகள் அடிக்கடி வேறுபட்டு யாழ் முதலியவை செப்பஞ் செய்யப்படுதல் போலாது இயற்கைநலம் வாய்ந்து சுரவேறுபாடு யாதுமின்றி இசையைத் தெரி விக்கும் மேம்பாட்டையுடையது என்பதும் வேய்ங்குழல் முதலிற் கூறப்பட்டிருத்தற்குக் காரணமாயிருத்தல் கூடும். இதுபற்றியே,

" குழல்வழி நின்றது யாழே யாழ்வழித்
தண்ணுமை நின்றது தகவே தண்ணுமைப்
பின்வழி நின்றது முழவே முழவொடு
கூடிநின் றிசைத்த தாமந் திரிகை"

எனச் சிலப்பதிகாரத்தும்,

" குழல்வழி யாழெழீஇத் தண்ணுமைப் பின்னர்
முழவியம்ப லாமந் திரிகை"

எனக் **கூத்தநூலி**லும் வேய்ங்குழலை முதலில் வைத்துக் கூறினர் போலும்.

மூங்கிலாற் செய்யப்பட்டதுதான் வேய்ங்குழலெனப் படும். புறக்காழுடையது மூங்கிலாதல் பற்றி அதுவே புல்லாங்குழலெனவுங் கூறப்படும்; ''புறக்கா ழெல்லாம் புல்லெனப் படுமே'' என்பது **தொல்காப்பியம்**. சிலர் இதைப் புள்ளாங்குழலென்பர்; அது பொருந்தாது.

ஆம்பற் பூவைப்போலப் பொன்னுல் அணைசுபண்ணி விளிம்பிற் சேர்க்கப் பெற்றிருத்தலின் ஆம்பற் குழ லெனவும், கொன்றைப்பழத்தைத்துருவி ஊதுதற்கமைந்த தாகச் சமைத்து ஊதப்படுதலின் கொன்றைக்குழலெனவும் இது வேறு பெயராலும் வழங்கும். இதற்குரியமரங்கள் முதலியவைகளும் இலக்கணங்களும் குணமும் குற்றமும் இன்னவை யென்று **சிலப்பதிகாரம்** முதலியவற்றின் உரைகளாலும் அவற்றில் எடுத்துக் காட்டப்பட்டுள்ள மேற்கோள்களாலும் விளங்கும்.

இது மூங்கிலால் முதலிற் செய்யப்பெற்றிருந்தமை யின் வங்கியமென்றும் வழங்கப்படும். (வங்கியம்-வம்சம், மூங்கில்; வடமொழிப்பெயர்). இவ்விதிகளைப் பின்பற்றியே ஆனாயநாயனார் புராணத்திற் சேக்கிழார் வேய்ங்குழலின் இயல்பை நன்கு புலப்படுத்தியிருக்கின்றனர்.

**யாழும் வீணை**யும் ஒன்றென்பர். இவை பழைய நூல் களில் வேறுபடக் கூறப்பட்டிருக்கின்றன. பிரமவீணை என்பதொன்று **பரிபாடலிற்** காணப்படுகிறது.

யாழ் நான்கு வகைப்படும். அவற்றுள் பேரியாழ் 21 நரம்பையும், மகரயாழ் 19 நரம்பையும், சகோடயாழ் 14 நரம்பையும், செங்கோட்டி யாழ் 7 நரம்பையும் உடையன. ஆதியாழ் என்ற பெயருடைய யாழொன்று பழைய நூல்களிற் காணப்படுகின்றது. அஃது ஆயிரம் நரம்பினை யுடைய தென்பர்; அதற்கு அருங்கலமென்றும் மற்றொரு பெயருண்டு. யாழின்வகை இன்னும்பல; இதற்குரிய மரத்தினிலக்கணம், நரம்பினிலக்கணம், குணங்கள், குற்றங்கள் முதலியவற்றை மிக விரிவாக முன்னோர் எடுத்துக்காட்டி யிருக்கின்றனர். அவை **சிலப்பதிகாரத்திலும் பெருங்கதையிலும், சிந்தாமணியிலும்** காணப்படும்.

நரம்பு என்றது தந்தியை. ஒற்றை நரம்பையுடைய யாழும் அக்காலத்திலிருந்து வந்தது. நின்ற நரம்பிற்கு எட்டாவது நரம்பு இணையென்றும், ஆறாவது பகையென்றும், ஐந்தாவது கிளை யென்றும், நான்காவது நட்பென்றும் கூறப்படும். யாழில் வல்லோர் இவற்றால் தங்கள் கருத்தை இசையறிந்தவர்களுக்குப் புலப்படுத்தியும் வந்தார்கள். இன்ன இன்னகாலத்தில் இன்ன இன்ன யாழை வாசிக்கவேண்டுமென்ற முறையுமிருந்து வந்தது.

"யாமநல்யாழ் நாப்பண்" (மதுரைக்காஞ்சி)
"விரல் கவர்ந்துழன்ற கவர்வின் நல்யாழ், யாமமுய்யாமை"
(நற்றிணை),
"யாமயாழ் மழலை யாள்" (கம்பராமாயணம்)

என்பவற்றால் யாமயாழென்று ஒன்றிருந்ததை அறியலாகும். யாழிலிருந்து பாலைப்பண்கள் பிறக்கும் என்பர், அவை செம்பாலை, படுமலைப்பாலை, செவ்வழிப்பாலை; அரும்பாலை, கொடிப்பாலை, விளரிப்பாலை, மேற்செம்பாலை யென்பன.

பின்னும் இந்தயாழ் குறிஞ்சியாழ், பாலையாழ், முல்லை யாழ், மருதயாழ், நெய்தல்யாழ் என ஐந்து வகையாகவும் வழங்கப்பட்டு வந்தது. இவற்றிற் பாலையாழின் இசை

யைக் கேட்கும்பொழுது, வழிப்பறி பறித்தற்குப் பாலை நிலத்தில் உலாவித்திரிகின்ற ஆறலை கள்வர் கையிலுள்ள ஆயுதத்தை எறிந்துவிட்டுத் தாம் செய்யும் தீயசெயலையு மறந்து இன்புறுவார்கள். இஃது,

"ஆறலை கள்வர் படைவிட அருளின், மாறுதலை பெயர்க்கும்
மருவின் பாலை" (பொருந. 21-2)

என்பதனுல் விளங்கும்.

மதங்கொண்டு உச்சயினி என்னும் மகா நகரத்தைக் கலங்கும்படி செய்து யார்க்கும் அடங்காமல் ஊரை யழித்துத் திரிந்த நளகிரி யென்னும் பட்டத்துயானையை உதயணன் யாழ்வாசித்து அடக்கித் தன்னேவல் செய்யும்படி செய்து யாவருக்கும் விம்மிதத்தை உண்டாக்கினுனென்று மிகவும் அழகாகப் **பெருங்கதையில்** ஒருவரலாறு காணப்படுகின்றது.

**முழவு** ஒரு வாத்தியம். அஃது அகமுழவு முதல் நான்கு வகைப்படும். அவற்றுள் அகமுழவு மத்தளம் முதலாக ஏழென்றும், அவை உத்தமமான கருவிகளென்றும், அகப்புறமுழவு தண்ணுமை முதலிய மூன்றென்றும், அவை மத்தியமமான கருவிகளென்றும், புறமுழவு கணப்பறையென்றும், அஃது அதமமான கருவியென்றும், புறப்புற முழவு நெய்தற்பறை யென்றும் கூறப்படும். நெய்தற் பறை இரங்கற்பறை. பின்னும் முரசு, நிசாளம், துடுமை, திமிலை என்பவை நான்கும் வீரமுழ வென்பர். நாழிகை முழவென்றும், காலை முழவென்றும் இரண்டு முழவுகள் காணப்படுகின்றன. இவைகாலத்தைத் தெரிவிப்பவைகள். யாமங்கள் தோறும் கொட்டப்படும் பறைகளுமுண்டு.

வாத்தியங்களுள் மத்தளமென்பது மத்தென்னும் ஓசையையுடையதென்றும், சல்லிகை யென்பது சல்லென்னும் ஓசையையுடையதென்றும், ஆவஞ்சியென்பது ஆவினது வஞ்சித்தோலாற் போர்க்கப் பெற்றதென்றும், இடக்கை என்பது இடக்கையினுலடிக்கப்படுவதென்றும்,

கரடிகை யென்பது கரடி கத்தினுற்போலும் ஓசையை யுடைய தென்றும் பெயர்க்காரணங்களை **அடியார்க்கு நல்லார்** தெரிவிக்கின்றுர்.

பின்னும் மத்தளம் முதற் கருவியாகவும், சல்லிகை இடைக் கருவியாகவும், உடுக்கை கடைக்கருவியாகவும் கூறப்படும்.

முரசு என்னும் ஒரு வாத்தியம் மிக்கபெருமை வாய்ந் தது. இஃது அரண்மனையில் அரசராற் பூசிக்கப்பெற்றும் வந்தது. அரசர் பகைவரோடு போர்செய்யப் போவதற்கு முன் நல்லவேளை பார்த்து இதனை யனுப்புவது வழக்கம். அச்செயலுக்கு முரசு நாட்கோளென்பது பெயர். இது **புறநானூறு** முதலியவற்ருல் விளங்கும். அன்றியும் மண முரசு, கொடைமுரசு, வீரமுரசு என மூன்றுவகையு முண்டு. இவற்றைக் கொட்டுதற்குரிய சாதியார் வேறு வேருக இருந்து வந்தனர்.

இன்னும் சிறுபறை, கஞ்சதாளம், கொம்பு, நெடு வங்கியம், குறுந்தூம்பு, தட்டை, சல்லி ஒருகண்மாக்கிணை முதலாகப் பற்பல வாத்தியங்கள் இருந்தனவென்று **பத்துப்பாட்டு** முதலியவற்ருல் தெரிகின்றது. பலவாத்தி யங்களையும் விளங்கத் தமதுபாட்டில் தெரிவித்தது பற்றியே சங்கப்புல்வருள் ஒருவர் **நெடும்பல்லியத்தனுர்** என்று பெயர் பெற்றனர்.

இன்னும் இவைபோன்ற வாத்தியவகைகளும் அவை களைப்பற்றிய பிறவிஷயங்களும் உண்டு.

புலவர்களில் இயல் இசை நாடகம் மூன்றிலும் வல்லு நர் எனப் பலரிருத்தல் கூடும். இரண்டொன்றில் வல்லுநரா யிருந்தது பற்றிச் சிறப்பெய்தியவர்கள் சிலருளர்.

இசைத்தமிழிற் புகழ்பெற்ருேர் கண்ணகனுர், கண்ண னுகனுர், கேசவனுர், நந்நாகனுர், நல்லச்சுதனுர், நன்னுக

ஞர், நாகனர், பித்தாமத்தர், பெட்டனகனர், மருத்துவ னல்லச்சுதனர் முதலியோர். இயலிலும் இசையிலும் புகழ் பெற்ருேர் கேசவனர், நல்லச்சுதனர் முதலியோர். நாடகத் திற் பெயர்பெற்ருேர் மதுரைத்தமிழ்க் கூத்தனர் முதலி யோர்.

வாய்ப்பாட்டிலும், யாழ்முதலிய வாத்தியங்களிலும், கூத்து முதலியவற்றிலும் பயின்று பரம்பரையாகவே உரிமையுற்று அரசர் முதலியவர்களிடம் சென்று பரிசு பெற்றுவரும் சாதியார் முன்பு இந்நாட்டில் இருந்துவந்த னர். அவர்களுள் இசை முதலியவற்றில் வல்லுநராக இருந்தசாதியார் பாணர். அவர்கள் பெரும்பாணர், சிறு பாணர் என்னும் பிரிவினரா யிருந்ததன்றி இசைப் பாணர், யாழ்ப்பாணர், மண்டைப்பாணர் என்ற பிரிவின ராகவும் இருந்து வாழ்ந்து வந்தனர். அவர்களுடைய பெண்பாலார் ஆடல் பாடல்களில் வல்லுநராயிருந்ததன்றி அவ்வக்காலத்திற்கேற்ப ஒன்பது சுவைகளையும் புலப் படுத்தி ஆடும் பெருமைவாய்ந்தும் விளங்கிவந்தார்கள். அவர்களுக்கு விறலியர் என்று பெயர். விறல்-சத்துவம். பாடுமகளிர்க்குப் பாடினியரென்றும், பாணிச்சியரென்றும் பெயருண்டு.

பொருநர் என்று ஒருசாதியார் உளர். அவர் கூத்தர் வகையினர். பொருநுதல்-ஒருவர்போல வேடங்கொள்ளு தல். அவர்கள் கூத்திலன்றிப் பாடுதலிலும் திறமையை யுடையவர்களாக இருந்துவந்தார்கள்; ஏர்க்களம்பாடும் பொருநர், போர்க்களம்பாடும் பொருநர், பரணிபாடும் பொருநர், கிணைப்பொருநர் என அவருட்பலவகையினர் உண்டு.

### நாடகம்

இலக்கிய இலக்கண வகைகளில் இயற்றிமிழின் சார் பாகப் பல நூல்கள் தமிழ்நாட்டில் மிகுதியாகக் காணப்

படுதல் போல நாடகத் தமிழின் சார்பாக முற்கூறிய இரண்டு வகைகளிலும் ஒரு நூலாவது முழுவடிவமாக இக்காலத்தில் இந்நாட்டிற் காணப்பட்டிலது. இசைத் தமிழுக்குக் கிடைத்த கருவி நூல்கள் கூட இதற்குக் கிடைக்கவில்லை. **சிலப்பதிகாரவுரையில்**, ''நாடகத் தமிழ் நூலாகிய **பரதம் அகத்தியம்** முதலிய தொன் னூல்களும் இறந்தன. பின்னும் **முறுவல் சயந்தம் குணநூல் செயிற்றிய** மென்பனவற்றுள்ளும் ஒரு சாரார் சூத்திரங்கள் நடக்கின்ற அத்துணையல்லது முதல் நடு இறுதி காணாமையின் அவையும் இறந்தனபோலும்'' என இறந்த நாடகத்தமிழ் நூல்களின் பெயர்களை எழுதிக் கொண்டு சென்ற **அடியார்க்கு**நல்லார் தம்முடைய காலத்து வழங்கியனவாகத் தெரிவித்துள்ள **இசை நுணுக் கம், இந்திரகாளியம், பஞ்சமரபு, பரதசேனுபதீயம், மதிவாணர் நாடகத் தமிழ்** நூல் என்பவைகளுங்கூட இக்காலத்தே கிடைத்தில. ஆதலால் பழைய நூல்களிலும் உரைகளிலும் அங்கங்கே காணப்படும் குறிப்புக்களைக் கருவியாகக்கொண்டு சிலவற்றைச் சொல்லுவேன்.

சங்ககாலத்தில் நாடக இலக்கியங்களும் இலக்கணங் களும் மிகுதியாக இருந்தனவென்றும், அவற்றுள் இலக் கியங்கள் சில நாடகக் காப்பியங்களென்ற பெயர்கொண்டு வழங்கிவந்தன வென்றும், நாடகக்காட்சி எல்லாராலும் கண்டு இன்புறப்பெற்றுவந்ததென்றும், காண்போர் குழுக் கள் மிகுதியாக வந்தனவென்றும், அந்நாடகம் இசைப் பாட்டோடும் யாழ்க்கருவியோடும்கூடி விளங்கிவந்ததென் றும், அரசர்களின் மாளிகைக்கு நடிக்குங் கூத்தக்குழாங் கள் சென்று நடித்து அவர்களால் ஆதரிக்கப் பெற்று வந் தார்களென்றும், நாடக நூல்களின் ஆழ்ந்த கருத்துக் களைக் கூர்ந்துணர்ந்து அக்காலத்தவர் இன்புற்று வந்தன ரென்றும் பின்வரும் வாக்கியங்கள் தெரிவிக்கின்றன:

"பாட லோர்த்தும் நாடகம் நயந்தும்" (பட்டினப்பாலை)

"கூத்தாட் டவைக்குழாத் தற்றே பெருஞ்செல்வம்
போக்கு மதுவிளிந் தற்று" (திருக்குறள், 332)

"பண்கனியப்பரு கிப்பயனுடகம்
கண்கனியக் கவர்ந்துண்டு"
"நாடக நாங்களுற்றது"
"நாடக மியற்றுகின்றார்"
"கிளைநரம் பிசையுங் கூத்துங் கேழ்த்தெழுந்து"
(சீவகசிந்தாமணி)

"ஆடற் கூத்தினோ டவிநயந் தெரிவோர்
நாடகக் காப்பிய நன்னூ லுனிப்போர்
பாடல்சால் சிறப்பிற் பரதத் தோங்கிய
நாடகம் விரும்ப" (மணிமேகலை)

"இசையொடு சிவணிய யாழினூலு
நாடகப் பொருளும்"
"கோயினுடகக் குழுக்களும் வருகென"
"நயத்திறம் பொருந்த நாடகங் கண்டும்"
"நண்புணத் தெளித்த நாடகம் போல" (பெருங்கதை)

முதலிற் கூறிய பட்டினப்பாலை கரிகாற் பெருவளவன் மீது இயற்றப்பட்டது; அதில் கூறப்படுவதால் நாடகத்தின் பழமை விளங்கும்.

ஒருவனிடம் திடீரென்று பெருஞ் செல்வம் உண்டாவதற்கு நாடக அரங்கின்கண் காண்போர் கூடுதலையும், அவனைவிட்டு அச்செல்வம் விலகுதற்கு அக்கூத்தாட்டு முடிந்தவுடன் அக்குழாம் போதலையும் மேலே காட்டிய "கூத்தாட்டவை" என்னுங் **குறளில்** திருவள்ளுவர் உவமையாகக் கூறியிருத்தலின் அவர் காலத்தில் நாடக நிகழ்ச்சி யுண்டென்பதும் அதைக்காணப் பலர் வருவரென்பதும் புலனுகின்றன.

திருப்பெருந்துறையிற் குருமூர்த்தியாக எழுந்தருளிக் காட்சி கொடுத்து உபதேசித்து அடியார் கூட்டங்களோடும் மறைந்தருளிய சிவபெருமானைக் காணப்பெறாத **திருவாதவூரர்,**

" நகவே தகுமெம் பிரானென்னை நீசெய்த நாடகமே "

என்றும்

" நாடகத்தா லுன்னடியார் போனடித்து "

என்றும் வருந்திப் பாடியவற்றில் அக்காட்சியை நாடக மெனக் கூறியிருப்பதும் இங்கே அறிதற்பாலது.

" நன்பணைத் தண்ணற வுண்ணளி போன்ஞெளிர் நாடகமே "

(219) என்ற **கோவையாரின்** விசேட வுரையில், 'கண் டார்க்கு இன்பஞ் செய்தலில் நாடகமென்ருர்' என்பர் **பேராசிரியர்.**

' இசை நாடகங்கள் இன்பத்தை விளைவிக்கும் '

என்பர் **நச்சினுர்க்கினியர்.** வேறு சிலர் கற்ருர்க்குங் கல்லார்க்கும் நாடகக்காட்சி இன்பத்தை விளைவிக்கு மென்பர்.

நாடகம் மதசம்பந்தமாகவும் பெரியோர்களுடைய சரித்திர சம்பந்தமாகவும் இயற்றப்பெற்றிருப்பின், காண் போர்களுக்குப் பலவகையான நற்குண நற்செய்கைகளும் தெய்வபக்தியும் உண்டாகும் என்பது பண்டையோர் கருத்து. நாடகம் இன்பச் சுவையோடு கூடிப் பழைய கதைகளைத் தழுவி அமைய வேண்டுவதாதலால், காண் போர்க்கு உலகவியல்பைச் செவ்வனே தெரிவித்து உவப் பச் செய்வதாகும். கேள்வியால் இன்பத்தைத்தரும் இசை யிலும் காட்சியால் இன்பத்தைத்தரும் இதுவே சிறந்த தென்பர் சிலர். இசையில் அறிவில்லாதவர்க்கு அவ்விசை மிக்க இன்பத்தைச் செய்யாது. நாடகமோ யாவருக்கும் மிக்க இன்பத்தை அளித்துத் துன்பத்தைப் போக்கும். இதன் பெருமையை இக்காலத்தில் யானெழுதுவது மிகை.

நாடகத்திற்குப் பரமாசாரியர் சிவபெருமானென்று பழைய நூல்களால் தெரியவருகின்றது.

நாடகங்கள் பெரும்பாலும் விழாக்காலங்களில் நடை பெறுமென்றும் அவை செய்யுளும் வசனமும் விரவப் பெற் றிருக்குமென்றும் சொல்வார்.

நாடகம் கூத்தென்னும் பெயராலும் வழங்கப்பெற்று வந்தது. அந்நாடகங்களில் முன்புகூறிய யாழேயன்றி முழவு, ஆகுளி, பாண்டில், கோடு, நெடுவங்கியம், குறுந் தூம்பு, தட்டைப்பறை, சல்லி, பதலே முதலிய பல வாச்சி யங்களும் நடிக்குங்காலத்துத் துணைக்கருவிகளாக இருந் தனவென்றும், ஏதேனும் ஓரிடத்திற்குச் செல்லுங்கால் கூத்தராவது அவருடைய ஏவலாளராவது அவ்வாச்சியங் களைப் பலாக்காய்க் கொத்துக்களைப்போலத் தொகுத்துக் காவடியில் வைத்துத் தோளிற்காவிச் (சுமந்து) சென்ரு ரென்றும்,

"திண்வார் விசித்த முழவொ டாகுளி
நுண்ணுருக் குற்ற விளங்கடர்ப் பாண்டின்
மின்னிரும் பீலி யணித்தழைக் கோட்டொடு
கண்ணிடை விடுத்த களிற்றுயிர்த் தூம்பி
னிளிப்பயி ரிமிருங் குறும்பரந் தூம்பொடு
விளிப்பது கவருந் தீங்குழ றுதைஇ
நடுவுநின் றிசைக்கு மரிக்குரற் றட்டை
கடிகவர் பொலிக்கும் வல்வா யெல்லரி
நொடிதரு பாணிய பதலேயும் பிறவும்
கார்கோட் பலவின் காய்த்துணர் கடுப்ப
நேர்சீர் சுருக்கிக் காய கலப் பையிர்" (மலேபடுகடாம், 3-13)

என்பதனுல் தெரியவருகின்றது.

நாடகம் நடிப்போர் கூத்தரென்றும், பொருநரென் றும், கோடியரென்றும் வழங்கப் பெறுவர். அக்கூத்தர் களுக்குப் பாணர்கள் பாடினிகள் விறலிகளென்பார் உட னிருந்து உதவிசெய்து வந்தார்களென்பதும், அவர்கள் உபகாரிகளிடம் சென்று சென்று தங்கள் புலமையைப் புலப் படுத்திப் பரிசுபெற்று மனமகிழ்ந்து வந்தார்களென்பதும், அவ்வுபகாரிகளின் வண்மையைத் தமக்கு எதிர்ப்பட்ட கூத்தர்களுக்குத் தெரிவித்து அவர்களேயும் அவ்வுபகாரி களிடம் அனுப்பிப் பயனடையும்படி செய்துவந்தார்க ளென்பதும் **பத்துப்பாட்டிலுள்ள பொருநராற்றுப்படை, மலேபடுகடாம்** (கூத்தராற்றுப்படை) என்பவற்ருலும்,

**புறநானூற்றி**லுள்ள சில செய்யுட்களாலும், **புறப் பொருள் வெண்பாமாலை**யாலும் விளங்கும்.

முதலில் நாடகமுண்டானதற்குக் காரணங்கள் சில உண்டென்று ஆராய்ச்சியால் தெரியவருகின்றது. அவற் றுள் ஒன்று ;

மிகுந்த உழைப்பால் துன்பமுற்றவர்களின் அயர்ச் சியைப் போக்குவதற்குச் சிறந்த கருவியாக நாடகம் இயற்றி நடிக்கப்பட்டதென்றும், திரிபுரத்தைப் பரமசிவன் எரித்த பின்பு அங்கே சூழ்ந்திருந்த தேவர்களுடைய வெப்பத்தையும் அயர்ச்சியையும் போக்குவதற்கு, '**திரிபுர விசயம்**' என்ற நாடகம் இயற்றி அவர்களுக்கு முன் ஆடப்பட்டதென்றும், அமிர்தம் எடுத்தற்காகக் கடலைக் கடைந்த தேவாசுரர்களின் அயர்ச்சித் துன்பத்தைப் போக்குவதற்கு '**அமிர்தமதனம்**' என்ற நாடகம் இயற்றி அவர்களுக்கு முன் ஆடப்பட்டதென்றும், அக்காட்சி களால் அவ்விருதிறத்தாரும் இளைப்பு நீங்கி இன்புற்றார் களென்றும் வடமொழி வாணர் கூறுவர்.

செங்குட்டுவனென்னும் சேரவரசன் பத்தினிக் கடவு ளாகிய கண்ணகியின் திருவுருவத்தை அமைத்தற்கு இடையிலுள்ள நாடுகளின் அரசர்களை வென்று இமயஞ் சென்று கற்கொண்டு நகரத்தையடைந்த பின்பு நாடக அரங்கைச் சார்ந்து ஓராசனத்தில் தன்தேவியோடு ஓலக்கமாக வீற்றிருந்தபொழுது, அந்நாட்டின் கண்ண தாகிய பறையூரிலிருந்தவனும் நாடகத்தில் வல்லவனுமான கூத்தச் சாக்கையனென்பவன் சிவபெருமானுடைய ஆடல்களுள் ஒன்றாகிய கொடுகொட்டியென்பதை மிகவும் நன்றாக ஆடினானென்றும் அக்காட்சியால் செங்குட்டுவ னும் அவன் தேவியும் அயர்ச்சி நீங்கி மகிழ்வுற்றார்களென் றும் **சிலப்பதிகாரம்** தெரிவிக்கின்றது. கொடுகொட்டி யென்பது திரிபுரத்தை யெரித்தபின்பு சயானந்தத்தால் உமாதேவியாரை ஒரு பாகத்திற்கொண்டு பரமசிவன்

ஆடிய ஆடல். சிவபெருமான் நடித்ததுபோற் சாக்கையன் நடித்ததை **இளங்கோவடிகள்** கூறியிருக்கும் பகுதி யாவரும் அறிந்து இன்புறுதற்குரியது; அதனை இங்கே தெரிவிக்கின்றேன்;

**" ஆங்கவ டன்னுட னணிமணி யரங்கம்**
**வீங்குநீர் ஞால மாள்வோ னேறித்**
**திருநிலைச் சேவடிச் சிலம்புவாய் புலம்பவும்**
**பரிதரு செங்கையிற் படுபறை யார்ப்பவும்**
**செங்க ணாயிரந் திருக்குறிப் பருளவும்**
**செஞ்சடை சென்று திசைமுக மலம்பவும்**
**பாடகம் பதையாது சூடகந் துளங்காது**
**...மேகலை யொலியாது.........அசையாது**
**வார்குழை யாடாது மணிக்குழ லவிழா**
**துமையவ ளொருதிற னாக வோங்கிய**
**இமையவ னாடிய கொட்டிச் சேதம்**
**பாத்தரு நால்வகை மறையோர் பறையூர்க்**
**கூத்தச் சாக்கைய னாடலின் மகிழ்ந்து "**

**(சிலப்பதிகாரம், நடுகற்காதை, 65-77)**

மேலே கூறியவற்றால் உழைப்பினாலுண்டாகும் அயர்ச்சியை நீக்க நாடகம் நடிக்கப்பட்டதென்பது அறியப்படும்.

இங்கே கூறிய கூத்தச்சாக்கையன் மரபினர் நாடகத் தொழில் புரிவோராக அவ்வூரில் இன்னும் இருக்கின்றன ரென்று கேள்வியுற்றிருக்கிறேன்.

தனக்குப் பேருதவி செய்தவனாகிய சுதஞ்சணன் என்பவனுடைய சரித்திரத்தை நாடகமாகச் செய்து நடிப்பித்துச் சீவகன் இன்புற்று வாழ்ந்தானென்று **சீவக சிந்தாமணியால்** தெரிதலால் ஒருவர் செய்த நன்றியைப் பாராட்டுதற் பொருட்டும் நாடகம் நடிக்கப்பெற்றதென்று கொள்ளவேண்டும்.

நாடகத்திற்குரிய அரங்கம் தூய்மையான இடத்தில் அமைக்கப்படவேண்டும். அவ்வரங்கத்தின் உயரம், அதற்குரிய வாயில்கள், அதில் எழுதப்படும் தெய்வ உருவங்கள்,

விளக்கு வைத்தால் நிழல் புறத்தே செல்லும்படி நிறுவிய தூண்கள், அங்கே கட்டப்படும் ஒருமுகவெழினி பொரு முகவெழினி கரந்துவரலெழினியென்னுந் திரைகள், அவற் றின் இயல்பு, மேலே கட்டப்படும் ஓவியவிதானம், அவை கள் அமைக்கப்பட வேண்டிய முறை முதலிய விஷயங் கள், சிலப்பதிகாரம் அரங்கேற்று காதையில் உரையாசிரி யரால் மிக நன்ருகக் கூறப்பட்டிருத்தலால் பண்டைக் காலத்தில் நாடக அரங்கு மிகவும் செவ்வனே அமைக்கப் பெற்றிருந்தமை விளங்கும்.

பின்னும், நாடகத்திற்கு இன்றியமையாதவர்களாகிய இசையாசிரியன், கவிஞன், தண்ணுமையோன், வேய்ங் குழலோன், யாழாசிரியனென்பவர்களின் இலக்கணங் களும் அந்நூலில் நன்கு கூறப்பெற்றிருக்கின்றன. இவ்வைவரும் வடமொழியில் பஞ்சாசாரியரெனப்படுவர். இவர்களுட் கவிஞன் கூறப்பட்டிருத்தலால், இயற்றமிழில் வல்லவனுகிய கவியொருவன் அர்த்தபுஷ்டியும் பாவபுஷ்டி யும் ஒன்பது சுவையுமமைந்துள்ளனவாகிய இசைப்பாட் டுக்களை இடத்திற்கு ஏற்றவாறு இயற்றியளித்துப் பாடச் செய்து உடனிருந்து வந்தானென்பது புலனுகின்றது. இன்னும், செய்யுள், இசை, யாழ், தண்ணுமை, வேய்ங் குழல் முதலியவற்றின் இலக்கணங்களும் தக்க ஆதாரங் களுடன் சிலப்பதிகாரத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதுடன் நாடகம் பலவகையாக வழங்கப்பட்டுவந்ததென்றும் அந்நூலால் தெரியவருகின்றது.

அஃது அகக்கூத்து, புறக்கூத்து; வேத்தியல், பொதுவியல்; வசைக்கூத்து, புகழ்க்கூத்து; வரிக்கூத்து, வரிச்சாந்திக்கூத்து; சாந்திக்கூத்து, விநோதக்கூத்து; ஆரியக்கூத்து, தமிழ்க்கூத்து; இயல்புக்கூத்து, தேசிக் கூத்தெனப் பல பகுதிப்பட உரிய இலக்கணங்களுடன் அந் நூலின் உரையாசிரியர்களால் விளக்கி எழுதப்பட் டுள்ளது.

சுவைகளுக்குரிய அவிநயம் வீரச்சுவை அவிநய முத லாக உருத்திரச்சுவை அவிநயமிறுதியாக ஒன்பதுவகைப் படுமென்றும், மற்ருெரு வகையில் வெகுண்டோனவிநய முதல் நஞ்சுண்டோனவிநய மிறுதியாக இருபத்துநான்கு வகைப்படுமென்றும் கூறி அவற்றின் இயல்புகளைப் பழைய சூத்திரங்களின் முகமாக **அடியார்க்குநல்லார்** நன்கு விளக்கியிருக்கிருர். இவ்விரண்டுவகையான அவி நயங்களையும் புலவர்கள் தம்முடைய காவியங்களில் ஆங் காங்கே அமைத்துப் பாடிய இடங்கள் பல. அவற்றுள் உதாரணமாக அவிநயச் சூத்திரமொன்றையும் அதற் கிலக்கியமாகவுள்ள இரண்டு செய்யுட்களையும் தெரிவிக் கின்றேன்:

### வெகுண்டோனவிநயம்

"வெகுண்டோ னவிநயம் விளம்புங் காலை
மடித்த வாயு மலர்ந்த மார்பும்
துடித்த புருவமுஞ் சுட்டிய விரலும்
கன்றின வுள்ளமொடு கைபுடைத் திடுதலும்
அன்ன நோக்கமோ டாய்ந்தனர் கொளலே"
(சிலப்பதிகாரம் உரை, மேற்கோள்)

"இறைக்கடை துடித்தவுரு வத்தளெயி றென்னும்
பிறைக்கடை பிறங்கிட மடித்தபில வாயள்
மறைக்கடை யரக்கிவட வைக்கன லிரண்டாய்
நிறைக்கடன் முளைத்தென நெருப்பெழ விழித்தாள்"
(கம்பராமாயணம், தாடகை வதைப்படலம்)

"கூற்றுறழ் நயனங்கள் சிவப்பக் கூனுதல்
ஏற்றிவா ளெயிறுக ளதுக்கி யின்றளிர்
மாற்றருங் கரதல மறிக்கு மாதொரு
சீற்றமா மபிநயந் தெரிக்கின் றரினே"
(கம்பராமாயணம், உண்டாட்டுப் படலம்)

நாடகத்திற்குரிய வாத்தியங்கள் பலவும் கூறப்பட் டுள்ளன. அவற்றைக் கீதாங்கம், நிருத்தாங்கம், உப யாங்கமென மூன்று வகையாகப் பிரித்து ஒவ்வொன்றன் இலக்கணங்களையும் செவ்வையாக விரித்தெழுதிச் செல் கின்றனர். கீதாங்கம் இசைப்பாட்டிற்குரியவை; நிருத்

5

தாங்கம் நிருத்தத்திற்குரியவை; உபயாங்கம் இரண்டிற் கும் உரியவை.

இசைப்பாட்டின் பொருளைக் காண்போர்க்குப் புலப் படுத்துவனவாகிய அவிநயக் கைவகைகளில் ஒற்றைக்கை யென்பது பதாகைமுதல் வலம்புரிக்கை இறுதியாக முப் பத்துமூன்று வகைப்படுமென்றும், இரட்டைக்கை யென் பது அஞ்சலிமுதல் வருத்தமானக்கையீருகப் பதினைந்து வகைப்படுமென்றும் பழைய ஆதாரங்களுடன் அவர் விளக்கியிருக்கிருர். ஒற்றைக்கை பிண்டிக்கை இணையா வினைக்கை யென்றும், இரட்டைக்கை இணைக்கை பிணை யற்கையென்றும் வழங்கப்படும்.

இன்னும் ஆண்கை, பெண்கை, அலிக்கை, பொதுக் கையென நால்வகைப் படுமென்றும், எழிற்கை, தொழிற்கை, பொருட்கையென மூன்று வகைப்படுமென் றும் அவிநயக்கைகளை வகுத்துக் கூறுவாருமுளர்.

ஆடல்களுள் தெய்வவிருத்தியென ஒருவகையுண்டு; அஃது அல்லியம், கொடுகொட்டி, குடை, குடம், பாண்ட ரங்கம், மல், துடி, கடையம், பேடு, மரக்கால், பாவை யெனப் பதினெருவகைப்படும்: இவை சிவபெருமான் திருமால், முருகவேள், மன்மதன், காளி, திருமகள் முத லிய தெய்வங்களின் ஆடல்களென்பர். இவற்றுள் அல்லிய முதலிய ஆறும் நின்ருடலெனவும், துடி முதலிய ஐந்தும் வீழ்ந்தாடலெனவும் சொல்லப்படும்.

நாடகத்திற் பாடப்படும் இசைப்பாட்டுக்கள் உரு வென்று வழங்கப்படும்; இக்காலத்தார் அதனை உருப்படி யென்பர். அகநாடகத்திற் பாடப்படும் உருக்கள் கந்த வுருமுதற் பிரபந்தவுரு ஈருக இருபத்தெட்டுவகைப் படு மென்றும், புறநாடகத்திற்குரிய உருக்கள் தேவபாணி முதல் அரங்கொழி செய்யுளிறுதியாகவுள்ளவை யென்றும் அவர் அறிவிப்பர். கந்தவுரு, அடிவரையறை யுடைத் தாய் ஒரு தாளத்தாற் பாடப்படும் பாஷைப்பாட்டு;

பிரபந்தவுருவாவது அடிவரையறையின்றிப் பலதாளங்கள் புணர்த்துப் பாடப்படும் பாஷைப்பாட்டு.

இப்படியே **சிலப்பதிகார** மூலத்தாலும் அதன் உரைகளாலும் தெரிந்துகொள்ளப்படும் நாடகப் பகுதிகள் பல.

மேலே கூறிப்போந்த இலக்கணத்தின்படி அமைந்த பழைய தமிழ் நாடகநூல் இக்காலத்தில் யாண்டுங் கிடைத்திலது. **இராஜராஜ நாடக** மென்பதொன்று இராஜராஜ சோழன்மேற் செய்யப்பட்டதென்று தஞ்சைச் சிலாசாசனத்தால் தெரியவந்தாலும் அந்நூல் இப்பொழுது கிடைக்கவில்லை. **அமிர்தமதன நாடக** மென்பதொன்று தமிழிற் செய்யப்பட்டுத் திருநெல்வேலியைச் சார்ந்த நாங்குனேரிப் பக்கத்தில் வழங்குகின்றது. அது பழைய காலத்ததன்று; மிக்க பிற்காலத்தது. முற்கூறிய வடமொழி அமிர்தமதன நாடகத்தைப் பிற்காலத்தில் ஒருவர் பெயர்த்தியற்றியிருக்கலாமென்று தோற்றுகிறது.

## III. சங்கநூல்களிற் கூறப்படும் தெய்வங்கள்

சங்கச் செய்யுட்களிற் சொல்லப்பட்டிருக்கிற தெய்வங்களைப் பற்றிச் சொல்லுகிறேன். முதனூலாகச் சொல்லப்படும் அகத்தியம் இப்பொழுது அகப்படாமையால் அதன் வழிநூலாகிய தொல்காப்பியத்திலும் இப்போது கிடைக்கும் சங்கச் செய்யுட்களிலும் உள்ள ஆதாரங்களைக் கொண்டு அவற்றைப்பற்றிப் பேசத் தொடங்குகின்றேன்.

பூமியை ஐந்து பாகங்களாகப் பிரித்து அதனதன் தெய்வத்தையும் தொல்காப்பியம் தெரிவிக்கின்றது. இந்த முறை பிற்காலத்து நூல்களாலும் தெரிகின்றது. முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல், பாலை என்பன நிலத்தின் பாகுபாடுகள். அவற்றுள் காடும் காட்டைச் சார்ந்த இடமும் முல்லை; அதற்குத் தெய்வம் திருமால்; மலையும் மலையைச்சார்ந்த இடமும் குறிஞ்சி; அதற்குத் தெய்வம் முருகக்கடவுள்; வயலும் வயலைச் சார்ந்த இடமும்

மருதம்; அதற்குத் தெய்வம் இந்திரன்; கடலும் கடலைச் சார்ந்த இடமும் நெய்தல்; அதற்குத் தெய்வம் வருணன்; நீரும் நிழலுமற்ற இடம் பாலை; அது வேனிற் காலத்தில் குறிஞ்சி முல்லை என்பவற்றின் ஒவ்வொரு பாகத்தி லிருந்து உண்டாவது;

"முல்லையுங் குறிஞ்சியு முறைமையிற் றிரிந்து
நல்லியல் பழிந்து நடுங்குதுய ருறுத்துப்
பாலை யென்பதோர் படிவங் கொள்ளும்"

என்பது **சிலப்பதிகாரம்**. அதற்குத் தெய்வங்கள் காளி, சூரியன், அக்கினி.

''**மாயோன் மேய காடுறை யுலகமும்** சேயோன் மேய மைவரை யுலகமும்'' என்பது **தொல்காப்பியம்**. இதிலுள்ள ''**மேய**'' என்ற சொல் கவனிக்கத்தக்கது. 'மேய' என்பதற்கு விரும்பிய, தங்கிய என்பன பொருள். 'மாயோன் மேய காடுறை உலகமும்' என்றதனால், முல்லைத் திணையில் திருமாலுக்குப் பிரீதி உண்டென்றும் அதனால் அங்கே அவர் விரும்பித் தங்கியுள்ளார் என்றும் அறிய வேண்டும். பிறவற்றிற்கும் இப்படியே கொள்க.

மாயோன் என்ற சொல்லுக்கு ஆச்சரியசக்தி உடையார் என்று இக்காலத்தார் பொருள் கூறுவர். **பரிமேலழகர் பரிபாடலில்** அதற்கு, 'கரிய நிறமுடையவர்' என்று பொருள் செய்திருக்கிறார். மா வென்பதற்குப் பொருள் கூறுங்கால், ''செல்வம், கருநிறம், கமலை'' என்று நிகண்டில் செல்வத்திற்கும் கமலைக்கு மிடையில் திருமாலுக் குரிய கருநிறம் சொல்லப்பட்டிருப்பது அழகுடையது.

முல்லை நிலத்தில் மழை பெய்யாதிருந்தாலும் வியாதி களால் துன்பம் உண்டானாலும் திருமாலைக்குறித்து மகளிர் குரவைக்கூத்தாடுவர்; எழுவர் அல்லது எண்மர் அல்லது ஒன்பதின்மர் கைகோத்துக்கொண்டு ஆடுவது வழக்கம். கண்ணன், பலராமன், நப்பின்னை என்பவர்கள் குரவைக் கூத்தாடியதாக **மணிமேகலை** முதலியவற்றால் தெரிகிறது. குரவைக்கூத்தாடினால் மழை பெய்யும்;

ஓஷதிகள் வளரும்; பசு கறக்கும்; நோய் நீங்கும், சிலப் பதிகாரத்தில் ''**ஆய்ச்சியர் குரவை**'' என்னும் பகுதியில் இடைப் பெண்கள் குரவைக் கூத்தாடினதாக இளங்கோ வடிகள் சொல்லியிருக்கிறார். மாதரி என்ற இடைமாதிடத் தில் கவுந்தியடிகள் என்ற சைனத்தவமுதியார் கண் ணகியை அடைக்கலமாக ஒப்பித்துவிட்டுப் போனபின், கோவலன் நகர் காண மதுரைக்குப் போனான். அங்கே அவன் கள்வன் என்று கொல்லப்படவே, இடைச்சேரியில் துர்நிமித்தங்கள் நிகழ்ந்தன. அப்பொழுது அவற்றிற் குச் சாந்தியாக ஆய்ச்சியர் குரவை ஆடினர். ஏழு பேர்களை ஏழு ஸ்வரங்களாக வரிசைப்படுத்தி நிறுத்திக் குரவை நடத்தியதாகச் சிலப்பதிகாரத்துள்ள ஆய்ச்சியர் குரவையால் தெரியவருகிறது. அக்கூத்தின் முடிவில்,

1. " கன்று குணிலாக் கனியுதிர்த்த மாயவன்
இன்று நம்மானுள் வருமே லவன்வாயிற்
கொன்றையந் தீங்குழல் கேளாமோ தோழீ"

2. " பாம்பு கயிறுக் கடல்கடைந்த மாயவன்
ஈங்குநம் மானுள் வருமே லவன்வாயில்
ஆம்பலந் தீங்குழல் கேளாமோ தோழீ"

3. " கொல்லையஞ் சாரற் குருந்தொசித்த மாயவன்
எல்லைநம் மானுள் வருமே லவன்வாயில்
முல்லையந் தீங்குழல் கேளாமோ தோழீ"

என்று பாடியும்,

4. " பெரியவனை மாயவனைப் பேருலகமெல்லாம்
விரிகமல வுந்தியுடை விண்ணவனைக் கண்ணும்
திருவடியுங் கையுங் கனிவாயுஞ் செய்ய
கரியவனைக் காணாத கண்ணென்ன கண்ணே
கண்ணிமைத்துக் காண்பார்தங் கண்ணென்ன கண்ணே"

5. " மடந்தாழு நெஞ்சத்துக் கஞ்சனார் வஞ்சம்
கடந்தானை நூற்றுவர்பா லூற்றிசையும் போற்றத்
தொடர்ந்தா ரணமுழங்கப் பஞ்சவர்க்குத் தூது
நடந்தானை யேத்தாத நாவென்ன நாவே
நாராய ணாவென்னா நாவென்ன நாவே"

என்று பாடியும் கண்ணனை ஏத்தினர்.

இவை பழைய செய்யுட்களாக இருந்தும் யாரும் எளிதில் பொருள் தெரிந்து கொள்ளும்படி அமைந் திருப்பது மிகவும் பாராட்டத்தக்கது.

**பரிபாடல்** என்ற சங்க நூலில் திருமாலுக்கு ஏழு பாடல்கள் உள்ளன; உபநிடதங்களில் சொல்லப்பட் டிருக்கிற அவருடைய குணவிசேடங்கள் மிகவும் அழகாக முறையே அந்தப் பாடல்களில் சொல்லப்பட்டிருக்கின்றன.

சிலப்பதிகாரத்திலுள்ள **ஆய்ச்சியர்** குரவையில் மதுரையின்கண் உள்ள **இருந்தவளமுடையார்** கோயில் கூறப்பட்டுள்ளது. பரிபாடலிற் கூறப்படும் இருந்தையூ ரென்பது இதுதானென்று தெரிகின்றது. **பெரும்பா ணாற்றுப்படை**யிலும் திருமால் பாராட்டப்பட்டிருக்கிறர். காஞ்சீபுரத்தைச் சார்ந்த திருவெஃகா என்ற திருப் பதியில் உள்ள திருமாலின் சயனத்திருக்கோலம் அந் நூலிற் கூறப்பட்டிருக்கிறது.

"வீங்குநீ ரருவி வேங்கட மென்னும்
ஓங்குயர் மலையத் துச்சி மீமிசைப்
பொலம்பூ வாடையிற் பொலிந்து தோன்றிய
செங்கண் நெடியோ னின்ற வண்ணமும்"

என்று **சிலப்பதிகாரத்தில்** திருவேங்கடத்தில் திருமால் நின்றுகொண்டு காட்சி யளிப்பதாகச் சொல்லப்பட்டிருக் கிறது. அழகர் மலையிலும் அவர் இருப்பதாகப் **பரிபாட லும் சிலப்பதிகாரமும்** கூறும்.

அழகர்மலையைச் சோலைமலை என்று **திருமுரு காற்றுப்படை**யில் சொல்லியிருப்பதுடன், அது முருகக் கடவுளுடைய திருப்பதியென்றும் நக்கீரர் பாடி யிருக் கிறர். அப்படியே திருவேங்கடமும் முருகக்கடவுளின் ஸ்தலமென்று சில பழைய நூல்களால் தெரிகிறது. சோலைமலையில் இன்றும் சரவணப் பொய்கையென்று பெயருள்ள ஒரு தீர்த்தம் காணப்படுகின்றது. திருவேங் கடத்திலுள்ள கோனேரி என்பது குகனேரியே. அதனை ஸ்கந்த புஷ்கரிணி யென்பர். இவற்றல் அந்நாளில் அம்

மலைகளில் எங்கேயாவது முருகக்கடவுளின் ஆலயமிருந்திருக்கலாமென்றும் அந்த ஆலயங்கள் பரிபாலிக்கப்படாமையால் அழிந்து போயிருத்தல் கூடுமென்றும் தெரிகிறது. வேங்கடம் போனல் இம்மை மறுமைப்பயன்களைத் திருமால் அளிப்பாரென்ற கருத்துள்ள ஒரு வெண்பா **புறப்பொருள் வெண்பா மாலையில்** உள்ளது. **திருமுருகாற்றுப்படையில்,**

"பாம்புபடப் புடைக்கும் பல்வரிக் கொடுஞ்சிறைப்
புள்ளணி நீள்கொடிச் செல்வன்"

என்று திருமாலைக் கருடக்கொடி உடையாரென்று சொல்லியிருக்கிறுர்.

**அகநானூற்றிலும், புறநானூற்றிலும், பதிற்றுப்பத்திலும்** திருமால் கூறப்பட்டிருக்கிறுர். அவரை, 'ஆலமர் கடவுள்' என்பர். ஆல் அமர் கடவுள் என்பது பரமசிவனை உணர்த்துவதாகவும் உரையாசிரியர்கள் கூறுவார்கள். ஆலிலையின்மேல் சயனம் செய்யும் கடவுள் என்று கொண்டு திருமாலிற்கும், ஆலின் கீழிருந்து உபதேசித்த கடவுள் என்றுகொண்டு பரமசிவனுக்கும் கொள்ள வேண்டு மென்பது அவர்கள் கருத்து.

முல்லை நிலத்தார்கள் கலியாண காலத்தில் பெண் எருமையின் கொம்பை நட்டு வழிபடுவது வழக்கமென்று **கலித்தொகையால்** தெரிகிறது.

"தருமணற் ருழப்பெய் தில்பூவ லூட்டி
எருமைப் பெடையோ டெமரீங் கயரும்
பெருமணம்" (கலித்தொகை, 144)

என்பதும் அதனுரையும் இங்கே அறிதற்பாலன.

## குறிஞ்சிக்கடவுள்

குறிஞ்சிக் கடவுள் முருகன் என்பது, ''சேயோன் மேய மைவரை யுலகம்'' என்பதனுல் விளங்கும். தமக்கு அப்பொழுதப்பொழுது நேரும் துன்பங்களை நீக்கிக் கொள்ள அக்கடவுளுடைய அருள் பெறவேண்டித் தம்

முடைய பரிவாரங்களுடன் மலைநாட்டுமக்கள் குன்றக் குரவை ஆடுவர். அவரைப் பூசிப்பவன் வேலன் என்று சொல்லப்பட்டிக்கிறுன். அவனைப் போன்றவனை இக் காலத்தார் பூசாரி யென்பார். அவன் ஆவேசங்கொண்டு குறிசொல்லுவான். வேடர்கள் முருகக்கடவுளுக்குப் பலி கொடுப்பது வழக்கம். **திருமுருகாற்றுப்படை**யில் முருகக் கடவுள் எழுந்தருளியிருக்கும் ஸ்தலங்கள் ஆறு சொல்லப் பட்டிருப்பதுடன் அவருடைய பெருமைகள் பல கூறப்பட் டிருக்கின்றன. அந்த ஸ்தலங்களாவன திருப்பரங்குன்றம், திருச்செந்தூர், பழநி, திருவேரகம், குன்று தோருடல், பழமுதிர்சோலை யென்பனவாம். அவற்றுள் திருச்செந்தூ ரென்பது திருச்சீரலைவாயென்றும் கூறப்படும். ஒரு பாண்டி யனைப் பலகாலம் வாழ்ந்திருக்க வேண்டுமென்று வாழ்த்த எண்ணிய **மருதனிளநாகனு**ரென்னும் புலவர் திருச்செந்தூரில் கடலின் அலைகளால் மோதப்படுவதும் முருகக்கடவுள் எழுந்தருளியிருப்பது மாகிய திருக்கோயிலின் முன்னுள்ள துறையில் கடுங்காற்ருல் திரட்டித்தொகுக்கப்பெற்ற மணலை விடப் பலகாலம் நீ வாழ்வாயாக என வாழ்த்தியிருக் கின்றனர்;

“ நீநீடு வாழிய நெடுந்தகை தாழ்நீர்
வெண்டலைப் புணரி யலைக்குஞ் செந்தில்
நெடுவே ணிலைஇய காமர் வியன்றுறைக்
கடுவளி தொகுப்ப வீண்டிய
வடுவா ழெக்கர் மணலினும் பலவே ” (புறநானூறு, 55)

இதனுல் திருச்செந்தூரின் பழமை முதலியன புலப் படுகின்றன. திருவேரகம் என்பது கும்பகோணத்திற்கு மேற்கிலுள்ள ஸ்வாமிமலை என்று சொல்லுகிருர்கள். நச்சி ஞர்க்கினியர் திருமுருகாற்றுப்படையின் உரையில் ‘மலை நாட்டிலுள்ள ஒரு திருப்பதி’ என்று தெரிவித்திருக்கிருர். பழமுதிர்சோலையில் இப்பொழுது முருகக் கடவுளுக்குக் கோயிலில்லை. ஆனுல் சரவணப்பொய்கையென்ற ஒரு தீர்த்தமிருத்தலால் அங்கே முன்னமே முருகக்கடவுளின் தலம் இருந்திருக்க வேண்டுமென்று தெரிகிறது. இந்த

ஆறு தலங்களும் படைவீடு என்று வழங்கப்படும். படை வீடு என்பது இன்னதென்று **பத்துப்பாட்டில்** ஒன்ருகிய மலேபடுகடாத்தில் விளக்கப்பட்டிருக்கிறது. சேயாற்றங் கரையில் நவிரமென்னு மலேயில் காரியுண்டிக் கடவுளின் கோயில் சேனேகளாற் சூழப்பட்டிருந்ததென்று சொல்லி யிருத்தல் இக்கருத்தைப் புலப்படுத்தும். காரியுண்டிக் கடவுள் என்ருல் விஷத்தை உணவாக உடையகடவுள் (நீலகண்டர்) என்பது பொருள். அது நஞ்சுண்ட தேவஸ் தலங்களுள் ஒன்று. நன்னன் என்பான் அந்த ஸ்தலத் தைப் பாதுகாத்தற்குப் படைகளே அங்கே வைத்திருந் தான். சத்துருக்களாலும் அந்நிய மதத்தினராலும் நேரக்கூடிய இடையூறுகளேத் தவிர்த்தற்குச் சேனேகளே அங்கு வைத்திருந்தான் போலும். பிற்காலத்தில் ஒவ் வொரு தலமும் படைவீடாகிவிட வேண்டிய அவசியம் நேர்ந்ததுண்டு. **குறுந்தொகை** முதற்பாட்டும் **பரி பாடலில்** எட்டுப்பாடல்களும் முருகக் கடவுள் துதிகளாக உள்ளன. அவற்றில் முருகக்கடவுளின் மகிமை பலவகை யாக விரித்துக் கூறப்பெற்றுள்ளது. **மதுரைக் காஞ்சி யிலும் பரிபாடலிலும்** திருப்பரங்குன்றத் திருவிழா பலபடப் பாராட்டப்பட்டுள்ளது.

அகத்திணேயில், களவு கற்பு என்னும் இரண்டு பகுதிகள் உண்டு. அவற்றில் காந்தர்வ விவாகமே கள வெனப்படும். அஃது எல்லா நிலத்திலும் நடந்ததன்று; எப்பொழுதும் நடந்ததுமன்று. ஊழ்வினேப்பயனுக, நல்ல குலத்துதித்த தலேவனும் குறிஞ்சி நிலத்துக் கன்னியும் ஒரு தனி இடத்தில் தற்செயலாக ஒருவரை ஒருவர் சந்திப்பர். பின்பு தம்முட் காமுற்றுக் கந்தர்வ விவாகம் செய்து கொண்டு பிரிவர். அதனேத் தலேவியின் உயிர்த் தோழிமட்டும் அறிந்து கொள்வாள். அப்படியே தலேவ னியல்பை அவனுடைய உயிர்ப்பாங்கன் மட்டும் தெரிந்து கொள்வான். மறுபடியும் ஒவ்வொரு காலத்தில் தலேவியும் தலேவனும் கண்டு தம்முள் மகிழ்வர். தலேவன் பிரிவாற்

ருமையால் தலைவி கவலைப்படுவள்; அவள் மறுபடி தன்னை அடைவானே வென்றும், தன்னைத் தன்பெற்றோர் வேறு யாருக்கேனும் மணம் செய்விப்பார்களோவென்றும், தனது கற்புத் தவறிவிடுமோ வென்றும் கவலைப்படுவாள். அதனால் அவள் யாருடனும் பேசாமலும் உண்ணுமலும் உறங்காமலும் மயங்கி இருப்பாள். காரணத்தை அறியாத பெற்றோர் மேற்கூறிய வேலனை அழைத்துக் கேட்பர். அவன் அவளைப் பேய் பிடித்திருக்கிற தென்று ஆவேசத்துடன் சொல்லுவான். தோழி அதைத்தடுப்பாள்; 'ஏன் தடுத்தாய்' என்று தாய் கேட்கும்போது தோழி ''நானும் தலைவியும் பூக்கொய்வதற்குக் காட்டுக்குச் சென்றபோது ஒருநாள் மழை பெய்தது; வெள்ளம் வந்து எங்களை இழுத்துச் சென்றது; அப்பொழுது மிக்க வீரமும் அழகுமுள்ள ஒருவன் வந்து அவ்வெள்ளத்தி லிருந்து கரையிலெடுத்து விட்டு எங்களைப்பாதுகாத்தான். அதுமுதல் அவன் நினைப்பாக இருக்கிருள்'' என்பாள்; அல்லது, ''யானை எங்களைத் துரத்திற்று; அப்பொழுது சிறந்ததலைவன் ஒருவன் வந்து எங்களைப்பாதுகாத்தான்; அதுதொடங்கி அவன் நினைப்பாக இருக்கிருள்'' என் பாள்; அல்லது, ''ஒருநாள் பூக்கள் பறிக்கப் போன போது பூ எட்டவில்லை; ஒருவன் வந்து தன் தோளின் மேல் தலைவியை ஏற்றிக்கொண்டு பூவை எட்டிப்பறிக்கும் படி செய்துவிட்டுச் சென்றுன். அது தொடங்கி அவன் நினைப்பாக இருக்கிருள்'' என்பாள். இங்ஙனம் தலைவி யின் நிலைமையை எடுத்துச் சொல்வதற்கு 'அறத்தொடு நிற்றல்' என்று பெயர். மேற்கூறியபடி முருகக்கடவுள் ஆவேசம் வந்ததாக அபிநயித்துக் குறி சொல்லும் வேலனை நோக்கித் தோழி கூறியதாக **நற்றிணையில்,**

"கடவு ளாயினு மாக
மடவை மன்ற வாழிய முருகே" (34)

என்று ஒரு பாடலுண்டு. அதாவது ''தலைவி காதலால் தான் வருந்துகிருள். நீ தெய்வமாக இருந்தாலும் இரு. இந்த விஷயத்தை நீ தெரிந்து கொள்ளவில்லை; அதனுல்

அறியாமையை யுடையை'' என்பது இதன் பொருள். ''தெய்வமல்ல'' என்று சொன்னதால் தெய்வ அபசார மேற்படுமோ என்று அஞ்சி, 'வாழிய முருகே' என்று சொல்லி யிருக்கிருள். முருகக்கடவுளைப் பற்றியுள்ள துதிகள் பழைய நூல்களில் மிக அழகாக உள்ளன; அவற்றுட் சில வருமாறு:—

" ஆல்கெழு கடவுட் புதல்வ மால்வரை
மலைமகண் மகனே மாற்ருேர் கூற்றே
வெற்றி வெல்போர்க் கொற்றவை சிறுவ
இழையணி சிறப்பிற் பழையோள் குழவி
வானேர் வணங்குவிற் ருனைத்தலைவ
மாலை மார்ப நூலறி புலவ
செருவி லொருவ பொருவிறன் மள்ள
அந்தணர் வெறுக்கை யறிந்தோர் சொன்மலை
மங்கையர் கணவ மைந்த ரேறே
வேல்கெழு தடக்கைச் சால்பெருஞ் செல்வ
குன்றங் கொன்ற குன்ருக் கொற்றத்து
விண்பொரு நெடுவரைக் குறிஞ்சிக் கிழவ
பலர்புகழ் நன்மொழிப் புலவ ரேறே
அரும்பெறன் மரபிற் பெரும்பெயர் முருக
நசையுநர்க் கார்த்து மிசைபே ராள
அலந்தோர்க் களிக்கும் பொலம்பூட் சேஎய்
மண்டமர் கடந்தநின் வென்ரு டகலத்துப்
பரிசிலர்த் தாங்கு முருகெழு நெடுவேஎள்
பெரியோ ரேத்தும் பெரும்பெய ரியவுள்
சூர்மருங் கறுத்த மொய்ம்பின் மதவலி
போர்மிகு பொருந குரிசில் '' (திருமுருகாற்றுப்படை, 256—76)

" தாமரை புரையுங் காமர் சேவடிப்
பவழத் தன்ன மேனித் திகழொளிக்
குன்றி யேய்க்கு முடுக்கைக் குன்றின்
நெஞ்சுபக வெறிந்த வஞ்சுடர் நெடுவேற்
சேவலங் கொடியோன் காப்ப
ஏம வைகலெய் தின்ரு லுலகே '' (குறுந்தொகை, கடவுள்.)

## மருதக்கடவுள்

மருத நிலத்தின் தெய்வம் இந்திரன். தமக்குத் துன் பம் நேர்ந்த போது அதற்குப் பரிகாரமாக இந்திரனை

வழிபட்டுத் திருவிழா நடத்துவர் மருதநில மக்கள். அது கொடியேற்றத்துடன் இருபத்தெட்டுநாள் நடைபெறும். தாடகை விழுந்ததை வான்மீகி முனிவர் வருணிக்கையில் இந்திரத்துவசம் சாய்ந்தாற்போல் அவள் விழுந்தாள் என்று சொல்லி யிருக்கிறார். காவிரிப்பூம்பட்டினத்தில் இந்திரனுக்கு வருஷந்தோறும் 28 நாள் விழாச் செய்யப் பட்டதாகச் **சிலப்பதிகாரமும் மணிமேகலையும்** கூறும். இந்திர விழா அக்காலத்து நடைபெற்றமை வேறு நூலாலும் தெரிகின்றது. இந்திரனைப் பாவித்து அவனுடைய வச்சிராயுதத்தையே வைத்து வழிபடுவர். இப்படியே முருகனுக்கு வேலையும், திருமாலுக்குச் சக்கரத்தையும் வைத்து அந்த அந்த ஆயுதத்தையே அவற்றையுடைய தெய்வமாகப் பாவித்து வழிபடுவது வழக்கமாக இருந்தது. இன்றும் சிவாலயங்களில் விழாவின் முடிவில் தீர்த்தங் கொடுக்கையில் சூலத்தைப் பரமசிவனைப் பாவித்து எழுந் தருளுவித்தலைப் பார்க்கலாம். சூலத்தை அஸ்திரதேவர் என்று சொல்வது வழக்கம். இந்திர விழாச் செய்ய ஆரம் பம் செய்கையில் பழமணல் மாற்றுதல் புதுமணல் பரப்பல் முதலிய அலங்காரங்களைச் செய்யும்படி நகரத்தார்க்கு முரசறைவித்துத் தெரிவித்ததாகச் **சிலப்பதிகாரத்தாலும் மணிமேகலையாலும்** தெரிகிறது. இந்திர விழாவின் பொருட்டு நகரத்தை அலங்கரிக்கும்படி கூறுகையில்,

"பட்டிமண் டபத்துப் பாங்கறிந் தேறுமின்"

என்று **மணிமேகலை**யில் சொல்லியிருப்பதால் பிரசங்கம் செய்யக்கூடிய வித்தியா மண்டபம் ஒன்றிருந்ததாகத் தெரிகிறது. வித்தியா மண்டபங்களிற் புத்தகங்கள் இருந்தன.

**புறநானூற்றில்** ஆய் என்பவன் இறந்துபோனதைப் பற்றிப் புலவர் ஒருவர் பிரிவாற்றுமல் வருந்திப் பாடிய பாட்டொன்றில், ஆயை எதிர்கொள்ள வானத்தில் இந் திரன் சயபேரி அடித்தான் என்று சொல்லி யிருக்கிறார்.

இந்திரனைப் பற்றிய செய்தியைச் சங்க நூல்களில் இன்னும் விரிவாகக் காணலாம்.

### நெய்தற்கடவுள்

நெய்தற்கடவுள் வருணன். சுறுமீன்கொம்பை நட்டு அந்நிலத்தவர் வருணனை வழிபடுவர். இது **பட்டினப்பாலை** முதலியவற்றால் விளங்கும்;

"சினைச்சுறவின் கோடுநட்டு
மனைச்சேர்த்திய வல்லணங்கினால்" (பட்டினப்பாலை),

"சுறவ முண்மருப் பணங்கயர் வனகழிச் சூழல்"
(பெரிய புராணம்),

"சுறவுக்கோட்டுட் கடலரசன் றேன்றி வரங்களினிதருளும்"
(திருவானைக்காப்புராணம்)

### பாலைநிலக்கடவுள்

பாலைக்குத் தெய்வங்கள் சூரியன், காளி, அக்கினி (**தொல்காப்பியம்**, அகத்திணையியல், 5ஆம் சூத்திர வுரை): 'பருதியஞ் செல்வனும் திகிரியஞ் செல்வியும் பாலைக்குத் தெய்வம்' என்பர் **அடியார்க்கு நல்லார்**. **கலிங்கத்துப் பரணி** போன்ற பரணிகளிற் பாலைநிலத்துக் குத் தெய்வம் காளி என்பதும் அத்தெய்வத்தின் விசேடங் களும் மிகவிரிவாகச் சொல்லப்பட்டிருக்கின்றன.

### விநாயகர்

பழைய தமிழ்ச்சுவடிகளில் நூலின் தொடக்கத்தில் 'உ' என்னும் வடிவமுள்ள பிள்ளையார்சுழியென்ற ஓரெழுத்து பண்டைக் காலந் தொட்டே எழுதப்பெற்று வருதல் வழக்கமாக இருத்தலின், விநாயகக் கடவுளை வழி படுமுறை முற்காலந்தொட்டே தமிழ்நாட்டிலிருந்து வந்த தாக நன்கு தெரிந்தாலும் இப்பொழுது கிடைக்கும் சங்க நூல்களில் இவரைப் பற்றிய செய்தியொன்றும் எனக்குக் கிடைக்கவில்லை.

"தன்றே ளுன்கி னென்றுகைம் மிகூஉம்
களிறுவளர் பெருங்கா டாயினும்
ஒளிபெரிது சிறந்தன் றளியவென் னெஞ்சே"

என்னும் ஆசிரியப்பாவொன்று மிகப்பழைய சுவடிகளின் முதலிற் காணப்படுகின்றது.

## பரமசிவன்

**ஐங்குறுநூறு, கலித்தொகை, அகநானூறு, புறநானூறு** ஆகிய நூல்களின் முதலில் பரமசிவனுடைய துதிகள் காணப்படுகின்றன. அதிகமான் என்னும் வள்ளல் தனக்கு நெல்லிக்கனி ஈந்ததைப் பாராட்டி ஔவையார் சொன்ன பாடலில்,

"நீல மணிமிடற் றொருவன் போல
மன்னுக பெரும நீயே" (புறநானூறு, 91)

என்று சொல்லியிருக்கிறார்.

**மலைபடுகடாத்தில்** காரியுண்டிக்கடவுள் என்னும் சிவபெருமான் கோயில் நவிரமென்னுமலையில் இருந்ததாகச் சொல்லப்பட்டிருக்கிறது. **புறப்பொருள் வெண்பாமாலை**யில் பாசூர் என்ற சிவக்ஷேத்திரம் சொல்லப்பட்டிருக்கிறது. **மணிமேகலை**யில் இந்திரவிழாவெடுத்தபோது,

"நுதல்விழி நாட்டத் திறையோன் முதலாப்
பதிவாழ் சதுக்கத்துத் தெய்வ மீறாக"

என்று ஒவ்வொரு கடவுளுக்கும் சிறப்புச் செய்யும்படி சொல்லி யிருப்பதில், பரமசிவன் கோயிலையே முதலில் வைத்துச் சொல்லி யிருக்கிறார். பௌத்த நூலாகிய மணிமேகலையில் இங்ஙனம் கூறியிருப்பது கவனிக்கத்தக்கது. **சீவகசிந்தாமணி**யில் நாமகளிலம்பகத்தில்,

"போகம் மீன்ற புண்ணிய னெய்த கணையேபோல்
மாகம் மீன்ற மாமதியன்னான் வளர்கின்றான்"

என்ற செய்யுளில், மறைந்து வளர்ந்த சீவகனுக்கு மறைந்து வளர்ந்த கண்ணனை உவமானம் கூறவந்த திருத்தக்கதேவர் பரமசிவனுக்குத் திருமால் திரிபுர சங்காரகாலத்தில் அம்பாக இருந்ததைக் குறிப்பித்திருக்கிறார். சிலப்பதிகாரத்தில்,

"பிறவா யாக்கைப் பெரியோன் கோயில்"

என்று பரமசிவன் கோயில் மற்றக் கோயில்களுக்கு முன்னே கூறப்பட்டிருகிறது. இன்னும், இவர் முது முதல்வன், ஆலமர்கடவுள், இறைவனென்றும் கூறப்படுவர். இவர் திரிபுரத்தையும் காலனையும் வென்றமை, கொடுகொட்டி பாண்டரங்கம் காபால மென்னும் இவருடைய ஆடல்கள், பிறையையும் கங்கையையுமணிந்த சடை, திருநீறு, நீர்க்கரகம், மழுப்படை, சூலப்படை, நீலகண்டம், உமையொருபாகம், நெற்றிக்கண், புலித்தோல், கொன்றைமாலை, ஏற்றூர்தி, ஏற்றுக்கொடி, திருக்கோயில், அதனை அரசர் முதலியோர் வணக்கத்துடன் வலம் வருதல், பூசை, விழா முதலிய இவர்க்குரியனவெல்லாம் சங்கச்செய்யுட்களில் அங்கங்கே கூறப்பெற்றுள்ளன. ஆனுலும் பின்னுள்ள பழைய வெண்பாவை மட்டும் தெரிவியாமலிருக்க முடியவில்லை;

" கண்ணவனை யல்லது காணு செவியவன
தெண்ணருஞ்சீ ரல்ல திசைகேளா—அண்ணல்
கழலடி யல்லது கைதொழா வஃதால்
அழலங்கைக் கொண்டான்மாட் டன்பு."

இச்செய்யுள், சேரமான் பெருமாளுயனுர் அருளிச் செய்த **ஆதியுலாவில்** எடுத்தோதிப்பாராட்டப்பட்ட பெருமையும் தொன்மையும் வாய்ந்தது.

உமை, திருமகள், கலைமகள் என்பவர்களைப் பற்றிய செய்திகள் சங்கநூல்களிற் சில இடத்துக் காணப்படுகின்றன. **மணிமேகலையிற்** கூறப்பட்டுள்ள '**சிந்தாதேவி கோயில்**' என்பது கலைமகள் கோயிலே. திருமகளியல்பு, **புறநானூற்றில்**, ''விட்டோரை விடாஅ டிருவே, விடாதோரிவள் விடப்பட் டோரே'' என்று கூறப்பெற்றுள்ளது. பற்றுவிட்டோரைத் திருமகள் நீங்காள்; பற்றுவிடாதவரை அவள் பிரிந்துவிடுவாள் என்பது இதன் பொருள்.

### பிரமன்

ஒரு வீட்டில் துக்கமும் ஒரு வீட்டில் சந்தோஷமும் நிகழ்ந்ததைப்பற்றித் தெரிவிக்கும் **புறநானூற்றுச்** செய்யு

ளொன்றில், 'பிரம்மா ஏன் இப்படிச் செய்கிருர்?' என்று கூறியிருப்பதால், பிரம்மாவும் சங்கச் செய்யுட்களில் சொல்லப்பட்டிருப்பது விளங்கும். அச்செய்யுள்,

" ஓரி னெய்தல் கறங்க வோரில்
ஈர்ந்தண் முழவின் பாணி ததும்பப்
புணர்ந்தோர் பூவணி யணியப் பிரிந்தோர்
பைத லுண்கண் பனிவார் புறைப்பப்
படைத்தோன் மன்றவப் பண்பி லாளன்
இன்னு தம்மவிவ் வுலகம்
இனிய காண்கித னியல்புணர்ந் தோரே " (194).

சோழநாட்டில், கும்பகோணத்திலும், நாலூரென்ற ஊரின் பக்கத்திலும் பிரமதேவனுக்குக் கோயிலுண்டு.

## சதுக்கப்பூதம்

**சதுக்கப்பூத** மென்பதொன்று காவிரிப்பூம்பட்டினத்தில் இருந்ததாகச் **சிலப்பதிகாரத்தாலும் மணிமேகலையாலும்** தெரிகிறது. முசுகுந்தன் தேவர்களுக்கு உதவி செய்த போது இந்திரன் இந்தப் பூதத்தை முசுகுந்தனுடன் அனுப்பினுன். முசுகுந்தன் அதைக் காவிரிப்பூம் பட்டினத்திற் பிரதிஷ்டை செய்வித்தான்.

" தவமறைந் தொழுகுந் தன்மையி லாளர்
அவமறைந் தொழுகும் அலவைப் பெண்டிர்
அறைபோ கமைச்சர் பிறர்மனை நயப்போர்
பொய்க்கரி யாளர் புறங்கூற் ருளரென்
கைக்கொள் பாசத்துக் கைப்படு வோரெனக்
காத நான்குங் கடுங்குர லெடுப்பிப்
பூதம் புடைத்துணும் பூத சதுக்கமும்" (128—34)

என்று **சிலப்பதிகாரத்தி**லுள்ள இந்திரவிழவூரெடுத்த காதையில் சதுக்கப் பூதத்தின் இயல்பைத் தெரிவித்திருக் கிருர். சதுக்கப்பூதமாவது நான்கு தெருக்கள் கூடுமிடத் திலுள்ள ஒரு தெய்வம்.

இது போன்ற ஒரு தெய்வம் வஞ்சிமாநகரிலும் இருந்ததென்று,

" சதுக்கப் பூதரை வஞ்சியுட் டந்து
மதுக்கொள் வேள்வி வேட்டோ னையினும் " (28: 147—8)

என்னும் **சிலப்பதிகாரப்**பகுதியாலும் கருவூர்ச்சதுக்கப் பூதனரென்ற ஒரு புலவர் பெயராலும் தெரிகிறது.

தவவேடந் தாங்கித் தீயவழியில் நடப்போர், நெறி தவறி நடக்கும் பெண்டிர், அரசனுக்குத் துரோகம் செய்யும் அமைச்சர், பிறர் மனைவியை விரும்புவோர், பொய்ச்சாட்சி சொல்லுவோர், புறங்கூறுவோர் ஆகிய இவர்களைச் சதுக்கப்பூதம் அறைந்துண்ணும். பிறர்மனை நயப்போர் என்பதனால் தீய எண்ணம் கொண்டாலே பூதம் புடைத்துண்ணுமென்பது விளங்கும். இது சம்பந்தமாக **மணிமேகலை**யிற் சொல்லியுள்ள ஒரு கதை இங்கே கவனிக்கத்தக்கது. மிகுந்த கற்புடையவளாகிய ஒரு பதிவிரதை, காவிரியில் நீராடிவிட்டுத் தன் மனைக்குப் போய்க்கொண்டிருக்கையில் அரசன் மகன் அவளைக் கண்டு, ''நீ இங்கே வா'' என்றான். பத்தினியாகிய தான் பிறன் நினைப்பில் புகுந்ததைப் பொறாமல் அவள் இந்தச் சதுக்கத் தெய்வத்தின் முன்னேபோய், ''இது வரையில் யான் ஒரு குற்றமும் செய்தறியேன்; ஆனாலும் பிறனுடைய நெஞ்சில் நான் புகுந்தமையால் அபுத்தி பூர்வமாக யான் ஏதேனும் குற்றம் செய்திருக்கலாமென்று தோன்றுகிறது. ஆதலால் என்னைக் கொன்றுவிடு'' என்று முறையிட்டாள். ''தெய்வந்தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள், பெய்யெனப் பெய்யு மழை'' (குறள்) என்று பெரியோர் சொல்லியிருப்பதை அத்தெய்வம் அவளுக்கு நினைப்பூட்டிக் கொழுநனையே தெய்வமாகக் கொண்டொழுகும் பெண்டிர் பிறர் நினைப்பில் புகாரென்றும், அந்தப்பெண் கணவன் அனுமதியின்றிக் கோயில்கள் முதலிய இடங்களுக்குப் போய்வந்தவளாகையால் பிறனுடைய நினைப்பிற் புகாது தடுக்கும் வல்லமை அவளுக்கில்லையென்றும், ஆயினும் அரசன்மகன் தவறிழைத்தவனாதலால் விரைவில் அவன் தண்டிக்கப்படுவானென்றும் சொல்லியனுப்பியது. அப்படியே பிறகு நடந்தது.

### பரசுராமர்

பரசுராமர், 'மழுவாள் நெடியோன்' என்று சங்கச் செய்யுளில் வழங்கப்படுகிறார். காசியபருக்கு அவர் பூமியைக்கொடுத்த இடம் மலை நாட்டில் ''இருஞாலக் கொடை' என்று பெயர்பெற்றிருக்கின்றது. அங்கும் வேறு பல இடங்களிலும் பரசுராமருக்குக் கோயில்கள் உள்ளன.

### பலராமனும் கண்ணனும்

சேரனும் சோழனும் ஒருசமயஞ் சேர்ந்திருந்த தானது பலராமனும் கண்ணனும் சேர்ந்திருந்தாற்போல் இருந்ததென்று **புறநானூற்றில்** கூறப்பட்டிருக்கிறது. **பரிபாடலில்,** சோலைமலையில் கண்ணனும் பலராமனும் கோயில் கொண்டெழுந் தருளியிருந்ததாகச் சொல்லப் பட்டிருக்கிறது. ஆனால் இப்பொழுது அந்தச்சந்நிதி காணப்படவில்லை.

பரமசிவன், பலராமன், கண்ணன், முருகக் கடவு ளென்னும் இந்நால்வரும் ஒருங்கு கூறப்பெற்றுள்ளார்.

"ஏற்றுவல னுயரிய வெரிமரு ளவிர்சடை
மாற்றருங் கணிச்சி மணிமிடற் றோனும்
கடல்வளர் புரிவளை புரையு மேனி
அடல்வெந் நாஞ்சிற் பனைக்கொடி யோனும்
மண்ணுறு திருமணி புரையு மேனி
விண்ணுயர் புட்கொடி விறல்வெய் யோனும்
மணிமயி லுயரிய மாறா வென்றிப்
பிணிமுக வூர்தி யொண்செய் யோனுமென
ஞாலங் காக்குங் கால முன்பில்
தோலா நல்லிசை நால்வ ருள்ளும்" (56: 1—10)

என்பது **புறநானூறு.**

"முக்கட் பகவ னடிதொழா தார்க்கின்னா
பொற்பனை வெள்ளையை யுள்ளா தொழுகின்னா
சக்கரத் தானை மறப்பின்னா தாங்கின்னா
சத்தியான் றடொழா தார்க்கு"

என்பது **இன்னா நாற்பது.**

### இராமர்

இராமருடைய பெருமை சங்கச் செய்யுட்களிற் பல இடத்தும் காணப்படுகின்றது. சங்கத்தில் இராமாயணம் இயற்றப்பெற்று வழங்கி வந்ததாகச் தெரிதலின் அவரைப்பற்றி நான் அதிகஞ்சொல்ல வேண்டுவதில்லே. **புறநானூற்றில்** ஓர் அரசனே ஒரு புலவர், ''இராவணன் வசமிருந்த நாட்டை விபீஷணனுக்கு இராமர் கொடுத்து விட்டதுபோல் நீ சத்துருக்கள் வசமாயிருக்கிற நாடு களேத் துணிந்து இரவலர்க்குக் கொடுத்துவிடுவாய்'' என்று பாராட்டியிருக்கிருர்.

### காலன்

இவன் 'காலன் என்னும் கண்ணிலி' என்று சொல் லப்பட்டிருக்கிருன்; கூற்றம் என்றும் வழங்கப்படுவான்; சிறந்த உபகாரிகள் இறந்தபொழுது, பிரிவாற்ருமல் வருந்திய சில பெரியோர் பாடல்களால் இவனுண்மை வெளியாகின்றது. இக்கருத்தைத் தொடர்ந்து, ''கரி வேண்டுமாளுல் கற்பகத்தை வெட்டலாமா? நல்ல உப காரிகளேக் காலன் கொண்டுபோய் விடுகிருனே'' என்று பிற்காலத்தவரும் கூறியிருக்கிருர்.

### காமன்

முன்ஞளில் மன்மதன்கோயில் பற்பல இடங்களில் இருந்தது. காமன்கோட்டம் என்று அக்கோயில் சொல் லப்படும்.

திருமாலேப் பெறவேண்டுமென்று சூடிக்கொடுத்த நாச்சியார் மன்மதனேத் துதித்த ஒரு பதிகம் **நாச்சியார் திருமொழியி**ற் காணப்படுகிறது.

கன்னிப்பெண்கள் நல்ல கணவனேப்பெறக் காமனே வழிபட்டுத் துதிப்பார். காமன் கோட்டத்தில் விவாகம் செய்வதும் வழக்கம். சுரமஞ்சரி என்னும் கன்னிப்பெண் காமன்கோயிலில் தனது நினேப்பைச்சொல்லி, ''சீவ

கனைத் தருவாயாக'' என்று பிரார்த்தனை செய்தாள். காமனது விக்கிரகத்துக்குப் பின் மறைந்திருந்த சீவக னுடைய தோழன் அக்கடவுள் சொன்னதுபோல் ''தந்தேன்'' என்றான். அருகில் மறைந்திருந்த சீவகன் வெளிப்பட்டு அவளை மணந்துகொண்டதாகச் **சிந்தா மணி**யிற் காணலாம்.

" தாமரைச் செங்கட் செவ்வாய்த் தமனியக் குழையி னோயோர்
காமமிங் குடையேன் காளை சீவக னகலஞ் சேர்த்தின்
மாமணி மகர மம்பு வண்சிலைக் கரும்பு மான்றேர்
பூமலி மார்ப வீவ லூரொடும் பொலிய வென்றாள்'' (2057)

**பெருங்கதை**யில் உத்தம ஸ்திரீயாகிய பத்மாவதி யின் கதையாலும் காமன் கோட்டமுண்மையும் அவனை அவள் வழிபட்டுப் பேறு பெற்றமையும் விளங்கும்.

### சூரியன்

சூரியன் சங்கச் செய்யுட்களில் பலபடப் பாராட்டப் பெற்றுள்ளான். காவிரிப்பூம்பட்டினத்தில் சூரியன் கோயில் இருந்ததாக, ''உச்சிக்கிழான் கோட்டம்'' என்ற (9:11) **சிலப்பதிகாரப்**பகுதி விளக்குகின்றது. கும்ப கோணத்தில் ஸ்ரீ நாகேசுவரசுவாமி கோயிலிலும், பேரளத் திற்கருகிலுள்ள திருமீயச்சூரில் இருக்கும் சிவாலயத் திலும் சூரியனார் கோயிலென்னுமூரிலும் சூரியனுடைய ஆலயங்கள் இருக்கின்றன.

### சந்திரன்

சந்திரனுக்கும் பண்டைக்காலத்தில் ஆலயமிருந்த தாகத் தெரிகிறது. ''நிலாக்கோட்டம்'' என்று **சிலப்பதி காரத்**துள்ள தொடர் மொழியாலும் இது விளங்கும். பிறையைத் தொழுவது சில தேசங்களில் இன்றும் நடை பெறுகிறது. பயிர்களுக்கு அவன் அதிபனாகையால் எருவை முன்னே இறைத்து அவனைத் தொழுவது வழக்க மென்று அகப்பொருள் இலக்கணத்தால் தெரிகிறது. கன்னிப் பெண்கள் பண்டைக் காலத்தில் சந்திரனைத் தொழுது வந்தனர்.

மதுரையில் கன்னி, கரியமால், காளி, ஆலவாய் (பரமசிவன்) முதலானோர் கோயில்கள் இருந்தனவென்று **கலித்தொகை, கல்லாடம், வேம்பத்தூரார் திருவிளையாடல்** முதலியவற்றால் விளங்கும். **சிலப்பதிகாரத்தில்,**

"அமரர் தருக்கோட்டம் வெள்ளானைக் கோட்டம்
புகர்வெள்ளை நாகர்தங் கோட்டம் பகல்வாயில்
உச்சிக் கிழான் கோட்ட மூர்க்கோட்டம் வேற்கோட்டம்
வச்சிரக்கோட்டம் புறம்பணையான் வாழ்கோட்டம்
நிக்கந்தக் கோட்டம் நிலாக் கோட்டம் புக்கெங்கும்
தேவிர்கா ளெம்முறுநோய் தீர்மென்றுமேவி" (9: 9—14)

என்று கூறியிருத்தலால், கற்பகதரு, வெள்ளையானை, பலராமர், சூரியன், கைலாயம், வேலாயுதம், வச்சிராயுதம், ஐயனுர், நிக்கந்தன் (அருகதேவன்), சந்திரன் இவர் களுக்கு ஆலயமிருந்தமை புலப்படும்.

## நகரத் தெய்வம்

மதுராபதி என்பது மதுரைநகரத் தெய்வத்தின் பெயர். கோவலன் வெட்டுண்டதால் கோபமடைந்த கண்ணகிமுன் நேரில்வர அது பயந்து பின்புறமாக வந்து கோவலன் கண்ணகி ஆகிய இருவரின் பழம் பிறப்பை உணர்த்தி அவளுடைய கோபத்தைத் தணித்ததாகத் தெரிகிறது. காவிரிப்பூம்பட்டினத்தில் அந்நகரத் தெய்வ மாக, 'சம்பாபதி' என்று ஒன்று இருந்ததாக **மணி மேகலை** தெரிவிக்கின்றது; இப்படியே பெரிய நகரம் ஒவ்வொன்றற்கும் ஒவ்வொரு தெய்வமிருந்து அதனைப் பாதுகாத்து வந்ததாகப் பழைய நூல்கள் கூறுகின்றன.

## பத்தினிக் கடவுள்

பதிவிரதையைப் பத்தினிக்கடவுள் என்பர். 'மாஸதி கற்கள்' பதிவிரதைகளை உத்தேசித்து அமைக்கப் பட்டவை; மாஸ்திகல் என்று இக்காலத்தே சிதைந்து வழங்குகின்றது. மைஸுர் சமஸ்தானத்தில் மிகுதியாகக் காணலாம்; மங்களூர் என்று சொல்லப்படும் மங்களா புரத்திற்கு அப்பெயர் கண்ணகியால் வந்ததே; கண்ண

கிக்கு மங்கலாதேவி என்று ஒரு பெயருண்டு. கண்ண னூரில் கண்ணகி கோயில் உள்ளது. மலை நாட்டிலும் யாழ்ப்பாணம் முதலியவற்றிலும் கண்ணகிக்குப் பல கோயில்கள் உள்ளன. நாகபட்டினத்திற்கு அருகில் பத்தினிகோயிலென்றே ஓரிடம் இருக்கின்றது.

## வீரன்

யுத்தத்தில் பகைவர் கவர்ந்த பசுக்களை மீட்டு யுத்தஞ் செய்து இறந்த வீரர்கள் தெய்வமாகக் கொண்டாடப்படு வார்கள். அவர்கள் இறந்த இடத்தில் அவர்கள் பெய ரெழுதிய கல்லை நட்டு மாலைசூட்டி வழிபடுவது வழக்கம். அது வீரக்கல்லென்று கூறப்படுவதன்றி வீரனென்னும் தெய்வமாகவும் வழிபட்டு வரப்பெறுகின்றது. அவர்க ளுடைய உருவம் போன்ற ஒரு சிலை செய்வித்து அதனை வழிபடுதலுமுண்டு; அதற்கு உருக்கல்லென்று பெயர்.

கடவுளின் இருப்பிடங்கள் **திருமுருகாற்றுப்படை** முதலியவற்றிற் சில சொல்லப்பட்டிருக்கின்றன.

"சதுக்கமுஞ் சந்தியும் புதுப்பூங் கடம்பும்
மன்றமும் பொதியிலுங் கந்துடை நிலையினும்"

என்னும் **திருமுருகாற்றுப்படை**யையும்

"ஆலமுங் கடம்புநல் யாற்று நடுவும்
கால்வழக் கறுநிலைக் குன்றமும் பிறவும்"

என்னும் **பரிபாடலை**யும் அவற்றின் குறிப்பையும் பார்க்க.

## வேறு தெய்வங்கள்

இல்லுறை தெய்வம், வருணப்பூதங்கள், நீரரமகளிர், வரையர மகளிர், காட்டரமகளிர், கொல்லித்தெய்வ முத லாகப் பலதெய்வங்கள் சங்கநூல்களிற் கூறப்படுகின்றன.

**கந்துகள்** (தம்பங்கள் அல்லது கந்தங்கள்) சில சில விடங்களிலுள்ளாரால் தத்தமக்குரிய தெய்வங்களாக வழி படப்பெற்று வந்தன. அவற்றிற்காக அமைக்கப் பெற்ற விடம் அம்பலமென்று வழங்கப்படும். தம்மால் வெல்லப் பட்ட பகையரசர்களுடைய உரிமை மகளிரைக்

கொணர்ந்துவந்து அங்கே இருக்கும்படி செய்து அத் தெய்வங்களுக்கு வழிபாடு செய்து வரும்படி அரசர்கள் செய்வித்தார்களென்பதும் அந் நூல்களால் தெரிகின்றது.

# IV. சங்க காலத்துப் புலவர்கள்

## ஆண்பாலார்

'புலவர்' என்ற சொல்லுக்குப்பொருள் அறிவுடையோரென்பது; புலம்-அறிவு. இவர்கள் பெயர் பழைய நூல்களிலும் உரைகளிலும் நல்லிசைப் புலவரென்றும் சான்ருேரென்றும் காணப்படும்; 'இவர் செய்த செய்யுளை **நல்லிசைப் புலவர்** செய்த ஏனைச் செய்யுட்களுடன் சங்கத்தார் கோவாமல் நீக்குவர்; அங்ஙனம் நீக்காமல் கோத்தற்குக் காரணம் 'ஆனந்தக் குற்றமென்பதொரு குற்றம். இச்செய்யுட்கு உறுமையானென்று உணர்க......... .........அகத்தியனும் தொல்காப்பியனும் இக்குற்றம் கூறுமையிற் சான்ருேர் செய்யுட்கு இக்குற்ற முண்டாயினும் கொள்ளாரென மறுக்க' (**மலைபடுகடாம்**, அடி 145-நச்சினுர்க்கினியர் உரை) என்பதனுலுணர்க.

சான்ருேர்—பல குணங்களாலும் நிறைந்தோர்;

" அன்பு நாணொப்புரவு கண்ணேட்டம் வாய்மையொ
டைந்துசால் பூன்றிய தூண்",
" கொல்லா நலத்தது நோன்மை பிறர்தீமை
சொல்லா நலத்தது சால்பு",
" நவில்தொறு நூனயம் போலும் பயில்தொறும்
பண்புடையாளர் தொடர்பு" (குறள், 983-4, 783)

என்பவை இங்கே அறியற்பாலன; இவர்கள்பால் இச் சிறந்த குணங்களைக் கண்டறிந்தே திருவள்ளுவர் மேற் கூறிய பாடல்களை இயற்றினர் போலும். இவர்கள்பால் அமைந்திருந்த உத்தம குணங்கள் யாவராலும் அளவிடப் படுவனவல்ல;

"உவப்பத் தலைக்கூடி யுள்ளப் பிரிதல்
அனைத்தே புலவர் தொழில்" (குறள், 394)

என்பதும் இவர்களுடைய இயல்பே. எத்தனையோ நூற்றுண்டுகளுக்கு முன்னர் இவர்களியற்றிய நூல்களிலுள்ள பாடல்கள் முற்றும் அகப்படாவிடினும் கிடைத்தவைகள் பிற்காலத்துக் கவிகளுடைய பாடல்களைக் காட்டிலும் மிக உயர்வுற்றுப் புகழ்பெற்று விளங்குதலையும் பௌதிகப் பொருள்கள் அழிந்தே போதலையும் உற்றுநோக்குமிடத்து,

"கலைமகள் வாழ்க்கை முகத்த தெனினும்
மலரவன் வண்டமிழோர்க் கொவ்வான்-மலரவன் செய்
வெற்றுடம்பு மாய்வனபோன் மாயா புகழ்கொண்டு
மற்றிவர் செய்யு முடம்பு"

என்று மிக அழகாக **ஸ்ரீ குமரகுருபர முனிவர்** பாடிய அருமைச் செய்யுள் ஞாபகத்திற்கு வருகின்றது; 'தன் முகத்தில் இடைவிடாமல் கலைமகள் வாழப்பெற்றாலும் பிரமன் புலவரையொவ்வான்; ஏனெனின் பிரமனாற் படைக்கப்படும் வெற்றுடம்புகள் அழிந்தே விடும்; புகழைப் பெறுவனவுமல்ல; புலவர்களியற்றும் கவிகளாகிய பொருள் பொதிந்த உடம்புகள் காலவடைவில் புகழைப்பெற்று அழியாமல் விளங்கும்' என்பது இச் செய்யுளின் பொருள்.

"நூற்றுப்பத் தாயிரம் பொன்பெறினு நூற்சீலை
நாற்றிங்க ளுக்கு ணைந்துவிடும்-மாற்றலரைப்
பொன்றப் பொருதடக்கைப் போர்வே லகளங்கா
என்றுங் கிழியாதென் பாட்டு",

"காவல ரீகை கருதுங்காற் காவலர்க்குப்
பாவலர் நல்கும் பரிசொவ்வா-பூவினிலை
ஆகாப் பொருளை யபயனளித் தான்புகழாம்
ஏகாப் பொருளளித்தேன் யான்"

என்னும் பெரியோர்களுடைய பாடல்கள் இதனைப் புலப் படுத்தும்.

பல நூற்றுண்டுகளுக்கு முன் இருந்த இவர்கள் பாடல்கள் வரவரக்குறைந்தும் சிதைந்தும் சுடச்சுடப் பொன்ஒளி விடுவதுபோல மிக அழகுற்று விளங்கு

கின்றன. இவர்களுடைய பெருமையையாவது செய்யுட்களின் சுவையையாவது பிறநலங்களையாவது எடுத்துக் கூறுவதற்கு ஒரு சிறிதும் வல்லேனல்லேன். ஆனாலும் சொல்லவேண்டிய சமயம் தக்கவர்களாற் கிடைத்தமையின் சொல்லி என் நாவைத்தூய்மை செய்து கொள்வேன்.

சங்க காலத்துப் புலவர்கள் ஒரு காலத்தினரல்லர்; ஒரு தேயத்தாரல்லர்; ஒரு சாதியாரல்லர், ஒரு குலத்தினரல்லர்; ஒரு தொழிலினரல்லர்; ஒரு மதத்தினரல்லர்; தமிழ் நாட்டில் முதலில் தாமிருந்தவிடத்திலேயே யிருந்து அங்குள்ள பெரியோரிடம் முறையே நூல்களைக்கற்று அப்பால் மதுரைக்கு வந்து,

"பொன்னுந் துகிரு முத்து மன்னிய
மாமலை பயந்த காமரு மணியும்
இடைபடச் சேயவாயினுந் தொடைபுணர்ந்து
அருவிலை நன்கல மமைக்குங் காலை
ஒருவழித் தோன்றியாங் கென்றுஞ் சான்றோர்
சான்றோர் பால ராப" (புறநா. 218)

என்பதற்கேற்ப அங்கேயுள்ள புலவர்களோடு நட்புற்று அளவளாவி நூல்களை ஆராய்ந்து தாமும் நல்லிசைப் புலவர்களாகித் தத்தமிடஞ் சென்றார்களென்று தெரிகின்றது.

பழையபாடல்களிலும் உரைகளிலும் சங்கமிருந்து தமிழாராய்ந்தார் என்று இவர்கள் கூறப்படுதல் இதனைப் புலப்படுத்தும். இவர்கள் வைத்தியம், கணிதம், சிற்பம், இசை முதலிய பல கலைகளுள் தத்தமக்கியன்றவற்றில் நல்ல பயிற்சியுள்ளவர்களென்றும் செல்வம் பெறுதலைக் கருதியே கற்றவர்களல்லரென்றும் பிழைப்பிற்குரிய வழி ஒவ்வொருவருக்கும் வேறு வேறிருந்ததென்றும் அச்செய்யுட்களாலும் அவற்றைச் சார்ந்துள்ள வாக்கியங்களாலும் தெரிய வருகின்றன.

சிற்ப முதலியவற்றுள் இன்னகலையில் இன்னார் பயிற்சியுள்ளவரென்பதை இவர்களியற்றிய செய்யுட்களே தெரிவிக்கும். ஒவ்வொரு பொருளின் இயற்கையை

நன்ருக அறிந்து நுகர்ந்த பின்பு செய்யுள் செய்வர். ஒன்பது சுவைகளுள் இவர்கள் நுகருஞ் சுவையே செய்யுளாக வெளிப்பட்டதென்று சொல்லலாம். செய்யுளியற்றுவதில் யாதோரிடர்ப்பாடும் இவர்களுக்கு இருந்ததாகத் தெரியவில்லை. அவற்றில் சொற்கள் எழுத்தளவிற் சுருங்கிப் பொருள் விரிந்திருத்தலைப் பரக்கக் காணலாம். சங்கம் நன்கு நடைபெறும்படி பாதுகாத்த பாண்டிய அரசர்களும் சங்கப் புலவர்களுடன் ஒப்ப இருந்து தமிழாராய்ந்தாரென்றும் கவிபாடினுரென்றும் சேர சோழர்களிலும் அங்ஙனமே கல்வி கேள்விகளிற் சிறந்தவர்களாகி வந்திருந்து தமிழாராய்ந்தோர் பலரென்றும் அவரவர் பாடல்கள் முதலியவை தெரிவிக்கின்றன.

இவர்கள் பாடல்களில் ஆனி, கலவம், கோவலர், மேதை, தசம், திசை, பலம், மணி, வாதி முதலிய சில வட சொற்களே காணப்படுதலால், இவர்கள் காலத்தில் வடசொற்கள் பெரும்பாலும் தமிழ்மொழியிற் கலக்கவில்லையென்று சொல்லலாம். நாளடைவில் இங்கே வந்தனவாகிய வடநூல்களின் கலப்பாலும் தெய்வ வழிபாட்டிற்குரிய வகையாலும் சில சங்கப்புலவர்களாற் சில வட நூல்கள் பெயர்த்தியற்றப் பெற்றமையாலும், வேறு கலா சம்பந்தத்தாலும் வட சொற்களும் கருத்துக்களும் இடையிடையே விரவிப் பிற்காலத்துப் பெருகுவனவாயின. அங்ஙனம் கலப்பதும் பெருகுவதும் ஒவ்வொரு மொழிக்கும் இயல்பென்பது பலரும் அறிந்ததே. இராமாயணமும் பாரதமும் சங்ககாலத்திற் செய்யுள் வடிவமாக மொழிபெயர்க்கப்பட்டு வழங்கிவந்தன என்பதைப் பல பழைய உரைகளில் மேற்கோள்களாகக் காணப்படும் அந்நூற் செய்யுட்கள் தெரிவிக்கின்றன.

தனித் தனியே இவர்களால் இயற்றப்பெற்ற செய்யுட்கள் **பத்துப்பாட்டு, எட்டுத் தொகை** முதலியனவாகச் சான்ருேரால் தொகுக்கப்பெற்றன. **பதினெண் கீழ்க் கணக்கும்** இத்தொகை நூல்களைச் சேர்ந்தனவே;

தொகுப்பித்தோர் பாண்டியர் முதலியோர்; **குணநாற்பது, மூவடி முந்நூறு, சிற்றட்டகம், முத்தொள்ளாயிரம், ஆசிரியமாலை, தகடூர் யாத்திரை** முதலிய பழைய நூல்களிலிருந்து சில சில பாடல்களே பழைய உரைகளில் மேற்கோள்களாகக் காணப்படுகின்றன.

மேற்கூறியபடி தனிப்பாடல் ஒவ்வொரு நூலாகத் தொகுக்கப் பெற்றதற்குக் காரணம் பாட்டு முதலியவை யென்பர்; பாட்டால் தொகுக்கப்பெற்றவை **கலித்தொகை, பரிபாடல்** என்பன; பொருளால் தொகுக்கப்பெற்றவை **அகநானூறு, புறநானூறு;** இடத்தால் தொகுத்தது **களவழி நாற்பது;** காலத்தால் தொகுத்தது **கார்நாற்பது;** தொழிலால் தொகுத்தவை **ஐந்திணையைம்பது** முதலியன; அளவால் தொகுக்கப்பட்டவை **குறுந்தொகை, ஐங்குறுநூறு.**

இந்த நல்லிசைப் புலவர்களுள்ளே அரசர்பால் மந்திரக் கிழமை பெற்று விளங்கியவர்களுமுண்டு. மந்திரிகளுக்குக் கலைக்கண்ணுளரென ஒரு பெயருண்டன்றே! இப்புலவர்களுள்ளே சிலர் சிலருடைய இயற்பெயர் விளங்கவில்லை. ஊர் முதலியவற்றாலும் பிறகாரணங்களாலும் சிலர் சிலர் பெயர்பெற்றுள்ளார்.

இவர்களுள் ஆலங்குடி வங்கனர், ஆலத்தூர் கிழார், ஆவூர் கிழார், காரி கிழார், தாமப்பல் கண்ணனார், இடைக்காடனார், கல்லாடனார் முதலியோர் ஊரால் பெயர் பெற்றோர்.

உறுப்பாற் பெயர்பெற்றோர் நெடுங்கழுத்துப் பரணர், நெட்டிமையார், நரிவெரூஉத்தலையார், பரூஉ மோவாய்ப்பதுமனார், காரிக்கண்ணனார், குண்டுகட் பாலியாதன் முதலியோர். இப்பெயர்களுள் பரணர் பதுமனாரென்பன அப்புலவர்களின் இயற்பெயர்கள்.

ஊராலும் உறுப்பாலும் பெயர் பெற்றோர் உறையூர் ஏணிச்சேரி முடமோசியார், ஐயூர் முடவனார் முதலியோர்.

தொழிலாற் பெயர்பெற்றோர் தமிழக்கூத்தனார், முது கூத்தனார், கணக்காயனார், தேவகுலத்தார், வண்ணக்கன், இளம்பொன்வாணிகன், பொன்வாணிகன், உலோச்சனார் முதலியோர்.

ஊராலும் உறுப்பாலும் தொழிலாலும் பெயர் பெற்றோர் தங்கால் முடக்கொல்லனார் முதலியோர்.

நாண்மீனாற் பெயர்பெற்றோர் மூலங்கிழார் முதலியோர்.

தாம் இயற்றிய செய்யுட்களில் அமைத்துள்ள இனிய ஒருமொழி தொடர்மொழிகளின் நயத்தாற் பெயர் பெற்றோர் **பதடிவைகலார், கல்பொருசிறுநுரையார், தேய்புரிப் பழங்கயிற்றினார், வில்லகவிரலினார், தொடித் தலை விழுத்தண்டினார், ஓரேருழவர்**, **அணிலாடு முன்றிலார், கங்குல் வெள்ளத்தார், கவைமகன், ஓரம்போகியார், ஓரிற்பிச்சையார், கூகைக்கோழியார், காக்கை பாடினியார் நச்செள்ளையார், காலெறிகடிகையார், குப்பைக்கோழியார், குறியிறையார், செம்புலப்பெயல்நீரார், தனிமகன், தும்பி சொகினனார், நெடுவெண்ணிலவினார், பக்குடுக்கை நன்கணியார், மீனெறி தூண்டிலார், விட்டகுதிரையார்** முதலியோர்.

தந்தை பெயரோடு சார்த்திய பெயரினர் **மதுரைக் கணக்காயர்** மகனார் **நக்கீரனார், சேந்தம் பூதனார்** முதலியோர்.

சிறப்புப் பொருளைத் தரும் 'ந' என்னும் பட்டத்தைச்சார்ந்த பெயரினர் நக்கீரனார், நப்பாலத்தனார், நத்தத்தனார், நக்கண்ணனார் முதலியோர்:

'நன்மை' என்னும் அடைமொழியுள்ள பெயரினர் **நல்லச்சுதனார், நல்லந்துவனார்** முதலியோர்.

'தொன்மை' 'வன்மை' என்னும் அடைமொழிகளுள்ள பெயரினர் **தொல்கபிலர், வன்பரணர்** முதலியோர்.

சிறப்பால் வந்த பெயரினர் ஆசிரியனல்லந்துவனுர், முதுகண்ணன் சாத்தனுர் முதலியோர்.

மேற்கூறிய புலவர்களுள் உறையூர் ஏணிச்சேரி முடமோசியார், மதுரைக்கணக்காயர், இவர்மகனுர் நக்கீரர், பெருங்குன்றூார்ப் பெருங் கௌசிகனுர், கடியலூர் உருத்திரங்கண்ணனுர், கோதமனுர், கபிலர், வேம்பத்தூர்க் குமரனுர் முதலியோர் அந்தணர்.

பாலைபாடிய பெருங்கடுங்கோ (சேரன்), கோப்பெருஞ் சோழன், ஒல்லையூர்தந்த பூதபாண்டியன், தலையாலங் கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன், ஆரியப் படை கடந்த நெடுஞ்செழியன் முதலியோர் அரசர்.

காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனுர், மதுரை அறுவை வாணிகன் இளவேட்டனுர், மதுரைக் கூல வாணிகன் சீத்தலைச் சாத்தனுர், பண்டவாணிகன் இளந் தேவனுர் முதலியோர் வணிகர்.

அம்பர்கிழான் நாகன், வல்லங்கிழான் மாறன், அரிசில் கிழார், ஆவூர்கிழார், நல்லாவூர்கிழார், நொச்சிநியமங்கிழார் முதலியோர் வேளாளர்,

வேளாளரில் உழுவித்துண்போர், உழுதுண்போரென இருபிரிவுண்டு.

பித்தாமத்தர், நல்லச்சுதனுர், கண்ணனுகனுர் முதலியோர் இசையில் வல்லோர்.

கேசவனுர் முதலியோர் இயலிலும் இசையிலும் வல்லோர்.

மருத்துவன் தாமோதரனுர், மருத்துவன் நல்லச்சுதனுர் முதலியோர் ஆயுள் நூலிற் பயிற்சியுற்றோர்.

கணியன் பூங்குன்றன், கணிமேதாவியார் முதலியோர் கணித நூலில் வல்லோர்.

ஐந்திணைகளுள், குறிஞ்சியைப் பாடுதலிற் கபிலர் முதலியோரும், முல்லையைப் பாடுதலிற் பேயனுர், சோழன்,

நல்லுருத்திரன் முதலியோரும், பாலையைப் பாடுதலிற் சேரன் கடுங்கோ முதலியோரும், மருதத்தைப் பாடுதலில் மருதனிள நாகனுர் முதலியோரும், நெய்தலைப்பாடுதலில் அம்மூவனுர், நல்லந்துவனுர் முதலியோரும் புகழ்பெற்ற வர்கள்.

**புறநானூற்றில்** 2-ஆம் பாட்டின் ஆசிரியராகிய முரஞ்சி யூர் முடி நாகராயரென்னும் புலவரை முதற்சங்கப் புலவருள் ஒருவரென்று சிலர் எண்ணுகின்றனர்; அந்தச் செய்யுளிற் பாரதப்போர் கூறப்பட்டிருத்தலின், அப்பெயருள்ள வேறொருவர் முதற்சங்கத்தில் இருந்திருத்தல் கூடுமென்று ஒரு சாரார் நினைக்கின்றனர்.

சைனரும் பௌத்தரும் இச்சங்கத்திற் சேர்ந்திருந்த தாகத் தெரிகிறது. பதினெண்கீழ்க்கணக்குகளில் **நாலடியார், ஏலாதி, பழமொழி** யென்பவை சைனரால் இயற்றப்பட்டவை. **மணிமேகலை** பௌத்தசமய நூல். சங்கப் புலவர்களில் ஒருவராக இருந்த உலோச்சனுரென்பவரைச் சைனராக எண்ணுகின்றனர்; உலோச்சென்பது சைனர்களில் ஒரு வகைக் கிரியைக்குப் பெயர். போதியாரென்பவரைப் பௌத்தராக எண்ணுகின்றனர்; போதி-அரசமரம். கி. பி. நான்காம் நூற்றுண்டிலோ ஐந்தாம் நூற்றுண்டிலோ ஒரு சைனுசாரியர் மதுரையில் சைன சங்கமொன்றை ஸ்தாபித்ததாகக் கேட்டி ருக்கிறேன்.

பக்குடுக்கை நன்கணியாரென்ற ஒரு புலவர் பெயர் முன்னமே சொல்லப்பட்டது; அவர் சோதிடத்திற் பயிற்சி யுள்ளவர். அதற்குரிய கழற்சிமணிகளையும் பலகறைகளையும் நிரப்பிய பைகளை உடையில் அவர் செருகி வைத்துக்கொண்டி ருந்தனர் போலும். பக்கு-பை; கழற்சிக்காயை வைத்துக் கொண்டு எண்ணும் வழக்கம் இக்காலத்திற் போலவே மலை நாட்டிற் சங்ககாலத்திலு மிருந்ததாகப் **பதிற்றுப்பத்தால்** தெரிகின்றது. நிற்க;

இவர்கள் வாக்கில் வந்துள்ள அழகிய உவமைகளிற் சில வற்றைச் சொல்லுவேன்: அரசனுக்கு உயிரையும், பெரும் பாலும் வண்மையே இல்லாத இடத்திலிருந்து தனியே விளங்கும் உபகாரியாகிய ஒருவனுக்கு அருஞ்சுரத்திலுள்ள நிழன்மரத்தையும், உசாவினது அகலத்திற்கு ஆகாயத்தை யும், எருமைக்குக் குண்டுக்கல்லையும், கந்தைத் துணிக்குப் பாசிவேரையும் பருந்தின் சிறகையும், கள்மயக்கத்திற்குத் தேட்கடுப்பையும், மெல்லிய வெள்ளாடைக்குப் பாலாவி யையும் பாம்பின் சட்டையையும், செந்நெலுக்கு வேங்கை மரப் பூவையும், சேவற்கோழியின் நெற்றிச் சூட்டிற்கு வேங்கைமரத்தின் பூவையும், முள்ளு முருங்கையின் பூவையும் தடாரிப்பறைக்குத் திங்களையும் யானைக்காற்சுவட்டையும், நிமிர்ந்த சோற்றின் அவிழுக்குக் கொக்கின் நகத்தையும், தமிழ்நாட்டரசர் மூவர்க்கும் முத்தீயையும் இறைவனுடைய மூன்று கண்களையும், தலைவனுக்குச் சூரியனையும், நண்பர்க்குக் கண்களையும், பலவகைப் பூக்களாலாகிய மாலைக்கு இந்திர வில்லையும், பன்றித்தலைக்கு உரலையும், பனைமரத்தினடிக்கு முழாவையும் மகளிர்நடைக்கு மயில் நடையையும், முத்தாரத் திற்குப் பிறையையும், முயல்விழிக்கு நீர்க்குமிழியையும், வறுமைக்கு அராவையும் நரகவேதனையையும், வேள்வித் தீக்குச் செந்தாமரைப் பூவையும் உவமை கூறியிருக்கின்றனர். இன்னும், கிளியின் மூக்கிலுள்ள வேப்பம்பழத்திற்குக் கொல்லன் நகநுதியிற்கொண்ட ஒரு வகைப் பொற்கா சினையும், வறியவனுடைய வாடிய உடம்பிற்கு ஒருவகைக் கொள்கையுமில்லாதானுடைய உடம்பையும், அரசனுடைய ஆட்சியில்லாத குடிகளுக்குத் தாயில்லாத இளங்குழந்தை களையும், வானத்திலுள்ள அங்காரகனுக்குக் கடலில் உலாவும் திமிலிலுள்ள விளக்கையும், யானையின் மேலே தைக்கப்பட்ட அம்புகளுக்குக் குன்றத்தில் மொய்த்துள்ள குருவிகளையும், தலைவனையே நோக்கிக் கொண்டிருக்கும் மகளிர் பார்வைக்குச் சூரியனையே நோக்கிக் கொண்டிருக்கும் நெருஞ்சிப் பூக்களை யும், திண்ணிய வீரனொருவனுக்கு ஒரு நாளில் எட்டுத்தேர் களைச் செய்யும் தச்சன் ஒருமாதம் முயன்று செய்த உருளை

யையும், உடலைச் சூழ அம்பு தைக்கப்பெற்ற ஒரு வீரனுக்கு முள்ளம் பன்றியையும் கழற்சிக்காயையும் வட்டைகழன்று ஆரைக்கால்களோடு மட்டுமிருக்கும் தேருருள்களையும் உவமை கூறியிருத்தல் இவர்களுடைய ஆழ்ந்த அனுபவத்தைப் புலப் படுத்துகின்றது,

புலவர்களுக்குள் ஒருவர்பால் மற்றொருவர்க்குள்ள அன்பு மிக அதிகம், "**மோசி பாடியவாய்**" எனப் பெருஞ் சித்திரனாரென்னும் புலவரால், ஏணிச்சேரி முடமோசியார் பாராட்டப் பெற்றிருத்தலையும்,

"அரசவை பணிய வறம்புரிந்து வயங்கிய
மறம்புரி கொள்கை வயங்குசெந் நாவின்
உவலை கூராக் கவலையி னெஞ்சின்
நனவிற் பாடிய நல்லிசைக் கபிலன்" (பதிற். 85:9-13)

எனப் பெருங்குன்றூர் கிழாரென்னும் புலவராலும், "வெறுத்த கேள்வி விளங்குபுகழ்க் **கபிலன்**" எனப் பொருந்தி விளங்கீரனாரென்னும் புலவராலும், "புலனழுக்கற்ற வந்த ணாளன், இரந்துசென் மாக்கட் கினியிடனின்றிப், பரந்திசை நிற்கப் பாடினன்", "பொய்யா நாவிற் **கபிலன்**" என மாறோக்கத்து நப்பசலையாரென்னும் புலவராலும் கபிலர் பாராட்டப் பெற்றிருத்தலையும், "அன்றும் பாடுநர்க் கரியை யின்றும், **பரணன்** பாடினன்" என ஔவையாராற் பரணர் பாராட்டப்பெற்றிருத்தலையும், 'கபில பரணர்', 'கல்லாட மாமூலர்' என்னும் வழக்கத்தையும் உற்றுநோக்கும்பொழுது இவர்களுள் ஒருவர்பால் மற்றொருவர்க்குள்ள அன்புடைமை விளங்கும். தமிழ்ப்பெருக்கத்திற்கு இதுவும் ஒரு காரணமே.

இவர் அரசர்களுக்குப் புத்தி புகட்டலும் உண்டு:—

தருமத்தைச் செய்வதற்கு வலியில்லீராயினும் தீய செயல்களைச் செய்யாதீரென்பதைச் சொல்ல எண்ணி, "நல்லது செய்த லாற்றீராயினும், அல்லது செய்த லோம்புமின்" எனவும், பொய்யைச் சொல்லற்கவென்பார், "நிலம் பெயரினு நின்சொற் பெயரல்", "நிலந்திறம் பெயருங் காலை யாயினும், கிளந்த சொன்னீ பொய்ப்பபறி

யலையே'' எனவும், பகைவர்பால் இரக்கத்தை யுண்டாக்க வெண்ணியவர், பகைவரைக் கொன்றவிடத்து அவர் பெண்டிர் தம் இளம் புதல்வரைப் பாதுகாத்தற் பொருட்டுத் தாம் இறந்துபடாது அடகு தின்று உயிர் வாழ்கின்றுரென் பதைப் புலப்படுத்த நினைந்து, ''அறுமருப் பெழிற்கலை புலிப் பாற் பட்டெனச், சிறுமறி தழீஇய தெறிநடை மடப்பிணை, பூளை நீடிய வெருவரு பறந்தலை, வேளை வெண்பூக் கறிக்கும், ஆளிலத்தமாகிய காட்டுவழியே வருவல்'' எனவும் நீ தீய வரோடு இணங்க லாகா தென்பார், ''நின்ஞென்று மொழி வல், அருளு மன்பு நீக்கி நீங்கா, நிரயங் கொள்பவரோ டொன்ருது காவல், குழவி கொள்பவரி ஞேம்புமதி'', ''நல்ல தனலனுந் தீயதன் றீமையும், இல்லையென்போர்க் கினனு கிலியர்'' எனவும் துணிந்து கூறுதல் யாவரும் கைக் கொள்ளற்பாலது.

ஒரு வகையாக அரசர்களைப் புகழ்ந்து அவர்களுக்கு நற் செய்கையை அறிவித்தலும் இவர்கள் கொள்கை.

நீ பெரும்போரில் முன்னே நின்று வாளின் தழும்புபட்ட தேகத்தை உடையையாய்ப் புகழோடு விளங்குதலின், கண்ணுக்கு இன்னுய், செவிக்கு இனியை; நின் பகைவர், நினக்குப் புறங்கொடுத்து ஓடிப்போதலிற் சிறிதும் உடம்பிற் புண்ணில்லாமலிருந்து பழிக்கப்படுதலால் கண்ணுக்கினியர், செவிக்கின்னுர்; நீயும் ஒன்றிலினியை; அவரும் ஒன்றிலினிய ரென்பார்,

"நீயே அமர்காணி னமர்கடந்தவர்
படைவிலக்கி யெதிர்நிற்றலின்
வாஅள்வாய்த்த வடுவாழ் யாக்கையொடு
கேள்விக் கினியை கடகின் ருயே,
அவரே, நிற்காணிற் புறங்கொடுத்தலின்
ஊறறியா மெய்யாக்கையொடு
கண்ணுக்கினியர் செவிக்கின் ருரே
அதனல், நீயுமொன் றினியை யவருமொன் றினியர்''

(புறநா. 167.1:8)

என்று கூறியது தலைவன் வீரத்தையும் புலவரின் இயல்பையும் எங்ஙனம் புலப்படுத்துகின்றது!

கொடுத்துச் செல்வப் பெருக்கத்தை நீ அடையவேண்டு மென்பவர், ''நின் பகைவர், அருளிலர் கொடாமை வல்ல ராகுக'' என்பார்.

இன்னும், இவர் அரசர்களுடைய பள்ளியெழுச்சியில் அவர்கள் முன்னோர்களின் நற்குண நற்செய்கைகளையும் அவர்களுடைய நல்ல வரலாறுகளையும் இனிய பாடலில் அமைத்துப்பாடி அவர்களுக்கு நல்ல அறிவைப் புகட்டுவர்.

இரண்டு அரசர்கள் பெரும்போர் செய்கையில் இப் புலவர்கள் அவர்களுக்கு இடையே துணிந்து சென்று நின்று இனிய மொழிகளால் சமாதானஞ் செய்வித்துக் கலந்து வாழச்செய்வர்.

இவர்கள் பயிர்களின் இயற்கை நலத்தைக் கூறல் மிக்க இன்பத்தை அளிக்கும்;

"பைந்நனை யவரை பவழங் கோப்பவும்
கருநனைக் காயா கணமயி லவிழவும்
கொழுங்கொடி முசுண்டை கொட்டங் கொள்ளவும்
செழுங்குலைக் காந்தள் கைவிரல் பூப்பவும்
கொல்லை நெடுவழிக் கோப முரவும்
முல்லை சான்ற முல்லையம் புறவு"

(சிறுபாண். 164-9)

என்பதனுல் அவரைப் பூ, காயாம்பூ, முசுட்டைப்பூ, காந்தட்பூ என்பவை கூறப்பெற்றிருத்தல் காண்க. இப்படியே மலைபடுகடாம், 110ஆம் அடி முதலியவற்றிலும் முசுட்டைக்கொடி முதலியவை கூறப்பெற்றிருத்தல் அறிந்து இன்புறற்பாலது. மலைவளங்கூறுதலும் மிக்க சுவை பயப்பதாகும்; அவற்றுள் ஒன்று வருமாறு:—

" பாரியது பறம்பே,

* * * *

உழவ ருழாதன நான்குபய னுடைத்தே
ஒன்றே, சிறியிலை வெதிரி னெல்விளை யும்மே

இரண்டே, தீஞ்சுளைப் பலவின் பழமூழ்க் கும்மே
மூன்றே, கொழுங்கொடி வள்ளிக் கிழங்குவீழ்க் கும்மே
நான்கே, அணிநிற வோரி பாய்தலின் மீதழிந்து
திணிநெடுங் குன்றந் தேன்சொரி யும்மே"

(புறநா. 109: 1—8)

என்பது. இப்படியே இவர்களுடைய செய்யுட்களிலுள்ள பலவகைச் சுவைகளையும் அவற்றால் அறியக்கூடிய பண்டைக் கால வழக்கங்களையும் பிறவற்றையுஞ் சொல்லுதற்கு நேரம் சிறிதும் பற்றாது; ஆதலால் இதனோடு இந்த விஷயத்தை ஒருவகையாகப் பூர்த்தி செய்கிறேன்.

## V. சங்க காலத்துப் புலமைவாய்ந்த பெண்பாலார்

தமிழாராய்ந்து தங்கள் புகழைப்பரப்பிய பெண் மணிகள் பண்டைக்காலத்தில் பலர் இருந்தனர். பெண் பாலார் சுதந்தரமில்லாதவர்கள் என்று சொன்னாலும் அவர்களுடைய பெருமை பெரிது. தாய் என்ற சொல் அவர்களுக்கே அமைந்துள்ளது. தாய் என்கிற பதவியைக் காட்டிலும் பெரியதொன்றில்லை, ''அம்மையே யப்பா வொப்பிலா மணியே'' என்று பெரியோர் இறைவனைத் தாயாகக் கூறியிருப்பது இதனைப் புலப்படுத்துகின்றது. உலகப்பற்று நீங்கிய துறவிகளைத் தந்தை முதலிய எல்லோரும் பணியவேண்டுமாயினும் தாயைக் கண்டால் அத்துறவிகள் பணியவேண்டும் என்பது விதி. பட்டினத்துப் பிள்ளையார் உலகைத் துறந்தவராயிருந்தும், தம் தாயின் ஈமக்கடனைக் கழித்துவிட்டு அப்பால் வேறிடஞ் செல்ல வேண்டுமென் பதைக் கருதி, குடியிருந்த வீட்டிற் கொள்ளி வைக்க வேண்டு மென்று காத்துக் கொண்டிருந்ததாகச் சொல்வார்கள். **பிரபோதசந்திரோதய** மென்ற நூலில் ஒரு விவாதத்தில், " சந்நியாசிகளும் வந்தத் தாயரை வணங்கு வாரே " என்று

கூறப்பட்டுள்ளது. பெண்பாலார் அவ்வளவு பெருமை வாய்ந்தவர்கள். மேன்மை, அறிவு முதலிய குணங்கள் இயற்கையில் அமைந்தவர்கள். இயற்கை அறிவுடன் செயற்கை அறிவும் சேர்ந்துவிடின், அவர்களுடைய பெருமை அளவிடற்கரியதாகும். சங்ககாலத்தில் தமிழாராய்ந்து விளங்கிய பெண்பாலார் ஐம்பதின்மருக்கு மேலிருந்திருக்கலா மென்று தெரிகிறது. அவர்களுட் சிலரைப்பற்றி சொல்லு வேன்.

### காக்கைபாடினியார் நச்செள்ளையார்

காக்கைபாடினியார் நச்செள்ளையார் என்ற பெய ருடைய ஒருவர் இருந்தார். செள்ளையார் என்ற சொல் தாயார் என்ற பொருளுடையதென்றும், தள்ளையென்பதன் மரூஉவாகிய சள்ளையென்பது பின்பு செள்ளை என்று மாறி விட்டதுபோலுமென்பர். இவர் மலை நாட்டரசன்பால் பரிசு பெற்றவ ராகையால், 'ந' என்ற சிறப்பெழுத்துடன் நச் செள்ளையார் என்று வழங்கப்பட்டாரென்று தெரிகிறது. கணவனுடைய பிரிவினுல் வருந்தியிருந்தபொழுது அதற்குப் பரிகாரமாக விருந்துவரக் காக்கை கரைந்ததைப் பாராட்டி இவர் ஒரு பாடல் பாடினமையால், காக்கை பாடினியார் என்று பெயர் பெற்ருர்போலும். அச்செய்யுள் வருமாறு ;—

**" திண்டேர் நள்ளி கானத் தண்டர்**
**பல்லா பயந்த நெய்யிற் றொண்டி**
**முழுதுடன் விளைந்த வெண்ணெல் வெஞ்சோ**
**றெழுகலத் தேந்தினுஞ் சிறிதென் றோழி**
**பெருந்தோ ணெகிழ்த்த செல்லற்கு**
**விருந்துவரக் கரைந்த காக்கையது பலியே"**

**(குறுந்தொகை, 210)**

'தலைவனது பிரிவாற்றுமையால் வருந்தும் எனக்கு அவ்வருத்தம் நீங்கும்படி விருந்துவரக் கரைந்த காக்கைக்குப் பலியாக நள்ளியின் காட்டிலுள்ள பசுக்களின் நெய்யோடு கலந்த தொண்டியில் விளைந்த நெல்லின் சுடுசோற்றை ஏழு பாத்திரத்தில் ஏந்தினுலும் அது சிறிதாகும்; காக்கை செய்த உதவி அவ்வளவு பெரியது' என்பது இதன் பொருள்.

தலைவன் பிரிந்த காலத்தில் விருந்திடுதல் முதலியவற்றால் மகளிர் தம் துன்பத்தைப் போக்கிக்கொள்வர்.

**பதிற்றுப்பத்தில்** ஆறாவது பத்தை இவர் பாடி ஆடுகோட் பாட்டுச் சேரலாதனிடமிருந்து ஒன்பது துலாம் பொன்னும் நூறாயிரம் பொற்காசும் பரிசு பெற்றார். அணிகலனுக்காக அவன் இவருக்குப் பொன் கொடுத்தமையாலும் இவர் பெண்பாலாரென்பது தெளிவாகிறது.

### பொன்முடியார்

பொன்முடியார் என்ற பெண்பாலார் ஒருவர் இருந்தார். இவருடைய இயற்பெயர் தெரியவில்லை. இவருடைய கல்விப் பெருமையையும் கவிப்பெருமையையும் நோக்கி அவற்றின் அறிகுறியாக அக்காலத்திருந்த அரசர் ஒரு பொன் முடி அளித்தமையால் இவர் இக்காரணப் பெயரைப் பெற்றிருக்கலாமென்று தோற்றுகிறது. முரஞ்சியூர் முடிநாக ராயரென்னும் பெயரில், ‘முடி’ என்பது காணப்படுதலின், அப்பெயர்க்குரிய புலவரும் சிறப்பினால் ஒரு முடி பெற்றிருத்தல் கூடுமென்று சிலர் நினைக்கின்றனர். “தொண்டர் சீர்பரவுவாரெனப் பெயர் சுமத்தி ஞான முடி சூட்டி” என்பதனால் சேக்கிழாரும், “ஐந்து பாவுடை நால்வகைக் கவிக்கதி பதியாய், வந்து வட்டமா மணியினன் மணிமுடி புனைந்து” என்பதனால் வில்லிபுத்தூராழ்வாரும் இங்ஙனமே ஒவ்வொரு வகை முடி சூட்டப் பெற்றிருந்தமையும் இங்கே கருதற்பாலது. **தகடூர் யாத்திரை** யென்னும் நூலில் இவரால் செய்யப்பட்ட பாடல்கள் சில உண்டென்று தொல்காப்பிய உரையால் தெரிகின்றது. **புறநானூற்றில்** இவர் பாடிய பாடல் வருமாறு :—

“ ஈன்றுபுறந் தருத லென்றலைக் கடனே
சான்றோ னாக்குத றந்தைக்குக் கடனே
வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே
நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே
ஒளிறுவா ளருஞ்சம முருக்கிக்
களிறெறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே ” (312)

இதனால், தம்முடைய மகனைப் போருக்கு அனுப்பி இவர்

களித்திருந்தா ரென்பதும், இவர் வீரக்குடிப்பெண்டிரென் பதும் தெளிவாகின்றன.

## பூதபாண்டியன் தேவியார்

பூதபாண்டியனென்பவன் இறந்ததும் அவன் தேவி யாராகிய இவர் அவனுடன் தீக்குளிக்க விரும்பினர். மூப் புடைய சிலமகளிர் வந்து தடுத்தனர். அப்பொழுது இவர் அவர்கள் வார்த்தையை ஏற்றுக்கொள்ளாமற் பாடியதாகப் **புறநானூற்றில்** ஒரு பாட்டுள்ளது. அது,

"பல்சான் றீரே பல்சான் றீரே
செல்கெனச் சொல்லா தொழிகென விலக்கும்
பொல்லாச் சூழ்ச்சிப் பல்சான் றீரே
அணில்வரிக் கொடுங்காய் வாள்போழ்ந் திட்ட
காழ்போ னல்விளர் நறுநெய் தீண்டா
தடையிடைக் கிடந்த கைபிழி பிண்டம்
வெள்ளெட் சாந்தொடு புளிப்பெய் தட்ட
வேளை வெந்தை வல்சி யாகப்
பரற்பெய் பள்ளிப் பாயின்று வதியும்
உயவற் பெண்டிரே மல்லே மாதோ
பெருங்காட்டுப் பண்ணிய கருங்கோட் டீமம்
நுமக்கரி தாகுக தில்ல வெமக்கெம்
பெருந்தோட் கணவன் மாய்ந்தென வரும்பற
வள்ளித ழவிழ்ந்த தாமரை
நள்ளிரும் பொய்கையுந் தீயுமோ ரற்றே" (246)

என்பது. கணவன் இறந்தபிறகு உடம்பை வைத்துக்கொண்டு உயிர் வாழ்வதை இகழ்ந்து தீப்பாயத் தாம் விரும்பியதை இப்பாட்டில் இவர் சொல்லியிருக்கிறார்; செந்தாமரைக் குளத்தின் நீரும் தீயும் தமக்கு ஒன்றுதான் என்பது இவரது கருத்து. இவரது இயல்பைப் பாராட்டி மதுரைப் பேராலவாயாரென்னும் புலவர்பெருமான் பாடிய 'யானை தந்த' (247) என்னும் **புறநானூற்றுச்** செய்யுளும் இங்கே அறியத்தக்கது.

## ஆதிமந்தியார்

இவர் கரிகாற்பெருவளவனுடைய புத்திரியார்; ஆதி மருதியார் என்பது இவரது பெயராக இருந்திருக்கலா

மென்றும், பிறகு எழுதுவோர் கைப்பிழையால் அப்பெயர் ஆதிமந்தியார் என்று மாறியிருக்கு மென்றும் நான் நினைக்கிறேன். இவர் சேரநாட்டரசன் மகனாகிய ஆட்டனத்தி யென்பானை மணந்தார்; ஒருகால், கழாரென்னு மூரிலுள்ள காவிரியின் முன்றுறையில் ஒரு விழாவில் அவனுடன் இவர் நீர் விளையாடிக் கொண்டிருக்கையில் அவனை ஆறு அடித்துக் கொண்டு போய்விட்டது. அவனைக் காணாது வருந்தி,

''மள்ளர் குழீஇய விழவி னானும்
மகளிர் தழீஇய துணங்கை யானும்
யாண்டுங் காணேன் மாண்டக் கோனை
யானுமோ ராடுகள மகளே யென்கைக்
கோடீ ரிலங்குவளை நெகிழ்த்த
பீடுகெழு குருசிலுமோ ராடுகள மகனே''

(குறுந்தொகை, 31)

என்று பாடி அரற்றித் தேடித்திரிந்துசென்று கடலைநோக்கி, 'நான் பத்தினியாயின் அவனைத் தரவேண்டும்' என்று இவர் பிரார்த்திக்கக் கடல் அவனைக் கொணர்ந்து காட்டியது. இதனைச் **சிலப்பதிகாரத்தில்** இளங்கோவடிகள்,

''மன்னன் கரிகால் வளவன்மகள் வஞ்சிக்கோன்
தன்னைப் புனல்கொள்ளத் தான்புனலின் பின்சென்று
கன்னவி ரேளாயோ வென்னக் கடல்வந்து
முன்னிறுத்திக் காட்ட வவனைத் தழீஇக்கொண்டு
பொன்னங் கொடிபோலப் போதந்தாள்''

(21ஆம் காதை 11-5)

என்று, கோவலன் கொலைசெய்யப்பட்டபிறகு கண்ணகி பாண்டியனைக்கண்டு வழக்குரைத்துவிட்டு வஞ்சினங் கூறும்போது தான் பிறந்த காவிரிப்பூம்பட்டினத்திலுள்ள கற்புடைமகளிர் பெருமையைச் சொல்லுதல் முகமாக ஆதிமந்தியாருடைய கற்பைச் சிறப்பித்துக் கூறினார். கி. பி. 55-முதல் 95-வரையிற்*கரிகாற் பெருவளவனென்று ஒருவனிருந்தானென்று சிலாசாசன ஆராய்ச்சியாளர் கூறுதலால், அவன் மகளாகிய இவர் காலமும் அறியத்தக்கதே. சங்கச் செய்யுட்களை ஆராய்ந்து பார்க்கையில் வெள்ளி வீதியார்,

---

* கரிகாலனென்ற பெயருள்ள சோழர் சிலருண்டென்று பழைய நூல்களால் தெரிகிறது.

ஔவையாரென்ற பெண்பாலார்க்கும் பரணர்க்கும் இவர் காலத்தால் முற்பட்டவராக நினைக்க இடமுண்டாகிறது.

## வெண்ணிக்குயத்தியார்

வெண்ணிக்குயத்தியார் என்ற புலமை வாய்ந்த பெண் பாலார் ஒருவர் இருந்தார். வெண்ணி என்பது இக் காலத்தில் கோவிலுண்ணி என்று வழங்கப்படுகிறது. நீடாமங்கலம் ரெயில்வே ஸ்டேஷனுக்கு மேற்கில் உள்ளது; இவர் குயச்சாதியார்; கரிகாற்சோழனைச் சேரனும் பாண் டியனும் மேற்கூறிய வெண்ணியூரிலுள்ள போர்க்களத்தில் எதிர்த்துப் போர் செய்து தோற்றனர். தன் மார்பில் தைத்து முதுகில் உருவிச்சென்ற அம்பாலுண்டாகிய புண்ணிற்கு நாணிச் சேரன்போய் வடக்கே இருந்தான்; ஓடுங்காலத்துத் தன் முதுகில் அம்பின் காயம் பட்ட தாகப் பிறர் கருதக் கூடுமோவென்று எண்ணி அவன் நாணினன்.

வடக்கிருத்தல் என்பது தோல்வியுற்றவர் உலக வாழ்க்கையை வெறுத்து இனி உயிரைத் துறக்கவேண்டு மென்று நிச்சயித்துக்கொண்டு வடக்கே சென்றிருந்து ஊண் உறக்கமின்றி உடம்பைவாட்டி உயிர் விடுவதாகும். இஃது உத்தரகமனம் என்றும் வழங்கப்படும். சேரன் வடக்கிருந்ததைப் பாராட்டிக் கரிகால்வளவனை நோக்கி ''வென்றோய் நின்னினு நல்ல னன்றே, கலிகொள் யாணர் வெண்ணிப் பறந்தலை, மிகப்புக ழுலக மெய்திப், புறப் புண் ணாணிவடக்கிருந் தோனே'' என்று பாடியிருக்கிறார். ''நின்றோகை கற்பி னிலைமையெண் ணுதெதிர் நின்று வெந்நிட், டன்றோ வடக்கிருந் தாண்டப் பாவை யருந் ததியே'' எனத் **தஞ்சைவாணன் கோவையிலும்**, ''பெரும் பதிக் குவமையும் பெறுமல், மறக்கடுங் களிற்றுக் குபேரன்வா ழளகை வடக்கிருந்து'' என **வில்லிபுத்தூ ராழ்வார் பாரதத்தும்** காணப்படும் வாக்கியங்கள் வடக் கிருத்தலின் கருத்தைப் புலப்படுத்தல் காண்க. புறப்

புண்ணைப் பெற்றவர்கள் நாணுவதல்லாமல் அவர்களோடு சண்டை செய்தவர்களும் நாணுவார்களென்பது பின்னுள்ள வரலாற்றால் விளங்கும்.

இராவணன் இறந்த பிறகு அவனைப் பார்ப்பதற்கு விபீஷணனுடன் சென்ற இராமர் அவன் முதுகிற் புண்கள் இருத்தலைக் கண்டு தம்மை இகழ்ந்துகொள்ளவே விபீஷணன், 'இவன் மார்பில் இருந்த திக்குயானைக் கொம்புகள் அனுமானுடைய குத்தினால் புறத்தே கழன்று போனமையால் உண்டாகிய புண்கள் இவை' என்று சொல்லி ஆற்றுவித்தனன். இதனைக் **கம்பராமாயணம்** இராவணன் வதைப்படலத்துள்ள, ''தளிரியல் பொருட்டின் வந்த சீற்றமும்'' என்னும் செய்யுள் முதலியவற்றிற் காணலாம்.

## பாரிமகளிர்

முன்னாளில், பாரி என்று ஒரு சிற்றரசன் இருந்தான். அவன் வள்ளல்களில் ஒருவன். அவனுக்கு இரண்டு புதல்வியருண்டு. அவ்விருவரும் தமிழ்ப்புலமை வாய்ந்தவர்களென்பது **புறநானூற்றில்** அவர்களுடைய பெயரா லுள்ள பாட்டிலிருந்து விளங்குகிறது. தன் மகளிரை மூவேந்தர்கள் மணம் செய்துகொள்ள விரும்பியபோது பாரி மறுத்தமையால் அவர்கள் அவனோடு போர்செய்யக் கருதினர். குறிஞ்சிபாடுதலிற் பெரியாராகிய **கபிலர்** அப்பொழுது அவனுடன் இருந்தார். அவர் மூவேந்தரையும் நோக்கி, ''நீங்கள் ஆடுநர் போலவும் பாடுநர் போலவும் வேடங் கொண்டு வருவீராயின், பாரி தன் மலையை உங்களுக்குக் கொடுத்து விடுவன்'' என்று பாரியின் வள்ளன்மையும் வீரமும் விளங்க ஒரு பாடல் செய்திருக்கிறார். ''கொடுக்கிலாதானைப் பாரியேயென்று கூறினுங் கொடுப்பாரிலை'' என்று **சுந்தரமூர்த்திநாயனார்** ஒரு தேவாரத்திற் சொல்லியிருப்பதிலிருந்து பாரியின் புகழ் விளங்குகிறது. மூவேந்தரும் மலையை வளைந்து பெரும்போர் செய்த

போது பாரி இறந்துபோனான். அதை நினைந்து அவன் மகளிர் உருகிப் பாடிய பாட்டு வருமாறு:-

"அற்றைத் திங்க ளவ்வெண் ணிலவின்
எந்தையு முடையே மெங்குன்றும் பிறர்கொளார்
இற்றைத் திங்க ளிவ்வெண் ணிலவின்
வென்றெறி முரசின் வேந்தரெம்
குன்றுங் கொண்டார்யா மெந்தையு மிலமே"

(புறநானூறு, 235)

இம்மகளிரிருவர்க்கும் பிறகு கபிலர் விவாகம் செய்வித்தார். இம்மகளிரின் பெருமை **'பழமொழி'** என்னும் நூலிலும் பாராட்டப்பட்டுள்ளது.

## ஔவையார்

ஔவை என்ற சொற்குத் தாய் என்பது பொருள். இவர் அதிகமானென்னும் வள்ளலைப் பாடி நெல்லிக்கனி பெற்று அதன் விசேடத்தால் வெகுகாலம் வாழ்ந்திருந்தார். அதிகன்காலத்தில் ஒரு நெல்லிமரம் இருந்தது. அது பல வருஷங்களுக்கொருமுறை ஒரு பழம் தருவது. அப்பழத்தை உண்பவர் வெகுகாலம் சீவித்திருப்பார். அதிகன் தன் ஆட்சிக்கு உட்பட்ட இடத்தில் தோன்றியிருந்த அந்த நெல்லிமரத்துக்குக் காவல்வைத்து அது பழுத்ததும் அதைப் பெற்றுப் புசிக்க நினைந்து அதன் அருகே சென்று இருந்த சமயத்தில் ஔவையார் திடீரென்று அவன்முன் சென்றனர். உடனே அதிகன் அதனை அவர் கையிற் கொடுத்துவிட்டான். தனக்குப் பிறகு நாட்டைப் புரக்க மகன் இருப்பதால் தான் நீண்டகாலமிருப்பதிலும் ஔவையார் நெடுங்காலம் வாழ்ந்திருந்தால் உலகுய்யும்படி அவர் செய்விப்பார் என்று அவன் நினைத்துத் தன் கைப்பழத்தை அவர் கையிற் கொடுத்தனன். பழத்தின் அருமையை முதலில் அறியாத ஔவையார் அதை உண்டுவிட்டார். பிறகு அதன் விசேடத்தை அறிந்து அதிகனைப் பாராட்டிப் பரமசிவனை அவனுக்கு ஒப்பிட்டு, "நீலமணிமிடற் றொருவன் போல, மன்னுக பெரும நீயே" என்று பாடியுள்ளார். ஔவையார் பெயர் பற்பல காலங்

களிலிருந்த வித்துவான்களின் சரித்திரங்களிற் சம்பந்தப் படுவதால், பல ஔவையார் இருந்திருக்கவேண்டுமென்று சிலர் கருதுகிறுர்கள். அதிகன் கொடுத்த நெல்லிக்கனியைத் தின்றதால் ஔவையார் சிரஞ்சீவியாக இருந்திருக்கக் கூடு மென்பது சில பெரியோர் கருத்து. கம்பர், ஒட்டக்கூத்தர் காலத்திலும் ஔவையார் இருந்ததாக ஒரு கதை வழங்கு கின்றது. அது நம்பத்தக்கதன்று. இவருடைய அருள், மனேதைரியம், கவித்துவம் முதலியன அளவிடற்கரியன. இவரைக் கலைமகள் என்றே பாராட்டுவர். இவரது முதுமை யில் திருவாலங்காடு என்னும் சிவக்ஷேத்திரத்திற்கு அருகி லுள்ள பழையனூரில் இருந்த காரி என்பான் இவர் ஊன்றிக் கொள்வதற்காக ஒரு மூங்கிற்கோல் கொடுத்து உதவினுன். குறிப்பறிந்து அவன் செய்த உதவியால் மகிழ்ந்த ஔவையார் அவனுக்கு விருப்பமுள்ள கறவையாடொன்று வாங்கிக் கொடுக்க நினைந்து சென்று ஓர் ஆடு வேண்டுமென்று சேரனைக் கேட்டார். பொன்னுல் ஆடொன்று செய்வித்து அதை அவன் அவர்க்குக் கொடுத்தான். அதனுற் களிப் புற்று வியந்த ஔவையார், "சிரப்பான் மணிமௌலிச் சேரமான் றன்னைச், சுரப்பாடு கேட்கவே பொன்னுடொன் றீந்தான், இரப்பவ ரென்பெறினுங் கொள்வர் கொடுப்பவர், தாமறிவர் தங்கொடையின் சீர்" என்ற பாடலைச் சொல்லி, 'சேரா, உன்னுடு பொன்னுடு' என்று வாழ்த்தினர். உன் ஆடு பொன் ஆடு என்றும் உன் நாடு பொன் நாடு என்றும் பொருள் படும்படி விளங்குகின்றது இத் தொடர்மொழி. இதனுல் 'இன்றும் சேரநாட்டில் மழை தவருமற் பெய் கிறது; தர்மம் ஓங்குகிறது' என்பர். போரில் அதிகமான் இறந்தபோது இவர் வருந்தி,

"சிறியகட் பெறினே யெமக்கீயு மன்னே
பெரியகட் பெறினே
யாம்பாடத் தான்மகிழ்ந் துண்ணு மன்னே
சிறுசோற் ருனு நனிபல கலத்தன் மன்னே
பெருஞ்சோற் ருனு நனிபல கலத்தன் மன்னே
என்பொடு தடிபடு வழியெல்லா மெமக்கீயு மன்னே
அம்பொடு வேனுழை வழியெல்லாந் தானிற்கு மன்னே

நரந்த நாறுந் தன்கையால்
புலவுநாறு மென்றலை தைவரு மன்னே
அருந்தலை யிரும்பாணர் அகன்மண்டைத் துளையுரீஇ
இரப்போர் கையுளும் போகிப்
புரப்போர் புன்கண் பாவை சோர
அஞ்சொனுண் டேர்ச்சிப் புலவர் நாவிற்
சென்றுவீழ்ந் தன்றவன்
அருநிறத் தியங்கிய வேலே
ஆசா கெந்தை யாண்டுளன் கொல்லோ
இனிப் பாடுநரு மில்லைப் பாடுநர்க்கொன் றீகுநரு மில்லை''

(புறநானூறு, 235)

என்று சொல்லி அவனது கொடையைப் பாராட்டி யிருக்கிறார்.

சிலர் கூடி, கோடி என்று மதித்தற்குரிய விஷயங்களைச் சொல்லும்படி கேட்டபோது, ஔவையார்,

"மதியாதார் முற்ற மதித்தொருகாற் சென்று
மிதியாமை கோடியுறும்
உண்ணீருண் ணீரென்றே யூட்டாதார் தம்மனையில்
உண்ணாமை கோடியுறும்
கோடி கொடுத்துங் குடிப்பிறந்தார் தம்மோடு
கூடுவதே கோடி யுறும்
கோடானு கோடி கொடுப்பினுந் தன்னுடைநாக்
கோடாமை கோடி யுறும்'' (தமிழ்நா.)

என்று பாடி மகிழ்வித்தனர். இவை யாவரும் எப்போதும் சிந்திக்கத்தக்கவை.

கல்வியறிவில்லாத சிலர் ஒரு சமயம் தங்களைப் பாடும்படி கேட்டபோது இவர்,

"மூவர் கோவையு மூவிளங் கோவையும்
பாடிய வென்றன் பனுவல் வாயால்
எம்மையும் பாடுக வென்றனிர் நும்மையிங்
கெங்ஙனம் பாடுகேன் யானே வெங்கட்
களிறுபடு செங்களங் கண்ணிற் காணீர்
வெளிறுபடு நல்யாழ் விரும்பிக் கேளீர்
புலவர் வாய்ச்சொற் புலம்பலுக் கிரங்கீர்
அவிழ்ச்சுவை யல்லது தமிழ்ச்சுவை தேரீர்'' (தமிழ்நா.)

என்று கூறித் தமது ஆற்றலைப் புலப்படுத்தினர்.

அறம் பொருள் இன்பம் வீடென்பவற்றை யாவரும் எளிதில் அறிந்து கொள்ளும்படி சுருக்கிக் கூறவேண்டும் என்று தமிழ்நாட்டரசர் கேட்டபோது,

இவர்,

"ஈதலறந் தீவினைவிட் டீட்டல்பொரு ளெஞ்ஞான்றும்
காத லிருவர் கருத்தொருமித்—தாதரவு
பட்டதே யின்பம் பரனை நினைந் திம்மூன்றும்
விட்டதே பேரின்ப வீடு"

என்று கூறியதாக ஒரு வெண்பா வழங்குகிறது.

இங்கே ஈதல் அறம் என்றதற்கேற்ப ஈதலின் பெருமையை இவர்,

"சாதி யிரண்டொழிய வேறில்லை சாற்றுங்கால்
நீதி வழுவா நெறிமுறையின்—மேதினியில்
இட்டார் பெரியோ ரிடாதா ரிழிகுலத்தோர்
பட்டாங்கி லுள்ள படி" (நல்வழி)

என்று பாடியிருத்தல் அறியத்தக்கது.

இராமாயணத்தில் சுக்கிராசாரியரை நோக்கி மகாபலி கூறியதாகவுள்ள,

"மாய்ந்தவர் மாய்ந்தவ ரல்லர்கள் மாயா
தேந்திய கைகொ டிரந்தவ ரெந்தாய்
வீந்தவ ரென்பவர் வீந்தவ ரேனும்
ஈந்தவ ரல்ல திருந்தவர் யாரே" (வேள்விப். 30)

என்னும் செய்யுளாற் கம்பரும் கொடையின் பெருமையை விளக்கியிருத்தல் காண்க;

திருக்கோவலூரில் அங்கவை, சங்கவை என்னும் இரண்டு பெண்களுக்கு ஔவையார் விவாகம் செய்வித்ததாகவும், அதற்காகப் பெண்ணையாறு நெய்யாகவும் பாலாகவும் ஓடும்படி இவர் செய்ததாகவும் ஒரு கதை உண்டு. அது வில்லிபுத்தூரார் பாடிய பாரதத்துள்ள பாயிரச் செய்யுட்களால் தெரிகிறது.

பெரிய வீரனுகிய அதிகமான் ஒரு காலத்தில் ஔவையாரைத் தொண்டைமானிடம் தூதனுப்பினன். தொண்டை

மான் தனது செல்வப்பெருமையும் படைப்பெருமையும் புலப்படும்படி தனது ஆயுதசாலையை அவருக்குக் காட்டினன். ஆயுதங்கள் பளபளவென்று மின்னிக்கொண்டிருந்தன. அப்பொழுது ஔவையார்,

,, இவ்வே, பீலி யணிந்து மாலை சூட்டிக்
கண்டிர ணேன்காழ் திருத்திநெய் யணிந்து
கடியுடை வியனக ரவ்வே யவ்வே
பகைவர்க் குத்திக் கோடுநுதி சிதைந்து
கொற்றுறைக் குற்றில மாதோ வென்று
முண்டாயிற் பதங்கொடுத்
தில்லாயி னுடனுண்ணும்
இல்லோ ரொக்கற் றலைவன்
அண்ணலெங் கோமான் வைந்நுதி வேலே'' (புறநானூறு, 95)

என்று பாடி, 'பகைவரை எதிர்த்துக் குத்துதலால், போரிற் சிறந்த அதிகமானுடைய படைகள் நுனிமழுங்கிக் கொல்லனுலையில் திருத்த முறுதற்குக் கிடக்கின்றன. உன்னுடைய படைகள் பளபளவென்று இருக்கின்றன' என்று தொண்டைமான் போர்செய்யச் செல்லாதிருத்தலைப் புலப்படுத்தி அவனை நாணும்படி செய்தனர். இங்ஙனம் சமத்காரமாகக் கூறுவது இவருக்கு இயல்பு.

கும்பகோணத்தில் மருத்தன் என்றும் திருத்தங்கி என்றும் இருவர் இருந்தனர். மருத்தன் பெருத்த கொடையாளி; வந்தவர்களுக்கு வேண்டிய உணவளித்துப் பாராட்டுபவன்; திருத்தங்கி பரமலோபி; ஔவையார் சென்றபோது இவருக்கு மருத்தன் உணவளித்துப் பாராட்டினன்; அடுத்த வீட்டுக்காரனாகிய திருத்தங்கி தன் வீட்டையும் கொல்லையையும் பார்த்துவிட்டுப் போகவேண்டுமென்று இவரைக் கேட்டுக் கொண்டான். அப்படியே இவர் போய்ப் பார்த்துவிட்டு மருத்தனுடைய கொடைப் பெருமையும் திருத்தங்கியின் உலோபத்தன்மையும் புலப்படும்படி,

" திருத்தங்கி தன்வாழை தேம்பழுத்து நிற்கும்
மருத்தன் றிருக்குடந்தை வாழை-குருத்தும்
இலையுமிலை பூவுமிலை காயுமிலை யென்றும்
உலகில் வருவிருந்தோ ருண்டு'' (தமிழ்நா.)

என்ற செய்யுளைப் பாடினர்.

இன்னும் அவர்களைப்போல் தமிழாராய்ந்து புலமை வாய்ந்த வேறு பெண்பாலாருடைய குணவிசேடங்களையும் அவர்களுடைய வரலாறுகளையும், அவரவர்கள் கூறிய அருமைச் செய்யுட்களையும், அவை கூறப்பட்ட சந்தர்ப்பங் களையும், அவற்ருல் உலகம் அடைந்தபயனையும் கூற இப் போது நேரமில்லாமையால் இம்மட்டோடே நிறுத்துகிறேன். அச்சிடப்பட்டுள்ள தொகை நூல்களின் முகவுரைகள் முதலிய வற்ருல் சிலவரலாறுகள் நன்கு விளங்கும்.

## VI. சங்கப்புலவர்களை ஆதரித்த பிரபுக்கள்

பிரபு என்ற சொல்லானது சங்க காலத்தில் வழக்கத் தில் இருந்ததென்று சொல்லலாம். ஆயினும் பல அருமை யான குணங்களை அது குறிப்பிடுவது. சங்ககாலத்துப் புலவர் களுக்குச் சமமான யோக்கியதை படைத்திருந்த துறை மங்கலம் **சிவப்பிரகாச சுவாமிகள்** தாம் இயற்றிய "பிரபு லிங்கலீலை" என்ற நூலில் அல்லமா தேவரை "அல்லமாப் பிரபுவெனுங் குருராயன்" என்றே சொல்லியிருக்கிருர். ஆகையால் போற்றத் தகுந்த குணங்கள் நிறைந்திருந்தவர் களைப் பிரபுக்கள் என்று சொல்லவே நானும் விரும்பு கிறேன். முடி மன்னர்களான சேர சோழ பாண்டியர்கள் மண்டலத்தலைவர்கள், சிற்றரசர்கள், மந்திரிகள், சேனுதி பதிகள், வீரர்கள், வேளாளர்கள், மற்றச் சாதியார்கள் முதலியவர்களே சங்கப்புலவர்களை ஆதரித்த பிரபுக்கள். அரசர்கள் கற்றுக் கேட்டுத் தெளிந்து செங்கோன்மை யுடையராயிருந்தது பற்றியே அவர்கள் சார்பிலிருந்த ஏனை யோரும் அங்ஙனம் ஒரு குழுவினராயினர். பிரபுக்கள் சரித்திரமும் புலவர்கள் சரித்திரமும் ஒன்ருேடொன்று கலப் புற்றிருத்தலால் இவர்கள் சரித்திரத்தில் புலவர்கள் சரித்திர மும் வாக்கும் விரவி வரும்.

ஒவ்வொரு பிரபுவும் ஒரு புலவரையேனும் சிலர் பலரை யேனும் ஆதரித்து வந்தார். சிலர் சங்கத்திலிருந்து தமிழா

ராய்ந்ததன்றிப் பாடல்களின் இயல்புகளை யறிந்து அவற்றை முறையே நூல்களாகத் தொகுப்பிக்கவும் செய்தனர். பலர் தாமே பாடல்களை இயற்றினர். செல்வம் இங்ஙனம் கல்வி விஷயத்தில் ஒழுங்காக உபயோகிக்கப்பெற்று வந்தது; புலவர்களின் வறுமையை ஒழித்தற்கு இவர்கள் இன்ன முறையைக் கைக்கொண்டனரென்பதும் புலவர்களுக்கு மிக எளியர்களாகவும் ஏனையோர்க்கு அரியர்களாகவும் இருந்தனர் என்பதும் இப்பிரபுக்களுடைய சரித்திரத்திலிருந்து விளங்குகின்றன. சௌலப்யமென்பது தெய்வத்தின் குணம்; ஒரு யானை அழைத்ததும் அதன் அருகில் தோன்றி அதைக் காப்பாற்றியது ஒரு தெய்வம். ஒரு நாயனுர் தம் தலையைப் பாறையில் மோதிக்கொள்ளப் போகையில் அங்கே தோன்றி ஒரு கையால் அத்தலையைத் தாங்கி அவரைக் காப்பாற்றியது ஒரு தெய்வம். புலவர்கள் பிரபுக்களுடைய இஷ்டப்படியே பேசாமல் தங்களுடைய கருத்தைக் தைரியமாக அவர்களிடத்தில் தெரிவிப்பது வழக்கமாக இருந்தது. முதலில் மேற்கூறியவற்றைச் சொல்லிவிட்டுப் பின்பு உதாரணமாக **நள்ளி, குமணன், கரிகாற்சோழன்** ஆகியவர்களின் சரித்திரத்தைச் சொல்லுவேன்.

## பிரபுக்களும் புலவர்களும்

பாரி ஒரு வள்ளல். கபிலர் அவனுடைய புலவர். மூவேந்தரால் எதிர்க்கப்பட்டபொழுது கபிலர் மிக்க அனுகூலஞ்செய்து வந்ததன்றிப் பாரி இறந்துபோன பிறகும் இவர் பாரியின் மகளிர்க்கு மணம் செய்வித்தார். கோப்பெருஞ்சோழன் என்பவனுடைய புலவர்கள் பிசிராந்தையார், பொத்தியார் என்ற இருவரும். சேரமான் மாந்தரஞ்சேரலிரும்பொறையின் புலவர்கள் பொருந்திலிளங்கீரனுரும் கபிலரும். அதிகமானெடுமானஞ்சியால் ஆதரிக்கப் பெற்றவர்கள் பரணரும் ஔவையாரும். ஆய் என்ற வள்ளல் ஏணிச்சேரி முடமோசியார் என்ற புலவரை ஆதரித்தவன். "மோசி பாடிய ஆய்" என்று ஆயின் பெருமை பாராட்டப் பெற்றிருக்கிறது.

சேரன் கணைக்காலிரும்பொறை யென்பவன் பொய்கை யாரை ஆதரித்தவன். தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டிய னெடுஞ் செழியன் மாங்குடி மருதனாரை ஆதரித்த வன். மாங்குடி மருதனார் இயற்றிய மதுரைக் காஞ்சியில், "தொன்முது கடவுட் பின்னர் மேய, வரைத்தா ழருவிப் பொருப்பிற் பொருந" என்று சொல்லியிருப்பதில் அகத்திய முனிவருடன் இருந்து தமிழாராய்ந்த ஒரு பாண்டியன் பாராட்டப்பட்டிருக்கிறான்.

## நூல்களைத் தொகுப்பித்த அரசர்

அங்கங்கே வழங்கிவந்த பாடல்களைத் தொகுப்பித்த அரசர்களைச் சொல்லுவேன். பன்னாடு தந்த பாண்டியன் மாறன்வழுதி என்பவன் நற்றிணையைத் தொகுப்பித்தவன். பூரிக்கோவென்பவன் குறுந்தொகையைத் தொகுப்பித்தான். யானைக்கட் சேய்மாந்தரஞ் சேரலிரும் பொறை யென்பவன் ஐங்குறுநூற்றைத் தொகுப்பித்தவன். பாண்டியன் உக்கிரப் பெருவழுதி யென்பவன் அகநானூற்றைத் தொகுப்பித்தவன்.

## பாடிய அரசர்

இளம்பெருவழுதியாரென்பவர் பரிபாடலில் 15 ஆம் பாடலை இயற்றியவர். அப்பாடலில்,

"கல்லறை கடலுங் கானலும் போலவும்
புல்லிய சொல்லும் பொருளும் போலவும்
எல்லாம், வேறுவே றுருவி னொருதொழி லிருவர்த்
தாங்கு நீணிலை யோங்கிருங் குன்றம்"

என்னும் பகுதியால் சோலைமலையிலுள்ள பலதேவரையும் கண்ணபிரானையும் சேர்த்துப் பாராட்டியிருப்பதும் கூறிய உவமையும் இன்புறற்பாலன.

நல்வழுதியார் என்பவர் வையையாற்றின் இயல்பை யும் நீர்விழவின் சிறப்பையும் புலப்படுத்திப் பாடிய, "வளிபொரு மின்னெடு" என்னும் பரிபாடல் அறிஞர் உள்ளத்தினின்றும் நீங்குவதன்று.

பாலை பாடிய பெருங்கடுங்கோ என்னுமரசன் பாலைத் திணையின் இயல்பைப் பாடுதலில் மிக்க ஆற்றல் படைத்திருந்ததுபற்றி, "பாலை பாடிய" என்ற அடைமொழி அவருடைய பெயர்க்குமுன் சிறப்பாக வழங்கி வந்திருக்கிறது. அவர் கலித்தொகையில் பாலைத்திணைக்குரிய 35 பாடல்களையும் இயற்றியவர். பாலையானது நீரும் நிழலும் இல்லாத இடம். பாலைநிலமாக்கட்கு வழிப்பறியே வியவசாயம். வழிப்போக்கரிடத்தில் பொருளில்லையாயினும் அவரை வெட்டி வீழ்த்தி மகிழ்வர். பட்சிகள்கூடப் பாலை வழி போகா. மரமேயில்லாத மிக்க உஷ்ணமான அந்த இடத்தில் முள்ளைப் போன்ற பருக்கைக் கற்கள் நன்மை செய்யாதவனுடைய கொடுங்கோல் போலக் குத்துமென்பர். அதை எப்படி வர்ணிப்பது? அதில் வாழும் சனங்கள் எயினர்.

"வலிமுன்பின் வல்லென்ற யாக்கைப் புலிநோக்கிற்
சுற்றமை வில்லர் சுரிவளர் பித்தையர்
அற்றம்பார்த் தல்குங் கடுங்கண் மறவர்தாம்
கொள்ளும் பொருளில ராயினும் வம்பலர்
துள்ளுநர்க் காண்மார் தொடர்ந்துயிர் வௌவலிற்
புள்ளும் வழங்காப் புலம்புகொ ளாரிடை" (கலித்தொகை)

எனவும்,

"ஆள்பவர் கலக்குற லைபெற்ற நாடுபோற்
பாழ்பட்ட" (ஷ)

எனவும்,

"நடுவிகந் தொரீஇ நயனில்லான் வினைவாங்கக்
கொடிதோர்த்த மன்னவன் கோல்போல...
ஞாயிறு தெறுதலான்" (ஷ)

எனவும்,

"வறியவ னிளமைபோல் வாடிய சினையவாய்ச்
சிறியவன் செல்வம்போற் சேர்ந்தார்க்கு நிழலின்றி
யார்கண்ணு மிகந்துசெய் திசைகெட்டா னிறுதிபோல்
வேரொடு மரம்வெம்ப" (ஷ)

எனவும்,

"ஈதலிற் குறைகாட்டா தறனறிந் தொழுகிய
தீதிலான் செல்வம்போற் றீங்கரை மரநந்த" (ஷ)

எனவும்,

“ மடியிலான் செல்வம்போன் மரநந்த வச்செல்வம்
படியுண்டார் நுகர்ச்சிபோற் பல்சினை மிஞிறார்ப்ப ” (கலித்.)

எனவும் அவர் கூறியிருக்கும் பாலையின் இயல்பையும் அங்கங்கே காட்டியிருக்கும் பொருள்களின் இயற்கை அழகையும் படிப்போர் வியவாதிரார்.

சோழன் நல்லுருத்திரன் என்னுமரசன் கலித்தொகையில் முல்லைத் திணைக்குரிய 17 பாக்களையும் பாடியவன்.

“ மத்தம் பிணித்த கயிறுபோ னின்னலம்
சுற்றிச் சுழலுமென் னெஞ்சு ”

என்று கலித்தொகையிலும், “ எலிபோன்றவர்களுடைய கேண்மை எனக்கு வேண்டுவதில்லை; புலி போன்றவர்களுடைய நட்பே எனக்கு வேண்டுவது ” என்று புறநானூற்றிலும் அவன் சொல்லியிருக்கும் உவமைகள் அறியற்பாலன.

எலியானது தானியக் கதிர்களைத் திருடிக்கொண்டு போய்த் தானுண்ணாது வளையிற் சேமித்து வைத்திருக்கும். புலி தானறைந்த பன்றி இடப்பக்கம் வீழின் அன்று உண்ணாமலிருந்துவிட்டு மறுநாள் யானையைத் தாக்கி அது வலப்பக்கம் விழும்படி செய்து அதன் மத்தகத்தைத் தின்னும். அப்படிப்பட்ட ஊக்கமுடையவருடைய நட்பே தனக்கு வேண்டுமென்று சோழன் நல்லுருத்திரன் பாடினான். அந்தப் பாடல் வருமாறு :—

“ விளைபதச் சீறிட நோக்கி வளைகதிர்
வல்சி கொண்டளை மல்க வைக்கும்
எலிமுயன் றனைய ராகி யுள்ளதம்
வளன்வலி யுறுக்கு முளமி லாளரொ
டியைந்த கேண்மை யில்லா கியரோ
கடுங்கட் கேழ லிடம்பட வீழ்ந்தென
அன்றவ ணுண்ணா தாகி வழிநாட்
பெருமலை விடரகம் புலம்ப வேட்டெழுந்
திருங்களிற் றொருத்த னல்வலம் படுக்கும்
புலிபசித் தன்ன மெலிவி லுள்ளத்
துரனுடையாளர் கேண்மையொ
டியைந்த வைக லுளவா கியரோ ” (புறநா. 190)

குறுவழுதி என்பவன், "கல்வி யென்னும் வல்லான் சிருஅன்" என்று கல்வியை ஆண்மகவாகப் பாராட்டி யிருக்கிருன்.

நெடுஞ்செழியன் என்று ஒரு பாண்டியன் இருந்தான். தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ் செழியன் என்று அவனுக்குப் பெயர் வழங்கிவந்திருக்கிறது. அவன் சிறு பிராயத்திலேயே பட்டம் பெற்ருன். சேர சோழர்கள் சிற்றரசர்கள் ஐவரைத் துணைக்கொண்டு அவனை எதிர்த்தபோது, "நான் இளையன் தனியனென்று அவமதித்து நால்வகைச் சேனையோடும் என்னை எதிர்த்த இப்பகைவர் களைத் தாக்கி ஒருங்கே வென்று அவர்களுடைய முரசத்தை யும் கைப்பற்றேனுயின், எம்மரசன் கொடியன் என்று குடிகள் தூற்றும் கொடுங்கோலை உடையேனுகுக; மாங்குடி மருத னுரைத் தலைவராகப் பெற்ற புலவர் என்னுடைய நிலத்தைப் பாடாதொழிக, இரவலர்க்குக் கொடுத்தற்கியலாத மிக்க வறுமையை யான் அடைக" என்று அவன் பாடிய பாடல் ஒன்று உள்ளது. அது வருமாறு:—

"நகுதக் கனரே நாடுமீக் கூறுநர்
இளைய னிவனென வுளையக் கூறிப்
படுமணி யிரட்டும் பாவடிப் பணைத்தாள்
நெடுநல் யானையுந் தேரு மாவும்
படையமை மறவரு முடையம் யாமென்
றுறுதுப் பஞ்சா துடல்சினஞ் செருக்கிச்
சிறுசொற் சொல்லிய சினங்கெழு வேந்தரை
அருஞ்சமஞ் சிதையத் தாக்கி முரசமொ
டொருங்கப் படேஎ னாயிற் பொருந்திய
என்னிழல் வாழ்நர் சென்னிழற் காணுது
கொடியனெம் மிறையெனக் கண்ணீர் பரப்பிக்
குடிபழி தூற்றுங் கோலே னுகுக
ஓங்கிய சிறப்பி னுயர்ந்த கேள்வி
மாங்குடி மருதன் றலைவ னுக
உலகமொடு நிலைஇய பலர்புகழ் சிறப்பிற்
புலவர் பாடாது வரைகவென் னிலவரை
புரப்போர் புன்கண் கூர
இரப்போர்க் கீயா வின்மையா னுறவே" (புறநா. 72)

இப்பாடலிலிருந்து பாண்டியனுடைய வீரம், நடுவு நிலைமை, தமிழ்ப்புலவர் பாலுள்ள அன்பு, ஈகை என்பவை வெளியாகின்றன. இந்தப் பாண்டியன் போரில் வென்ற தலையாலங்கானம் என்பது இக்காலத்துத் தலையாலங்காடென்று வழங்குகிறது. நன்னிலந்தாலூகாவில் பெரும்பன்றியூருக்கு அருகிலுள்ளது; ஒரு சிவ க்ஷேத்திரம்.

**பூதபாண்டியன்** என்று ஓர் அரசன் இருந்தான். **ஒல்லையூர் தந்த பூதபாண்டியன்** என்று அவனுடைய பெயர் வழங்கி வந்திருக்கிறது. செய்யுள் இயற்றுவதிற் சிறந்தவன். "என்னை எதிர்த்த அரசர்களை வென்று புறங்காணேனாயின் என்னுடைய உயிர்த்துணைவியை யான் விட்டுப் பிரிக; நீதி மன்றத்திற் சிறிதும் அறிவில்லாத ஒருவனை வைத்துச் செங்கோலை மெலிவித்தேனாகுக; சிறந்த நண்பர்களாகிய மாவன் முதலியவர்களைப் பிரிந்துவிடுவேனாகுக; இனி இந்தப் பாண்டியர் குடியிற் பிறவாமல் பாலை நிலத்தலைவனாகப் பிறந்து ஆறலைப்பேனாகுக" என்று அவன் பாடிய பாடலொன்றுள்ளது. அது வருமாறு:—

"மடங்கலிற் சினைஇ மடங்கா வுள்ளத்
தடங்காத் தானை வேந்த ருடங்கியைந்
தென்னொடு பொருது மென்ப வவரை
ஆரம ரலறத் தாக்கித் தேரோ
டவர்ப்புறங் காணே னாயிற் சிறந்த
பேரம ருண்க ணிவளினும் பிரிக
அறனிலை திரியா வன்பி னவையத்துத்
திறனி லொருவனை நாட்டி முறைதிரிந்து
மெலிகோல் செய்தே னாகுக மலிபுகழ்
வையை சூழ்ந்த வளங்கெழு வைப்பிற்
பொய்யா யாணர் மையற் கோமான்
மாவனு மன்னெயி லாந்தையு முரைசால்
அந்துவஞ் சாத்தனு மாத னழிசியும்
வெஞ்சின வியக்கனு முளப்படப் பிறரும்
கண்போ னண்பிற் கேளிரொடு கலந்த
இன்களி மகிழ்நகை யிழுக்கியா னொன்றோ
மன்பதை காக்கு நீள்குடிச் சிறந்த
தென்புலங் காவலி னொரீஇப்பிறர்
வன்புலங் காவலின் மாறியான் பிறக்கே" (புறநா. 71)

அவனுடைய வீரம், ஏகபத்தினி விரதம், நியாய பரிபாலனம், நட்பு முதலிய குணங்கள் இச்செய்யுளால் விளங்குகின்றன. 'பூதபாண்டி' என்று தென்னுட்டில் ஓர் ஊர் உளது.

சேரன் கணைக்காலிரும்பொறை என்ற அரசன் ஒருவன் இருந்தான். மலைநாடாகிய சேரநாட்டைப் பகைவர் பிடிப்பது அரிதாகையால் அவன் இறுமாந்துவந்து சோழன் செங்கணனை எதிர்த்துப் போர்செய்து தோற்றுப் போனுன். கும்பகோணத்திற்குத் தெற்கிலுள்ள குடவாயிற் சிறையில் சோழன் அவனை இட்டான். தாகம் மேலிட்டுச் சிறைக் காவலாளரைத் தண்ணீர் வேண்டுமென்று அவன் கேட்க, அவர்கள் கொடுத்தனர். பகைவனுடைய ஏவலாளரிடம் ஒன்றைப் பெறுவதா என்ற மானத்தால் அந்நீரை உண்ணுமற் சொல்லிய பாட்டு ஒன்று புறநானூற்றில் உளது. அதன் பின்னேயுள்ள வாக்கியத்திற் காணப்படும் துஞ்சிய என்ற சொல் இறந்த என்ற பொருளையே மிகுதியும் தருவதாயினும் இங்கு மூர்ச்சித்த என்று பொருள் கொள்ள வேண்டும். அச்செய்யுள் வருமாறு;—

"குழவி யிறப்பினு மூன்றடி பிறப்பினும்
ஆளன் றென்று வாளிற் றப்பார்
தொடர்படு ஞமலியி னிடர்படுத் திரீஇய
கேளல் கேளிர் வேளாண் சிறுபதம்
மதுகை யின்றி வயிற்றுத்தீத் தணியத்
தாமிரந் துண்ணு மளவை
ஈன்ம ரோவிவ் வுலகத் தானே" (புறநா. 74)

'குழந்தை இறந்து பிறந்தாலும் ஊன் பிண்டம் பிறந்தாலும் அவற்றை ஆளல்லவென்று நினையாமல் வாளால் வெட்டி அடக்கஞ் செய்யும் அரச பரம்பரையினர் சிறைக்கோட்டக் காவலாளர்களிடத்துத் தண்ணீரை இரந்துண்பவர்களைப் பெறுவார்களா' என்பது இச்செய்யுளின் பொருள்.

நோயாலிறந்த அரசருடம்பைத் தருப்பையிற் கிடத்தி, 'போரிலிறந்த அரசரடையும் உலகை இவர் அடைக' என்று கடவுளைப் பிரார்த்தித்து வாளால் அவ்வுடம்பை வெட்டி

அடக்கஞ் செய்வது அரசகுல மரபு. இது, புறநானூறு 93ஆம் பாட்டாலும், மணிமேகலை 23ஆம் காதையின் 11ஆம் அடி முதலியவற்றாலும் தெரிகிறது.

சிறைக்கோட்டத்திலிருந்த அந்தச் சேரனை மீட்டவர் அவனுடைய புலவரான பொய்கையார். அவர் சோழன் செங்கணானிடம் போய் யுத்தகளத்தை வர்ணித்துப் பாடியதைக் கேட்ட அவன் உருகி என்ன வேண்டுமெனவே, அவர், 'என் தலைவனாகிய சேரனை விடுவிக்க வேண்டும்' என்று கேட்டு அப்படியே பெற்றார். மேற்கூறிய யுத்தகளத்தை அவர் பாடிய நூல், பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்றான **களவழி நாற்பது** எனப்படும். இச்சரிதம் கலிங்கத்துப்பரணி, மூவருலா முதலியவற்றாலும் விளங்கும்; "களவழிக்கவிதை பொய்கையுரை செய்ய வுதியன் கால் வழித்தளையை வெட்டி யரசிட்ட பரிசும்" என்று கலிங்கத்துப்பரணியிலும், "இன்னருளின், மேதக்க பொய்கை கவி கொண்டு வில்லவனைப், பாதத்தளைவிட்ட பார்த்திபனும்" என்று **விக்கிரம சோழனுலா**விலும், "பொறையனைப் பொய்கை கவிக்குக் கொடுத்துக் களவழிப்பாக் கொண்டோனும்" என்று **குலோத்துங்க சோழனுலா**விலும், "பொய்கை களவழி நாற்பதுக்கு வில்லவன் காற்றளையை விட்டகோன்" என்று **இராசராச சோழனுலா**விலும் பொய்கையார் களவழி நாற்பதுபாடிச் சேரனை மீட்டது குறிப்பிடப் பட்டிருக்கிறது.

சோழன் நலங்கிள்ளி யென்பவன் சிறந்த புலவன். தன் முன்னோர் இறந்தபின் உரிமையாற் கிடைத்த அரசாட்சிப் பாரம், ஊக்கமும் வீரமுமில்லாதவனுக்கு மலையைப்போல மிகக்கனமாகவும், அவ்விரண்டு முள்ளவனுக்கு வாடிய நெட்டியைப்போல மிக நொய்தாகவுமிருக்கு மென்று அவன் பின்வரும் செய்யுளால் தெரிவித்திருக்கிறான்:

"முத்தோர் முத்தோர்க் கூற்ற முய்த்தெனப்
பாறர வந்த பழவிறற் றாயம்
எய்தின மாயி னெய்தினஞ் சிறப்பெனக்

குடிபுற விரக்குங் கூரி லாண்மைச்
சிறியோன் பெறினது சிறந்தன்று மன்னே
மண்டமர் பரிக்கு மதனுடை நோன்றாள்
விழுமியோன் பெறுகுவ னாயி னாழ்நீர்
அறுகய மருங்கிற் சிறுகோல் வெண்கிடை
என்றூழ் வாடுவறல் போல நன்று
நொய்தா லம்ம தானே மையற்று
விசும்புற வோங்கிய வெண்குடை
முரசுகெழு வேந்த ரரசுகெழு திருவே'' (புறநா. 75)

சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் சிறந்த புலவன். சிறுகுடிகிழான் பண்ணன் என்னும் வேளாள உபகாரிமீது அவன் பாடிய பாடலிலிருந்து அவனுடைய கவித்திறமை விளங்கும். சிறுகுடி என்பது தஞ்சாவூர் ஜில்லாவில் நரசிங்கம் பேட்டைக்கு வடக்கில் மண்ணியாற்றங்கரையில் உள்ளது. சிறுகுடிகிழான் பண்ணன் அகநானூற்றிலும் சொல்லப்பட்டிருக்கின்றான். அவனிடம் பரிசில்பெற்ற ஒரு புலவனைப் பார்த்துப் பரிசில்பெறச் சென்றானொருவன் பாடியதாகக் கிள்ளிவளவன் பாடியிருக்குஞ் செய்யுள் வருமாறு;—

“யான்வாழு நாளும் பண்ணன் வாழிய
பாணர் காண்கிவன் கடும்பின திடும்பை
யாணர்ப் பழுமரம் புள்ளிமிழ்ந் தன்ன
ஊணொலி யரவந் தானுங் கேட்கும்
பொய்யா வெழிலி பெய்விட நோக்கி
முட்டை கொண்டு வற்புலஞ் சேரும்
சிறுநுண் ணெறும்பின் சில்லொழுக் கேய்ப்பச்
சோறுடைக் கையர் வீறுவீ றியங்கும்
இருங்கிளைச் சிறாஅர்க் காண்டுங் கண்டும்
மற்று மற்றும் வினவுதுந் தெற்றெனப்
பசிப்பிணி மருத்துவ னில்லம்
அணித்தோ சேய்த்தோ கூறுமி னெமக்கே''

(புறநா. 173)

இதன் கருத்து:—ஆலமரம் பழுத்தால் பலவகைப் பறவைகளும் கூடிப் பழங்களைத்தின்று பெருமுழக்கம் செய்யும்; அப்படியே பண்ணன் வீட்டில் உண்ணும் பலருடைய பெருமுழக்கம் இருந்தது; அவன் வீட்டில் தயிர்ச் சோற்றுத் திரளையைப்பெற்று வரிசை வரிசையாகப் போகும் சிறுவர்

களுடைய தோற்றம் முட்டை கொண்டுபோகும் எறும்பினம் போலிருந்ததென்பது. இவ்வுவமைகளிலிருந்து சோழனுடைய கல்வியறிவு புலப்படுகின்றது. "தனக்கென வாழாப் பிறர்க்குரியாளன்" என்று **அகநானூற்றில்** இப்பண்ணன் பாராட்டப்பட்டிருக்கிறான். தனக்கென வாழாப் பிறர்க்குரியாளன் என்ற சொற்றொடரும் பொருளும் மிகச் சிறந்தனவாயிருப்பதால் **மணிமேகலையில்** அந்தத் தொடர் சீத்தலைச் சாத்தனாரால் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது.

**அறிவுடை நம்பி** என்று ஒரு பாண்டியன் இருந்தான். மக்கட்பேற்றை அவன் மிகவும் அழகாக எடுத்துச் சொல்லியிருக்கிறான்.

"படைப்புப்பல படைத்துப் பலரோ டுண்ணும்
உடைப்பெருஞ் செல்வ ராயினு மிடைப்படக்
குறுகுறு நடந்து சிறுகை நீட்டி
இட்டுந் தொட்டுங் கவ்வியுந் துழந்தும்
நெய்யுடை யடிசின் மெய்பட விதிர்த்தும்
மயக்குறு மக்களை யில்லோர்க்குப்
பயக்குறை யில்லைதாம் வாழு நாளே" (புறநா.188)

என்ற பாடலால் குழந்தைகளால் உண்டாகும் இன்பத்தைக் கூறி மக்களை அடையாதவர்க்குத் தம் வாழ்நாளில் அடையும் பயன் யாதுமில்லை என்று அவன் விளக்கியிருக்கிறான்.

பாண்டியன் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் என்ற பாண்டியன் ஒருவன் இருந்தான். கல்விகற்க வேண்டியமுறை அவன் பாடலால் தெரிகின்றது. தன்னாசிரியனுக்கு ஓரிடையூறு வந்தவிடத்து உதவியும் மிக்க பொருளைக் கொடுத்தும் வழிபட்டுப் பின்னே நிற்கும் நிலைமையை வெறாது கற்றல் ஒருவனுக்கு அழகியது. ஏனெனில் ஒரு வயிற்றிற் பிறந்தோருள்ளும் கல்வி விசேஷத்தால் தாயின் மனமும் வேறுபடும். ஒரு குடியிற் பிறந்த பலருள்ளும் மூத்தோன் வருகவென்று சொல்லாமல் அவருள் அறிவுடையோன் சென்ற நெறியே அரசனும் செல்வான். நாற்குலத்துள்ளும் கீழ்க்குலத்தான் கற்பானாயின் மேற்குலத்தானொருவன் அவமதியாது கல்வியின் பொருட்டு அவனை வழிபடுவன்

என்று அச்செய்யுளில் அவன் சொல்லியிருக்கிருன். பண்டை நாளில் நாற்குலங்கள் இருந்தனவென்பது அச்செய்யுளி லிருந்து விளங்குகிறது. அது வருமாறு:—

"உற்றுழி யுதவியு முறுபொருள் கொடுத்தும்
பிற்றை நிலை முனியாது கற்ற னன்றே
பிறப்போ ரன்ன வுடன்வயிற் றுள்ளும்
சிறப்பின் பாலாற் ருயு மனந்திரியும்
ஒரு குடிப் பிறந்த பல்லோ ருள்ளும்
மூத்தோன் வருக வென்னு தவருள்
அறிவுடை யோனு றரசுஞ் செல்லும்
வேற்றுமை தெரிந்த நாற்பா லுள்ளும்
கீழ்ப்பா லொருவன் கற்பின்
மேற்பா லொருவன் மவன்கட் படுமே" (புறநா. 183)

ஆசிரியனது வீட்டுக்குப் போய் வழிபாடு செய்து கல்வி கற்க வேண்டும். ஸ்ரீராமன் முதலானேரும் அப்படியே செய்தனர். சீவகன் பூமகள் புலம்பிவைகக் கற்ருனென்பதால், செல்வச் செருக்கின்றி ஆசிரியன்பால் வழிபாட்டோடு அவன் கல்வி கற்ருன் என்று **சிந்தாமணி**யில் சொல்லியிருப்பது இங்கே கவனிக்கத்தக்கது.

அரிய குணங்கள் நிறைந்த பிரபுக்களுடைய செல்வம் "பலர் புகழ் செல்வம்" என்றும், "கேட்டற் கினிது நின் செல்வம்" என்றும் **பதிற்றுப்பத்துப்** பாடல்களிற் பாராட்டப் பட்டுள்ளது. பலர் புகழ் செல்வம் என்பது பல மதத்தின ராலும் புகழப்படும் செல்வம் என்றும் பொருள்படும். காஞ்சியில் காமாட்சி அம்மை முப்பத்திரண்டு தருமங்களை யும் இயற்றி யருளுகையில் அறுவகை மதத்தினர்க்கும் உண்டி அளித்தனள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. திரு வேட்டீசுவரர் ஆலயத்துக்கு ஒரு மகமதிய அரசர் கொடுத்த இடங்கள் இன்னும் உள.

பாரியின் மலையை மூவேந்தர் சூழ்ந்து கொண்டபின், கபிலர் கிளிகளைப் பழக்கி அவை வெளியிலிருந்து தானியக் கதிர்களைக் கொணரும்படி செய்தார். பாரி இறந்த பிறகு அவர் சேரன் செல்வக்கடுங்கோ வாழியாதனை அடைந்து,

" பாரிபாலிருந்த குணங்கள் உன்பாலுள்ளனவென்று கேட்டு உன்னுடன் பழகவந்தேன் " என்று பாடினதாகப் **பதிற்றுப் பத்தில்** ஒரு செய்யுள் காணப்படுகிறது.

" நிரயத் தன்ன வென்றவன் களைந்து " என்றும்,
" தொல்பசி யுழந்தவென் பழங்கண் வீழ " என்றும்,
" பசிப்பிணி மருத்துவன் "

என்றும் புலவர்கள் கூறியவற்றால் அவர்கள் வறுமையைப் பிரபுக்கள் போக்கினமை அறியக்கிடக்கின்றது.

செய்ந்நன்றி யறிதலென்னும் பெரியகுணம் அவர்களிடம் இருந்ததாகப் பல பாடல்களால் தெரியவருகின்றன. இவ்வரியகுணம் பழைய வடமொழி நூல்களிலும் விளக்கப்பட்டிருக்கிறது. அவற்றுட் சிலவற்றை இங்கே சொல்லுவேன்; துரோணர், பீஷ்மர், அசுவத்தாமா, கும்பகர்ணன், கர்ணன் இவர்களுடைய செய்ந்நன்றியறிவுகளும் இத்தன்மையனவே.

கும்பகர்ணன் இராவணனுக்கு நல்ல புத்தி சொன்னதாக இராமன் கேள்வியுற்று அவன் கருத்தையறிந்து வரும்படி விபீஷணனை அனுப்பியபின், இராமனைச் சரணமடையும்படி விபீஷணன் அழைத்தபோது கும்பகர்ணன் சொன்னதாக அவன் நன்றியறிவைக் கம்பர் மிகவும் அழகாகக் கூறியிருக்கிறார். அதாவது " யான் தூக்கத்திலிருந்து எழுந்திருக்கக்கூடிய நேரத்தை எதிர்பார்த்து அறுசுவை உண்டியை வைத்துக்கொண்டு அண்ணன் காத்திருப்பன்; அவனுக்காகப் போர்செய்து உயிர் துறந்தேனும் செஞ்சோற்றுக் கடன் கழிக்க வேண்டும் " என்று அவன் சொன்னானென்பது. பாரதப்போரில் பதினேழாவது நாளன்று கர்ணன் கௌரவர் சேனைத் தலைவனாக நியமிக்கப் பட்டபோது செஞ்சோற்றுக் கடன்கழிக்க வேண்டியதை அவன் சொன்னதும் கவனிக்கத்தக்கது:—

" ஒருகு மொருகுலமு மில்லா வென்னை
யுங்கள்குலத் துள்ளோரி லொருவ னாக்கித்
தேருரு மவர்மனைக்கே வளர்ந்த வென்னைச்
செம்பொன்மணி முடிசூட்டி யம்பு ராசி

நீருரும் நரபாலர் பலருங் காண
நின்னினுஞ்சீர் பெறவைத்தாய் நினக்கே யன்றி
ஏருரும் மணிமுடியா யிந்தப் போரில்
யார்க்கினியென் னுயிர்துறப்ப தியம்பு வாயே,''
"செஞ்சோற்றுக் கடனின்றே கழியே னுயிற்
றிண்டோள்கள் வளர்த்ததனாற் செயல்வே றுண்டோ''

இவை துரியோதனனை நோக்கிக் கர்ணன் கூறியவை.

வித்துவான்களுக்குப் பிரபுக்கள் எளியவர்; சத்துருக் களுக்கு அரியவர்.

"எங்கோ னிருந்த கம்பலை மூதூர்
உடையோர் போல விடையின்று குறுகிச்
செம்ம லுளவை யண்ணாந்து புகுதல்
எம்மன வாழ்க்கை யிரவலர்க் கெளிதே
......மன்னர் நினைக்குங் காலைப்
புலிதுஞ்சு வியன்புலத் தற்றே
வலிதுஞ்சு தடக்கை யவனுடை நாடே'' (புறநா. 54)

என்று புறநானூற்றில் வந்திருத்தல் காண்க.

"ஞாயி றனையைநின் பகைவர்க்குத்
திங்க ளனையை யெம்மனோர்க்கே'' (புறநா. 59)

என்று பாண்டியன் சித்திரமாடத்துத் துஞ்சிய நன்மாறனைச் சீத்தலைச் சாத்தனுர் பாடியிருக்கிறார்.

"ஊர்க்குறு மாக்கள் வெண்கோடு கழாஅலின்
நீர்த்துறை படியும் பெருங்களிறு போல
இனியை பெரும வெமக்கே மற்றதன்
துன்னருங் கடாஅம்போல
இன்னாய் பெருமநி னொன்னா தோர்க்கே'' (புறநா. 94)

என்று அதியமானெடுமானஞ்சியை ஔவையார் பாடியிருக் கிறார்.

பிரபுக்கள் ஒவ்வொரு விஷயத்தையும் நன்கறிந்த தகுதி யுள்ளவர்களாலேயே சூழப்பட்டிருந்தார்கள் என்பதைச் சிறுபாணாற்றுப்படை விளக்குகிறது;—

"செய்ந்நன்றி யறிதலுஞ் சிற்றின மின்மையும்
இன்முக முடைமையு மினிய னுதலும்

செறிந்துவிளங்கு சிறப்பி னறிந்தோ ரேத்த
அஞ்சினர்க் களித்தலும் வெஞ்சின மின்மையும்
ஆணணி புகுதலு மழிபடை தாங்கலும்
வாண்மீக் கூற்றத்து வயவ ரேத்த.........
அறிவுமடம் படுதலு மறிவுநன் குடைமையும்
வரிசை யறிதலும் வரையாது கொடுத்தலும்
பரிசில் வாழ்க்கைப் பரிசில ரேத்தப்
பன்மீ னாப்பட் பான்மதி போல
இன்னகை யாயமோ டிருந்தோன் '' (207-220)

என்றதால் வரிசையறிந்து கொடுத்தனர் என்பதும், வரையாது கொடுத்தனர் என்பதும், சந்திரன் பிரகாசிக்கும்போது நட்சத்திரங்களும் விளங்குவதுபோல் உடனிருந்தோரும் விளங்கும்படி அவர்கள் இருந்தனர் என்பதும் அறியற்பாலன.

பிரபுக்களைக் கண்டால் புலவர்கள் தைரியமுற்று அவர்களுக்கு நல்லுபதேசம் செய்து தங்களுக்கு வேண்டியவற்றையும் கேட்டுப் பெறுவர்:—

" அருந்துய ருழக்குமென் பெருந்துன் புறுவிநின்
தாள்படு செல்வங் காண்டொறு மருளப்
பனைமருட் டடக்கையொடு முத்துப்பட முற்றிய
உயர்மருப் பேந்திய வரைமரு ளேன்பக
டொளிதிக ழோடை பொலிய மருங்கிற்
படுமணி யிரட்ட வேறிச் செம்மாந்து
செலனசை யுற்றனன்......
என்னளந் தறிந்தனை நோக்காது சிறந்த
நின்னளந் தறிமதி பெரும
.........ஏத்துகம் பலவே '' (புறநா. 161 : 14 - 32)

என்றதனால் நின்பெருமைக்குத் தகுந்தவாறு கொடு என்று பெருஞ்சித்திரனார் கூறினர்.

" இரவலர் புரவலை நீயு மல்லை
புரவலர் இரவலர்க் கில்லையு மல்லர்
இரவல ருண்மையுங் காணினி யிரவலர்க்
கீவோ ருண்மையுங் காணினி நின்னூர்க்
கடிமரம் வருந்தத் தந்தியாம் பிணித்த
நெடுநல் யானையெம் பரிசில்
கடுமான் தோன்றல் செல்வல் யானே '' (புறநா. 162)

என்று வந்துள்ள செய்யுள் இங்கே அறியத்தக்கது.

வேந்தர்க்குப் புலவர் தர்மங்களை உபதேசித்து அவர்களை நல்வழியினின்றும் நீங்காதபடி காத்தனர்.

'' நிலம் பெயரினு நின்சொற் பெயரல்............
நின்னசை வேட்கையி னிரவலர் வருவரது
முன்ன முகத்தி னுணர்ந்தவர்
இன்மை தீர்த்தல் வன்மையானே '' (புறநா. 3 : 14 – 26)

என்று பாண்டியன் கருங்கையொள்வாட்பெரும் பெயர் வழுதியை நோக்கி இரும்பிடர்த்தலையாரும்,

" அருளு மன்பு நீக்கி நீங்கா
நிரயங் கொள்பவரோ டொன்ருது காவல்
குழவி கொள்பவரி னோம்புமதி '' (புறநா. 5 : 5 - 7)

என்று சேரமான் கருவூர் வாட்கோப்பெருஞ்சேரலிரும் பொறையை நோக்கி நரிவெரூஉத்தலையாரும்,

" கொடியோர்த் தெறுதலுஞ் செவ்வியோர்க் களித்தலும்
ஒடியா முறையின் மடிவிலை யாகி
நல்லத னலனுந் தீயதன் றீமையும்
இல்லை யென்போர்க் கினனு கிலியர் '' (புறநா. 29)

என்று சோழன் நலங்கிள்ளியை நோக்கி உறையூர் முது கண்ணன் சாத்தனாரும்,

" காய்நெல் லறுத்துக் கவளங் கொளினே
மாநிறை வில்லதும் பன்னுட் காகும்
நூறுசெறு வாயினும் தமித்துப்புக் குணினே
வாய்புகு வதனினும் கால்பெரிது கெடுக்கும்
அறிவுடை வேந்த னெறியறிந்து கொளினே
கோடி யாத்து நாடுபெரிது நந்தும்
மெல்லியன் கிழவ னாகி வைகலும்
வரிசை யறியாக் கல்லென் சுற்றமொடு
பரிவுதப வெடுக்கும் பிண்ட நச்சின்
யானைபுக்க புலம் போலத்
தானு முண்ணு னுலகமுங் கெடுமே '' (புறநா. 184)

என்று அறிவுடைநம்பியை நோக்கிப் பிசிராந்தையாரும் பாடியவை மேற்கூறியவற்றிற்கு உதாரணங்களாகும்.

பிரபுக்கள் பரோபகாரத்தையே இயல்பாகக் கொண்டிருந்தனர் என்பதைப் பல புலவர்கள்,

"பிறர்க்கென வாழ்தி"

என்றும்,

"பிறர்க்கென முயலுநர்" (புறநா. 182)

என்றும்,

"தனக்கென வாழாப் பிறர்க்குரி யாளன்" (மணிமேகலை)

என்றும் விளக்கியிருக்கிறார்கள்.

அவர்களுடைய அரண்மனை வாயில் சிலர்க்கு அடைக்கப் படாமலே யிருக்கும்.

"பொருநர்க் காயினும் புலவர்க் காயினும்
அருமறை நாவி னந்தணர்க் காயினும்
அடையா வாயி லவனருங்கடை" (சிறுபாண். 203 - 6)

என்றும்,

"நசையுநர்த் தடையா நன்பெரு வாயில்" (பொருந. 66)

என்றும் சொல்லப்பட்டிருக்கின்றன. இத்தன்மையுடைய ஞதல்பற்றியே சடையப்ப வள்ளலைக் கம்பர், "அடையாத பொற்கதவு மஞ்சலென்ற சொல்லு முடையான் சடை யப்பன்" என்றார்.

பிரபுக்களுடைய கொடை பதிற்றுப்பத்துப் பாடி னோர்க்குச் சேரவரசர்கள் கொடுத்ததிலிருந்தே விளங்கும்.

பதிற்றுப்பத்தென்பது பத்துப் பத்துப் பாட்டுக்களை உடையது.

முதற்பத்தும் பத்தாம்பத்தும் கிடைக்கவில்லை.

இரண்டாம்பத்து, இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனைக் குமட்டூர்க்கண்ணனார் பாடி உம்பற் காட்டு ஐந்நூறூர் பிரம தாயம் பெற்று முப்பத்தெட்டியாண்டு தென்னாட்டுள் வருவதனிற் பாகமும் பெற்றார்.

மூன்றாம்பத்து, பல்யானைச் செல்கெழு குட்டுவனைப் பாலைக் கௌதமனார் பாடிச் சுவர்க்கம் புகுதற்கு ஒன்பது பெரு வேள்வி செய்விக்கப் பெற்றார்.

நாலாம்பத்து, களங்காய்க்கண்ணி நார்முடிச் சேரலைக் காப்பியாற்றுக் காப்பியனூர் பாடி நாற்பது நூறுயிரம் பொன்னும் ஆள்வதிற் பாகமும் பெற்ருர்.

ஐந்தாம்பத்து, சேரன் செங்குட்டுவனைப் பரணர் பாடி உம்பற் காட்டுவாரியையும் அவன் மகனையும் பரிசில் பெற்ருர்.

இந்தச் செங்குட்டுவனே சிலப்பதிகாரம் இயற்றிய இளங்கோவடிகளின் தமையன்.

ஆரும்பத்து, ஆடு கோட்பாட்டுச் சேரலாதனைக் காக்கை பாடினியார் நச்செள்ளையார் பாடி ஒன்பது காப் பொன்னும் நூறுயிரம் காணமும் பெற்ருர்.

ஏழாம்பத்து, செல்வக்கடுங்கோவாழியாதனைக் கபிலர் பாடி நூறுயிரம் காணமும் நன்றுவென்னும் குன்றேறி நின்று அவன் கண்ணிற்பட்ட நாட்டையும் பெற்ருர்.

எட்டாம்பத்து, பெருஞ்சேரலிரும்பொறையை அரிசில் கிழார் பாடிக் காணம் ஒன்பது நூறுயிரத்தோடு அரசு கட்டிலும் அவன் கொடுப்ப அவர் யான் இரப்ப இதனை ஆள்கவென்று அமைச்சுப் பூண்டார்.

ஒன்பதாம்பத்து, இளஞ்சேரலிரும் பொறையைப் பெருங்குன்றூர்கிழார் பாடினூர். முப்பத்தீராயிரம் காணம் கொடுத்து அவர் அறியாது ஊரும் மனையும் வளமிகப்படுத்தி ஏரும் இன்பமும் இயல் வரப்பரப்பி எண்ணற்கு ஆகா அருங் கல வெறுக்கையொடு பன்னூறுயிரம் பாற்பட வகுத்துக் காப்புமறம் தான்விட்டான் அக்கோ. குசேலர் கண்ண பிரானிடமிருந்து திரும்பி வந்தபோது தமது மனை முதலிய சிறப்புற்று நிற்கக்கண்டு திகைக்கும்படி அவரை அறியாமல் கண்ணன் கொடுத்தது இங்கு அறியத்தக்கது. (இங்ஙனம் பிரபுக்கள் கொடையை விளக்கும் பாடல்கள் மிகுதியாகச் சொல்லப்பட்டதுடன் அவ்வப்பொழுது கூறிய பாடல்களுக் குப் பொருளும் விளக்கமாகக் கூறப்பட்டது).

பல அரசர்கள், சிற்றரசர்கள் முதலியவர்களைப் பற்றிய விஷயங்கள் பண்டைக்காலச் செய்யுட்களில் சிதறிக் கிடக்கின்றன. ஒவ்வொருவரையும் பற்றித் தெரிந்திருக்கிற விஷயங்களைச் சொல்லவும் நேரமில்லை. சிலரைப்பற்றி மட்டும் சில விஷயங்களைச் சொல்லுவேன்.

## புலவருக்கு விசிறின அரசன்

சேரமான் தகடூரெறிந்த பெருஞ்சேரலாதன் என்ற அரசனை ஒரு சமயம் மோசிகீரனார் என்ற புலவர் காணப் போனார். வழி நடந்துபோன சிரமத்தால் அவனது அரண்மனையிலுள்ள முரசுகட்டிலில் அவர் படுத்துக்கொண்டு தூங்கிப்போய்விட்டார்; முரசு அரசர்களால் வழிபடுவதற்கும் பூசித்தற்கும் உரியது. அரசர்கள் யுத்தத்துக்குப் புறப்படுவதற்கு முன்பு, அதனை நல்லவேளையில் எடுத்து முன்னதாக அனுப்புவது வழக்கம். இதற்கு முரசுநாட்கோள் என்று பெயர். அங்ஙனம் பெருஞ்சேரலாதன் தன் முரசையெடுத்து அனுப்பியிருந்தமையாலே தான் மோசிகீரனார் கட்டிலிற் படுத்து அயர்ந்து நித்திரை செய்துவிட்டார். அரசன் வந்தபோது அவர் அயர்ந்து நித்திரை செய்வதையும் அவருடைய சிரமத்தையும் உணர்ந்து விசிறி கொண்டு வந்து தானே விசிறிக்கொண்டு நின்றான்.

அவர் விழித்துக்கொண்டு அரசன் விசிறுவதைக் கண்டு திடுக்கிட்டு அவனுடைய பெருந்தகைமையை வியந்து ஒரு செய்யுளியற்றினார். அது வருமாறு;—

" மாசற விசித்த வார்புறு வள்பின்
மைபடு மருங்குல் பொலிய மஞ்ஞை
ஒலிநெடும் பீலி யொண்பொறி மணித்தார்
பொலங்குழை யுழிஞையொடு பொலியச் சூட்டிக்
குருதி வேட்கை யுருகெழு முரசம்
மண்ணி வாரா வளவை யெண்ணெய்
நுரைமுகந் தன்ன மென்பூஞ் சேக்கை
அறியா தேறிய வென்னைத் தெறுவர
இருபாற் படுக்குநின் வாள்வா யொழித்ததை
அதூஉஞ் சாலுநற் றமிழ்முழு தறிதல்

அதனொடு மமையா தணுக வந்துநின்
மதனுடை முழுவுத்தோ ளோச்சித் தண்ணென
வீசி யோயே வியலிடங் கமழ
இவணிசை யுடையோர்க் கல்ல தவண
துயர்நிலை யுலகத் துறையு ளின்மை
விளங்கக் கேட்ட மாறுகொல்
வலம்படு குருசினீ யீங்கிது செயலே'' (புறநானூறு, 50)

## கரிகாற் சோழன்

கரிகாற் சோழனுடைய புகழைப் பல புலவர்கள் பாடியிருக்கிறார்கள். அவன் இளமையிலேயே அரசுரிமை பெற்றான். ஒரு சமயத்தில் தீப்பற்றிய ஒரு வீட்டிலிருந்து ஓடும்போது அவன் கால் வெந்துபோய்விட்டது. அதனாலேதான் கரிகாலன் என்ற பெயர் அவனுக்கு வந்தது. இமயத்தில் அவன் புலிக்கொடியை நாட்டினதாகச் சொல்லப்பட்டிருக்கிறான். கால் வெந்திராவிடின், திருமாலைப்போல் மூவுலகையும் அவன் அளந்திருப்பான் என்று புலவர் ஒருவர் அவனுடைய வீரத்தை,

"முச்சக் கரமு மளப்பதற்கு நீட்டியகால்"

என்ற செய்யுளால் பாராட்டியிருக்கிறார். கரிகாலனுடைய பேரறிவை ஒரு சரித்திரம் உணர்த்துகிறது. ஒரு சமயம் அவன் நியாயசபையில் இருக்கையில் வழக்குரைத்துக்கொள்ள இருவர் வந்தனர். என்ன வழக்கென்று அரசன் கேட்டபோது, அவன் இளையவனாக விருந்ததைக் கண்டு அவனிடம் வழக்கைச் சொல்ல அவர்களுக்குத் துணிவு உண்டாகவில்லை. அதனை அறிந்த கரிகாலன் 'நீதிபதி சீக்கிரம் வந்து விடுவார்' என்று சொல்லிவிட்டு அப்புறம் போய் ஒரு முதியவன் போல் வேஷம் பூண்டு நீதி மன்றத்துக்கு வந்து சேர்ந்தான். அப்போது வழக்காளிகள் தம் வழக்கைத் தெரிவித்துக் கொண்டனர். அவன் நியாயவிசாரணை செய்து தீர்ப்பளித்தான். கேட்டு அவர்கள் மகிழ்ந்து சென்றனர். இச்சரிதம்,

"இளமை நாணி முதுமை யெய்தி
உரை முடிவு காட்டிய வுரவோன்"

என்னும் மணிமேகலைப் பகுதியாலும்,

"உரை முடிவு காணுன்"
என்னும் பழமொழிச் செய்யுளாலும் வெளியாகின்றது.

தன்னியல்பைப் பாராட்டிக் கடியலூருருத்திரங் கண்ண ஞர் பாடிய **பட்டினப்பாலை** யென்னும் நூலைக் கேட்டு அப் புலவர்க்குக் **கரிகால்வளவன்** பதினுறு லக்ஷம் பொன் பரிசளித் தான்; இது, "தழுவு செந் தமிழ்ப் பரிசில்வாணர் பொன், பத்தொ டாறுநூ ருயிரம்பெறப் பண்டு பட்டினப்பாலை கொண்டதும்" என்னுங் கலிங்கத்துப்பரணியால் விளங்கும்.

## நள்ளி

நள்ளி என்று ஓர் அரசன் இருந்தான். அவன் கடை யெழுவள்ளல்களில் ஒருவன். அவனது மலைக்குத் தோட்டி யென்று பெயர். ஒரு புவவர் அவனுடைய மலைநாட்டின் வழியே தம் சுற்றத்தார் சிலருடன் போனுர். தன்னைத் தேடிக்கொண்டு புலவர்கள் வரின், ஓடிவந்து அதைத் தனக்கு அறிவிக்கும்படி அவன் தன் பரிவாரங்களுக்குக் கட்டளையிட்டிருந்தான். புலவர் அங்கே ஒரு மரத்தடியில் வந்திருப்பதை அறிந்து அவன் எதிரே சென்று தான் இன்னுன் என்பதை அறிவியாமலே அவருக்கு உரிய உணவுகளைக் கொடுத்து அவருக்கும் அவருடன் போனவர்களுக்கும் பசிக்களையாறும்படி செய்தான். அவர் உண்ட பிறகு தான் அணிந்திருந்த நவரத்னமாலையையும் கடகத்தையும் அவருக் குக் கொடுத்துவிட்டுப்போய்விட்டான். அப்பொழுதும் தான் இன்னுன் என்பதை அவன் சொல்லவில்லை. பிறகு அங்கிருந்தவர்களைப் பின்தொடர்ந்து சென்று விசாரிக்க அவன்தான் நள்ளி என்று புலவர் தெரிந்துகொண்டு வியப் புற்றுர். அதனைப் பின்வரும் அழகிய செய்யுள் உணர்த்து கிறது:—

"கூதிர்ப் பருந்தி னிருஞ்சிற கன்ன
பாறிய சிதாரேன் பலவுமுதற் பொருந்தித்
தன்னு முள்ளேன் பிறிதுபுலம் படர்ந்தவென்
உயங்குபடர் வருத்தமு முலைவு நோக்கி

மான்கணந் தொலைச்சிய குருதியங் கழற்கால்
வான்கதிர்த் திருமணி விளங்குஞ் சென்னிச்
செல்வத் தோன்றலோர் வல்வில் வேட்டுவன்
தொழுதன னெழுவேற் கைகவித் திரீஇ
இழுதி னன்ன வானிணக் கொழுங்குறை
கானதர் மயங்கிய விளையர் வல்லே
தாம்வந் தெய்தா வளவை யொய்யெனத்
தான்ஞெலி தீயின் விரைவனன் சுட்டுநின்
இரும்பே ரொக்கலொடு தின்மெனத் தருதலின்
அமிழ்தின் மிசைந்து காய்பசி நீங்கி
நன்மர னளிய நறுந்தண் சாரற்
கன்மிசை யருவி தண்ணெனப் பருகி
விடுத்த றொடங்கினே னாக வல்லே
பெறுதற் கரிய வீறுசா னன்கலம்
பிறிதொன் றில்லைக் காட்டுநாட் டேமென
மார்பிற் பூண்ட வயங்குகா ழாரம்
மடைசெறி முன்கைக் கடகமோ டீத்தனன்
எந்நா டோவென நாடுஞ் சொல்லான்
யாரீ ரோவெனப் பேருஞ் சொல்லான்
பிறர்பிறர் கூற வழிக்கேட் டிசினே
இரும்புபுனைந் தியற்றாப் பெரும்பெயர்த் தோட்டி
அம்மலை காக்கு மணிநெடுங் குன்றிற்
பளிங்குவகுத் தன்ன தீநீர்
நளிமலை நாட னள்ளியவ னெனவே'' (புறநானூறு, 150)

வறியவர்களைக் கண்டவிடத்து வேண்டியவற்றைப் பிறர் அறியாமல் அளித்துத் தான் இன்னனென்றும் அறிவியாமல் உபகாரம் செய்வது அருமையிலும் அருமையாகும்.

## குமணன்

வள்ளல்கள் காலத்திற்குப் பிறகு குமணன் என்ற ஒரு சிற்றரசன் இருந்தான். இரவலர்க்கு அவன் வரையாது கொடுத்து வந்தவன். அவன் தம்பி பெரிய உலோபி. அவன் சிலருடன் ஆலோசனை செய்து அரசைக் கைப்பற்றிக் கொண்டு குமணனைக் கொல்ல முயன்றான். அதனால், தன் தம்பியறியாதபடி குமணன் காட்டிற்குப் போய் அங்கு

ஒளித்திருந்தனன். அவனிருந்த இடத்தை அறியாத தம்பி தன் தமையனது தலையைக்கொண்டு வருபவர்களுக்குப் பாதி நாட்டைக் கொடுப்பதாகப் பறை அறிவித்தான். இந்நிலைமையில் ஒரு புலவர் குமணனிருந்த காட்டுக்குப்போய் அவனைக் கண்டு தமது வறுமையைப் புலப்படுத்தி ஒரு செய்யுள் பாடி அவனைக் கேட்பித்தார். தம் வீட்டு அடுப்பில் காளான் முளைத்துவிட்டதாகவும், தன் மனைவி உணவின்மையால் குழந்தைக்குப் பால்கொடுக்க வழியின்றியிருக்கையில் குழந்தை அவள் முகத்தைப் பார்த்ததாகவும், அவள் தம்மைப் பார்த்ததாகவும், அதன் பொருட்டுத் தாம் குமணனைப் பார்க்க வந்ததாகவும் புலவர் அச்செய்யுளில் சொல்லியிருக்கிறார். அது வருமாறு:—

" ஆடுநனி மறந்த கோடுய ரடுப்பின்
ஆம்பி பூப்பத் தேம்புபசி யுழவாப்
பாஅ லின்மையிற் றோலொடு திரங்கி
இல்லி தூர்ந்த பொல்லா வறுமுலை
சுவைத்தொ றழூஉந்தன் மகத்துமுக நோக்கி
நீரொடு நிறைந்த வீரிதழ் மழைக்கணென்
மனையோ ளெவ்வ நோக்கி நினைஇ
நிற்படர்ந் திசினே நற்போர்க் குமண
என்னிலை யறிந்தனை யாயி னிந்நிலைத்
தொடுத்துங் கொள்ளா தமையலெ னடுக்கிய
பண்ணமை நரம்பின் பச்சை நல்யாழ்
மண்ணார் முழவின் வயிரியர்
இன்மை தீர்க்குங் குடிப்பிறந் தோயே" (புறநானூறு, 164)

இதைக்கேட்ட குமணன் தன் கையிற் பொருளில்லையென்றும், தனது தலையை வெட்டிக்கொண்டுபோய்த் தன் தம்பியிடம் கொடுத்து உமது தரித்திரத்தைக் களைந்து கொள்ளலாமென்றுஞ் சொல்லித் தன் வாளைக் கொடுத்து விட்டான். உடனே புலவர், அவன் கையில் இருந்தால் ஏதேனும் விபரீதம் நேரிடும் என்றெண்ணித் தாமே அவ்வாளை வாங்கி வைத்துக்கொண்டு, ''பாடிய புலவன் வாடினன் பெயர்தலென், நாடிழந்த தனினு நனியின்னாது'' என நினைந்த அவன் செயலை வியந்துகொண்டு வேறிடஞ் சென்ற

னர். அவர் சிற்பத்தொழிலிலும் வல்லவர். வாழைக்கிழங் கால் குமணன் தலையென்று நினைக்கும்படி ஒரு தலை செய்து அதற்கு வர்ணங் கொடுத்து ஒரு துணியால் மூடிக்கொண்டு போய்க் குமணனது தம்பியிடம் காட்ட அவன் கண்டு திடுக் கிட்டு மூர்ச்சையுற்று விழுந்தனன். பின்பு எல்லோரும் அவ னுக்குச் சைத்தியோபசாரம் செய்தனர், அதனால் அவன் நினைவுபெற்றுத் தன் செய்கைக்கு வருந்தித் தன் தமையனை உயிர்ப்பித்துக் கொணர்ந்தால் நாடு முழுவதையும் கொடுப் பதாகச் சொல்லிக்கொண்டே யெழுந்தான். புலவர், பிழைப்பிக்கும் ஆற்றல் தமக்கு உண்டென்றும் தமையனை அழைத்துவருவதாகவும் சொல்லிப்போய் நடந்த செய்தி களைக் குமணனிடம் அறிவித்து அவ்விருவரும் சந்திக்கும்படி செய்தார். அவர்கள் நாட்டைப் பெற்றுக் கொள்ளும்படி புலவரைக் கேட்கத் தமக்கு அது பெரும் பாரமென்று அவர் சொல்லித் தமது தரித்திரத்தை ஒழிப்பதற்கு மாத்திரம் வேண்டியவற்றை வாங்கிக்கொண்டு போனாரென்பர்.

இங்ஙனமே பல உபகாரிகளுடைய கொடை முதலிய அரிய செய்கைகள் நூல்களில் மிக நன்றாகப் பாராட்டப் பட்டிருக்கின்றன. அந் நூல்கள் பிரசுரமாகி இருக்கின்றன. அவற்றைப்படித்தால் எல்லாம் விளங்கும்.

## VII. கலைகள்

கலை என்ற சொல்லுக்குப் பல பொருளுண்டு. எல்லா வித்தைகளுமே கலையாகும். வேதங்கள், அவற்றின் அங்கங்கள், சாஸ்திரங்கள் முதலியனவும் கலைகளே. அவை யல்லாத வித்தைகளாகிய கலைகளே இங்கு சொல்லப்படும்.

மந்திரிகளுக்குக் கலைக்கண்ணுளர் என்று ஒரு பெய ருண்டு. கலைகளைக் கண்களாகக் கொண்டமையின், அவர்கள் அப்பெயர் பெற்றனர். பல நூல்களையும் நன்றாக அறிந் திருந்தால்தான் அவர்கள் இராசகாரியங்களைச் செய்ய

முடியும். அரசனை இடித்துரைக்க வேண்டியவர்கள் அவர்களே. ஆகையால் உலகியலை அறிந்தவர்களாகவும் படிப்புள்ளவர்களாகவும் கிழவர்களாகவும் அவர்கள் இருக்க வேண்டும்.

கலைகள் அறுபத்து நான்கென்று சொல்லப்பட்டிருக்கின்றன. குலமகளிர் அறிந்திருக்கவேண்டிய கலைகள் பல. பொதுமகளிர் அறிந்திருக்கவேண்டிய கலைகள் பல. அவை மணிமேகலை முதலிய நூல்களிற் கூறப்பட்டுள்ளன.

" வண்டுமொய்த் தரற்றும் பிண்டி வாமனல் வடித்த நுண்ணூல்
உண்டுவைத் தனைய நீயும்" (271)

என்னும் சீவகசிந்தாமணிச் செய்யுள் குலமகளிர்க் குரிய கலைகளைக் குறிப்பிடுகின்றது.

" வேத்தியல் பொதுவிய லென்றிரு திறத்துக்
கூத்தும் பாட்டுந் தூக்குந் துணிவும்
பண்ணியாழ்க் கரணமும் பாடைப் பாடலும்
தண்ணுமைக் கருவியுந் தாழ்தீங் குழலும்
கந்துகக் கருத்து மடைநூற் செய்தியும்
சுந்தரச் சுண்ணமும் தூநீ ராடலும்
பாயற் பள்ளியும் பருவத் தொழுக்கமும்
காயக் கரணமுங் கண்ணிய துணர்தலும்
கட்டுரை வகையுங் கரந்துறை கணக்கும்
வட்டிகைச் செய்தியு மலராய்ந்து தொடுத்தலும்
கோலங் கோடலுங் கோவையின் கோப்பும்
காலக் கணிதமுங் கலைகளின் றுணிவும்
நாடக மகளிர்க்கு நன்கனம் வகுத்த
ஓவியச் செந்நூ லுரைநூற் கிடக்கையும்
கற்றுத்துறை போகிய பொற்றொடி நங்கை"

(மணிமேகலை, 2: 18—32)

என்பது பொதுமகளிர்க்குரிய கலைகளை விளக்குகின்றது.

## அகத்தியர்

தமிழ்ப்பாஷை மூலமாக அறியப்படும் கலைகளைச் சொல்லும்போது அகத்தியரை முதலிற் சொல்லவேண்டியிருக்கிறது. இயற்றமிழுக்குப்போல் ஏனைத்தமிழுக்கும் ஆசிரியர்

இவரே. இவருடைய மாணுக்கர்களின் தொகை பன்னிரண்டு என்று பரம்பரையாகச் சொல்லப்பட்டு வந்திருக்கிறது. அம் மாணுக்கர்களிற் சிகண்டி என்பார் ஒருவர். அவர் அகத்தியரிடத்திற் சங்கீதத்தைப் பயின்றவர். சிலப்பதிகாரத்திற்கு அடியார்க்குநல்லார் இயற்றிய உரையால் சிகண்டி ஆசிரியர் இசை நுணுக்க மென்னும் நூல் இயற்றியிருந்ததாகத் தெரிகிறது. அகத்தியருக்குச் சமமான சங்கீதவித்துவான் இல்லை. தொல்காப்பிய உரை ஆசிரியரான இளம்பூரணர் இராவணனை அகத்தியர் கந்தருவத்தால் பிணித்ததாகச் சொல்லியிருக்கிறுர். இராவணன் முதலில் தென்னுட்டை ஆண்டானென்றும், பிறகே இலங்கைக்குச் சென்றுனென்றும் தெரிகின்றது. இராவணன் தென்னுட்டை ஆண்டபொழுது பலருக்கும் துன்பஞ் செய்துவந்தான். அகத்தியர் தென்னுடு வந்ததும் அவனை அங்கிருந்து அப்புறப்படுத்த நினைத்து அவன் இசையிற் சிறந்தவனுதலால் அவனைச் சங்கீதப்போருக்கு அழைத்தார். ' பொதியில் மலைக்கல் யாருடைய பாட்டால் உருகின்றதோ அவருக்கு அம்மலைக்கல்லை அங்ஙனம் உருகச் செய்யாதவர் தோற்றவர்; நீ தோற்றுல் தென்னுட்டைக் கொடுத்துவிட வேண்டும்' என்று பேசிக்கொண்டனர். அகத்தியரை முதலிற் பாடும்படி இராவணன் சொன்னுன். அவர் பாடவே மலைக்கல் உருகிற்று. பிறகு இராவணன் பாடினபோது உருகியிருந்த குழம்பும் இறுகிற்று. முன்னுளில் துஷ்டர்களும் சத்தியத்தால் கட்டுப்பட்டிருந்தனராகையால் பேசியபடியே இராவணன் தென்னுடு துறந்து இலங்கைக்குச் சென்று விட்டான். மதுரைக் காஞ்சியில் ''தென்னவற் பெயரிய துன்னருந் துப்பிற், றென்முது கடவுள்'' என்ற இடத்தில் தென்னவன் என்ற சொல் இராவணனை உணர்த்துவதாக நச்சினுர்க்கினியர் எழுதியிருப்பதும், தொல்காப்பியப் பாயிரவுரையில் இச் சரிதம் கூறப்பெற்றிருப்பதும் இங்கே அறியத்தக்கன. தென்னவன் என்றசொல் இராவணனைக் குறியாதென்றும், பாண்டியனையே குறிப்பிடுமென்றும் சிலர் சொல்லுவர். நச்சினுர்க்கினியருரையைத் தேவாரம் ஆதரிக்கிறது. இராவணன் கைலைமலை எடுத்ததைச் சொல்லுங்

கால், ''தென்னவன் மலை யெடுக்க'' என்று சொல்லப்பட் டிருக்கிறது. கல் உருக அகத்தியர் பாடியதைத் தஞ்சை வாணன் கோவை இயற்றிய பொய்யாமொழிப்புலவரும், துறைமங்கலம் சிவப்பிரகாச ஸ்வாமிகளும், பிறரும் பாராட்டி யிருக்கிறார்கள். அகத்தியர் யாருக்குப் பிரதியாகத் தென் றிசை வந்தாரோ அவர் சங்கீதத்திலுள்ள மிக்க பிரீதியால் தம் இரண்டு காதுகளிலும் இரண்டு தோடாக இரண்டு கந்தருவரை வைத்துக் கொண்டிருக்கிறாரென்றும் அவ்விரு வரும் எப்போதும் கானஞ்செய்து கொண்டிருக்கிறார்களென் றும் சிவ புராணங்கள் கூறும். அவ்விருவர் கம்பளர், அசுவதர ரென்பார்;

" தோடுவார் காதன்றே தோன்றாத் துணையையர்
பாடுவா ரோரிருவர்க் கிட்டபடை வீடே"

(திருப்பாதிரிப்புலியூர்க் கலம்பகம், 16)

" காதி லிரண்டுபேர் கண்டோ ரிரண்டுபேர் "

(தில்லைக் கலம்பகம், 8)

இசைத் தமிழ் நூல்களின் பெயர்களையும் நாடகத்தமிழ் நூல் களின் பெயர்களையும் சிலப்பதிகார உரை முதலியவற்றிற் காணலாம். இனி மற்றக் கலைகளைப் பற்றிச் சொல்லுவேன்.

**அளவை நூல்:** அளவை நூல் என்று ஒன்று தமிழி லிருந்ததாகப் பழைய உரைகளால் தெரியவருகின்றது; அதி லுள்ள பாடல்கள் கட்டளைக் கலித்துறைகளாக உள்ளன; அந் நூலில் காண்டல்முதல் சம்பவம் இறுதியாகவுள்ள பத்து அளவைகளின் இலக்கணம் கூறப்பட்டிருத்தல் வேண்டு மென்று கிடைத்த பாடல்கள் தெரிவிக்கின்றன.

**ஆயுர்வேதமாகிய வைத்தியநூல்கள்** தமிழில் அளவிறந் தன உண்டு. அகத்தியரும் சித்தர்கள் பதினெண்மரும் பிறரும் **ஆயுர்வேத நூல்**களை இயற்றி அருளினார்கள். அவற் றிற் பெரும்பாலன இப்போது உள்ளன. ஸம்ஸ்கிருத பாஷை யிலும் ஆயுர்வேத நூல்கள் மிகுதியாக இருக்கின்றன; தமிழ் ஆயுர்வேத நூல் பலவற்றை இன்றும் தஞ்சை அரண்மனை யிலுள்ள ஸரஸ்வதி மஹாலிற் காணலாம். வேறு அநேக

இடங்களிலும் பல காணப்படுகின்றன; கிடைத்திருக்கும் தமிழ் வைத்திய நூல்கள் பலவற்றின் செய்யுள்நடை திருத்த மாகவில்லை என்று நினைத்தற்கிடமுண்டு; ஆயினும் விஷயங் கள் அருமையானவை; மருந்துகளை உட்கொண்டால் வியாதி தீர்தல் உள்ளங்கை நெல்லிக்கனி. அவற்றின் பொருளை ஆசிரியர் முகமாக அறிந்தோர் கிடைப்பது மட்டும் இக் காலத்து மிக அருமையாக இருக்கிறது. ''நீர் சுருக்கி மோர் பெருக்கி நெய்யுருக்கி யுண்பவர்தம், பேருரைக்கிற் போமோ பிணி'' என்று தேரையர் சொல்லியிருப்பது அறியற்பாலது. மலையிலிருக்கிற கல்லை யெடுத்துவந்து தலையில் போட்டால், தலைவலி போமென்று ஒருபாடலில் சொல்லப்பட்டிருக்கிறது. அசந்தர்ப்பமாக இது தோன்றும். ஆனல் தலைவலியை நிவர்த்திக்கக்கூடிய ஒரு செடிக்குக் கல்லையென்பது பெய ரென்று அறியவேண்டும். இங்ஙனமேயுள்ள தமிழ்வைத்திய பரிபாஷைகள் மிக அதிகம்.

மேற்கூறிய ஆயுர்வேத நூலாசிரியர்கள் சொல்லைக் கவனியாமல் பொருளையே பெரிதும் கவனிப்பவர்களென்று சொல்லக் கேட்டிருக்கிறேன். இந்நூல்களின் பெருமையைச் சொல்ல நேரமில்லை. சென்னையில் வேளாள வருணத்தில் **சுப்பிரமணியபண்டிதர்** என்ற சிறந்த வைத்தியர் தேரைய ரியற்றிய நூல்களில் மிக்க பயிற்சியுள்ளவராகச் சென்ற நூற்றுண்டில் இருந்தார். மூலிகைகளின் வேர், தண்டு, இலை, பூ, காய், விதை முதலியவைகளின் குணங்களைப் பற்றிய அறிவு அவருக்கு மிகவுமிருந்தது. மிகவும் ஆச்சரிய கரமான வைத்தியர் அவர். வைத்திய சம்பந்தமான சில நூல்களை அவர் வெளியிட்டுமிருக்கிறுர். வாகடம் என்பது ஒரு நூல். அது வாகடாசாரியார் என்பவரால் இயற்றப் பட்டது. அந்நூல் மிகச் சிறந்ததாக இருந்தமையால், பொதுவாக எல்லா வைத்திய சாஸ்திரங்களையும் வாகட மென்றே பிற்காலத்தில் வழங்கலாயினர்.

**ஆரூடம்** என்பது ஒரு கலை. இது சம்பந்தமாக அநேகம் புத்தகங்கள் உள்ளன. அந்நூல்களிற் சிலவற்றைச் சைனரும்

இயற்றி யிருக்கிறார்கள். ஒருவன் வந்து இன்னமுகமாக உட்கார்ந்தால் இன்னபலன் அடைவான் என்பது முதலியவை அவற்றிற் சொல்லப்பட்டிருக்கின்றன.

**இரத்தின பரீட்சை** முதலியவற்றைக்கூறும் பல நூல்கள் இருந்தனவென்பது சிலப்பதிகார உரை, வேம்பத்தூரார் திருவிளையாடல், கல்லாடவுரை முதலியவற்றிலிருந்து தெரிகிறது. இரத்தின பரீட்சைக்கு நவமணி இலக்கணம் என்றும் பெயருண்டு.

**எண்ணூல் :** இப்பெயருள்ள நூல் ஒன்று இருந்ததாகத் தெரிகிறது. எண்சுவடி, குழிமாற்று முதலியன இன்றும் உள. எண்சுவடியில் ஜின ஸ்தோத்திரமே முதலில் இருந்தது; ஜைனர் அவைகளை யியற்றியிருக்க வேண்டும். நன்னூல் மயிலைநாதருரையில் மேற்கோளாக வந்துள்ள, ''தாதிவர் தாமரைத் தடமல ரொதுங்கிய, ஆதியை வணங்கி யறைகுவ னெண்ணே'' என்பதனால் இப்பெயருள்ள நூலொன்று முற்காலத்தி லிருந்ததாகத் தெரிகிறது.

**ஓவிய நூல் :** சித்திரமெழுதுதலைத் தெரிவிக்கும் நூல்; ஓவியம்-சித்திரம்; ''ஓவியச் செந்நூ லுரைநூற் கிடக்கையும்'' என்பது மணிமேகலை (2:31). ஒருவன் அரசனுடைய அவைக்குச் சென்றான். அங்கே அரசன் தன் மந்திரிமுதலானேரோடு அவையில் உட்கார்ந்திருக்க அவன் கண்டான். ஆனால் அவர்கள் பேசவில்லை, அசையவில்லை. அருகில் சென்று தான் கொண்டுவந்த பழம் முதலிய காணிக்கைப் பொருள்களை நீட்டினான். அரசன் பெற்றுக்கொள்ளவில்லை. அதன்மேல் நெருங்கிச் சென்று பார்க்க அரசனது வடிவமும் மந்திரிகளின் வடிவமும் சித்திரங்களாகச் சுவரில் இருக்கக் கண்டானென்றும் மிகவும் வியப்புற்றானென்றும் சொல்லக்கேட்டிருக்கிறேன். அவ்வளவு சாமர்த்தியத்துடன் சித்திரம் எழுதப் பழகியவர் தமிழ்நாட்டில் இருந்தனர்; "கைபடச் சுவராய்த் தோன்றச் சித்திரங் கவினச் செய்வார்" என்று ஒரு கவி இதனை விளக்கியிருக்கிறார். அரண்மனைகளிலிருந்த ஸ்திரீகள்

வெளியே போகாதவர்களாகையால் அவர்களுக்குக் கடல் காடு மலை அருவி முதலியவற்றைக் காட்ட அரண்மனைத் தோட்டங்களில் கட்டுமலைகள் முதலியன செய்துவைக்கப் பட்டிருந்ததன்றிச் சித்திரங்களும் உரிய இடங்களிற் பண்டைக் காலத்தில் வரையப்பெற்றிருந்தன. இந்நிகழ்ச்சிகள் பலவற்றைப் பெருங்கதை, சீவகசிந்தாமணி முதலியவற்றிற் பரக்கக் காணலாம். மணிமேகலையென்பாள் உபவனத்திற் குட் சென்றபோது அவ்வனம் எப்படி விளங்கிற்று என்பதை வர்ணிக்கையிற் கூறப்பட்டிருக்கும்,

"குரவமு மரவமுங் குருந்துங் கொன்றையும்
திலகமும் வகுளமும் செங்கால் வெட்சியும்
நரந்தமு நாகமும் பரந்தலர் புன்னையும்
பிடவமுந் தளவமு முடமுட் டாழையும்
குடசமும் வெதிரமுங் கொழுங்கா லசோகமும்
செருந்தியும் வேங்கையும் பெருஞ்சண் பகமும்
எரிமல ரிலவமும் விரிமலர் பரப்பி
வித்தக ரியற்றிய விளங்கிய கைவினைச்
சித்திரச் செய்கைப் படாம்போர்த் ததுவே
ஒப்பத் தோன்றிய வுவவனம்" (3:160—69)

என்பதில் வந்துள்ள, "சித்திரப் படாம்" என்பது பலவகை மலர்களும் படத்தில் எழுதப்பட்டவை போல் அவ்வனம் அழகுடையதாய் இருந்ததென்பதைக் குறிப்பிக்கின்றது. இயற்கையை அப்படியே காட்டக்கூடிய சித்திரமெழுதுவோர் முற்காலத்தில் இருந்தனரென்று இதனால் அறியவேண்டும்.

தரிசனத்துக்கு வருவோர் சில நன்முறைகளை எளிதில் அறிந்துகொள்ளும்படி செய்வித்தற்குத் திருப்பரங்குன்றத்தில் முருகக்கடவுளின் திருக்கோயிற் சுவர்களில் சித்திரங்கள் வரையப்பெற்றிருந்தனவென்று பரிபாடலால் தெரிகின்றது. ஸ்தலங்களின் சரித்திரங்களையும் அடியார்களின் சரித்திரங்கள் முதலியவற்றையும் கோயில்களுக்கு வருவோர் அறிந்து உய்யும்படி சோழ அரசர்கள் முதலியோர் ஆலயச் சுவர்களில் அவற்றை ஓவியவடிவமாகப் பண்டைக்காலத்தில் எழுதுவித்திருந்ததை இன்றுங் காணலாம். பல நூற்றுண்டுகளுக்கு முன்னே எழுதப்பெற்றிருந்தும் இப்பொழுது மழையால்

நினைந்துகொண்டிருந்தும் அவை சிறிதும் விளக்கம் குன்று திருத்தல் முன்பு இருந்த கலைஞர்களுடைய தொழிற்றிறத் தைப் புலப்படுத்துகின்றது.

**கரவடநூல் :** கரவடம் - திருட்டு. திருடுதற்குரிய உபாயங்களைச் சொல்லும் நூல்கள் இருந்தன; திருட்டை எதற்காகக் கற்கவேண்டுமெனின் திருடரைக் கண்டுபிடிக் கவே. அந்த நூலை ஒரு முனிவர் இயற்றினராம். அவர் பெயர் கருணீசுதரென்பது. **மதுரைக்காஞ்சியில்** 634ஆம் அடி முதலியவற்றையும் அவற்றின் உரையையும் பார்த்தால் இதன் விவரம் விளங்கும். **சிலப்பதிகாரத்திற்** கொலைக்களக் காதையில் 166ஆம் அடி முதலியவற்றையும் அவற்றின் உரையையும் பார்க்க. நிரபராதியாகிய கோவலன் அரசன் மனைவியின் சிலம்பைத் திருடினவன் என்று தட்டான் அரச னிடத்திற் குற்றஞ்சாட்ட அரசனது உத்தரவின்படி கோவ லனைக் கொலை செய்யச் சென்ற கொலைஞர் அவனது தோற் றத்தைக்கண்டு திருடியிருத்தல் கூடுமோ என்று சந்தேகித்த பொழுது ஒருவன் திருடரியல்புகளை விரிவாகச் சொன்ன னென்று அந்நூலிற் கூறப்பட்டுள்ளது.

**கனாநூல்** என்று ஒன்றுண்டு. மதுரைத் தமிழ்ச் சங்கத்தார் அதனைப் பிரசுரம் செய்திருக்கிறார்கள். இன்ன இன்ன யாமத்தில் இன்ன பொருளைக் கனவிற் காணின் இன்ன இன்ன பலன் விளையுமென்று அந்நூல் சொல்லும். அந்நூல் கட்டளைக்கலித்துறையாலாகியது. அடியார்க்கு நல்லாருரையில் மேற்படி நூற்செய்யுட்கள் மேற்கோள்களாக வந்துள்ளன.

**பரிநூல் :** அஃதாவது அசுவ சாஸ்திரம்; கல்லாடம், வேம்பத்தூரார் திருவிளையாடல், பரஞ்சோதிமுனிவர் திருவிளையாடல் முதலிய நூல்களிலும் அசுவப்பரீட்சை முதலியன சொல்லப்பட்டிருக்கின்றன.

**சித்தராரூட** மென்ற நூல் ஒன்றுண்டு. பாம்புகளின் வேறுபாடுகள், சாதிகள், குணங்கள் அவற்றின் விஷங்களுக்

குப் பரிகாரம் முதலியன அந்நூலிற் சொல்லப்பட்டிருக்கும். அந்தநூல் நச்சினுர்க்கினியருரையில் மேற்கோளாக எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. சிந்துவடிவமாக உள்ளன அந்நூற் செய்யுட்கள்.

**சிற்பநூல் : சிற்பசாஸ்திரம்** பண்டைக்காலத்தில் மகோன்னத நிலைமையை அடைந்திருந்தது. நான் படித்துக் கொண்டிருந்தபொழுது, திருவாவடுதுறையிலும், ஸ்வாமி மலையிலும், திருவிடைமருதூரிலும், திருவீழிமிழலையிலும், பிற ஊர்களிலும் சிறந்த சிற்பிகள் அல்லது ஸ்தபதிகள் இருந்தனர்; பார்த்துப் பழகி யிருக்கிறேன். அவர்களுடைய பயிற்சி மிக ஆச்சரியப்படத்தக்கதாக இருந்தது. இப் போதும் அங்கங்கே சிலர் இருக்கிறுர்கள். நான் கையெழுத் துப் பிரதிகள் தேடிக்கொண்டுபோன காலத்தில் அநேக இடங்களில் தமிழிலும் ஸம்ஸ்கிருதத்திலும் சிற்பநூல்கள் பல இருந்தன. இப்பொழுது கட்டிடங்களின் பல உறுப்புக் களை ஆங்கிலச் சொற்களால் குறிப்பிடுகிறுர்கள். நான் கண்ட சுவடிகளில் எல்லா உறுப்புக்களின் பெயர்களும் தமிழ்ச் சொற்களாகவே யிருந்தன. சிறந்த சிற்பிகளைக் கண்டு கேட்டால் புருஷ வடிவமாகிய பட்டணத்துக்கும், ஊர்களுக்கும், வீடுகளுக்கும் முகம், கண், தலை முதலிய உறுப்புக்கள் எவையோ அவை இன்ன இன்ன இடத்தில் இருக்க வேண்டுமென்பது விளங்கும். திடீரெனத் தோன்றிக் கெடும் நகர்கள், ஊர்கள், வீடுகள் ஆகிய இவற்றின் இலக் கணக் குறைவுகள் இன்னவென்றும் சிற்ப நூல்கள் நன்கு தெரிவிக்கும்,

**சோதிடம் : சினேந்திரமாலை** என்று ஒரு சோதிட நூல் இருக்கிறது. நச்சினுர்க்கினியர் முதலியோருடைய உரை களில் மேற்கோளாக அந்நூற்செய்யுட்கள் வந்துள்ளன. இதுபோன்ற பல நூல்கள் தமிழில் உள்ளன.

**நிமித்த நூல்** என்று ஒன்றுண்டு. தும்மல் முதலிய வற்றின் பலனை உரைக்கும் **சகுனசாஸ்திர** மென்றும் ஒன்றுண்டு.

**துடிநூல் :** இந்நூல் செய்யுள்வடிவமாக இக்காலத்தும் வழங்கப்படுகின்றது.

**இரேகாசாஸ்திரம் :** இப்பெயருள்ள நூலொன்றைச் சில இடங்களிற் பார்த்திருக்கிறேன்.

**பாசண்டம்** என்று ஒரு நூல் இருந்தது; வேதத்திற்கு விரோதமானது பாஷண்டம் எனப்படும். சிலப்பதிகாரத்தில், "பாசண்டச் சாத்தற்குப் பாடு கிடந்தாள்" என்பதன் உரையில் பாசண்டம் என்பது தொண்ணூற்றறுவகைச் சமயச் சாத்திரத் தருக்கக் கோவை என்று அடியார்க்கு நல்லார் எழுதியிருக்கிறார். திவாகரத்திலும் இது சொல்லப் பட்டிருக்கிறது. "பாசண்டத் துறையு மிவற்றுட் பலவாம், பேசிற்றொண்ணூற் றறுவகைப் படுமே" என்பது திவாகரம்.

தெய்வமில்லை என்று தர்க்கித்தல் முதலிய இக்காலத்து வழங்கும் வாதங்களைப் புலப்படுத்தும் நூல்களும் பண்டைக் காலத்தில் இருந்தனவே; அவை **உலகாயதம்** முதலியன.

**புதையல் நூல் :** பூமியில் இன்ன இன்ன இடத்தில் இன்ன இன்ன பொருள்கள் புதைந்து கிடக்கின்றனவென் பது இதனால் அறியப்படும். உதயணனுக்குப் புதையல் நூலிற் பயிற்சியுண்டென்று பெருங்கதையால் தெரிகிறது. தஞ்சா வூருக்குத் தெற்கிலுள்ள **உரத்த நாட்டில்** (முத்தம்பா புரத்தில்) முப்பத்திரண்டு தருமங்களும் புதையல் எடுத்த பொருளைக் கொண்டுதான் தஞ்சை அரசர் ஒருவரால் முற்காலத்தில் வளர்க்கப்பட்டனவென்று கேள்வியுற்றிருக் கிறேன்,

**மடை நூல் :** அஃதாவது பாகசாஸ்திரம்; தமிழில் இருந்தது. சிறுபாணாற்றுப்படையில் அருச்சுனன் அண்ண னாகிய பீமன் செய்த சாஸ்திரமென்று மடை நூலொன்று சொல்லப்பட்டிருக்கிறது. விராடபுரத்தில் இருந்த காலத்தில் பீமன் பாகசாஸ்திரத்தில் தேர்ச்சி பெற்றான் போலும்; **நளபாகம் பீமபாகமென** மடைநூல்கள் இரண்டுண்டென்று பெரியோர் சொல்லுவர்; "மடைநூற் செய்தி" (மணி. 2-22).

**யோக சூத்திரம் :** சிலப்பதிகார உரையில் மிகவும் அழகான யோக சூத்திரங்கள் சில முதனூற்கருத்தைச் சிறிதும் விடாமல் மேற்கோளாக வந்துள்ளன. அந்நூல் கிடைக்கவில்லை.

**யானை நூல்** என்று ஒன்றுண்டு. யானைப்பாகர் பலரிடத்து அதனைப் பார்த்திருக்கிறேன். அதில் யானைகளின் குணமுதலியனவும் பிறவும் அவற்றிற்கு வரக்கூடிய வியாதிகளும் அவற்றின் பரிகாரங்கள் முதலியனவும் சொல்லப்பட்டிருப்பதைக் கவனித்துள்ளேன்.

பண்டைக் காலத்தில் இன்ன சமயத்தில் இன்னது செய்ய வேண்டுமென்று கால வரையறை ஏற்படுத்திக் கொண்டிருந்தனர். நாழிகைப்பறை, சாமப்பறை முதலியன இருந்தன. ஒவ்வொரு நேரத்தையும் அறிவிப்பன அவை. பணிமுடிக்க மணி அடிப்பது வழக்கம். மணி ஓசை கேட்டதும் அவரவர் தத்தம் வேலையை நிறுத்திவிட்டுப் போய் விடுவர்; இது முல்லைப்பாட்டால் தெரிகின்றது. **நாழிகை வட்டில்** இருந்ததென்று அகநானூறு, பெருங்கதை, கம்ப ராமாயணம் என்பவை தெரிவிக்கின்றன.

சண்டமகாசேனனென்பவன், கடிகையாரம் கழுத்திற் பூண்டிருந்தான் என்று பெருங்கதை சொல்லுகிறது; கடிகையார மென்பதிலிருந்தே கடிகாரம் என்ற சொல் வந்தது போலும். யவனர்கள் தம்முடைய நாட்டிலிருந்த சிறந்த சிற்ப வித்தைகளை இந்த நாட்டிற்குக் கொண்டுவந்தனரென்று அந்நூலால் நன்கு தெரிகின்றது. சிந்தாமணியில் இராசமாபுரத்தின் கோட்டையை வர்ணிக்கையில் பகைவர் அணுகாதபடி அக்கோட்டையின்மேற் செய்து வைக்கப் பட்டுள்ள ‘ நூற்றுவரைக் கொல்லி ’ என்னும் பொறி முதலிய பலவற்றைச் சொல்லிவிட்டு, “ இவை யவனர் தாட்படுத்த பொறி ” என்று சொல்லியிருக்கிறார். பல பொறிகள் அதிற் கூறப்பட்டுள்ளன, இளங்கோவடிகள் மதுரையிலிருந்த கோட்டையைப் பற்றிச் சொல்லுகையில், “ பரிவுறு வெந்நெயும் பாகடு குழிசியும், காய்பொன் னுலையுங் கல்லிடு

கூடையும், தூண்டிலுந் தொடக்கு மாண்டலை யடுப்பும், கவையுங் கழுவும் புதையும் புழையும், ஐயவித் துலாமுங் கைபெய ரூசியும், சென்றெறி சிரலும் பன்றியும் பணையும், எழுவுஞ் சீப்பு முழுவிறற் கணையமும் கோலுங் குந்தமும், வேலும் பிறவும், ஞாயிலுஞ் சிறந்து நாட்கொடி நுடங்கும், வாயில்'' என அம்மதிலில் அமைக்கப்பட்டிருந்தனவாகக் கூறும் பொறிகளையும் அவற்றின் இயல்புகளையும் நோக்கும் பொழுது இத்தமிழ்நாடு முன்பு அடைந்திருந்த ஏற்றத்தை நினைந்து வியப்பையும் வருத்தத்தையும் யாருடைய உள்ளமும் அடையாதிராது.

"வான மூன்றிய மதலை போல
ஏணி சாத்திய ஏற்றருஞ் சென்னி
விண்பொர நிவந்த வேயா மாடத்
திரவின் மாட்டிய விலங்குசுடர் ஞெகிழி
உரவுநீ ரழுவத் தோடுகலங் கரையும்''

என்று பெரும்பாணாற்றுப்படையிற் சொல்லப்பட்டிருத்தலால் மகாபலிபுரத்திற் கடலிற் செல்லும் கப்பல்களுக்குத் துறை முகமிருக்கும் இடத்தை இரவிற் காட்டக்கூடிய கலங்கரை விளக்கம் இருந்ததாகத் தெரிகிறது. இந்நாளில் அஃதுள்ள இடத்தை 'லைட் ஹௌஸ்' என்கிறோம். ஓடு கலங்கரையு மென்பதற்குக் கடலிற் போகும் கப்பல்களை அழைக்கு மென்பது பொருள். காவிரிப்பூம் பட்டினத்துள்ள விளக்குகள், "இலங்குநீர் வரைப்பிற் கலங்கரை விளக்கமும்' எனச் சிலப்பதிகாரத்திற் கூறப் பெற்றுள்ளன.

'' மண்ணுற வாழ்ந்த மணிநீர்க் கிடங்கின்
விண்ணுற வோங்கிய பல்படைப் புரிசை
தொல்வலி நிலைஇய வணங்குடை நெடுநிலை
நெய்படக் கரிந்த திண்போர்க் கதவின்
மழையாடு மலையி னிவந்த மாடமொடு
வையை யன்ன வழக்குடை வாயில்
வகைபெற வெழுந்து வான மூழ்கிச்
சில்காற் றிசைக்கும் பல்புழை நல்லில்
யாறுகிடந் தன்ன வகனெடுந் தெருவிற்
பல்வேறு குழாஅத் திசையெழுந் தொலிப்ப''

என்று **மதுரைக்காஞ்சி**யில் (351-60) சொல்லப்பட்டிருப் பதிலிருந்து பல இட விசேடங்களை அறியலாம்.

மேற்காட்டின பாட்டில் போர்க்கதவென்றிருப்பதற்கு இரட்டைக் கதவென்பது பொருள். காலபேதத்தால் இந் நாளில் வையை வற்றிக் கிடப்பது போலல்லாமல் அக்காலத் தில் எப்பொழுதும் தண்ணீர் நிரம்பி இருந்ததாகத் தெரி கிறது. பட்டணங்களின் அழுக்குநீரைக் கண்ணிற் படாமற் செலுத்துதற்கு, 'கரந்துபடை' என்பதொன்று இருந்தது. அது தெருநடுவிற் கட்டப்பட்டு யானை விழுந்துவிடாதபடி கருங்கல்லால் மூடப்பட்டிருக்கும். அந்நீர்சென்று அகழியில் விழுந்துவிடும். அங்ஙனம் நீர் விழுவதற்குக் கட்டிய ஒருறுப் பிற்கு யானைத் துதிக்கையை உவமம் கூறியிருக்கிறார்.

திருப்பரங்குன்றத்துள்ள குமரவேள் கோயிலின் பக்கத் திற் சித்திரச் சாலையொன்று இருந்தது. கோயில்களுக்குப் போவோர்களுக்கு நல்ல புத்தியைப் புகட்டக்கூடிய சித்திரங் கள் அதில் எழுதப் பெற்றிருந்தன. இந்திரன் அகலிகையை விரும்பிப் பூனையானது, சாபமடைந்தது, அகலிகை கல் லானது முதலியவற்றைச் சித்திரங்கள் மூலம் ஞாபகப்படுத்திய தாகப் பரிபாடல் தெரிவிக்கின்றது. காவிரிப்பூம்பட்டினத்தில் ஒரு பூந்தோட்டத்திற் பளிக்கறை மண்டபம் ஒன்று இருந்த தாக மணிமேகலையிற் சொல்லப்பட்டிருக்கிறது. கண்ணாடி மண்டபமே அது. தன்னுட் புகுந்தோரின் உருவத்தைமட்டும் அது வெளிக்காட்டும்; ஆனால் அவர்களுடைய சொற்களை வெளிவிடாது என்று கூறப்பட்டிருக்கிறது. இதனாற் கண்ணாடி வழியாக ஒலி செல்லாதென்பதைப் பண்டைக் காலத்தாரும் அறிந்திருந்தமை விளங்குகின்றது.

சிரமச்சாலைகள் இருந்தன. அவை கருடிக் கூடங்களே. மல் யுத்தம், முஷ்டி யுத்தம் முதலியன அங்கே கற்பிக்கப் பட்டன. பழைய திருவிளையாடற் புராணத்தில் அவைகளைக் கருடிக் கூடமென்றே சொல்லிவிட்டார். அதிற் கூறப்படும் யுத்தபரிபாஷைகள் இக்காலத்திற் கேட்கப்படவில்லை.

வெளவானத்தி என்ற ஒருவகை மண்டபம் அக்காலத்திற் கட்டப்படுவதுண்டு. மேலே இருட்டாக இருக்குமாகையால் வெளவால் அவைகளை நத்திச் செல்லும். ஆகையால் வெளவானத்தி என்று அதற்குப் பெயருண்டாயிற்று. திருவீழிமிழலையில் வேலைப்பாட்டில் மிகச்சிறந்த வெளவானத்தி ஒன்றிருக்கிறது; அதைப்போன்ற மண்டபத்தை வேறு எங்கும் காண்பது அரிது. திருமீயச்சூரிலும் திருச்சத்தி முற்றத்திலும் அதுபோன்ற மண்டபங்கள் இருந்தன. இப்போது அவை இடிந்து விழுந்துகிடக்கின்றன.

யந்திரவாவிகளிருந்தன; வேண்டியபொழுது நீரைப் பெருக்குதற்கும் குறைத்தற்கும் எந்திரங்கள் அவற்றில் அமைக்கப் பட்டிருக்கும். அவற்றைச் சூழ்ந்த சோலைக்கு இலவந்திகையென்று பெயர்.

ஆறுகளைக் கடத்தற்குப் பலவகையான ஓடங்களிருந்தன; "பரிமுக வம்பியுங் கரிமுக வம்பியும், அரிமுக வம்பியும்" என்பது சிலப்பதிகாரம்; அம்பி-ஓடம்.

பலவகையான வண்டிகள் இருந்தன; அவற்றின் பெயர்கள் சிலப்பதிகார முதலியவற்றாலறியலாகும். எருது பூட்டப்படாமல் எந்திரத்தாலேயே இயங்கும் வண்டியும், நாண்மீன்கள் ஒன்பது கோள்கள் முதலியவற்றின் உதயாஸ்தமனங்களைத் தெரிந்துகொள்ளுதற்குரிய பொறி மண்டலத்தையும் பிறவிசேடங்களையுமுடைய வண்டிகளும், தாமரை மலர் போன்ற வண்டிகளும், பல வகையான மாடச் சிவிகைகளும், மிக்க விம்மிதத்தை விளைவிக்கும் நீர் மாடங்களும், நீர் விளையாட்டிற்குரிய பலவகை யந்திரக் கருவிகளும், பிறவும் இருந்தனவென்று பெருங்கதை தெரிவிக்கின்றது.

வாசவதத்தை கருப்பமுற்று ஆகாய வழியே சென்று பொதியில் மலை முதலிய பல இடங்களையும் பார்க்க விரும்பிய பொழுது, உரியவர்களைக்கொண்டு செய்விக்கப்பெற்ற எந்திர விமானத்தில் உதயணன் முதலியவர்களுடன் ஏறிச் சம்புத் தீவிலுள்ள பல இடங்களையும் அதிலிருந்தே பார்த்து வந்தன

ளென்று பெருங்கதை கூறுதலால் மனிதர் ஏறிச் செல்லுதற்குரிய ஆகாய விமானமும் அக்காலத்திலிருந்ததென்று தெரிகிறது.

வாழைக்குருத்தினுல் விசித்திரமான சிற்ப வேலைகளைச் செய்வதுண்டென்றும், மலர்களைக்கொண்டு எழுத்து வடிவமாக அலங்கரிப்பதால் ஒருவர் கருத்தை ஒருவருக்குத் தெரியப்படுத்திக் கொள்வதுண்டென்றும், அந்நூல் கூறும். இன்னும் பல அருமையான வித்தைகளை யவனரிடமிருந்து தமிழர் அறிந்திருந்தனர்; இன்னும் சொல்ல வேண்டிய விஷயங்கள் இவைபோல்வன பல உள்ளன.

## VIII. பண்டை உரையாசிரியர்கள்

தொல்காப்பியம், எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, பதினெண்கீழ்க்கணக்கு, ஐம்பெருங்காப்பியம் முதலியவைகளின் உரையாசிரியர்களைப்பற்றிச் சொல்லுவேன்.

தொல்காப்பியத்துக்கு உரைசெய்தவர்கள் இளம்பூரணர், பேராசிரியர், சேனுவரையர், நச்சினுர்க்கினியர், கல்லாடர், தெய்வச்சிலையார்.

குறுந்தொகைக்குப் பேராசிரியரும் நச்சினுர்க்கினியரும் உரைசெய்தனர். ஐங்குறுநூற்றுக்கு உரை செய்தவர் பெயர் தெரியவில்லை. பரிபாடலுரையாசிரியர் பரிமேலழகர். அகநானூற்றின் முதல் 90-பாடல்களுக்கும் புறநானூற்றுக்கும் பழைய உரை உண்டு. உரையாசிரியர்கள் பெயர் தெரியவில்லை.

நாலடியாரில் அதிகாரங்களை வகுத்தவர் பதுமனுர்; அதற்கு அப்பதுமனுரும் வேறு சிலரும் செய்த உரைகளுண்டு. குறளுக்குத் தருமர் முதல் பதின்மர் உரை செய்திருக்கின்றனர்; அவர்களுள் பரிமேலழகர் உரை சிறப்புடையது.

சீவகசிந்தாமணிக்கு உரை செய்தவர் நச்சினார்க்கினியர். அவருக்கு முன்பு ஒருவர் உரை செய்திருந்ததாகத் தெரிகிறது. சிலப்பதிகாரத்துக்கு அரும்பத உரையாசிரியரும் அடியார்க்கு நல்லாரும் உரை இயற்றினர். யாப்பருங்கலக் காரிகைக்கு உரையியற்றியவர் குணசாகரர். நன்னூலுக்கு மயிலைநாதர், சங்கரநமச்சிவாயர் முதலியோர் உரையியற்றினர். நேமி நாதத்திற்கு உரை யொன்றுண்டு. வீரசோழியத்துக்கு உரை இயற்றியவர் பெருந்தேவர். **வச்சணந்திமாலைக்கு** உரையொன்றுண்டு; உரையாசிரியர் பெயர் தெரியவில்லை. நீலகேசிக்கு விருத்தியுரை இயற்றியவர் சமயதிவாகரவாமன முனிவர். சைவ வைஷ்ணவ நூல்களுக்கு உரையியற்றிய வர்கள் அநேகர்.

நூலாசிரியர்களைக் காட்டிலும் உரையாசிரியர்கள் பாஷையில் மிக்க பயிற்சி யுள்ளவர்களென்பதும் மிக்க உப காரிகளென்பதும் ஒரு சாரார் கொள்கை. தாம் அறிந்த வற்றை யாதொரு தடையுமின்றிச் சொல்லழகு பொருளழகு களை அங்கங்கேயமைத்து ஒன்பது சுவைகளுள் ஏற்றவற்றை அங்கங்கே புலப்படுத்திக்கொண்டு செய்யுள் செய்துகொண்டு செல்லுவார் நூலாசிரியர்.

உரையாசிரியர்கள் நூலின்பொருளை நூலாசிரியர்பால் நேரே அறிந்தவர்களாயிருப்பின் அந்நூற் கருத்தை விளங்கத் தெரிவித்தலில் அவர்களுக்கு அதிக வருத்த மிராது. அங்ஙனம் தெரிந்து கொள்ளாமல் இருந்தால் கருத்தைத் தெரிந்து கொள்ளுதலிலும் இன்னதற்குப் பொருள் இன்னதென்றும் இதற்கு ஆதாரம் இன்னதென்றும் ஆராய்ச்சி செய்தலிலும் அதற்காகப் பல நூல்களைப்படித் தலிலும் காலப்போக்கும் அதிக வருத்தமும் அவர்களுக் குண்டாகும். நடுவுநிலைமையை யுடையராயிருத்தல் உரை யாசிரியருக்கு இன்றியமையாததென்று பெரியோர் கூறுவர். அவர் பல சமய நூல்களையும் பல கலைகளையும் முறையே கற்று உலக வழக்கத்தையும் நன்கறிந்திருத்தல் வேண்டும். கல்வியுடன் கேள்வியிலும் சிறந்திருத்தல் வேண்டும்.

ஒரு மதத்திற்குரிய நூலுக்குப் பரம்பரையாக வேறு மதத்தைத் தழுவிய புலவர்கள் உரை செய்வாராயின் தம் முடைய கொள்கையை அடியோடே மறந்துவிட்டு நூலா சிரியர் கொள்கையையே மனத்தில் வைத்துக்கொண்டு பொருளெழுதவேண்டும். அந்நூற்கருத்து தம்முடைய மதக் கொள்கைக்கு முரணுக இருந்தாலும் சலிப்பின்றி அதையே நன்கு விளக்கவேண்டும்.

ஆராய்ந்து பார்க்குமிடத்தில் இவையே பண்டையுரை யாசிரியர்களின் இயல்பென்று தெரிகின்றது. நூலாசிரியர் பால் உண்மைப் பொருளை அறிந்து கொள்ளாதவர்களுக்கு உண்டாகும் துன்பத்திற்கும் ஒரு செய்யுளுக்கு உரிய பொருளை யொழித்துவிட்டுத் தமது கருத்தின்படியே பொருள் செய்தவருடைய பெரு முயற்சி பயன்படாமற் போனதற்கும் உதாரணங்கள் அநேகங்களுள்ளன.

அவற்றுள், யான் கண்கூடாக அறிந்த இரண்டை இங்கே சொல்லுவேன்.

''ஊறுதெரி தலுந்தவிர்ந்தோ ருடம்புதளி யுட்புகுந்து, மாறுதவிர் காரோண வள்ளலா ரெதிர்நின்று, வேறுமல ரிலைபுனைந்து வேண்டு பலன் களுமுதவிப், பேறுதவு சிவ மேயாய்ப் பிறங்கிவிடை மேற்கொளுமே.'' இச்செய்யுள் மகாவித்துவான் ஸ்ரீ மீனுட்சிசுந்தரம் பிள்ளையவர்களியற்றிய திருநாகைக்காரோணப் புராணத்துள்ள செய்யுட்களுள் ஒன்று. இது துவசஸ்தம்ப வர்ணனை.

அப்புராணத்தைப் பிள்ளையவர்களுடைய மாணுக்கரிற் சிறந்த ஒரு பண்டிதர் ஒரு கனவானுக்குப் பாடஞ் சொல்லி வந்தனர். வருகையில் மேற்படி செய்யுளுக்கு அந்தப் பண்டிதர் கூறிய உரை அந்தக் கனவானுக்குச் சரியென்று தோற்றவில்லை. அதனுற் பிள்ளையவர்களைச் சந்தித்தபொழுது அந்தப் பிரபு, ''இச்செய்யுளுக்குப் பொருளென்ன?'' என்று கேட்ட காலத்தில் அவர்கள், ''பாடஞ் சொல்லுகிறவர் இதற்கு என்ன பொருள் கூறினுர்?'' என்று கேட்டார்கள்.

''அவர் சொல்லியது சிறிதும் பொருத்தமாகத் தோற்றுமையால் நான் மனத்திற் கொள்ளவில்லை'' என்று அக்கனவான் சொன்னதுடன் விரைவில் சரியான பொருளைத் தெரிந்து கொள்ளவேண்டுமென்று விநயத்துடன் விண்ணப்பஞ் செய்து கொண்டனர். பிள்ளையவர்கள் அச்செய்யுளின் பொருளை விளங்கச் சொல்லிவிட்டுப் பேசிக்கொண்டிருக்கையில் இயல்பாகவே முன்பு பாடஞ்சொல்லிய பண்டிதர் அங்கே வந்து பிள்ளையவர்களைக் கண்டு அச்சக்குறிப்புப் புலப்படும்படியாக அஞ்சலி செய்துவிட்டு அவர்களுடைய குறிப்பின்படி அயலிலிருந்து சௌக்கியத்தை விசாரித்துக்கொண்டிருக்கையில், பிள்ளையவர்கள், ''இச்செய்யுளுக்கு நீ கூறிய பொருள் யாது?'' என்று கேட்டபொழுது தம்முடைய அறியாமையை இவர்கள் தெரிந்துக்கொண்டார்களென நாணமுற்று ''பொருள் விளங்காதபடி நீங்கள் இப்படிப் பாடலாமா? யாருக்கு விளங்கும்? உலகத்துக்கு இப்படிப் பாடுவது என்ன பயனை அளிக்கக் கூடியது? அவசியம் பாடவேண்டி நேரிட்டால் அச்செய்யுளின் பொருளை யெழுதிக் கீழே குறித்திருத்தல் வேண்டுமன்றோ?'' என்று கடுஞ்சொற்கள் சொல்லத் தொடங்கி விட்டனர். இவர்கள் என்ன சமாதானஞ் சொல்லியும் அவர் கேட்கவில்லை.

மற்றொன்று: ''திருமாலுக்கடிமை செய்'' என்னும் நீதிவாக்கியத்திற்குப் பரமசிவனுக் கடிமைசெய் என்று வலிந்து பொருள் செய்துகொண்டு அதை வற்புறுத்தற்காக வினாவிடையாகத் தொடுத்து இருநூறு பக்கத்திற்குக் குறையாதபடி வசன நடையாக நூலொன்றெழுதி அதனை அச்சிற் பதிப்பிக்க நினைந்து ஒரு பண்டிதர் சிறப்புப் பாயிரம் பெறுவதற்கு ஒருவரிடம் வந்தனர். வசன நடை மிகத்திருத்தமாகவே இருந்தது. கேட்டுக்கொண்டிருந்த இங்கிலீஷ் தர்க்க வித்துவான் ஒருவர், ''திருமாலென்பதற்குப் பரமசிவன் என்ற அர்த்தம் தமிழில் எங்கேனும் பிரயோகம் கண்டதுண்டா? இருந்தாற் சொல்லவேண்டும். இல்லாவிட்டால் இவ்வளவும் பயனில்லை'' என்று சொல்லவே, அவர் அதற்கு

ஆதாரஞ் சொல்வதற்கு நெடு நேரம் யோசித்துப் பார்த்தும் ஒன்றுந் தோன்றாமையால் அப்புத்தகத்தை வாங்கிக் கொண்டு சென்றனர். அப்பால் அதை வெளிப்படுத்தவில்லை.

தொல்காப்பியத்திற்கு மேற்சொல்லியபடி அறுவருரைகள் இப்போது உள்ளன.

''ஒல்காப் பெருந்தவத் தொல்காப் பியமுனி, தன் பெயரானுல கின்புறத் தருநூல், உளங்கூருரையா மிளம்பூரணமும், ஆனா வியல்பிற் சேனாவரையமும், உச்சிமேற் புலவர் கொள் நச்சினார்க் கினியமும், மற்றுமற் றிடப் பொருள் முற்று முணர்ந்து'' என்னும் **இலக்கணக்கொத்துப்** பாயிரத்தால் இளம்பூரணம், சேனாவரையம், நச்சினார்க்கினியம் என்னும் இம்மூன்றுரைகளே தொல்காப்பிய மூலத்தோடு சில இடங்களில் சில நூற்றாண்டுகளுக்கு முன் வழங்கி வந்தனவென்று தெரிகின்றது. இம் மூன்றுரையன்றிப் பேராசிரியர், கல்லாடர், தெய்வச் சிலையாரென்பவர்களும் அந் நூலுக்கு உரைசெய்திருக்கிறார்களென்று சில ஆதாரங்களால் தெரியவருகின்றது. இவற்றிற் சில பாகங்கள் இப்போது கிடைக்கின்றன. இந்த ஆறு உரைகளில் இளம்பூரணரும் பேராசிரியரும் நச்சினார்க்கினியரும் செய்த உரைகளே தொல்காப்பிய முழுமைக்குமுள்ளன.

சேனாவரையர், கல்லாடர், தெய்வச்சிலையார் என்னும் மூவரும் சொல்லதிகாரத்திற்குச் செய்துள்ள உரைகள் இப்போதுள்ளன. கல்லாடர் இயற்றிய உரைமுற்றும் கிடைக்கவில்லை.

**இளம்பூரணர் :** இவர் தொல்காப்பியத்துக்கு முதலில் உரைசெய்தவராக நினைக்கப்படுகிறார். அதனால், இவர் உரையாசிரியரென்ற பெயரானும் வழங்கப்படுவர். மூவாயிர வருடங்களுக்கு முன்னர்த் தோன்றிய தொல்காப்பியத்திற்கு இவர்காலம் வரையில் உரை இராமலிராதென்றும் சுருக்கமாக ஏதேனும் ஒருரை இவர் காலத்திற்கு முன்பு இருந்திருக்கவேண்டுமென்றும் சிலர் கருதுவதுண்டு. இளம்

பூரணவடிகளென்றும் அடிகளென்றும் புலவுத்துறந்த பெரியோரென்றும் பேராசிரியர் அடியார்க்கு நல்லார் முதலியோரால் இவர் பாராட்டப் பெறுவர். நன்னூல் மயிலைநாதருரை இவருரையைத் தழுவியே இயற்றப்பெற்றதென்று விளங்குகின்றது. மயிலைநாதர், ''பெயர் வினையும்மை'' என்னும் சூத்திரவுரையிற் பத்தெச்சங்களையுங் கூறிவிட்டு, ''இஃது ஒல்காப்புலமைத் தொல்காப்பியத்துள் உளங்கூர் கேள்வி யிளம்பூ ரணரெனு மேதமின் மாதவரோதிய வுரையென் றுணர்க'' என்று எழுதியிருத்தலால் இவர் பெருமை நன்கு விளங்கும். ஆனாலும் உரையாசிரியரென்று சிறப்புப் பெயர் வாய்ந்தவர் இவர்க்கு முன்பு வேறொருவர் இருந்திருக்கக்கூடுமோ என்று சில பெரியோர்கள் எண்ணுவதுண்டு. அவ்வையம் மிக ஆராய்ந்து நீக்கற்பாலது.

இளம்பூரணருடைய உரையாற் பழைய நூற்பெயர்களிற் சில தெரியவந்ததன்றிச் சில பழைய செய்யுட்களின் சுத்தமான முழுவடிவமும், சில பாடல்களின் சிதைந்த பகுதிகளும் விளங்க வெளிப்பட்டதுண்டு.

**பேராசிரியர் :** இவர் நச்சினார்க்கினியருக்கு முந்தியவர். நச்சினார்க்கினியர் இவரை மிகவும் பாராட்டிக் கூறுவர். தொல்காப்பிய மெய்ப்பாட்டியலுக்கும் உவமவியலுக்கும் இவர் எழுதிய உரையும் காட்டிய மேற்கோள்களும் அவற்றை விளக்கிய பகுதிகளும் அறிந்து மிக இன்புறற்பாலன. குறுந்தொகையில் முதல் 380-பாடலுக்கும் இவர் உரையெழுதியிருந்தார்; இப்போது அது கிடைக்கவில்லை. திருச்சிற்றம்பலக் கோவையாருக்கும் இவர் உரை எழுதியிருக்கின்றனர்; அஃது இப்போது உளது. இவர் காட்டியிருக்கும் உரை நயங்கள் மிகப் பாராட்டற் பாலன.

**சேனாவரையர் :** இவர் வடமொழியிலக்கணம் நன்கு கற்றவர். ஸ்ரீ சிவஞான யோகிகள் முதலியோர்களால் மிகவும் பாராட்டப் பெற்றவர். ஆக்ஷேப சமாதானங்களோடு கூடி மிக அழகாக இருக்கும் இவருரை.

**நச்சினார்க்கினியர் :** இவர் சரித்திரம் சீவகசிந்தாமணி, பத்துப்பாட்டு முகவுரைகளில் மிகவிரிவாக எழுதப் பெற்றுள்ளது. இவருரையில் 82-பழையநூல்கள் மேற்கோள்களாக எடுத்துக் காட்டப்பெற்றுள்ளன. குறுந்தொகையிற் பேராசிரியர் உரையெழுதா தொழிந்த 20-பாடல்களுக்கு இவர் உரையியற்றினார். இவருடைய உரை நயங்கள் சீவகசிந்தாமணி முதலிய நூல்களின் உரையிற் பல காணப்படும்.

திருக்கோவையாருக்குப் பேராசிரியர் இயற்றிய உரையும் கல்லாடத்திற்குத் திருநெல்வேலி மயிலேறும் பெருமாள் பிள்ளை செய்த உரையும் நச்சினார்க்கினியருரையென்று கருதப்பட்டு வந்தமையும் பதினெண் கீழ்க்கணக்குக்களுள் சிலவற்றின் உரைகள் நச்சினார்க்கினியர் உரையென்றே பதிப்பிக்கப்பட்டு வந்தமையும் பலர் அறிந்தனவே.

**கல்லாடர் :** இவர் வேறு; சங்கப் புலவராகிய கல்லாடர் வேறு; கல்லாடம் என்னும் நூலை இயற்றிய புலவர் வேறு.

**இறையனார் அகப்பொருளு**க்கு இப்பொழுதுள்ள உரை நக்கீரரால் இயற்றப்பட்டதன்று. சிலப்பதிகாரப் பாடல்கள் அதில் மேற்கோள்களாக வந்துள்ளன. ஆகையால் நக்கீரர் அதை இயற்றியிருக்க மாட்டாரென்று நினைக்கிறேன். அவர் மாணாக்கர் பரம்பரையில் உரை மட்டும் வந்ததென்று தோற்றுகின்றது; மேற்கோள்கள் பிற்காலத்து ஒருவரால் சேர்க்கப்பட்டிருக்கவேண்டும்.

பதினெண்கீழ்க்கணக்குக்களில் நாலடியார்க்கு உரையியற்றிய பதுமனார் நாலடியாரில் திருக்குறளிற்போல அதிகாரம் வகுத்தவர். குடத்துக்குள் யானையைப் புகுத்துவது போற் பல பாடல்களைச் சில அதிகாரங்களில் அவர் புகுத்தியிருக்கிறார். பதினெண்கீழ்க்கணக்குக்களில் மற்றவற்றிற்கும் திருத்தமான பழைய உரைகளுண்டு. கீழ்க்கணக்கிற் குறளைச் சேர்க்கக் கூடாதென்று சிலர் சொல்வர். தன்மையால் குறள் உயர்ந்ததானாலும் அடியளவாற் குறைந்தது. அதனாலேயே அது கீழ்க்கணக்குக்களுடன் சேர்க்கப்பட்டுள்ளது. குறளுக்

கும் நச்சினுர்க்கினியருரை இருந்ததாகச் சொல்வார்கள். இருக்கும் உரைகளுள் பரிமேலழகர் உரையே சிறந்ததாகக் கொள்ளப்பட்டிருக்கிறது.

**ஏலாதி** என்பது சைனர் இயற்றிய நூல். அது பாடமாக வைக்கப்பட்டபொழுது அதன் காப்பிலுள்ள, "அறுநால்வர்" என்பதற்கு அவரவர் மனம் போனபடி முன்பு உரையெழுதி வந்தார்கள். 24-அட்சரங்களையுடைய காயத்திரியை ஜபிப்பவர் என்பதும், காமக் குரோதங்களை நீக்கிய நால்வர் என்பதும், பத்து ஆழ்வார்களென்பதும், பற்றற்ற சைவசமயாசாரியர் நால்வரென்பதும், பிறவும் அவர்கள் எழுதிய உரைகள். இவற்ருல் ஐயமுற்றுப் பொருளுண்மை காணுமல் வருந்திய ஒருவருக்குக் கும்பகோணத்தில் ஒரு சைனர் வீட்டிலிருந்த திருக்கலம்பகக் காப்பின் உரையிலிருந்துதான் "அறுநாலவர்" என்பது 25-தீர்த்தங்கரர்களைக் குறிப்பிடுவது என்று விளங்கிற்று.

பரிமேலழகர் குறளுக்கும் பரிபாடலுக்கும் உரை இயற்றினுரென்று முன்பு சொன்னேன். நச்சினுர்க்கினியருக்கு அவர் முந்தினவர். "வண்புகழ் நிறைந்து வசிந்து வாங்கு நிமிர் தோள்" (**திருமுருகாற்றுப்படை**, *106*) என்புழி, 'வசிந்து' என்பதற்குப் பிளந்து என்று பொருள் கூறி, படைக்கலங்களாற் வடுப்பட்டென்று பொருளுரைத்தல் இறைவனுதலிற் பொருந்தாதென்று விசேட வுரையுமெழுதிய ஆசிரியர் நச்சினுர்க்கினியர் மறுப்பு, "வாண்மிகு வயமொய்ம்பின்" (**பரிபாடல்**, *9 : 57*) என்பதற்கு வாட்டழும்பு நெருங்கிய வெற்றி மொய்ம்பென்று பரிமேலழகர் பொருளெழுதியதைச் சுட்டியதாயின், இவர் இந்நூலுக்கு உரையியற்றிய காலம், அவர் பத்துப்பாட்டிற்கு உரையியற்றிய காலத்திற்கு முற்பட்டதென்று கொள்ளலாம்.

சிலப்பதிகாரத்திற்கு உள்ள அரும்பதவுரை மிகவும் சிறந்த உரையாகும். அடியார்க்கு நல்லார் அரும்பத உரையாசிரியருரையை மேற்கோளாகக் காட்டியிருத்தலால் அரும்

பதவுரையே முற்பட்டதாகும். அடியார்க்கு நல்லார் உரை அதிசயமான உரை. நாடகநூல், இசைநூல் முதலியவை களிலிருந்து மேற்கோள்கள் காட்டியிருப்பதால் அந்நூல்கள் அவர் காலத்தில் இருந்தன என்று தெரிகிறது. மற்ற உரை யாசிரியர்கள் போலன்றிப் பெரும்பாலும் மேற்கோள் காட் டும் இடங்களிலெல்லாம் இஃது இன்ன நூலென்ருவது இன்ன நூலாசிரியர் வாக்கு என்ருவது அடியார்க்குநல்லார் புலப் படுத்திச் செல்லுவார். இவருடைய உரையிலிருந்தே பெருங் கதை என்னும் ஒரு காவியமுண்டென்று நான் அறிந்தேன்.

**அவிநய நூலுரையாசிரியர் : மயிலைநாதர்,** "இந்தப் பத்தெச்சமும், புவிபுகழ் புலமை யவிநய நூலுட் டண்டலங் கிழவன் தகைவருநேமி யெண்டிசை நிறைபெயரிராசபவித் திரப் பல்லவ தரையன் பகர்ச்சி" (**நன்னூல், சூ.** 359-உரை) என்று எழுதியிருப்பதிலிருந்து அவிநயநூலின் உரை ஆசிரியர் பெயர் வெளியாகின்றது.

தண்டியலங்கார உரை அநபாய சோழன் காலத்தில் இயற்றப்பட்டதென்று அந்நூலினுரையிலுள்ள மேற்கோள் களால் தெரியவருகின்றது. அந்நூலுரையாசிரியர் பெயர் விளங்கவில்லை.

வீரசோழிய உரையாசிரியர் பெருந்தேவனுர்; பழைய இலக்கணச் சூத்திரங்களும் பழைய இலக்கியச் செய்யுட்களும் அவ்வுரையில் நிறைந்துள்ளன. அவ்வுரையிற் காணப்படும் மேற்கோள்கள் பல இக்காலத்திற் கிடைக்கவில்லை.

**தக்கயாகப்பரணி உரையாசிரியர் :** இவர் பெயர் தெரிய வில்லை ; எல்லா இயல்புகளிலும் அடியார்க்கு நல்லாரைப் போன்றவர். இவருடைய உரையினுல் இவர் இருமொழிகளி லும் சிறந்த புலமை வாய்ந்தவரென்று தெரிகின்றது.

**நீலகேசி விருத்தி சமயதிவாகரம் :** இது நீலகேசி யென் னும் சைனநூலினுரை ; இவ்வுரையாசிரியர் சமய திவாகர வாமன முனிவரென்பார் ; இவருடைய பிம்பம் சைன காஞ்சி

யில் உள்ளது. அருமையான பதப் பிரயோகங்களை அவ்வுரை தன்பாற் கொண்டது ; அரிய விஷயங்கள் பலவும் இக்காலத்திற் கிடைத்தற்கரிய சில நூல்களின் பெயர்களும் அதனுல் தெரியவருகின்றன.

சைவ சாஸ்திரங்களின் உரையாசிரியர் மறைஞான சம்பந்தர் முதலியோர். அவர்களில் மிகச் சிறந்த உரையாசிரியர் திருவாவடுதுறை யாதீனத்து ஸ்ரீ சிவஞான யோகிகளென்பது யாவருமறிந்ததே.

திவ்யப் பிரபந்த உரை ஆசிரியர்கள் ஸ்ரீ பெரியவாச்சான் பிள்ளை, நஞ்சீயர் முதலியவர்கள். அவர்களுடைய உரையில் ஒரு பாடலுக்கு உரை கேட்டுவிட்டால் மனம் வேறொன்றிற் செல்லாது.

# IX. சங்ககாலத்திற்குப் பிறகு தமிழை ஆதரித்த பிரபுக்களும் புலவர்களும்

இன்று சொல்ல எடுத்துக்கொண்ட விஷயம் சங்ககாலத்திற்குப் பிறகு தமிழை ஆதரித்த பிரபுக்களும் புலவர்களும் என்பது. இன்று வரையில் தமிழை ஆதரித்து வந்திருக்கிற பரம்பரையில் தோன்றிய ஸ்ரீ சேதுமன்னர் அவர்கள் இங்கே வந்திருப்பது பொருத்தமுடையதே. சங்க காலத்திற்குப் பிறகும் முடிமன்னர்கள் இருந்தனர். அவர்களும், சிற்றரசர்களும், மந்திரிகளும், சேனைத் தலைவர்களும், இராசப் பிரதிநிதிகளும், பிராமணர்களும், வைசியர்களும், வேளாளர்களும், மடாதிபதிகளும், வித்துவான்களும், பிறரும் தமிழை ஆதரித்து வந்திருக்கிறார்கள். உணவிலுள்ள அறுசுவையினும் தமிழிலுள்ள நவரஸம் சிறந்தன என்றவர்கள் பலர். அறுசுவை அற்றசுவை என்றும், தமிழ்ச் சுவை கேட்கக்கேட்கப் புதிது புதிதாக இருத்தலால் நவரஸமென்பது பொருத்தமுடையது என்றும் சொல்வார் சிலர்: (நவம்-புதுமை). ''சொற்பாவும் பொருடெரிந்து தூய்மை நோக்கித்

தூங்காதார் மனத்திருளை வாங்கா தானை'' என்று கீழ் வேளூர்த் தேவாரத்தில் திருநாவுக்கரசுநாயனுர் கட்டளை யிட்டிருக்கின்றனர் சொல்லிற்பரவியிருக்கும் பொருளையறிந்து அதன் தூய்மையை நோக்கி இன்பத்தை அனுபவிக்கிறவர் களின் அஞ்ஞானத்தை வாங்குகிறவன் என்பது இதன் பொருள்; ''ஆயுந்தொறுந்தொறு மின்பந்தருந்தமிழ்'' என்று ஸ்ரீ கச்சியப்ப முனிவரும் சொல்லியிருக்கிறுர்; ''நவிறெறு நூனயம் போலும் பயிறெறும், பண்புடையாளர் தொடர்பு'' என்று திருக்குறளிற் சொல்லியிருப்பதும் இங்கே கவனிக்கத் தக்கது; ''உள்ளுதோ றுள்ளுதோ றுள்ளுவமு துறைக்கும், திருமுத்தமிழ்'' என்பது கல்லாடம்.

புலவர்களை ஆதரித்த பிரபுக்கள், அவர்களிடங் குற்றங்களிருப்பினும் அவற்றைக் கவனிக்க மாட்டார் கள். ஆயினும் சில சமயங்களில் வித்துவான்கள் பிரபுக்களை மதியாது பேசுவதுமுண்டு. கம்பர் ஒரு சமயத்தில் சோழராசனைப் பார்த்து, ''மன்னவனு நீயோ'' என்று அலட்சியமாகச் சொன்னதுண்டு. வெளிப் படையாகச் சொல்லாமல் நூற்களிற் குறிப்பாகவும் காட்டு வர்; ஒரு புலவர் அரசனுக்குச் செலுத்தவேண்டிய இறை யைச் செலுத்தாமையால் அவரைப் பிடித்துச் காவிரிப்பூம் பட்டினத்துச் சிறைக்குக் கொண்டுபோனுர்கள். வழியில், திருப்புகலூரில் அவர் பூசைசெய்ய அனுமதி பெற்றனர். அவர் தங்கிய இடம் திருக்கோயிற் பக்கத்துள்ள ஓர் அரச மரத்தின் கீழிருந்த ஸ்ரீ விநாயகர் சந்நிதி. அப்பொழுது அவ் விநாயகர் மீது அவர் இயற்றிய ஒரு பாடலில் தம் துன்பத் தைக் குறிப்பிட்டார். கோவில் திருப்பணி செய்துகொண் டிருந்த ஓர் உருத்திரகணிகை அதை அறிந்து புலவர் செலுத்த வேண்டிய இறையைச் செலுத்தி அவரை மீட்டு அவர் பாடிய பாடலைக் காப்பாக வைத்துக்கொண்டு ஓர் அந்தாதி பாடும் படி செய்தாள். அந்நூலே திருப்புகலூரந்தாதியென்பது. ஒரு புலவர் ஒரு நூலை இயற்றி அதை அரங்கேற்றப் பலரிடம் போய்ப்போய் அலுத்துப்போனுர். உள்ளொன்று புறம்

பொன்று பேசுகிறவர்கள்பாற் பலகாலுஞ்சென்ற பாவம் எப்பொழுது தொலையுமென்று அவர், ''திறம்பாவமென்று குறிப்பார் மனைதொறுஞ் சென்றுழன்ற, மறம்பாவமென்று மறிதரும்'' என்று தொடங்கும் ஒரு பாட்டை இயற்றித் தமது வருத்தத்தைத் தெரிவித்திருக்கின்றனர்.

பிற்காலத்திலுங்கூடப் பிரபுக்கள் ஒவ்வொருவரும் தமிழ்ப்புலவர்களை ஆதரித்து வந்ததால் தமிழ்க்கல்வி வளர்ச்சி அடைந்தது. ஆயினும் சில சமயங்களில் புலவர்களின் பெருமையை அறியாத பிரபுக்களுமிருந்ததுண்டு. கலிங்கத்துப் பரணி பாடிய சயங்கொண்டாரிடம் சோழன் ஒரு சமயத்தில் மதிப்பு வையாமலிருந்தான். மிகப் புகழ் பெற்றவர்களுங் கூட மிடியால் வருந்தினதுண்டு. கம்பர் தரித்திரத்தின் கொடுமையை நன்கறிந்தவர் என்பது கங்கையைக் கடந்த ஸ்ரீராமன் தன் தம்பி பர்ணசாலை கட்டியதைப்பற்றிச் சொல்லியிருப்பதாகப் பாடியிருப்பதிலிருந்து விளங்குகிறது.

ஒட்டக்கூத்தர் என்ற புலவர் விக்கிரம சோழன், குலோத்துங்கசோழன், இராசராசசோழன் ஆகிய மூவர் காலத்திலும் இருந்தவர். அம்மூவரையும் அவர் பாடி யிருக்கிறார். சிவபக்திமான்; திருப்பணிகள் பல செய்வித்தார்; குலோத்துங்கனுடைய ஆசிரியராகவும் இருந்தார்.

சேக்கிழார் அநபாய சோழன் காலத்தில் இருந்தவர். பெரிய புராணத்தை இயற்றும்படி அவரை அவ்வரசன் கேட்டுக்கொண்டான். புராணத்தில் அவர் அவனைப் பாராட்டியிருக்கிறார். அவருடைய முயற்சியினால் பல தர்மங்களை அரசன் செய்வித்தான். திருநாகேச்சுரத்தில் சேக்கிழார் பிம்பமும் அவர் பெயருடைய மண்டபம் ஒன்றும் இருக்கின்றன. சேக்கிழார் அவதரித்த குன்றத்தூரில் திருநாகேச்சுரமென்னும் ஆலயமொன்று அவராற் கட்டுவிக்கப்பட்டது. தொண்டை நாட்டில் சேக்கிழாருக்கு விசேட அன்பு உண்டு. பெரிய புராணத்தில் திருக்குறிப்புத் தொண்ட நாயனார்

புராணத்தில் தொண்டை நாட்டின் சிறப்பை மிக விரிவாக வர்ணித்திருக்கிறார். திருவாவடுதுறை ஸ்ரீ சிவஞானயோகிகள் அதை மிகவும் பாராட்டியுள்ளார்.

சடையப்பர் என்ற பிரபுவால் கம்பர் ஆதரிக்கப்பட்டார் என்பதும் அவர் வெண்ணெய் நல்லூரிலிருந்தார் என்பதும் எல்லோருக்கும் தெரிந்தவை. அந்த வெண்ணெய் நல்லூரைப்பற்றிப் பலர் பலவாறு சொல்லுகிறார்கள். குற்றாலம் ரெயில்வே ஸ்டேஷனுக்கு வாயுமூலையிலுள்ள வெண்ணெய் நல்லூரே சடையப்பவள்ளல் இருந்த ஊர். நாயனார் என்ற பட்டம் ஒருவகை வேளாளர்க்குச் சோழ நாட்டில் வழங்கி வருகின்றது. அது பிறகு நயினார் என்று மருவிவிட்டது. சோழநாட்டு வேளாளர்களுக்குரிய 64 கோத்திரங்களில் சடையப்ப நயினார் கோத்திரம் என்று ஒரு கோத்திரத்திற்குப் பெயர் இருக்கிறது.

இவ்வுபகாரியைக் கம்பர் இராமாயணத்திற் பல இடங்களிற் பாராட்டியிருக்கிறார். வெண்ணெய்ச் சடையன் புகழ் போல் நிலாப்பரவியதென்றும், நளன் எந்த மலையையும் அலட்சியமாகத் தாங்கியது சடையன் தஞ்சமென்றவரைத் தாங்குவதுபோலிருந்ததென்றும், வெண்ணெய் நல்லூரை அடைந்தவர்களின் பசி நீங்குவதுபோல் நாகபாசம் நீங்கியதென்றும், இன்னும் வேறு பலவாறாகவும் சடையப்பரை அவர் புகழ்ந்திருக்கிறார்.

கம்பர் பாண்டிநாட்டிற்குப் போயிருந்தபோது பாண்டியன் அவரை மதிக்கவில்லை என்றும், பிறகு அவனுடைய பெருந்தேவியாரின் வேண்டுகோளால் அவரைக் கௌரவப்படுத்தினான் என்றும் தெரிகிறது. அந்த அரசி கல்வி கேள்விகளில் விசேஷ ஞானம் பெற்றிருக்க வேண்டும்.

கொங்குநாட்டில் தலைக்காடு என்ற இடத்தில் கங்கர்கள் என்ற ஒருவகையரசர்கள் இருந்தார்கள். அவர்கள் புலவர்களை ஆதரித்து வந்தார்கள். தளக்காடு என்பது பிற்காலத்

தில் தலைக்காடு என்று வழங்கப்படுகிறது. நன்னூல் இயற்றிய பவணந்தியாரை ஆதரித்த சீயகங்கன் அந்தக் கங்கர்களில் ஒருவனே. அவர்கள் சைனர்கள். நன்னூல், அதற்குரிய மயிலைநாதர் உரை, நேமிநாதம், யாப்பருங்கலம், யாப்பருங்கலக் காரிகை, நம்பியகப் பொருள், இவற்றின் உரைகள், பெருங்கதை, வச்சணந்திமாலை முதலியன அவர்கள் இயற்றுவித்த நூல்களாகும். சீவகசிந்தாமணியும், சூளாமணியும் சில உபகாரிகள் வேண்டுகோளால் சைன பண்டிதர்கள் இயற்றிய காப்பியங்களே.

களந்தைப் புகழேந்தியைச் சந்திரன்சுவர்க்கி என்ற அரசன் ஆதரித்தான். நளவெண்பாவில் சில இடங்களில் இவர் அவனைப் புகழ்ந்திருக்கிறார். இவருடைய ஊர் பொன் விளைந்த களத்தூர் என்றும், முதுகளத்தூர் என்றும், சோழ நாட்டுள்ள களப்பாழ் என்றும் பலவாறு சொல்லுகிறார்கள். முதுகளத்தூராக இருக்கலாமென்பதே சிலர் துணிபு. களந்தை யென்பது மரூஉமொழி.

தஞ்சைவாணன் கோவை பாடிய பொய்யாமொழியாரை ஆதரித்த பிரபுவாகிய தஞ்சைவாணனென்பவர் பாண்டியனிடத்தில் மந்திரியாகவும் சேனைத் தலைவராகவும் இருந்தவர். இங்கே தஞ்சை என்பது சோழ நாட்டுத் தஞ்சாவூர் அன்று. பாண்டிநாட்டில் தஞ்சாக்கூர் என்று ஓர் ஊர் இருக்கிறது. அதுவே அந்தத் தஞ்சை. பொய்யாமொழிப் புலவர் மதுரைக்குப் போனபோது பொற்றாமரையிற் பண்டைக் காலத்திற் போடப்பட்ட சங்கப்பலகை மிதந்து மேல் வரும்படி பாடவேண்டுமென்று அங்கேயிருந்த பாண்டிய அரசன் கேட்டதாகவும், ''பூவேந்தர் முன்போல்'' என்ற பாட்டை அவர் பாடியதாகவும் சங்கப்பலகை வெளிப்பட்டதாகவும் சொல்வர். பொய்யாமொழியார்மேல் முருகக் கடவுளே பாடியிருப்பதாகவும் சொல்வர். அவரை ஆதரித்த அரசூர்ச் சீனக்கன் என்னும் பிரபு இறந்தவுடன் அதைப் பொறாமல் அவரும் உயிர் துறந்தார். கோப்பெருஞ்சோழன்

இறந்ததும் பிசிராந்தையார் அப்படியே உயிர் துறந்தாரென்பது இங்கே அறியற்பாலது.

அம்பர்ச் சேந்தன் என்ற பிரபு ஒருவர் இருந்தார். திவாகர முனிவரைக்கொண்டு திவாகரம் இயற்றுவித்தவர் அவரே. அதனாலேயே இந்நூல் சேந்தன் திவாகரம் என்று வழங்கலாயிற்று. ஔவை பாடிய அம்பர்ச் சேந்தன் என்றும் இவர் பாராட்டப்பெற்றுள்ளார். இந்த அம்பர், பூந்தோட்டம் ரெயில்வே ஸ்டேஷனுக்கு அருகிலுள்ளது. கோச்செங்கட் சோழனால் திருப்பணி செய்யப்பட்டதும் தேவாரம் பெற்றதும் ஆகிய சிவாலயமொன்று அங்கே உண்டு. திவாகரமே முதல் நிகண்டாகும். பிங்கலம் அதற்குப்பின் இயற்றப்பட்டது.

ஊற்றுமலை மருதப்பத்தேவர் என்ற பிரபு ஒருவர் இருந்தார். கல்விச்சுவையை உணர்ந்தவர். சங்கர நமச்சிவாயப் புலவரைக்கொண்டு நன்னூலுக்கு ஓர் உரை செய்வித்தார்.

திருநெல்வேலியில் மயிலேறும் பெருமாள் பிள்ளை என்று ஒரு வேளாளப்பிரபு கல்வி கேள்விகளில் மிகச் சிறந்தவராக இருந்தார். கல்லாடம் என்னும் நூலுக்கு அவர் உரை இயற்றினார். நச்சினார்க்கினியர் இயற்றிய உரை என்று ஒரு காலத்தில் தன்னை அது நினைக்கச் செய்தது. அவரிடத்திலேதான் இலக்கணக்கொத்துச் சுவாமிநாததேசிகர் கல்வி கற்றார். தேசிகர் அவரைப் பெரிதும் பாராட்டியிருக்கிறார்.

திருவண்ணாமலையில் பிரபுடதேவர் என்று ஓர் அரசர் இருந்தார். அவர் திருப்புகழ் பாடிய அருணகிரிநாதரை ஆதரித்தவர்.

வக்கபாகை என்னும் ஊரிலிருந்த வரபதியாட்கொண்டான் என்னும் உபகாரி பாரதம் பாடிய வில்லிபுத்தூராழ்வாரை மிக்க அன்புடன் ஆதரித்தவரென்பது யாவரும் அறிந்ததே.

தாகந்தீர்த்த செழியன் என்று ஒரு பிரபு சின்னச் சேலத்தில் இருந்தார். அந்தகக்கவி வீரராகவ முதலியார் முதலியோரை அவர் ஆதரித்தார்.

அரியிலூரில் கிருஷ்ணைய ஒப்பில்லாத மழவராயர் என்று ஒரு பிரபு இருந்தார். அவர் பல புலவர்களை ஆதரித்தவர்; சங்கீதத்திலும் பிரியமுடையவர்.

வரதுங்கராம பாண்டியர், அதிவீரராமபாண்டியர் என்ற இருவரும் பெரிய தமிழபிமானிகள்; புலவர்களை ஆதரித்தவர்கள். அவர்கள் பெரிய பண்டிதர்கள். அவர்களே நூல்களும் இயற்றினுர்கள். வரதுங்கராம பாண்டியர் மனைவியாரும் தமிழில் பாண்டித்தியம் பெற்றவர். அவரும் சில பாடல்களை இயற்றியுள்ளார்.

இராமநாதபுர அரசர்கள் பரம்பரையாகத் தமிழை ஆதரித்து வந்திருக்கிறுர்கள். அவர்கள் தமிழ்ப் புலவர்களுக்குச் சம்மானமாக ஒவ்வொரு காலத்திற் கொடுத்த கிராமங்கள் இன்னும் வழிவழியாகப் புலவர்களால் அனுபவிக்கப்பெற்று வருகின்றன. ரகுநாத சேதுபதி என்பவர் காலத்தில் அநந்த கவிராயர், அமுத கவிராயர் என்று இரண்டு புலவர்கள் இருந்தனர். அமுதகவிராயர் இயற்றிய ஒருதுறைக்கோவை அரசர் முன் அரங்கேற்றப்பட்டபோது ஒவ்வொரு பாட்டுக்கும் ஒவ்வொரு பொன்தேங்காய் கொடுக்கப்பட்ட தென்பர்; ஒரு பாட்டு மற்றப் பாட்டுக்களைவிடச் சுவையுள்ளதாக இருந்ததாம். அந்தப் பாட்டுக்காகக் கொடுக்கப்பட்ட பொற்றேங்காயும் அதிக விசேடமுடையதாக உள்ள மாணிக்கத்தைப் பெற்றிருந்ததென்பர்.

மதுரைப் பதிற்றுப்பத்தந்தாதி அநந்த கவிராயர் பாடினது. மானூர் என்னும் ஊர் அதற்குப் பரிசாக ஒரு சேதுபதியரசராற் கொடுக்கப்பட்டது. இவர் மானுக்குக் கலை வேண்டாமா என்றபோது கலையூரென்ற ஓர் ஊரும் அவ்வரசரால் இவருக்குக் கொடுக்கப்பட்டதாம்.

சவ்வாதுப் புலவர், சர்க்கரைப் புலவர் முதலிய வேறு சில புலவர்களும் ஸ்ரீ சேது ஸமஸ்தானத்தில் இருந்தனர். சேது புராணம் பாடியவர் நிரம்ப அழகிய தேசிகர். அவர் துழாவூர் மடத்துத் தலைவர்.

மிதிலைப் பட்டியைச் சேர்ந்த 22½ கிராமங்கள் அழகிய சிற்றம்பலக் கவிராயரென்பவருக்கு மேற்கூறிய சேதுபதிகளாலும் வெங்களப்ப நாயகரென்பவராலும் நன்கொடையாகக் கொடுக்கப்பட்டன.

கவிகுஞ்சரம் என்ற பெயருடைய பிராமண பண்டிதர் இருவர் இருந்தனர்; ஒருவர் பாட்டனார்; மற்றவர் அவருடைய பேரர். பேரராகிய கவிகுஞ்சரபாரதி கந்தபுராணக் கீர்த்தனையை இயற்றினார்.

செந்நெற்குடி சுப்பராயரென்ற ஒரு மாத்துவப் பண்டிதர் இருந்தார். அவர் விஷ்ணு புராணத்தைச் செய்யுள் வடிவமாக இயற்றினார். வெண்பாப்புலி என்ற பட்டம் பெற்ற கவி ஒருவர் இருந்தார். இவர்களும் வேறு பல புலவர்களும் சேதுபதி மன்னர்களாலும் அவர்களுடைய நாட்டிலுள்ள பிரபுக்களாலும் ஆதரிக்கப் பெற்றவர்கள். இப்பொழுது இங்கே வந்து வீற்றிருக்கும் சேதுபதி அரசரவர்களும் பல வருடங்களாகத் தமிழின் அபிவிருத்திக்குச் செய்துவரும் உதவி மிகப் பாராட்டற்பாலது.*

சொக்கம்பட்டி ஜமீன்தார்களும் மேலகரம், செங்கோட்டை, கிருஷ்ணபுரம் முதலிய இடங்களிலிருந்த வித்துவான்களை ஆதரித்து வந்திருக்கிறார்கள்.

எட்டயபுர அரசர்களும் மிக்க தமிழபிமானிகள். அந்தச் சமஸ்தானத்திலிருந்த கடிகைமுத்துப் புலவர் இறந்து போகும் தறுவாயிலிருந்தபோது வருந்திய தமது மக்களை

* தமிழ்ச்சுவையை நன்கறிந்தனுபவித்தும், வித்துவான்களை யாதரித்து ஊக்கமளித்தும் வந்த ஸ்ரீ. பா. இராஜராஜேசுவர சேதுபதி மகாராஜா அவர்களாகிய இவர்கள் தேக வியோகமடைந்தமை தமிழ் படித்தவர்களுக்கு மிக்க வருத்தத்தை விளைவித்து வருகின்றது.

நோக்கி, ''வருந்தாதீர்கள்; இந்த ஓரப்பன் போனுல் எட்டப்பன் இருக்கிறுன்'' என்ருராம். பால் கசந்தால் மரணம் நெருங்கிவிட்டதென்று நினைப்பது வழக்கம்; அப்புலவருக்குப் பாலைக்கொடுத்து அவருண்ணுமையைக் கண்டு பால் கசந்துவிட்டதோவென்று கொடுத்தவர் கேட்டபோது, ''பாலும் கசக்கவில்லை, அதை வடிக்கட்டின துணியும் கசக்கவில்லை'' என்று சொன்னுராம். மரண காலத்திலும் அவருக்கிருந்த அறிவாற்றல் இதனுல் விளங்குகிறது.

பாண்டிநாட்டுள்ள வேம்பத்தூர் என்பதற்குக் குலசேகர சதுர்வேதி மங்கலம் என்று ஒரு பெயருண்டு. குலசேகர சதுர்வேதி பாண்டிய ராஜாவால் பிராமணத் தமிழ்ப் பண்டிதர்களுக்கு இது சுரோத்திரியமாகக் கொடுக்கப்பட்டது. இதில் 2008 பிராமணர்களுடைய வீடுகள் இருந்தன. எல்லோரும் தமிழ்ப் பண்டிதர்களே. இவர்கள் பிற புலவர்களை ஆதரித்ததுமுண்டு. தமிழ்க்கவிகளாகிய சிற்றரசர்களிற் சிலர் இவ்வூரார் சிலரிடத்துப் பாடம் கேட்டவர்களென்றும் தெரிகின்றது. பாகவதமியற்றிய செவ்வைச் சூடுவாரும் பழைய திருவிளையாடலியற்றிய பெரும்பற்றப் புலியூர் நம்பியும் வேம்பத்தூரார்களே. வேம்பத்தூரார் திருவிளையாடலின் முகவுரையைப் படித்துப் பார்த்தால் இவ்வூராருடைய பிரபாவம் நன்கு விளங்கும்.

பிற்காலத்தில் மடங்கள் தமிழ்ப்புலவர்களைப் பெரிதும் ஆதரித்து வந்திருக்கின்றன. அவற்றுள், திருவாவடுதுறை மடம், தருமபுரம் மடம், திருப்பனந்தாள்மடம், காஞ்சி ஞானப்பிரகாசர் மடம், மதுரைத் திருஞானசம்பந்தர் மடம், திருநெல்வேலியைச் சார்ந்த செங்கோல் மடம் முதலியவைகளும், கும்பகோணம், சிதம்பரம், திருவண்ணுமலை, துறையூர், மயிலம் முதலிய இடங்களிலிருந்த வீரசைவ மடங்கள் முதலியவைகளுமே முக்கியமானவை. திருவாவடுதுறையில் ஆதீனகர்த்தராக எழுந்தருளியிருந்த மேலகரம் ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகரவர்கள் மகாவித்துவான் ஸ்ரீ மீனுட்சிசுந்தரம் பிள்ளை அவர்களை ஆதரித்துப் பாடஞ் சொல்லுவித்தும்,

தாமே பாடஞ் சொல்லியும் பலரை முன்னுக்கு வரச்செய்தார்கள். ஈசான தேசிகர், சிவஞான யோகிகள், கச்சியப்ப முனிவர், தொட்டிக்கலைச் சுப்பிரமணிய முனிவர் முதலியவர்கள் இவ்வாதீனத்தவர்களுள் மிக்க தமிழ்ப்புலமை படைத்தவர்கள். சிவஞான யோகிகளுடைய பெருமை யாவரும் அறிந்ததே.

தருமபுரம் மடத்தில் மிகச் சிறந்த கல்விமான்களாக விளங்கிய புலவர் பலர். கந்தபுராணச் சுருக்கம் இயற்றிய சம்பந்த சரணாலய முனிவரும், துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் முதலியவர்களுக்குத் தொல்காப்பியம் பாடம் சொன்ன வெள்ளியம்பலவாண முனிவரும், சீகாழி சிதம்பர நாத முனிவர் முதலியவர்களும் இவ்வாதீனத்தைச் சார்ந்தவர்களே.

திருப்பனந்தாள் மடத்தை ஸ்தாபித்தவர் கவிஞர் சிகாமணியாகிய ஸ்ரீ குமரகுருபர சுவாமிகளென்பது யாவருக்கும் தெரிந்ததே.

வெங்கனூர் அண்ணாமலை ரெட்டியார் என்பவர் துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் முதலியவர்களை ஆதரித்தவர்.

தீராத வினைதீர்த்த திருமேனி கவிராயர் என்பவர் ஆழ்வார் திருநகரியில் ஸ்ரீ சடகோபாழ்வார் சந்நிதியிலேயே இருந்து ஆநந்தத்துடன் பல நூல்களியற்றி வாழ்ந்தவர். இவரைப்போலவே இவர் பரம்பரையினர் பலரும், இவ்வூரிலும் இதனைச் சார்ந்த ஸ்ரீ வைகுண்டம் வெள்ளூர் முதலிய ஊர்களிலும் இருந்த பல கவிராயர்களும், அவர்கள் பரம்பரையினரும் தமிழ் மடந்தைக்கு அணிகலமாகப் பல நூல்களை இயற்றினார்கள். ஆழ்வார் திருநகரியில் சுப்பிரமணிய தீட்சிதரென்ற ஒரு பெரிய பண்டிதரிருந்தார். அவர் 'பிரயோக விவேகம்' என்ற இலக்கண நூலையும் அதற்கு உரையையும் இயற்றினார்; அவர் வடமொழி தென்மொழி நூல்களில் மிக்க பயிற்சி யுடையவரென்பது அந்நூலாலும் உரையாலும் நன்கு விளங்கும்.

திருநெல்வேலிச் சீமையை ஆண்ட வடமலைப் பிள்ளையன் என்பவர் மச்ச புராணமும் திருநீடூர்ப் புராணமும் இயற்றினுர்.

திருநெல்வேலியில் ஒரு பெரிய அதிகாரியாக முன்பு விளங்கிய திருவேங்கட நாதையரென்பவர், திருவாரூர் ஸ்ரீ வைத்தியநாத தேசிகரைக்கொண்டு இலக்கண விளக்கமென்ற பெரியதோர் இலக்கண நூலை இயற்றுவித்ததன்றித் தாமே தமிழிற் பிரபோதசந்திரோதயமென்ற காப்பிய முதலியவற்றையு மியற்றி யிருக்கின்றனர்.

காஞ்சிபுரம் மணியப்ப முதலியார், குளத்தூர்ச் சிதம்பர முதலியார், தொட்டிக்கலைக் கேசவ முதலியார், வேதாசல முதலியாரென்பவர்கள் திருவாவடுதுறைச் சிவஞான யோகிகளையும் கச்சியப்ப முனிவரையும், சுப்பிரமணிய முனிவர் முதலியவர்களையும் ஆதரித்துப் பெரிய தமிழ்க் காப்பியங்களையும் பிரபந்தங்களையும் செய்வித்துப் புகழ்பெற்றுர்கள்.

இதுகாறும் கூறிவந்த புலவர்களுடைய வரலாறுகள் விரைவிற் கூற நேர்ந்தமையின் காலவரையறைப்படி அமைத்துச் சொல்லப்பட்டன அல்ல.

## X. ஆராய்ச்சி

ஆராய்ச்சி அனுபவத்தைப் பொறுத்தது. சுவடிகளைப் பிரதி செய்வித்து ஒப்பு நோக்கி ஒழுங்கு செய்தல் முதலியனவும் ஆராய்ச்சியில் அடங்கும். நான் படித்தபோது திருவாவடுதுறை ஆதீன கர்த்தர்களாக இருந்த மேலகரம் ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகர் அவர்கள், மேற்படி ஆதீன வித்துவான் ஸ்ரீமான் மீனுட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள், கும்பகோணம் காலேஜ் தமிழ்ப் பண்டிதராக இருந்த ஸ்ரீமான் தியாகராச செட்டியார் அவர்கள் முதலியவர்கள் எனக்குச் சொன்ன விஷயங்களையும் பிறகு நான் அறிந்த விஷயங்களையும் சொல்லுவேன்.

ஒரு நூலை அப்படியே பிரதி செய்யக்கூடியவர்கள் இந் நாளிலில்லை. முன்னுளில் அவ்வியல்பையுடையோர் ஒவ்வோர் ஊரிலுமிருந்தனர். சுவடியைக் கண்டால் இக்காலத்தில் ஓட்டம் எடுக்கிறுர்கள். நான் கும்பகோணம் காலேஜிலிருந்த போது சுவடிகளைப் படிக்கவும் கடிதத்தில் அவற்றைப் பிரதி செய்யவும் மாணவர்கள் பழகி வந்தார்கள். அன்புடைய வர்களுக்கே அந்த வேலையைச் செய்வது சாத்தியம். ஒப்பு நோக்கும்போது சரியாக இருக்கிறதா என்று கேட்டால் அன்பில்லாதவர்கள் சரியென்று சொல்லிவிடுவார்கள். சிந்தா மணியைப் பரிசோதிக்கையில் நான் படித்த ஒவ்வொரு வரியும் பாட்டும் சரியாக உள்ளனவென்றே ஓய்வில்லாமல் ஒருவர் சொல்லிக்கொண்டிருந்தார். அவர்பால் ஐயமுற்றுச் சிந்தாமணியிலிராத வேறு நூலிலுள்ள பாட்டொன்றைச் சொல்லிச் சரியாக இருக்கிறதா என்று கேட்டேன். அவர் சரியென்று மிக்க துணிவாகச் சொன்னுர். அதன் பின் அவரை மெல்ல விலக்கிவிட்டேன்.

சுவடிகளில் மூலம் இன்னது, உரை இன்னது என்று தெரியாமலிருக்கும். ஒற்றைப்புள்ளி இரட்டைப்புள்ளி முத லிய அடையாளங்களே இரா. நச்சினர்க்கினியர், " சான்றோ னுக்குதல் தந்தைக்குக் கடனே என்றுர் பிறரும் " என்று எழுதிவிடுவார். அது மேற்கோளென்பதும் இன்ன நூலி லிருந்து எடுக்கப்பட்டதென்பதும் விளங்கா. 'கொற்றுறைக் குற்றில்போல' என்று மாத்திரம் உரையில் காணப்பட்டால் என்ன செய்வது? சில உரையாசிரியர்கள் மேற்கோளைக் கூறி விட்டு ஆசிரியர் பெயரைச் சொல்லாமல் நூற்பெயரை மாத் திரம் சொல்லுவதுண்டு. பத்துப் பாட்டுரையிலிருந்துதான் பரிபாடல் என்ற நூலை அறிந்துகொண்டேன்.

கனகமாலையாரிலம்பக உரையில், 'கொற்றுறைக் குற் றில்போல' என்பது காணப்பட்டது. அதிலிருந்துதான் புற நானூற்றிற்கு உரை இருப்பதை அறிந்தேன். உரையைக் கொண்டு மூலத்தையும் மூலத்தைக் கொண்டு உரையையும் பல சமயங்களில் அறிந்து கொண்டதுண்டு.

ஸ்ரீமான் சி. தியாகராச செட்டியார் கண்டவாதி. ஒருவர் நன்னூலையும் உரையையும் தமது மனம்போனவாறே குறைத்து 200 சூத்திரங்களை நீக்கி அச்சிட்டுப் பாடமாக வைக்கும்படி அவருக்கு அனுப்பியிருந்தார். நன்னூற் பாடஞ் சொல்லுதலில் அவருக்கு விசேஷ பாண்டித்யம் இருந்தது. குறிப்பிட்ட பதிப்புக் கிடைத்ததும் அதைப் பார்த்துவிட்டுக் கிழித்தெறிய வேண்டுமென்று அவர் சொன்னார். பதிப்பித்தவர் தரங்கம்பாடியிலிருந்த ஒரு கனவான். அங்கிருந்து அவர் ஒருநாள் கும்பகோணத்துக்கு வந்து தியாகராச செட்டியாரைக் கண்டார். "உதாரணச் செய்யுட்களின் சில அடிகளை நீக்கி ஏன் பதிப்பித்தீர்கள்?" என்று தியாகராச செட்டியார் கேட்டார். அவை அதிகமாக இருந்தமையாற் அவற்றைத் தாம் நீக்கிப் படிப்பவர்களுக்கு எளிதில் விளங்கும்படி சுருக்கிப் பதிப்பித்து உபகரித்ததாகச் சொன்னார். அதனைக்கேட்ட செட்டியார், "வலித்தல் மெலித்தல் என்னுஞ் சூத்திர வுரையில் உதாரணச் செய்யுளான 'தண்டையினினக்கிளி' என்பதில் இரண்டாவதடியாகிய 'பண்டையளல்லள் மானேக்கினளே' என்பது இருந்தாலன்றோ எதுகைக்காகத் தட்டையென்பது தண்டையென்றாயிற்று என்றறியலாம். முதலடியை மட்டும் பதிப்பித்தலாற் பயனென்ன? இன்னோரன்ன முறைகளை அறிந்துகொள்ளாத நீங்கள் நன்னூலைப் பதிப்பித்திருக்கவே கூடாது" என்று அறிவுறுத்தி அவர் தம் பிழையை ஒப்புக்கொண்டு இரங்குமாறு செய்தனர்.

குறளைப் பதிப்பித்த ஒருவர், "இனிய வுளவாக வின்னாத கூறல், கனியிருப்பக் காய்கவர்ந் தற்று" என்பதன் உரையிலுள்ள "ஔவையுண்ட நெல்லிக்கனி" என்பதற்குப் பொருத்தமில்லாத குறிப்பொன்றை எழுதி அதை அடிக்குறிப்பாகப் போட்டுவிட்டார். சிலர் இயற்றியவர் பெயர் காணப்படாத பழைய உரைகளைத் தம் பெயரால் பதிப்பித்து விடுவர். வேறு சிலர், "சிதம்பரம் கருணானந்த ஸ்வாமிகள் இயற்றிய உரை" என்று பதிப்பித்து விடுவர்.

சிலப்பதிகாரத்தின் மூலத்தை மட்டும் பதிப்பித்த ஒருவர் அது சேரமான் பெருமாள் நாயனுராலியற்றப் பெற்றதாகப் பதிப்பித்துவிட்டார்.

வீரவனப் புராணமென்ற ஒரு நூல் ஸ்ரீ மீனுட்சிசுந்தரம் பிள்ளேயவர்களால் இயற்றப்பட்டது. அச்சிடப்படாமலிருந்த காலத்தில் ஒருவர் அதைத் தாம் பாடியதாக வெளியிடலாமென்று தம்முள் நிச்சயித்து அதற்காகப் பணம் பேசிக்கொண்டார். ஆனுல் அவ்வெண்ணம் நிறைவேறவில்லே. பிறகு ஒருவர் உள்ளவாறே அதைப் பிரசுரம் செய்துவிட்டார்.

ஒரு நூலுக்குப் பல உரைகள் இருக்கின்றன. உரையாசிரியர்கள் இன்னுரென்று விளங்குவதில்லே; ஆகையாற் பதிப்பித்தவர்கள் அவ்வுரைகளேத் தம் பெயராற் பதிப்பித்துவிடுவது வழக்கமாக இருந்தது. நூல்களேப் பிரதி செய்வோர் தங்கள் கொள்கைகளுக்கேற்ப மூலத்தையோ உரையையோ திருத்திவிடக் கூடாது. சிலர் அப்படிச் செய்த துண்டு. பெரியபுராணம், கம்பராமாயணம் முதலிய நூல்களில் வெள்ளியம்பலவாணர் என்றவர் சில பாடல்களே நூதனமாக இயற்றி இடையிடையே செருகிவிட்டார். காலக்கிரமத்தில் அச்செயல் கண்டுபிடிக்கப்பட்டது. சென்னேயில் முன்பிருந்த காஞ்சிபுரம் மகாவித்துவான் ஸ்ரீ சபாபதி முதலியார் அவர்கள் சிலவற்றை அச்சிட்டபோது, "இவை வெள்ளி பாடல்கள்" என்று அவற்றை நீக்கிவிட்டு அச்சிட்டார்கள்.

சிந்தாமணி உரையில் ஓரிடத்திற் பஞ்சாட்சரம் உபதேசிக்கப்பட்டதாக எழுதியிருந்தது. சிந்தாமணியே சைனர்களுடைய நூல். இறக்கும் நிலேயிலிருந்த ஒரு நாயின் காதில் மந்திரம் உபதேசிக்கப்பட்ட தென்பது சந்தர்ப்பம். உரையைப் பிரதிசெய்தவர் உரையாசிரியர் எழுதியிருந்த "பஞ்ச நமஸ்காரம்" என்பதை, "பஞ்சாட்சரம்" என்று எண்ணிவிட்டாரென்று தோற்றியது. அந்தப் பிரதி சைவரொருவருடைய பிரதி. பஞ்ச நமஸ்காரம் என்பது சைனர்

களுடைய மந்திரம். தமிழ் படித்த ஓர் அன்னிய தேசத்தார், குறளில், ''தக்கார் தகவில ரென்ப தவரவர், எச்சத்தாற் காணப்படும்'' என்ற பாடலிலுள்ள 'எச்சத்தால்' என்பதை 'மக்களால்' என்று திருத்திவிட்டார். எதுகை சரியாக விருக்கும்படி தாம் திருத்திவிட்டதாக அவர் ஸ்ரீமான் தியாகராச செட்டியாரிடத்தில் சொல்லி அவமதிப்புற்றுச் சென்றார்.

" ஆபயன் குன்று மறுதொழிலோர் நூன்மறப்பர்
காவலன் காவா னெனின் ''

என்ற குறளிலுள்ள 'அறுதொழிலோர்' என்பதனை, 'அறி தொழிலோர்' என்று தமதிஷ்டப்படி ஒருவர் மாற்றி விட்டார்.

மிலேச்சரென்பதற்கு ஆரியரென்று பொருள்கொண்டு சிலர் பெரிய விஷயங்களை எழுதத் தொடங்கினர். ''மிலேச் சரே யநாரி யர்க்காமிலேச்சரும் விதித்த பேரே'' என்பது சூடாமணி நிகண்டு.

வடமொழிச்சொற்களிற் சில வேறுபட்டுத் தோன்று தொட்டுத் தமிழில் வழங்குகின்றன. அவற்றைப் பிழை யென்று நீக்காது கொள்ளவேண்டும்; திருத்தலாகாது. அவை ஐராபதம், ஆதவன், தவனன், கோகனகம், மானி டன் முதலியன. அவை தமிழில் 800 வருஷங்களுக்கு முன் னிருந்தே யமகம், திரிபு, சிலேடைகளில் உபயோகிக்கப்பட் டிருக்கின்றன. அநபாய சோழன் காலத்தில் இயற்றப்பெற்ற தண்டியலங்காரத்தில், 'கோகனகம்' என்ற சொல்லை எழுத்து வருத்தன மென்னும் சொல்லணிக்கு உதாரணமாகக் காட்டி யிருக்கிறார். மானுஷன் என்பது தமிழில் மானிடம் என்று உபயோகிக்கப்பட்டு வந்திருக்கிறது. திருவாசகத்தில் நீத்தல் விண்ணப்பத்தில்,

"மழைதரு கண்டன் குணமிலி மானிடன் றேய்மதியன்''

என்ற அடியில் மானிடன் என்றே சிலேடையில் அமைக்கப் பட்டிருக்கிறது. பல நூற்றாண்டுகட்கு முன்னர் யமகத்தில்

சில புலவர்கள் மானிடன் என்ற வார்த்தையை உபயோகித் திருக்கிறார்கள். அதனை எப்படித் திருத்த முடியும்? தமிழி லும் வடிவமாறிச் சொற்கள் வந்திருக்கின்றன. சிலப்பதி காரத்தில் திருமகள் கூத்துக்குப் பாவைக்கூத்து என்னும் பெயர் காணப்படுகின்றது. பின்னர், பாவை என்பதைப் பரவை என்று நிச்சயித்து அதனை எதுகையிலமைத்துப் பிற் காலத்தார் பாடிவிட்டார்கள். அவ்வாறு பாடியவர்கள் பெரியோராகையால் அதை நாம் திருத்த முற்படாமல் அப்படியே ஒப்புக்கொள்ள வேண்டியதுதான் முறை. கொடை குடை என்றும், எடை இடை என்றும் செய்யுட் களிற் சிலேடையில் அமைக்கப்பட்டு வழங்கி வந்திருக்கின்றன.

தவறான மொழிபெயர்ப்பும் சில விடங்களிற் காணப் படுகின்றன. அவற்றை விலக்கலாகாது. இக்ஷுவாகு என்ற பெயரைக் கருப்புத்தோளான் என்றும், சூர்ப்பநகை என்றதை முறப்பல்லி என்றும் சில கவிகள் பண்டைக் காலத்தில் மொழி பெயர்த்துப் பாடிவிட்டார்கள். இன்னம் பர் என்ற தலப்பெயர் இன்னம்பர் என்றே காணப்படு கின்றது; அதைத் திருத்தலாமா? காராகரு அல்லது காரகில் என்ற ஒரு தலத்தின் பெயர் காருயிலென்று மருவி வழங்குகிறது அத்தலத்தின் விருட்சம் அகில். சொற்பொருளை உள்ளவாறு அறிய வேண்டும். துச்சாதனன் திரௌபதியை இழுத்துக்கொண்டு போனபோது செண்டாற் கொண்டு போனான் என்று ஸ்ரீ வில்லிபுத்தூராழ்வார் பாடியிருக் கிறார். இங்குச் செண்டென்பது பூச்செண்டன்று; ஒருவகை ஆயுதம் என்று கொள்ளவேண்டும்; இதனை யறியாமல் அச் சொல்லுக்குப் பொருள் பூச்செண்டென்றே முன்பு எழுதி வந்தார்கள். கொற்றம் என்ற சொல்லுக்கு வெற்றி என்பது மட்டும் பொருளன்று; அரசுரிமை என்றும் பொருள் உண்டு. திருவள்ளுவ மாலையில், ''ஆயிரத்து முந்நூற்று முப்ப தருங் குறளும்'' என்னும் செய்யுளில் உள்ள, 'வீற்றிருக்கலாம்' என்ற சொல்லிற்கு, 'ஒரு சபை நடுவிலே உயர்வாகிய ஆதனத்தில் ஏறியிருக்கலாம்' என்று ஒருவர் எழுதிவிட்டார்.

கவலையற்றிருக்கலாம் என்பதே அதன் பொருள்; சிந்தாமணி உரையிலும், திருமுருகாற்றுப்படையிலும் வீற்றிருத்தல் என்பதற்குக் கவலையற்றிருத்தல் என்று நச்சினார்க்கினியர் பொருள் கூறியிருக்கிறார். மத்தவாரம் என்ற சொல் இரட்டையருலாவில் வந்திருக்கிறது. அதற்குப் பொருள் யானை என்றார் ஒருவர். பல வருஷங்களுக்கு முன் கும்ப கோணம் கவர்ன்மெண்டு கலாசாலையில் ஆசிரியராகவிருந்த மகாமகோபாத்தியாய பெருகவாழ்ந்தான் ஸ்ரீமத் ரங்காசாரி யார் அவர்கள் சொல்லத்தான் அதன் உண்மைப் பொருள் எனக்குத் தெரிந்தது; மேற் கட்டிடத்தின் ஒரு பாகத்திற்கு மத்தவாரணம் என்பது பெயராம்.

வாக்கியப் பொருளையும் பிறவற்றையும் சரியாகத் தெரிந்து கொள்ளவேண்டும்; ''சிறியிலை வெதிரி னெல் விளையும்மே'' என்பதற்கு மூங்கில்போல நெல் விளையுமென்று பொருள் கூறப்பட்டு வந்தது; அது சரியன்று; மூங்கில் நெல்லையே குறிக்கிறது. உரற்றலைப்பன்றி என்பதற்கு உரல்போன்ற தலையை யுடைய பன்றி என்று பொருள் கொள்ளல் மரபு; இப்பொருளிலேயே இலக்கியங்களில் இத் தொடர் காணப்படுகின்றது; பன்றியின் தலைபோலவே உள்ள ஒருவகை உரல் உண்டு. இங்ஙனங் கொள்ளாது இதற்கு உரலின் தலையிலுள்ள பன்றியென்று பொருள் கொண்டாரு முளர்.

பாடுதுறை இயற்றிய தத்துவராயர் என்பவர் ஒரு மாத்துவப் பிராமணர் என்று ஒருவர் முன்பு எழுதிவிட்டார்; 'ராயர்' என்பதைக் கொண்டு இங்ஙனம் எழுதினார்போலும்.

சயங்கொண்டார், செந்தமிழ் நாடு பாண்டிய நாடன் றென்றும், சோழநாடே என்றும் வாதம் செய்து வெற்றி கொண்டமையால் அவர் அப்பெயர் பெற்றார் என்று ஒருவர் கற்பனை செய்துவிட்டார். கங்கை கொண்டான் மண்டபம் என்பதற்குப் பரமசிவன் கட்டிய மண்டபமென்று பொருள் கூறுவாருமுளர்; கங்கை கொண்டான் என்ற பல்லவன் கட்டுவித்தமையின், அப்பெயரைப் பெற்றது. பரமேச்சுர

விண்ணகரம் என்பது பரமசிவன் வழிபட்ட விஷ்ணு கோயி லென்பர். பரமேச்சுரனை வென்ற பல்லவன் வழிபட்ட விண் ணகரம் என்பதே அதன் பொருள்; திரிசூலம் என்று வழங் கும் தலத்தின் சரியான பெயர் திருச்சுரமென்பது. மழபாடி என்பது மழவர்பாடி. சினகரம் என்பது ஜினக்கிருகம், விண்ணகரம் என்பதற்கு விஷ்ணுக் கிருகம் என்பது பொருள். அரமனை என்பது அரண்மனை. குற்றாலம் என்பது குறுமை யான ஆலமரம் அன்று; குத்தாலம் என்பது ஒரு விருட்சம். மெலட்டூர் என்று சோழ நாட்டில் ஓர் ஊர் இருக்கிறது. அதன்பழைய பெயர் மேட்டூர்; ஸம்ஸ்கிருதத்தில் உன்னதபுரி என்று அவ்வூரின் பெயர் சொல்லப்பட்டிருக்கிறது; மேட்டூர் என்பது மோட்டூராயிற்று; மோட்டூர் எழுதுவோருடைய தவறால் மொட்டூராகி அது மெரட்டூரெனப் படிக்கப் பெற்றுப் பிறகு மெலட்டூராகிவிட்டது. அத்தாளம் என்பது அற்றாலம்; இராத்திரி உணவென்பது இதன் பொருள். முற்றால மென்பது பகலுணவு; முத்தாளமென்பது சரியன்று. பாண்டவக்குழியென்பது பாண்டக்குழி; இறந்துபோனவர் களைப் பாண்டங்களிலடக்கிப் புதைத்த இடத்தைக் குறிப்பது. பாண்டவர்களுக்கும் அதற்கும் சம்பந்தமில்லை.

சில ஊர்ப் பொதுப் பெயர்களாகிய மரூஉ மொழிகளின் பொருளைச் சந்தர்ப்பத்திற்கேற்ப அறியவேண்டும். குன்றை என்பது விருத்தாசலம், சேக்கிழார் ஊராகிய குன்றத்தூர், காவிரியின் வடக்கேயுள்ள குன்ற மென்னுமூர் முதலியவற் றைக் குறிக்கும். களந்தை என்பது களக்காடு, பொன் விளைந்த களத்தூர், களப்பாழ், வைகளத்தூர், முதுகளத் தூர் ஆகிய ஊர்களைக் குறிக்கும்.

நூலில் வந்துள்ள சில சொற்களால் ஆசிரியர் இன்ன நாட்டினர் என்பதை உணரக்கூடும்.

தோரணம் என்ற சொல்லிற்குப் பாண்டி நாட்டில் விசேஷப் பொருள் உண்டு. ஓர் ஊரை ஒருவர் வசப்படுத் திக்கொண்டு அங்கே முதலிற்செய்யும் சடங்குகளுக்குத் தோரணம் வைத்தலென்று சொல்வது வழக்கமாக இருக்

கிறது. ஸ்ரீ குமரகுருபர ஸ்வாமிகள் காசிக்கலம்பகத்தில், ''ஆர்க்கும் படைவே ளரசிருப்பென் றஞ்சாதடிக ளருட்காசி, ஊர்க்கும் புதுத்தோ ரணம்வைத்தால்'' எனவரும் செய்யுளில் தோரண மென்னும் சொல்லை இப்பொருளில் உபயோகித்திருக்கிறார். காஞ்சிப் புராணத்தில் ஸ்ரீ சிவஞான ஸ்வாமிகளும் இந்தச் சொல்லை இதே பொருளில் உபயோகித்திருக்கிறார். அவர்கள் இருவரும் பாண்டி நாட்டினர். இளந்தலை என்பது இளப்பம் அல்லது தாழ்வு என்ற பொருளில் பாண்டி நாட்டில் வழங்குகிறது. ஒரு புலவர் ஒரு பிரபுவிடத்திற் போய் அலைந்து பலநாள் காத்திருந்து பயனொன்றும் பெறுமையின், ''இத்தலை வந்து கடைத்தலை காப்ப திளந்தலையே'' என்று இந்தப் பொருளில் இளந்தலை என்ற சொல்லை உபயோகித்திருக்கிறார்.

நூலாசிரியர்களுள் இருவர் பெயர் ஒன்றுக இருக்கும். அதனை அறியவேண்டும். சிவப்பிரகாசர், பரஞ்சோதியார் என்பன இதற்கு உதாரணங்கள்.

கால ஆராய்ச்சி செய்வோர் தகுந்த ஆதாரங்களைக் கொண்டு காலத்தை நிர்ணயிக்கவேண்டும். நீதிவெண்பா மிக்க அழகான நூல். அதனை அச்சிட்ட ஒருவர் பிற்காலத்தில் அதற்கு ஒரு கௌரவத்தைக் கொடுக்க நினைந்து அதை ஔவையார் இயற்றினர் என்று பதிப்பித்து விட்டார். அதை ஆதாரமாகக் கொண்டு ஒருவர் அதிலுள்ள பாடல்கள் சில சுலோகங்களின் மொழி பெயர்ப்பென்று காட்டி ஔவையார் சில நூற்றுண்டுகளுக்கு முன்புதானிருந்தார் என்று சித்தாந்தம் செய்துவிட்டார்.

ஆசிரியர்களுள் தனிச்செய்யுள் அல்லது நூலுக்கு உரியவரை அறியவேண்டும்.

> ''சோனையுங் காத்துநல் லானையுங் காத்துத் துரோபதைதன்
> தானையுங் காத்தடைந் தானையுங் காத்துத் தடத்தகலி
> மானையுங் காத்தனு மானையுங் காத்து மடுவில்விழும்
> ஆனையுங் காத்தவ னேயெனைக் காப்ப தரிதல்லவே.''

[stamp]

இப்பாடலின் இறுதியடியைக் கவித்தலத்தில் முன்பிருந்த முத்தைய மூப்பனாரென்பவர் கொடுத்து மற்ற அடிகளை முடிக்கும்படி சொன்னபோது கவித்தலம் வேலையரென்னும் வீரசைவ வித்துவான் பாடியது இச்செய்யுள். அந்த ஊர்ப் பெருமாளுக்கு கசேந்திர வரதரென்று பெயர். இது கவி வீரராகவ முதலியார் பெயரால் இக்காலத்தில் வழங்கப் படுகிறது.

''பாளைமணங் கமழுகின்ற'' என்ற தொடக்கத்துப் பாடல் காளமேகத்தின் பெயரால் வழங்குகிறது; இயற்றி யவர் ஆண்டான் கவிராயர்.

சொல்லின் சரியான வடிவம் தெரியாமலே சில கவிகள் பிழைபட்ட சொற்களைப் பாட்டில் அமைத்திருப்பர். உதா ரணம்: ''செத்த குரங்கைத் தலைமேற் சுமந்து திரிந்தனளே'' என்பதில் செத்த குரங்கென்பது சாமந்திப் பூவை உணர்த்து கிறது. அப்பூவின் சரியான பெயர் செவ்வந்தி யென்பது.

சில மரூஉவின் உண்மை வடிவத்தை அறிய வேண்டும். மன்னார்சாமி கோவில்களெல்லாம் புத்தர் கோயில்கள் என்றும் சைவரும் வைஷ்ணவரும் கெடுத்துவிட்டனர் என்றும் ஓர் ஆராய்ச்சியாளர் கோபித்துக்கொண்டார். மன்னார்சாமி என்ற சொல் தருமராசனைக் குறிக்குமாம். புத்தனுக்குத் தருமராசன் என்று ஒரு பெயருண்மையால் மன்னார்சாமி கோயில் புத்தன்கோயில் என்று அந்த ஆராய்ச்சி யாளர் வாதித்தார். மன் - ராஜா; ஆர் - தரும மென்பது அவரெண்ணம். அறத்திற்கும் ஆர்க்கும் வேறுபாடுண் டென்று அவர் தெரிந்துகொள்ளவில்லை. தம்பாச்சியா பிள்ளை என்ற பெயர் தருமராஜ பிள்ளை என்பதன் மரூஉ.

யாப்பருங்கலக்காரிகை உரையைப் பல வருடங்களுக்கு முன்னரே பதிப்பித்த ஒருவர், ''பொருளோ டடிமுதனிற்பது கூன்'' என்ற கலித்துறையின் உரையில் செந்தமிழ் நாடு இன்னதென்று கூறுமிடத்து ''மன்றவாணன் மலர்திரு வருளால்'' என்னும் அகவலொன்றைப் பாடுவித்து அத

னிடையிலே புகுத்திப் பதிப்பித்துக் கையில் எடுத்துக்கொண்டு துறைசையில், மேலகரம் சுப்பிரமணிய தேசிகரவர்களிடம் வந்து புத்தகத்தைக் காட்டி, ''இப்பாடல் ஒரு பழைய ஏட்டுப் பிரதியிலிருந்தது; அதை நான் சேர்த்துப் பதிப்பித் திருக்கிறேன். மன்றவாணனென்பதனுற் சிவபெருமானையும், சைவமாதவரு மென்றதனுற் சைவ மடங்களையும் இச்செய்யுள் தெரிவிக்கின்றது'' என்று சொல்லிப் பொருள்பெற முயன் ருர். அந்நூல் உரையாசிரியர் சைனராதலால் மன்றவாணனை யும் சைவ மாதவரையும் எடுத்துப் பாராட்ட இடமில்லை யென்பதை அவரறிந்திலர் போலும். சுப்பிரமணிய தேசிகர் அவர்கள் ஏட்டுப்பிரதியில் அந்த நூலைப் பலமுறை பாடஞ் சொன்னவர்களானமையால் அவர் சொல்லை நம்பாமல் ஏதோ சிறிது உதவி செய்தனுப்பிவிட்டுப் பின்னர் உடனிருந் தவர்களிடத்தில் இக்காலத்தார் எதையுஞ் செய்யத் துணிவா ரென்று சொல்லி வருத்தமடைந்தார்கள். இங்ஙனம் அவர் கள் கண்டுபிடித்த பிழைகள் பல உண்டு.

ஆராய்ச்சி செய்பவர்கள் கவனிக்க வேண்டிய பலவற் றுள் இதுவும் இன்றியமையாததே.

கார்காத்தார் என்ற பெயர் காரைக்காட்டார் என் பதன் மரூஉ என்பர். காரைக்காடு என்பது காஞ்சிபுரத்திற் கருகிலுள்ளது; திருநெறிக்காரைக்காடு என்று இக்காலத்து வழங்கப்படுகிறது; அது மிகப் பழமையானதொரு சிவ ஸ்தலம். திருவிளையாடலில், தளைப்பட்ட மேகத்தைப் பிணை கொடுத்து விடுவித்துக் காத்தமையால் அவர்களுக்குக் கார் காத்தாரென்று பெயர்வந்ததென்று சொல்லப்பட்டிருக்கிறது. அக்கருத்து முதனூலிலில்லை. விநோதரஸ மஞ்சரியில் பொருத்தமிராத கதைகள் பல சொல்லப்பட்டிருக்கின்றன. கம்பரும் ஔவையும் வெவ்வேறு காலத்தில் இருந்தவர்கள். அவர்கள் ஒரே காலத்தவர்களென்று சிலர் சொல்லுவது பொருந்தாது. சங்கத்தமிழ் நன்ருயிருந்ததென்றும் பிற்காலத் தில் வடமொழிச் சம்பந்தத்தால் தமிழ் கெட்டுப்போய் விட்டதென்றும் சிலர் சொல்வர். பிற்காலத்தில் வேறு

பாஷைகளின் சம்பந்தம்பெற்றுத் தமிழ் அதிக இனிமை பெற்றிருக்கிறதென்பது பெரியோர் கொள்கை.

## பின்னுரை

முதலில், அரியிலூர் ஸ்ரீ சடகோப ஐயங்காரவர்கள் முதலியோரிடத்தும், பின்பு திரிசிரபுரம் மகாவித்துவான் ஸ்ரீ மீனுட்சி சுந்தரம்பிள்ளையவர்களிடத்தும் நான் படித்தேன். அப்பால், திருவாவடுதுறை ஸ்ரீசுப்பிரமணிய தேசிகரவர்கள் பாடம் சொன்னுர்கள். அந்நாள் முதல் நான் சருகரித்துக் கொண்டிருந்தேன்; குளிர்காய நேரமில்லை. நான் அறிந்துகொண்ட விஷயங்களை இங்கு எடுத்துச் சொல்லும்படி அவகாசம் கொடுத்த ஸர்வகலா சங்கத்தாருக்கும் தமிழாராய்ச்சி விஷயத்தில் வெகு காலமாகச் சகாயம் செய்துவரும் சேது மன்னர்களாகிய மாட்சிமை பொருந்திய **மஹாராஜராஜஸ்ரீ பா. இராஜராஜேசுவர சேதுபதி மஹாராஜா** அவர்களுக்கும், வேண்டியபொழுது எனக்கு ஏட்டுச்சுவடிகளைக் கொடுத்துப் பேருதவி புரிந்து வந்திருக்கும் திருவாவடுதுறை ஆதீனம் முதலிய ஆதீனங்களின் தலைவர்களுக்கும் பின்னும் உள்ள பற்பல உபகாரிகளுக்கும் என் மனப்பூர்வமான நன்றியைச் செலுத்துகின்றேன்.

இப்போது கும்பகோணத்தில் ஆசாரிய மூர்த்திகளாக எழுந்தருளியிருக்கும் **ஸ்ரீமத் சங்கராசாரிய சுவாமிகள**வர்கள் தேவார திருவாசகங்களில் ஈடுபட்டிருப்பதன்றி மற்றவர்களைப்போலவே தமிழ்ப்புலவர்களையும் ஆதரித்தருளி வருவது யாவராலும் கொண்டாடத் தக்கது.

1880-ஆம் வருஷத்திற் கும்பகோணத்தில் டிஸ்டிரிக்ட் முன்ஸீபாக இருந்தவரும் கல்வி யறிவொழுக்கங்களாற் சிறந்தவருமான சேலம் **ஸ்ரீமான் இராமசாமி முதலியாரவர்கள்,** கம்பராமாயண முதலிய பிற்காலத்து நூல்களைப் படித்து ஆராய்ச்சி செய்து இன்புறுவதைக் காட்டிலும்

வழங்காமலே யிருக்கும் சீவக சிந்தாமணி முதலிய காப்பியங்களையும் சங்கநூல்களையும் படித்து ஆராய்ச்சி செய்தலும் கூடுமானால் அவற்றை அச்சிற் பதிப்பித்து வெளிப்படுத்தலும் உத்தமமென்று கூறித் தம்பாலிருந்த சீவகசிந்தாமணி முதலியவற்றின் கையெழுத்துப் பிரதிகளைக் கொடுத்து அடிக்கடி ஊக்கமளித்து வந்தார்கள். அவர்களையும், தம்முடைய மரணபரியந்தம் அவர்களைப் போலவே என்னை ஆதரித்துப் பாராட்டி ஊக்கமளித்து வந்த ஸ்ரீமான் பூண்டி **அரங்கநாத முதலியாரவர்களையும்** என்னுடைய உள்ளம் ஒரு பொழுதும் மறவாதென்பதை இங்கே தெரிவியாமலிருக்க முடியவில்லை.

ஆங்கிலம் தெரியாத பண்டிதர்களுக்கு முன்னுளில் இந்தச் சர்வகலாசாலையில் யாதொரு விதமான சம்பந்தமும் இல்லை. அக்குறையை நீக்கிய மகா புருஷர்கள் ஸ்ரீமான் வி. கிருஷ்ணசாமி ஐயரவர்கள், ஸ்ரீமான் ஸர். பி. எஸ். சிவசுவாமி ஐயரவர்கள், மிஸ்டர் ஜே. எச். ஸ்டோன் முதலியவர்களே.

நீண்டகாலமாக பண்டிதர்களுடைய சம்பளம் மிகவும் குறைவாக இருந்த விஷயத்தைச் சட்டசபையில் எடுத்துக் கூறி அதனைக் கவர்ன்மெண்டார் கவனிக்கும்படி செய்த ஸ்ரீமான் திவான் பகதூர் பி. கேசவப் பிள்ளையவர்களுக்கும் சட்ட சபையில் அவர்களை ஆதரித்துப்பேசிய ஸ்ரீமான் எல். ஏ. கோவிந்தராகவ ஐயரவர்களுக்கும் பண்டிதர்களெல்லோரும் நன்றி பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

நூலாராய்ச்சி சம்பந்தமாக முக்கியமாக நான் சொல்ல வேண்டிய விஷயம் ஒன்றுண்டு. அதைமட்டும் சொல்லி விட்டு உபந்யாசத்தை நிறுத்திக் கொள்ளுகிறேன்.

சென்ற ஐம்பது வருஷங்களுக்கு மேலாக நூலாராய்ச்சி செய்வதிலேயே பொழுது போக்கிக் கொண்டிருந்த எனக்குள்ள பொருள் முட்டுப்பாட்டையறிந்து மதுரை அட்வொ

கேட் ஸ்ரீமான் டி. ஸி. ஸ்ரீனிவாசையங்காரவர்கள் பெரு முயற்சி எடுத்துக்கொண்டு பல கனவான்களுக்கும் தெரிவித்து **1925**-ஆம் வருஷத்தில் அக்குறையை நீக்கி நான் சிறிதும் கவலையுறுவண்ணம் செய்வித்தார்கள். இவ்வரிய பேருதவி ஒரு நிமிஷமேனும் மறக்கற்பால தன்றென்பதை இப்போதும் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

" மூவாத் தமிழ்பயந்த முன்னூன் முனிவாழி
ஆவாழி வாழி யருமறையோர்—காவிரிநாட்
டண்ண லநபாயன் வாழி யவன்குடைக்கீழ்
மண்ணுலகில் வாழி மழை" (தண்டி. மேற்)